உ

To be MF

3673. தொல்காப்பியச் சேனாவரையம்

1868 ஆம் ஆண்டு பதிப்பு.

டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம் சென்னை - 90
3673

MAHAMAHOPADHYAYA
DR. U. V. S. IYER LIBRARY,
BESANT NAGAR, MADRAS-90.

Ц. 1. 6 (2) 3673

ஸ்ரீ

ஸ்ரீமத்வரவரமுநயேநம:

தொல்காப்பியச்சேனாவரையம்.

—:o:— 3673

கா-பச்சையப்பமுதலியார் தர்மவிசாரணை

சபாத்தியக்ஷராகிய

ம-ா-ா-ஸ்ரீ

மேலைமணம்பேடு

ஸ்ரீநிவாஸசடகோபமுதலியாரவர்கள்

வேண்டுகோளின்படி

சென்னை-நார்மல்ஸ்கூலென்னும் போதனாசக்திவிர்த்தி

வித்தியாசாலைத் தமிழ்த்தலைமைப்புலவர்

கோமளபுரம்

இராசகோபாலபிள்ளையவர்களால்

கையெழுத்து வழுவறப்

பரிசோதிப்பித்து

பு - கந்தசாமிமுதலியா

ரவர்களால்

வர்த்தமானதரங்கிணீ சாகை அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

விபவஹு கார்த்திகைமீ.

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090.

G1F
P31, [illegible] 1, 13, 4
[illegible]
B6

ACC. No. 3673

ஸ்ரீ

ஸ்ரீமத்பராங்குசாயநம:

சூத்திரவகராதி.

சூத்திரம்.	பக்கம்.	சூத்திரம்.	பக்கம்.
அஆவென, பலவறி	௬	அஉற்றுள், இருமு...	க௨௪
அஆவென, பலவற்று	௯அ	அவற்றுள், ஈயென்	௪௯அ
அஎனப்பிறத்த	௬0	அவற்றுள், இயற்சொ... ...	க௪௪
அசைநிலைக்கிளவி	க௨௩	அவற்றுள், இரங்கல்	க௩அ
அச்சக்கிளவி	ரு௬	அவற்றுள், எழுவாய்	௩எ
அச்சம்பயமிலி...	௪க௯	அவற்றுள், செய்கென் ...	௯௩
அடிமறிச்செய்தி	௪௬அ	அவற்றுள், செய்யு	ககக
அடைசினைமுத...	க௬	அவற்றுள், தடவென்	க௩௪
அண்மைச்சொல்லி	௬அ	அவற்றுள், தருசொல் ...	கஅ
அண்மைச்சொல்லே... ...	,,	அவற்றுள், நான்கேயிய ...	அ௩
அதற்குவினையுடைமை	௪ரு	அவற்றுள், நிரனிறை ...	க௪எ
அதனினியற	௪௩	அவற்றுள், நீயென்	அஎ
அதிராவுமவிதிர்ப்பு	க௩௪	அவற்றுள், பன்மை... ...	௪ரு
அதுச்சொல்வேற்றுமை... ...	௯௬	அவற்றுள், பிரிநிலை	௪அ௩
அதுவிதுவுதுவென	எ௯	அவற்றுள், பெயரென ..	எரு
அதுவென்வேற்றுமை ...	ரு௪	அவற்றுள், முதனிலை	க0அ
அத்திணைமருங்கி...	க00	அவற்றுள், முன்னிலைக கிளவி	க0௨
அந்திலாங்க	௨௨௨	அவற்றுள், முன்னிலைதன் ...	க0௪
அநநாற்சொலு...	௨௪௯	அவற்றுள், யாதென ...	௨0
அபபொருள்கூறி	௨௪	அவற்றுள், விறப்	௪௩எ
அமர்தன்மேவல்	௩௪0	அவற்றுள், வினை	௩0
அம்மகேட்பிகு...	௨௨௪	அவற்றுள், வேற்றுமை... ...	கருக
அம்மவென்று	எ௨	அவற்றெருவருவழி	கக0
அம்முக்கிளவி...	௪0எ	அவைதாம், அமமா... ...	௯க
அயனெடிதாயி...	எ0	அவைதாம், இடை...	௯௯
அரியேயையம்மை	க௩எ	அவைதாம், உறுதல... ...	க௩௨
ஆஆர்பஎன...	௯௪	அவைதாம், தத்தங்கிளவி ...	க௯க
அல்மாறெருமா	௪௩௩	அவைதாம், தத்தங்குறி ...	க௯ரு
அவற்றின்வருஉ	௪௨அ	அவைதாம், தத்தம்பொரு ...	௯௪
அவற்றுள், அமுங்க... ...	௪௩௬	அவைதாம், புணரிய... ...	௪௪௯
அவற்றுள், அன்னை ...	௯௨	அவைதாம், பெண்மை ...	அ௩
அவற்றுள், இரயாகு... ...	௬எ	அவைதாம, பெயரை... ...	௩எ
		அவைதாம், முன்மொழி ...	கருக

சூத்திரம்.	பக்கம்.
அவைதாம், முன்னும்	௬௧௮
அவைதாம், வழங்கிய ...	௬௨
அவையல்கிளவி...	௧௬௭
அவ்வச்சொல்...	௧௩௦
அவ்வழி, அவனிவ...	௭௬
அவ்வே, யிவ்வென... ...	௬௫
அளபெடைப்பெய	௬௧
அளபெடைப்பெய... ...	௭௦
அளபெடைப்பெய	௭௧
அளபெடைமிகூஉ	௯௭
அளவுநிறையு	௬௪
அன்மையினின்மை	௯௭
அன்னபிறவுங்கிள... ...	௧௪௨
அன்னபிறவுநதொன்	௫௭
அன்னபிறவுமஃறி	௮௦
அன்னபிறவுமுயர்...	௭௮
அன்னனள்ளா...	௯௩
ஆக்வாக	௧௨௫
ஆக்கக்கிளவி	௧௪
ஆக்கந்தானே	௧௩
ஆங்கவுரையசை	௧௨௪
ஆடூஉவறிசொன்...	௩
ஆண்மைசுட்டிய	௮௪
ஆண்மைதிரிந்த	௯
ஆண்மையடுத்த	௭௭
ஆயென்கிளவி	௯௬
ஆருமருவு	௬௧
ஆவோவாகு	௮௮
ஆறன்மருங்கி...	௫௬
ஆறுகுவதே	௪௬
ஆனெனிறுதி...	௬௧
இசைத்தலு...	௩௪
இசைநிறையசை	௧௫௦
இசைப்படுபொரு	௧௫௮
இடைச்சொல்லெல்லா ...	௧௭௧
இடைச்சொற்கிளவி	௭௫
இடையெனப்படுப... ...	௧௧௬
இதனதிதுவிற்றெ	௯௦
இதுசெயல்வேண்டு	௧௧௪

சூத்திரம்.	பக்கம்.
இயற்கைப்பொருளை ...	௧௩
இயற்கையினுடைமை ...	௪௭
இயற்பெயர், கிள	௨௨
இயற்சொற்றிரி	௧௪௩
இயறபெயர், சினை	௮௨
இயற்பெயர், முன்	௧௨௨
இயைபேபுணர்ச்சி	௧௩௩
இரட்டைக்கிளவி	௨௭
இரண்டன்மருங்கி	௫௪
இரண்டாகுவதே	௪௧
இருதிணைச்சொற்கு	௮௦
இருதிணைப்பிரிந்த	௭௬
இருதிணைமருங்கி...	௭
இருபெயர்பலபெய	௧௫௪
இர்ஈர்மின்	௧௦௩
இலம்பாடொற்க	௧௩௮
இறப்பினிகழ்வினெதிர்வென-மு	௯௦
இறப்பினிகழ்வினெதிர்வென-ற	௧௫௧
இறப்பேயெதி	௧௧௫
இறுதியுமிடையு	௫௮
இறைச்சிப்பொரு	௮௮
இனச்சுட்டில்லா	௧௨
இனைத்தென	௨௦
இன்றிலவுடைய	௧௦௦
இன்னபெயரே	௮௭
ஈதாகொடு...	௧௯௭
ஈரளபிசைக்கு	௧௨௫
ஈற்றுநின்றிசை	௧௨௭
ஈற்றுப்பெயர்	௫௫
உகப்பேயுயர்...	௧௩௧
உகரந்தானே	௯௭
உணர்ச்சிவாயி	௧௪௨
உம்முந்தாகு	௧௨௧
உம்மைதொகக	௧௨௮
உம்மையெச்ச	௧௯௮
உம்மையெண்ணி	௧௨௮
உம்மையெண்ணு	௧௨௭
உயர்திணைமருங்கி	௧௫௭
உயர்திணையென்ம... ...	௪

சூத்திரவகராதி.

சூத்திரம்.	பக்கம்.
உயாவேயுயங்க	க௩அ
உரிச்சொற்கிளவி	க௩க
உரிச்சொன்மருங்கி... ...	கஎக
உருபுதொடர்ந்த...	ருஎ
உருபெனமொழி	கரு
உருவுட்காரு......	க௩உ
உரையிடத்தியலு	கஎ௩
உவமைத்தொகை...	கருஉ
உளவெனப்பட்ட	எஉ
எச்சஞ்சிறப்பே	ககசா
எச்சவும்மையு	கஉசா
எஞ்சியகிளவி...	க௦௩
எஞ்சியமூன்று	கசாரு
எஞ்சியவிரண்ட...	எ௦
எஞ்சுபொருட்கிளவி	கஉசா
எடுத்தமொழி...	௩ச
எண்ணுங்காலு	உஎ
எண்ணேகார	கஉஎ
எதிர்மறுத்துமொழி	ருகூ
எதிர்மறையெச்ச	கசாச
எப்பொருளாயினு...	உக
எய்யாமையே...	க௩சா
எல்லாச்சொல்லும்	எ௩
எல்லாத்தொகையு	கருஎ
எல்லாமென்னு	அசா
எல்லாருமென்னு...	எஎ
எல்லேயிலக்கம்	கஉஉ
எவ்வயிற்பெயரும்...	௩கூ
எவ்வயின்வினையு	கசாக
எழுத்துப்பிரிந்திசை	கசஉ
எற்றென்கிளவி	கஉக
எனவெனெச்சம்...	கசாரு
என்றுமெனவு	கஉகூ
என்றென்கிளவி	கஉக
ஏவுங்குரையு...	கஉ௩
ஏழாகுவதே...	சஅ
ஏனைக்காலமு	ககரு
ஏனைக்கிளவி	அஎ
ஏனைப்புள்ளி...	சாஅ
ஏனையிரண்டே...	ககூ
ஏனையுயிரே...	[illegible]
ஏனையுருபு	[illegible]
ஏனையெச்சம்	க௦எ
ஐந்தாகுவதே	சரு
ஐயமுங்கரிப்பு...	கச௦
ஐயுங்கண்ணு	ருஅ
ஐவியப்பாகு...	கசப
ஒப்பில்போலி	கஉச
ஒருபொருள்குறித்தவேறுசொ-	கசரு
ஒருபொருள்குறித்தவேறுபெயர்-	உச
ஒருபொருளிருசொற்பிரி ...	கஎச
ஒருமைசுட்டியபெயர்நிலை ...	,,
ஒருமைசுட்டியவெல்லாப் ...	அரு
ஒருபெயர்ப்பொது	உசா
ஒருமையெண்ணின்	உரு
ஒருவரென்னும்	அஎ
ஒருவரைக்கூறும்	கஎ
ஒருவினையொடுச்சொ	ருகூ
ஒழியிசையெச்ச	கசா௩
ஒன்றறிகிளவி	சா
ஒன்றறிசொல்	எ
ஒன்றன்பட்கை...	சாக
ஒன்றுவினைமருங்கி	௩ச
ஓம்படைக்கிளவி...	ருரு
ஓய்தலாய்த	க௩ரு
ஓவுமுவ்வு...	சாஎ
கடதறவென்னு	கஉ
கடிசொலில்லை	[illegible]
கடியென்கிளவி	[illegible]
கண்கால்புற	சஅ
கண்டீரென்ற...	கருக
கண்ணுதோளு...	[illegible]
கதழ்வுந்துனைவு	[illegible]
கம்பலைசம்மை	[illegible]
கருமமல்லாச்சார்	ரு௦
கருவிதொகுதி	[illegible]
கவர்வுவிருப்பாகு	க௩அ
கழிவேயாக்க	[illegible]
கழுமென்கிளவி	[illegible]

சூத்திரம்.	பக்கம்.	சூத்திரம்.	பக்கம்.
முதலுஞ்சினையும்	௫௨	வாராக்காலத்துநிகழு ...	௧௧௨
முதற்சினைக்கிளவி	௫௧	வாராக்காலத்துவினை ...	௧௧௪
முதன்முனைவரி	௫௨	வாராமரபின	௧௫௮
முந்நிலைக்கால	௧௧௨	வார்தல்போக	௧௩௪
முறைப்பெயர்க்கிளவிமு ...	௭௧	வியங்கோளெண்ணு ...	௨௬
முறைப்பெயர்க்கிளவியே ...	௬௯	விழுமஞ்சீர்மையு ...	௧௩௭
முறைப்பெயர்மருங்கி ...	௬௮	விழைவின்றில்லை ...	௧௨௧
முற்படக்கிளத்தல	௨௩	விழைவேசால ,, ...	௧௧௯
முற்றியவும்மை	௧௨௬	விளிகொள்வதன்	௩௭
முன்னத்தினுணரு	௧௭௩	விளியெனப்படுப ...	௬௫
முன்னிலைசுட்டிய	௧௭௫	விறப்புமுறப்பு	௧௩௬
முன்னிலைமுன்ன	௧௭௦	வினாவுஞ்செப்பே	௧௦
முன்னிலைவியங்கோள் ...	௧௦௧	வினையிற்றோன்றும ...	௭
மூன்றனுமைந்தனு	௫௩	வினையினும்பண்பினு	௭௧
மூன்றுருவதே	௪௩	வினையினதொகுதி ...	௧௫௨
மெய்பெறக்கிளந்த	௧௪௧	வினையெஞ்சுகிளவிக்கு ...	௧௬௩
மொழிப்பொருட்காரண ..	௧௪௨	வினையெஞ்சுகிளவியு ...	௧௭௨
மொழிமாற்றியற்கை	௧௪௯	வினையெனப்படுவது ...	௮௯
யாஅரென்னும்	௯௫	வினையேகுறிப்பே ...	௧௨௦
யாகாபிறபிற	௧௨௪	வினையேசெய்வது ...	௬௧
யாதனுருபிற்கூறி	௫௯	வினையொடுநிலையி ...	௧௨௯
யாதெவனென்னு	௪௯	வினைவேறுபடூஉம்	௩௦
ரஃகானொற்றும்	௫	வெளிப்படுசொல்லே ...	௧௩௨
வடசொற்கிளவி	௧௪௬	வேறுவினைப்பொது ...	௨௭
வண்ணத்தின்வடிவி ...	௧௫௩	வேற்றுமைதாமே ...	௩௯
வண்ணம்வடிவே ...	௪௬	வேற்றுமைத்தொகை ...	௧௫௦
வம்புநிலையின்மை	௧௩௫	வேற்றுமைப்பொருளை ...	௪௯
வயவலியாகும்	௧௩௮	ளஃகானொற்றே ...	௫
வன்புறவரூஉம் ...	௧௧௪	னஃகானொற்றே ...	,,
		னரலளவென்னு ...	௬௮

முற்றிற்று.

ஸ்ரீ

பக்கம்.	இயலகராதி.	சூத்திரம்.
முதல்	கிளவியாக்கம்	௬௧
௩௬	வேற்றுமையியல்	௨௨
௫௦	வேற்றுமைமயங்கியல்	௩௪
௬௫	விளிமரபு	௩௭
௭௩	பெயரியல்	௪௦
௮௯	வினையியல்	௫௧
௧௧௬	இடைச்சொலியல்	௪௮
௧௩௧	உரிச்சொலியல்.	௭௨
௧௪௩	எச்சவியல்	௬௬

ஆ. ௪௨௧.

ஸ்ரீ

பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௧௦	௬	வழாஅதோம்ப	வழாஅலோம்ப
௪௪	௨௩	கனவு	களவு
,,	௧௩	மின்றியே	மின்றியும்
௩௨	௫	றவெருடு	றவற்றொடு
௪௩	௩௨	இதவு	இவையு
௪௫	௬	பொருளெல்லா	பொருளுமெல்லா
௪௯	௨௧	மெனவுரு	மெனவுமுரு
௫௦	௧௩	வறுப்பா	வுரைப்பா
௫௯	௨௨	யரசனது	யரசரது
௬௪	௨௮	பதுகாவலே	பாதுகாவலே
௬௬	௧௨	லேறுவன்	லுறுவன்
௧௦௫	௩௮	சொலுணா	சொலாலுணர்
௧௦௮	௧௭	செய்ததா	செய்த்தா
௧௦௯	௩௩	துறுபொரு	தறுபொரு
௧௧௦	௩௭	ணுமைபோ	ணுமைக்குபபோ
௧௧௭	௩௩	தானுங்	தாமுங்
௧௨௦	௨௧	உண்டே	உண்டேஎ
௧௨௭	௧௨	யோகார	யேகார
௧௩௫	௩௩	பிணே	பிணை
௧௩௬	௧	,,	,,
௧௫௦	௧௪	தாம்யாமெ	தான்யானெ
௧௫௩	௩௦	சொல்லே	சொல்
௧௬௧	௧௧	சிறப்பின்றும்	சிறப்பீற்றவாம்

DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090.

ஹரிஓம் - நன்றாக - குருவாழ்க.

ஸ்ரீமதேராமாநுஜாயநமஃ

தொல்காப்பியம்.

சொல்லதிகாரம்.

முதலாவது,

கிளவியாக்கம்.

௧. உயர்திணையென்மனார் மக்கட்சுட்டே, யஃறிணையென்மனா
ரவரலபிறவே, யாயிருதிணையி னிசைக்குமனசொல்லே.

நிறுத்தமுறையானே சொல்லுணர்த்திய வெடுத்துக்கொண்டா ரதனா
னிவ்வதிகாரஞ் சொல்லதிகாரமென்னும் பெயர்த்தாயிற்று. சொல்லாவதெ
ழுத்தோ டொருபுடையா னொற்றுமையுடைத்தாய்ப் பொருள்குறித்துவருவ
து. உரையாசிரியரும் எழுத்தாதற் றன்மையொடு புணர்ந்தென்பா ரெழுத்
தொடு புணர்ந்ததென்றா ராகலி னொருபுடையொற்றுமையே கூறினார். தன்
மையொடு புணர்ந்தென்றாக்கா லோரெழுத்தொருமொழிக் கெழுத்தொடு
புணர்தலின்மையிற் சொல்லாதலெய்தாதென்க. பொருள்குறித்துவாராவையி
னசைநிலை சொல்லாகாவெனின், ஆவயினான்று முன்னிலையசைச்சொலென்று
ம், வியங்கோளசைச்சொலென்று மோதுதலான் அவையுமிட முதலாயபொ
ருள்குறித்து வந்தனவென்க. யாகாபிறபிறக்கென்னுந் தொடக்கத்தனவோ
வெனின் அவையு மூன்றிடத்திற்கு முரியவாய்க் கட்டுரைச்சுவைபட வருத
லிற் பொருள் குறித்தனவேயாம். இக்கருத்தேபற்றியன்றே யாசிரியரொல்லா
ச் சொல்லும்பொருள் குறித்தனவேயென் றோதுவாராயிற்றென்க. சொற்றா
னிரண்டுவகைப்படும் தனிமொழியுந் தொடர்மொழியுமென. அவற்றுட் டனி
மொழியாவது சமயவாற்றலாற் பொருள்விளக்குவது; தொடர்மொழியாவ
து அவாய்நிலையானு மண்மையானுந் தகுதியானு மியைந்துபொருள்விளக்
குவது. தனிமொழியீட்டம் - பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லு மிடைச்
சொல்லு முரிச்சொல்லுமெனத் தனிமொழி நான்குவகைப்படும். மரமென்
பது பெயர்ச்சொல், உண்டானென்பது வினைச்சொல், மற்றென்ப இடைச்
சொல், நனியென்ப துரிச்சொல். இருமொழித்தொடரும், பன்மொழித்தொ
டருமெனத் தொடர்மொழி இரண்டுவகைப்படும். சாத்தன்வந்தானென்ப
திருமொழித்தொடர், அறம்வேண்டியரச னுலகம்புரந்தானென்பது பன்மொ
ழித்தொடர். அதிகாரமென்னுஞ் சொற்குப்பொருள் பலவுளவேனு மீண்டதி
காரமென்ற தொருபொருணுதலி வரும்பலவோத்தினதுதொகுதியை, வட
நூலாரு மோரிடத்துநின்றசொல் பலசூத்திரங்களொடு சென்றியைதலையும்

ஒன்றனதிலக்கணம்பற்றிவரும் பலசூத்திரத்தொகுதியையு மதிகாரமென்ப. சொல்லதிகாரஞ் சொல்லையுணர்த்திய வதிகாரமெனவிரியும். அச்சொல்லை யாங்ஙனமுணர்த்தினரோவெனிற் றம்மையேயெடுத்தோதியு மிலக்கணங்கூறியு முணர்த்தினானென்பது. வழுக்களைந்து சொற்களையாக்கிக்கொண்டமையா னிவ்வோத்துக் கிளவியாக்கமாயிற்று. ஆக்கம அமைத்துக்கோடல். நொய்யு நொறுங்குங்களைந்து அரிசியமைத்தானை யரிசியாக்கினானென்பவாகலின்] சொற்கள் பொருள்கண் மேலாமாறுணர்த்தினமையிற் கிளவியாக்கமாயிற்றெனினுமமையும். பொதுவகையாற் கிளவியென்றமையாற் றனிமொழியுந் தொடர்மொழியுங் கொள்ளப்படும். கிளவி, சொல், மொழி என்னுந் தொடக்கத்தன வெல்லா மொருபொருட்கிளவி. உயர்திணையென்மனார் - சொல்லே என்பது மக்களென்று கருதப்படும்பொருளை யாசிரிய ருயர்திணையென்றுசொல்லுவர், மக்களென்று கருதப்படாத பிறபொருளை யஃறிணையென்றுசொல்லுவர், அவ்விருதிணை மேலுஞ்சொற்க ணிகழுமென்றவாறு. எனவே யுயர்திணைச் சொல்லு மஃறிணைச்சொல்லுமெனச் சொல்லிரண்டென்றவாறும். மக்கட்சாதி சிறந்தமையானுயர்திணையென்றார். என்மனாரென்பது செய்யுண்முடிபெய்திநின்றதோராரீற்று நிகழ்காலமுற்றுசசொல். என்றிசினோர, கண்டிசினோரென்பன முதலாயினவும் அவ்வாறுவந்த நிகழ்காலமுற்றுச்சொல். என்பவென்னு முற்றுச்சொல்லினது பகரங்குறைத்துமன்னு மாருமென விரண்டிடைச்சொற்பெய்துவிரித்தானென் றுரையாசிரியர் கூறினாராலெனின் என்மனாரென்ப திடர்ப்பட்டுழிச் சிறுபான்மைவாராது நூலுள்ளுஞ் சான்றோர்செய்யுளுள்ளும் பயின்றுவருதலானு மிசைநிறையென்பது மறுத்துப் பொருள்கூறுகின்றார், பின்னுமிசைநிறையென்றன் மேற்கோண்மலைவாதலானு மவர்க்கது கருத்தன்றென்க. மாணாக்கர்கட் குணர்வுபெருகல்வேண்டி வெளிப்படக்கூறா துய்த்துணரவைத்த லவர்க்கியல்பாகலாற் செய்யுண்முடிபென்பது கூறாராயினார். என்மனாராசிரியரெனவே யுயர்திணை யஃறிணையென்பன தொல்லாசிரியர்குறியாம். ஆசிரியரென்னும்பெயர வெளிப்படாதுநின்றது. மக்களாகிய சுட்டியாதன்க ணிகழுமது மக்கட்சுட்டெனப் பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த வன்மொழித்தொகை. ஈண்டுமக்களென்றது மக்களென்னு முணர்வை. எனவே மக்களேயாயினு மக்களென்று சுட்டாது பொருளென்று சுட்டியவழி உயர்திணையெனப் படாதென்பதாம். இனியவரலவென்றது பிறவென்றேட்டின் யாதல்லாத பிறவென் றவாய்நிற்குமாகலின் அவரலவென்றார். மக்கட்சுட்டேயென்று மேனின்றமையின் மக்களல்லாத பிறவென்றுணர்தலாவின் ஆற்றன் முதலாயினவற்றாற் கொள்வது சொல்லில்வழியெனமறுக்க. இனியவரலவென்றே யொழியினவற்றது பகுதியெல்லா மெஞ்சாமற் றழுவாமையி னெஞ்சாமற்றழுவுதற் கவரலபிறவென்றார். செய்யுளாகலா னுயிருதிணையெனச் சுட்டுநீண்டது. வரையறையின்மையினீண்டு யகரவுடம்படுமெய்யாயிற்று. சொன்னிகழ்ச்சிக்குப் பொருளிடமாகலி னுயிருதிணையின்கண்ணென வேழாவதுவிரிக்க. இன்சாரியை வேற்றுமையுருபுபற்றியும், பற்றாதிற்குமென் றுரையாசிரிய ரிரண்டாவது விரித்தாராலெனின் சாரியையுஞ்

வழிச்சாரியை கெடுதலுஞ் சாரியையுள் வழித்தன்னுருபுநிலையலுமென விரண்டாவதற்குத் திரிபோதினமையானுஞ் செலவினும் வரவினுந் தாவினுங் கொடையினு மென்புழியும்பிறுண்டுமெல்லா மேழாவது விரித்தற்கேற்பப் பொருளுணர்த்தமையானு மவ்வுரைபோலி யுரையென்க. ஆயிருதிணையினுமென்னு மும்மைவிகாரவகையாற் றொக்குநின்றது. இசைக்குமென்பது செய்யுமென்னு முற்றுச்சொல். மன்னென்னுமிடைச்சொல் மனவெனவீறுதிரிந்து நின்றது. மன்னென்று பாடமோதுவாருமுளர். ஏகாரமீற்றசை. சொல்வரையறுத்தலே இச்சூத்திரத்திற்குக் கருத்தாயின் ஆடூஉவறிசொல், மகடூஉவறிசொல்லென்றாற்போல உயர்திணைச்சொல், அஃறிணைச்சொல்லெனவமையும். உயர்திணைமக்களஃறிணைபிறவெனல் வேண்டாவெனி னுயர்திணையஃறிணையென்பன தொல்லாசிரியர் குறியாகலான் ஆடூஉமகடூஉப்போல வழக்கொடுபடுத்துப் பொருளுணராதலாகாமையி னுயர்திணைமக்க ளஃறிணைபிறவெனல் வேண்டுமென்பது. இவ்வாறொருபொரு ளுதலிற்றுக வுரையாக்காற் சூத்திரமொன்றுமா றில்லையென்க.

உ. ஆடூஉவறிசொன் மகடூஉவறிசொல், பல்லோரறியுஞ் சொல்
லொடுசிவணி, யம்முப்பாற்சொ லுயர்திணையவ்வே.

ஆடூஉவறிசொலலும், மகடூஉவறிசொலலும், பல்லோரறியுஞ் சொல்லொடுபொருந்தி யம்மூன்று கூற்றுச்சொல்லு முயர்திணையனவாம். எ-று. ஆண்மகனை ஆடூஉவென்றலும், பெண்டாட்டியை மகடூஉவென்றலும் பண்டையார் வழக்கு. அறிவுமுதலாயினவற்றா னாண்மகன்சிறந்தமையி னாடூஉவறிசொன் முற்கூறப்பட்டது. பன்மையிருபாலும் பற்றிவருதலிற் பல்லோரறிசொல் பிற்கூறப்பட்டது. இரண்டாம்வேற்றுமை உயர்திணைக்கட் சிறுபான்மை தொகப்பெறுதலிற றொக்குநின்றது. திரிந்தபுணர்ச்சியனமையின் விகாரவகையாற் றொக்கதென்பாருமுளர். சிவணியென்னும் வினையெச்ச முயர்திணையவாமென்னும் வினைக்குறிப்புக்கொண்டது. ஆறாம்வேற்றுமை யேற்றுநின்ற சொற்பெயராயும், வினைக்குறிப்பாயு நிற்குமாகலான் உயர்திணையவாமென்னு முப்பாற்சொல்லின்வினை ஆடூஉவறிசொன் மகடூஉவறிசொல்லென்னு மிரண்டன் வினையாகிய சிவணியென்னுஞ் செய்தெனெச்சத்திற்கு வினைமுதல் வினையாயினவாறென்னையெனின் உயர்திணையவாத லாடூஉவறிசொன் மகடூஉவறிசொல்லென்பனவற்றிற்கு மெய்துதலான் வினைமுதல் வினையாமென்க. முதனிலை மூன்றும் வினைமுதன்முடிபின வென்புழிவினைமுதல் வினையென்னுந் தனையல்லது பிறிதொன்றற்குப் பொதுவாகாது வினைமுதற்கே வினையாதல் வேண்டுமென்னும் வரையறையின்மையின்] அல்லாக்கா லிவனுமிவளுஞ் சிற்றிலிழைத்துஞ் சிறுபறையறைந்தும் விளையாடுப வென்பனபோல்வன வமையாவாமென்க. ஆடூஉவறிசொன் முதலாயினவற்றை யுணர்த்தியலல்லது அவற்றதிலக்கணமுணர்த்த லாகாமையிற் பாலுணர்த்துமெழுத்து வகுப்பவேயமைதாமும் பெறப்படும். இச்சூத்திரம் வேண்டாவென்பது கடாவன்மையுணர்க. உயர்திணைச்சொ லுணர்த்தியதனது பாகுபாடுகூறுகின்றாராகலின் அம்முப்

பாறசொ லுயர்திணைய வென்றாராயினு முயர்திணைச்சொன் மூன்றுபாகு
படுமென்பது கருத்தாகக்கொள்க. இக்கருத்தானன்றே யாசிரியரம்முப்பாற்
சொல்லுமென் வினைத்தெனவறிநதபொருட் டொகுதிக்குக்கொடுக்கு மூவி
னைக்கொடாராயினு முரையாசிரியரு முயர்திணையெனப்பட்ட பகுப்பை விரி
ப்புழியித்திணையல்லது விரிபடாதென்ப தீண்டுக்கூறியதென் றுரைத்ததூஉ
மென்க. ஆயிருபாற்சொ லஃறிணை யவ்வேயென்பதற்கு மீதொக்கும்.

௩. ஒன்றறிசொல்லே பலவறிசொல்லென், றாயிருபாற்சொ
லஃறிணையவ்வே.

ஒன்றனையறியுஞ்சொல்லும், பலவற்றையறியுஞ் சொல்லுமென வவ்விர
ண்டு கூற்றுச்சொலலு மஃறிணையனவாம். எ - று.

௪. பெண்மைசுட்டிய வுயர்திணைமருங்கி, னாண்மைதிரிந்த பெ
யர்நிலைக்கிளவியுந், தெய்வஞ்சுட்டிய பெயர்நிலைக்கிளவியு,
மிவ்வெனவறியுமந்தந்தமக்கிலவே, யுயாதிணைமருங்கிற் பா
ல்பிரிந்திசைக்கும்.

உயர்திணையிடத்துப் பெண்மைத்தன்மைகுறித்த வாண்மைதிரிநத பெயர்
ச்சொல்லுந் தெய்வத்தைக்குறித்த பெயர்ச்சொல்லு மிவையெனத் தம்பொ
ருளை வேறறியநிற்கு மீறறெழுத்தினைத்தமககுடையவல்லவுயாதிணையிடத்த
தற்குரியபாலாய் வேறுபட்டிசைக்கும். எ - று. பால்வேறுபட் டிசைத்த
லாவது தாமுயர்திணைப்பெயரா யாடூஉவறிசொன் முதலாயினவற்றிற்குரிய
வீற்றெழுத்தே தம்வினைக்கீறாக விசைத்தல். பேடிவநதாள் - பேடர்வநதார் -
பேடியர்வந்தார் - எனவும், தேவன்வந்தான் - தேவிவந்தாள் - தேவர்வந்தார்-
எனவும்வரும். அலிப்பெயரினீக்குதற்குப் பெண்மைசுட்டியவென்றும், மகடூஉ
ப்பெயரினீக்குதற் காண்மைதிரிநதவென்றுங்கூறின[illegible]பெண்மைசுட்டியவெ
னவே பெண்மைசுட்டாப் பேடென்பது மொழிக்கட்பட்டதாம். பெண்மைதி
ரிந்தவாண்பேடு மாண்மைதிரிதல் பெரும்பான்மையாகலா னாண்மைதிரிந்த
வென்றார். பேடியர் - பேடிமார் - பேடிகள் - என்பனவு மடங்குதற்குப் பே
டியென்னும் பெயர்நிலைக்கிளவியென்னாது பெண்மைசுட்டிய வாண்மைதிரி
ந்த பெயர்நிலைக்கிளவியென்றார். பெண்மைசுட்டியவென்னும் பெயரெச்சம்
பெயர்நிலைக்கிளவியென்னும் பெயர்கொண்டது. ஆண்மைதிரிந்த வென்பதி
னிடைநிலை தன்மைதிரிபெயரொன்றுற்போலச் சொல்லொடு பொருட்கொற்று
மைக்கருதி யாண்மைதிரிந்த பெயர்நிலைக்கிளவியென்றார். உயர்திணைமருங்கிற்
பால்பிரிந்திசைக்குமெனவே தமக்கெனவேறீறின்மைபெறப்படுதலினிவ்வென
வறியுமந்தந்தமக்கிலவேயெனல் வேண்டாவெனின் தமக்கெனவீறுடையவா
ய் ஆடூஉவறிசொன்முதலாயினவற்றிற்குரிய வீற்றானுமிசைக்குங்கொலென்னு
மையமறுத்தற் கந்தந்தமக்கிலவேயெனல் வேண்டுமென்பது. பாலுளடங்கா
பேடியையுந் திணையுளடங்காததெய்வத்தையும் பாலுள்ளுந்திணையுள்ளும்
[illegible] சுட்டியவென்பது செய்யியவென்னும் வினையெச்சமென்று மாண்

மைதிரிதல் சொற்கின்மையிற் பெயர்நிலைக்கிளவியென்ப தாகுபெயராய்ப் பொருண்மேனின்றதென்று முரையாசிரியர் கூறினாராலெனின் ஆண்மைதிரிதல் பெண்மைத்தன்மை யெய்துதற்பொருட்டன்றிப் பேடிக்கியல்பாகலிற் பெண்மைசுட்டவேண்டி யாண்மைதிரிந்தவென்றல் பொருந்தாமையானும், பொருளேகூறலுற்றாராயி னாசிரியா பேடியுந் தெய்வமு மென்று தாங்கூறிய பொருளினிதுவிளங்கச் சுருங்கியவாய்பாட்டாற் சூத்திரிப்பாராகலானு மவர்க்கதுகருத்தன்மையா னுரையாசிரியர்க்கு மதுகருத்தன்றென்க.

௫. னஃகானொற்றே யாடூஉவறிசொல்.

னஃகானாகிய வொற்றாடூஉவறிசொல்லாம். எ - று. உண்டனன் - உண்டான்-உண்ணாநின்றனன்-உண்ணாநின்றான் - உண்பன் - உண்பான்-கரியன்-கரியான் எனவரும். ஆடூஉவறிசொல்லாவது னகாரவீற்றுச்சொல்லாயினும் பாலுணர்த்துதற் சிறப்புநோக்கி, னஃகானொற்றேயென்றார். அறமாவதழுக்காறின்மையென்றாற்போல] னஃகானொற் றாடூஉவறிசொல்லென்றாராயினும் ஆடூஉவறிசொல்லாவது னஃகானொற்றென்பது கருத்தாகக்கொள்க. ஏகாரமீற்றசைநிலை. ளஃகானொற்று முதலாயினவற்றிற்கு மிதுவொக்கும். உரையாசிரியர் பிரிநிலையென்றாராலெனின் பிரிநிலையாயின ஆடூஉவறிசொற் கிலக்கணங்கூறுதலன்றிப் பிரித்ததன் சிறப்புணர்த்துதலே கருத்தாமாகலி னவ்வுரை போலியுரையென்க.

௬. ளஃகானொற்றே மகடூஉவறிசொல்.

ளஃகானாகிய வொற்றுமகடூஉவறிசொல்லாம. எ - று. உண்டனள்-உண்டாள் - உண்ணாநின்றனள் - உண்ணாநின்றாள் - உண்பள் - உண்பாள்- கரியள்- கரியாள் - எனவரும்.

௭. ரஃகானொற்றும் பகரவிறுதியு, மாரைக்கிளவி யுளப்படமூன்று, நேரத்தோன்றும் பலரறிசொல்லே.

ரஃகானாகியவொற்றும், பகரமாகியவிறுதியும், மாரென்னுமிடைச்சொல்லுமிம்மூன்றும் பலரறிசொல்லாம். எ - று. ஏயென்பதீற்றசை. உண்டனர்- உண்டார் - உண்ணாநின்றனர் - உண்ணாநின்றார் - உண்பர் - உண்பார் - கரியர்- கரியார் - எ-ம் - கூறுப - வருப - எ-ம் - கொண்மார் - சென்மார் - எ-ம்- வரும். மார்எதிர்காலம் பற்றிவந்தஆரோயாம் ரஃகானொற்றெனவடங்குமெனின் அற்றன்று, ஆரோயாயிற்கொண்மாரென்புழிமகரங்காலம்பற்றிவந்ததோ ரெழுத்தாகல்வேண்டும் - உண்பார் - வருவார் - எனக்காலம்பற்றிவருமெழுத்து முதனிலைக்கேற்றவாற்றான் வேறுபட்டுவருமன்றே அவ்வாறன்றி- உண்மார - வருமார் - எனவெல்லாமுதனிலைமேலு மகரத்தொடு கூடிவருதலானும், வினைகொண்டு முடிதற்கேற்பதோர் பொருள்வேறுபா டுடைமையானும் ஆரீறன்று வேறெனவேபடுமென்பது. மூன்றுகாலமும் வினைக்குறிப்பும் பற்றிவருதல் ஒப்புமைநோக்கி அர். ஆர்என்னுமிரண்டற்குமுயும் ரஃகானொ

வடக்கியோதினார். அன் ஆன் அள் ஆள் என்பனவற்றையு மிவ்வொப்புமைப ற்றி யஃகான் ளஃகானென வடக்கியோதினார். ரகர மூன்றுகாலமும், வினைக்குறிப்பும்பற்றிப் பெருவழக்கிற்றாய் வருதலின்முன்வைத்தார். மார்பகரவி றுதியிற் சிறுவழக்கிற்றாகலிற் பின்வைத்தார். உண்கும் - உண்டும் - வருதும்- சேறும் - என்னுந்தொடக்கத்தனவும் பலரறிசொல்லாயினும் அவையெண்ணி யன்மருங்கிற் றிரிதல்னேரத்தோன்றாவாகலானிவற்றை நேரத்தோன்றும் பலரறிசொல்லென்றார். மூன்றும் பலரறிசொல்லென்றாராயினும் பலரறிசொல்லாவதிம்மூன்றுமென்பது கருத்தாககொள்க.

அ. ஒன்றறிகிளவி தறடவூர்ந்த, குன்றியலுகரத் திறுதியாகும்.

ஒன்றறிசொல்லாவது தறடவென்னு மொற்றையூர்ந்த குற்றியலுகரத்தை யிறுதியாகவுடைய சொல்லாம். எ - று. வந்தது - வாராநின்றது, வருவது - கரிது எ-ம், கூயிற்று - தாயிற்று - கோடின்று - குளம்பின்று - எ-ம் குண்டுகட்டு - கொடுந்தாட்டு எ-ம் வரும். கிடக்கை முறைமையாற்கூறாது தறடவெனச் சிறப்புமுறையாற்கூறினார். குன்றியலுகரமென மெலிந்து நின்றது. தகரவுகரமூன்றுகாலமும் வினைக்குறிப்பும்பற்றிவருதலும், றகரவுகர மிறந்தகாலமும வினைக்குறிப்பும் பற்றிவருதலும், டகரவுகரம் வினைக்குறிப்பே பற்றிவருதலுமாகிய வேறுபாடுடைமையாற குற்றியலுகரமெனவொன்றாகாது மூன்றாயின.

கூ. அ ஆ வ என வரூஉமிறுதி, யப்பான்மூன்றே பலவறி சொல்லே.

பலவறிசொல்லாவன அ ஆ வ என வரூஉமிறுதியை யுடையவக்கூற்று மூன்று சொல்லாம். எ - று. உண்டன - உண்ணாநின்றன, உண்பன - கரியன எ-ம், உண்ணா - தின்னா எ-ம், உண்குவ - தின்குவ எ-ம் வரும். உண்ட - உண்ணாநின்ற - உண்ப - கோட்ட - என்னுந் தொடக்கத்தனவும், அகரவீற்றுப பலவறிசொல். அவற்றுளுண்பவென்பது பகரவீற்றுப்பலரறிசொல்லன்றே அஃதஃறிணைக்காயினவா றென்னையெனின் பகரவிறுதியாயினன்றே யுயர்திணைக்காவது கண்டுக்காட்டப்பட்டது-கானந்தகைப்ப செலவுசினையவுஞ் சுனையவுராடினர் தொய்தல்வேண்டா நயந்துதாங்கொடுப்பபோல என நின்றனபோல எதிர்காலத்துவரும் பகரமூர்ந்துநின்ற அகரவீறாகலி னஃறிணைச்சொல்லை யாமென்பது. செய்யுளாதலிற் றகைப்பன கொடுப்பனவென்னுஞ்சொற்கள் தகைப்ப கொடுப்பவென விகாரவகையா னவ்வாறு நின்றனவாகலான் வழக்குமுடிவிற் கவைகாட்ட விரம்பாதெனின்-தகைத்தன-தகையாநின்றன-தகைத்த - தகையாநின்ற எ-ம், கொடுத்தன - கொடாநின்றன - கொடுத்த - கொடாநின்ற எ-ம், இறந்தகாலத்தும் நிகழ்காலத்தும் அகரவீறு முதனிலைக்கேற்றவாற்றா னவ்வக்காலத்திற்குரிய வெழுத்துப்பெற்று அன்பெற்றும் பெறாதுமுடியுமாறுபோல எதிர்காலத்து முதனிலைக்கேற்றவாற்றா னக்காலத்திற்குரிய வெழுத்துப்பெற்று அன்பெற்றும் பெறாதுமுடியும். எதிர்காலத்து

ன்குரிய வெழுத்தாவன பகரமும் வகரமுமாம். அவற்றுட்பகரம் உன்பெற்றும் பெறாதுமுடிவுழித் தகைப்பன - தகைப்ப - கொடுப்பன-கொடுப்ப எ-ம் வகரம்பெற் றவ்வாறுமுடிவுழி வருவன - வருவ - செல்வன - செல்வ-எ-ம். இவ்வாறு முடியுமாகலின், தகைப்ப - கொடுப்பவென்பன விகாரமெனப்படா வியல்பேயாமென்பது. கொடுப்பனயாவை யவைபோலவென வுவமைகருதா தவைதம்மையே சுட்டிநிற்றலிற்கொடுப்பவென்பதுபெயரன்மையறிக. உன்பெறா தெதிர்காலத்துவரும் வகரவெழுத்தூர்ந்துநின்ற அகரமாய் வகரவீறடங்குமெனின் வினைகொண்டு முடிதலொழித்து மாரீற்றிற்குரைத்ததுணர்க்க. அவ்வாறுரைக்கவே குகரம்பெற்றவழி யன்பெறற்கேலாமையின் உண்குவ - தின்குவ - என்னுந் தொடக்கத்தன வகரவீறேயாம். வருவ-செல்வவெனக் குகரம்பெறாதவழி வகரவீறுதலும், அகரவீறுதலுமென விருநிலைமையுமுடையவாம். என்னை, எல்லாவினைக்கண்ணுஞ் சேறன்மாலைத்தாகிய வகரவீறன்று விலக்கப்படாமையானு மத்தன்மைத்தாகிய அகரவீறு மாண்டுவந்து ன்பெறாதவழிக் காலவகரமூர்ந் தவ்வாறுநிற்ற லுடைமையானுமென்பது. வருமென்னு முகரம் விகாரவகையா னீண்டுநின்றது. ஈற்றுவகையான் மூன்றாகிய சொல்லென்பாரப்பான மூன்றென்றார்.

௧0. இருதிணைமருங்கி னைம்பாலறிய, வீற்றினின்றிசைக்கும் ப
தினோரெழுத்துந், தோற்றந்தாமே வினையொடுவருமே.

உயர்திணை யஃறிணையென்னுமிரண்டுதிணைக் கண்ணுமுளவாகிய வொருவனொருத்தி பலரொன்று பலவெனனு மைந்துபாலுமறிய வவ்வச்சொல்லினிறுதிக்கணின்றொலிக்கும் பதினோரெழுத்தும் புலப்படுதற்கண் வினைச்சொற்குறிப்பாய்ப் புலப்படும். எ - று. திணையிரண்டேபாலைந்தே யெனவரையறுத்தற்கு இருதிணைமருங்கி னைம்பாலென்றா. னகாரமும், ளகாரமும், ரகாரமும், மாரும - இறுதிநின்றுணர்த்துமென்பதற் கீற்றினின்றிசைக்கும் பதினோரெழுத்து மென்பதுஞாபகமாயிற்று. அல்லனவற்றிற் கனுவாதமாத்திரமென்றார். தாமேயென்பது கட்டுரைச்சுவைபடநின்றது. வினையெனப்பொதுப்படக்கூறினாராயினு மேற்புழிக்கோடலென்பதனாற் படர்க்கைவினையென்று கொள்ளப்படும். இவைபெயரொடுவருவழித்திரிபின்றிப் பால்விளக்காமையின் வினையொடுவருமென்றார்.

௧௧. வினையிற்றோன்றும் பாலறிகிளவியும், பெயரிற்றோன்றும்
பாலறிகிளவியு, மயங்கல்கூடா தம்மரபினவே.

ஒருதிணைச்சொல்லேனைத்திணைச்சொல்லொடுமுடியுந் திணைவழூஉம், ஒருபாற்சொல்லத்திணைக்கண்ணேனைப்பாற்சொல்லொடுமுடியும்பால்வழூஉம், பிறிதோர்காரணம் பற்றாது ஒருபொருட் குரியவழக் கொருபொருண்மேற்சென்றதெனப் படுமரபுவழூஉம், வினாயதற்கிறையாகாச் செப்புவழூஉம், வினாவப்படாதபொருள் பற்றிவரும் வினாவழூஉம், ஓரிடத்துச்சொல்லேனைத்

சொல்லதிகாரம்.

ருச் சொல்லொடுமுடியுமிடவழுவும், காலக்கிளவிதன்னொ டியையாக்காலமொடுபுணருங்காலவழுவுமென வழுவேழுவகைப்படும். வழுவற்கவென்றலும், வழுவமைத்தலுமெனவழுக்காத்த லிருவகைப்படும். குறித்தபொருளை யதற்குரியசொல்லாற் சொல்லுகவென்றல் வழுவற்கவென்றலாம். குறித்தபொருட்குரியசொல்லன்றாயினு மொருவாற்றானப்பொருள் விளக்குதலினமைகவென்றல் வழுவமைத்தலாம். இச்சூத்திரமுதலாக விவ்வோத்துவழுக்காக்கின்றது. கூறப்பட்ட பதினோரீற்றவாய்வினைபற்றி வரும்பாலறிசொல்லும், அவன - இவன - உவன - எனபனமுதலாகப் பெயர்பற்றிவரும் பாலறிசொல்லுந் தம்முட்டொடருங்கால ஒருபாற்சொலலேனைப்பாற் சொல்லொடுமயங்கா; தம்பாற்சொல்லொடுதொடரும். எ - று. எனவே பிறபாற்சொல்லொடு தொடர்வனவழுவென்பதாம். ஈண்டுப்பெயரென்றதுபொருளை. திணையுணராக்காலதனுட்பகுதியாகிய பாலுணரலாகாமையிற பாலறிகிளவியெனவே திணையறிதலும்பெறப்படும். படவேமயங்கல் கூடாவெனறது திணையும்பாலும் மயங்கற்கவென்றவாறும். இன்னுமயங்கல் கூடாவென்றதனான் வினைபயாலறிசொல்லும், பெயாப்பாலறிசொல்லும், பாலறிசொல்லுள் ஒருசாரனவுமிடமுங்காலமு முணர்த்துமாகலினவ்வா றுணாதனவற்றானு மயங்கறகவென்றவாறும். ஆகவே யிடமுங்காலமுமயங்காது வருதலுங்கூறப்பட்டதாம். அவன்வந்தான் - அவள்வந்தாள - அவர்வநதார் - அதுவநதது - அவைவந்தன - எ-ம், நெருநலவநதான் எ - ம், திணையும்பாலு மிடமுங்காலமும் வழுவாது முடிந்தவாறு. அவ்வாறன்றி - அவன்வநதது - அவன்வந்தாள் - யான்வந்தான் - நானைவந்தேம் - எனமயங்கி வருவனவெல்லாம் வழுவாம. சிறப்புடைப்பொருளைத் தானினிதுகிளத்த லென்பதனை லமபாலுணர்த்துதற் சிறப்புடைய படர்க்கை வினைபற்றியோதினோனுந தன்மைச்சொலலே யஃறிணைக்கிளவியெனறும், முன்னிலைசுட்டிய வொருமைக்கிளவியென்றும் பெயர்வழுவமைப்பாராகலிற றன்மைமுன்னிலைப் பாலறிகிளவியு மயங்கற்கவென்ப தீண்டைக்கொள்ளப்படும். (உதாரணம்) யான்வநதேன் - யாம்வநதேம் - நீவநதாய் - நீயிர்வந்திர் எனவரும். யான்வந்தேம் - நீயிர்வநதாய் என்னுந் தொடக்கத்தன வழுவாம். மயங்கல் கூடாவென்றது மயங்குதலைப் பொருந்தாவென்றவாறு. மயங்கல்கூடா தம்மரபினவே யெனபனவற்று ளொன்றனதாற்றலா னேனையதன்பொருளு முணரப்படுதலி னொன்றேயமையுமெனிற் சொல்லில்வழிய தய்த்துணாவதென்க. தம்மரபினவே யெனபதனைப்பிரித்து வேறோர்தொடராக்கிச் சொற்கண்மரபுபிறழா தம்மரபினவேயென மரபுவழுக்காத்ததாகவுரைக்க. இது யோகவிபாகமெனனு நூற்புணர்ப்பு. முன்னிருபொருள்பட வுரைப்பனவெல்லாம் இந்நூற்புணர்ப்பாகக்கொள்க. யானைமேய்ப்பானைப் பாகனென்றலும், யாடுமேய்ப்பானை இடையனென்றலு மரபு. மேய்த்தலொப்புமையான் யானைமேய்ப்பானை இடையனென்றலும், யாடுமேய்ப்பானைப் பாகனென்றலு மரபுவழு. செப்புவழாநிலையும் வினாவழாநிலையுந் சிறப்புவகையானோதப்படு மிடவழாநிலையு மிவ்வாறோதப்படு மரபுவழாநிலையு மொழிந்தொழிந்தன விச்சூத்திரத்தாற் காத்தார.

கஉ. ஆண்மைதிரிந்த பெயர்நிலைக்கிளவி, யாண்மையறிசொற் காகிடனின்றே.

உயர்திணைமருங்கிற்பால பிரிந்திசைக்குமென்று மேற்கூறப்பட்ட வாண்மைதிரிந்த பெயர்நிலைக்கிளவி யாடூஉவறிசொல்லொடு புணர்தற்குப் பொருந்துமிடனுடைத்தன்று. எ - று. ஆண்மையறிசொற் காகிடனின்றென்ற விலக் காண்மையறிசொல்லொடுபுணர்த லெய்திநின்ற பேடிக்கல்லதேலாமையி னலிமேற்செல்லாதென்க. இச்சூத்திரத்தைப் பெண்மைசுட்டிய வென்னுஞ்சூத்திரத்தின்பின்வையாது நீண்டுவைத்தார்,இதுவழுவற்கவென்கின்றதாகலான்.]

கங. செப்பும்வினாவும் வழாஅலோம்பல்

செப்பினையும் வினாவினையும் வழுவாமற்போற்றுக. எ - று. செப்பென்பது வினயபொருளை யறிவுறுப்பது. அஃதிரண்டுவகைப்படும். செவ்வனிறையுமிறை பயப்பதுமென] உயிரொத்தன்மைத்தென்று வினயவழி யுணர்தற்றன்மைத்தென்றல் செவ்வனிறையாம்; உண்டியோவென்று வினயவழி வயிறுகுத்திற்றென்ற லுண்ணேனென்பது பயநதமையினிறை பயப்பதாம். கருவூர்க்குச் செல்லாயோ சாத்தாவெனப் பருநூல் பன்னிருதொடியென்பது செப்புவழுவாம். சொல்லெப்பொருளுணர்த்துமென்று வினயவழிச் சொல்லொருபொருளு முணர்த்தாதென்பதுமது. வினயபொருளை வினாவாலுணர்ந்து தான்குறித்தபொருளைச் செப்பாலுணர்த்துகின்ற ஞகலினென்பது] வினாவின்றியுஞ் செப்புநிகழ்தலின் வினயபொருளை யெனல்வேண்டாவெனின் வினயபொருளை யென்றதறிவுறுப்பது செப்பெனின் அறியலுறவினை யறிவுறுத்தலின் வினாவுஞ்செப்பா யடங்குதலானுஞ் செப்பென்ப துத்தரமென்பதனொடொருபொருட்கிளவியாகலானும் வினயபொருளை யறிவுறுத்தலே யிலக்கணமாமென்பது. குமரியாடிப்போந்தேன் சோறுதம்மினென வினாவின்றி நிகழ்ந்தசொல் யாண்டடங்குமெனின் அறியலுறுதலை யுணர்த்தாதொன்றனை யறிவுறுத்துநிற்றலிற் செப்பின்பாற்படும். வினாவெதிர்வினாத லேவன்மறுத்தலுற்றதுரைத்த லுறுவதுகூற லுடம்படுவதெனச் செப்பறுவகைப்படுமென் றுரையாசிரியர் கூறினாராலெனின் உயிரொத்தன்மைத்தென்ற வழியுணர்தற்றன்மைத்தென்றன்முதலாயின வவற்றுளடங்காமையானு மறுத்தலுமுடம்படுதலு மேவப்பட்டார் கண்ணவாகலானு மறுவகைப்படுமென்று பிறர்மதமேற்கொண்டு கூறினரென்பது. வினாவாவ தறியலுறவுவெளிப்படுப்பது. அதுமூவகைப்படும். அறியான்வினாவும் ஐயவினாவும் அறிபொருள்வினாவுமென] அறியான்வினா உயிரொத்தன்மைத்தென்பது ஒருபுடையானு மறியப்படாதபொருள் வினாவப்படாமையிற் பொதுவகையா னறியப்பட்டுச் சிறப்புவகையா னறியப்படாமைநோக்கி அறியான் வினாவாயிற்று. ஐயவினா குற்றியோமகனோ தோன்றுகின்ற வுருவமென்பது. அறிபொருள்வினா அறியப்பட்டபொருளையே ஒருபயனோக்கி அவ்வாய்பாட்டினான்முன்வினாவுவது. பயன்வேறறிதலும்,

அறிவுறுத்தலுமுதலாயின. கறக்கின்றவெருமை பாலோசினையோவென்பது விளவழுவாம். ஒருபொருள்காட்டி இது நெடிதோ குறிதோ வென்பதுமது. உரையாசிரியர் அறிபொருள்வினவை அறிவொப்புக்காண்டலும் அவனறிவு தான் கோடலும் மெய்யவனைக்காட்டலும் எனவிரித்து ஏனையகூட்டி ஐந தென்றார். இருவகைச்செப்பினு மூவகைவினவினுஞ் செவ்வனிறையுமறியான் வினவுமைய வினவும்வழாநிலையாகலின் வழாஅதோம்ப லென்பதனாற் கொள்ளப்படும். ஏனையவழுவமைப்புழிக் காணப்படும். வினவழீஇயினவிடத் தமையாவென் றுரையாசிரியர் கூறினாராலெனின் அற்றன்று யாதெனவரூஉம் வினவின்கிளவியெனவும் வன்புறவரூஉம் வினவுடை வினைச்சொல்லெனவு முன்னர் வழுவமைப்பாராகலான் அது போலியுரையென்க.

கச. வினவுஞ்செப்பே வினவெதிர்வரினே.

வினயபொருளை யொருவாற்றான் அறிவுறுத்து வினவிற்கு மறுமொழியாய்வரின் வினவுஞ்செப்பாம் - எ - று. சாத்தா உண்டியோவென்று வினயவழி உண்ணேனோ எனவரும் வினவாய்ப்பாட்டான் வந்ததாயினும் உணபல் என்பது கருத்துப்பொருளாகலிற் செப்பெனப்படும். உண்டியோவென்று வினயவழி உண்பல் - உண்ணேனென்றிருந்து தானென்னை வினவுவான் போலக்கூறலின் வழுவமைதியாயிற்று.இதுசெப்புவழுவமைதியேற்செப்பேவழீஇயினு மெனபுழியடங்குமெனின ஒன்றன்செப்பு ஒன்றற்காவதன்றி வினச்செப்பாயினமையின் வேறுகூறினார்.

கரு. செப்பேவழீஇயினும் வரைநிலையின்றே, யப்பொருள்புணர்ந்த கிளவியான.

செவ்வனிறையாகாது செப்புவழுவிவரினுங் கடியப்படாது ஒருவாற்றான் வினயபொருட் கியைபுபட்ட கிளவியாதற்கண் எ - று. சாத்தா உண்டியோவென்று வினயவழி நீ யுண்ணென்றும், வயிறுகுத்துமென்றும், பசித்தேனெனவும், பொழுதாயிற்றெனவும் வருமிவை செவ்வனிறையல்லவேனும் வினயபொருளை யொருவாற்று னறிவுறுத்தலி னமைந்தவாறு கண்டுகொள்க. அஃதேல் இவைதெரிபுவேறு நிலையலுங் குறிப்பிற்றோனறலு மென்புழிக் குறிப்பிற்றோன்றலா யடங்குமாகலி னீண்டுக்கூறவேண்டாவெனி னவ்வாறடங்குமாயினும், செப்பும் வினவும்வழாஅலோம்பலென்றதனு னிவையெல்லாம் வழுவாதலெய்திற்றதனுனமைக்கல் வேண்டுமென்பது.

கசு. செப்பினும் வினவினுஞ் சினைமுதற்கிளவிக், கப்பொருளாகு முறழ்துணைப்பொருளே.

செப்பின்கண்ணும் வினவின்கண்ணுஞ் சினைக்கிளவிக்கு முதற்கிளவிக்கு முறழ்பொருளுந் துணைப்பொருளும் அவ்வப்பொருளுக் கவ்வப்பொருளேயாம் - எ - று, எனவே சினையுமுதலுந் தம்முண் மயங்கிவருதல் வழுவெ

பதாம். உறழ்பொருளாவ தொப்புமைகூறுது மாறுபடக் கூறப்படுவது. இணைப்பொருளாவ தொப்புமை கூறப்படுவது. உ-ம். இவள் கண்ணி னிவள் கண்பெரிய, நும்மரசனி னெம்மரசன் முறைசெய்யும் எ-ம், இவள் கண் ணொக்கு மிவள்கண், எம்மரசனை யொக்கு நும்மரசன்-எ-ம், இவள்கண்ணி னிவள்கண்பெரியவோ, நும்மரசனி னெம்மரசன்முறை செய்யுமோ எ-ம். இவள் கண்ணொக்குமோ விவள்கண், எம்மரசனை யொக்குமோ நும்மரசன் எ-ம் வரும். அவன் கோலினுந் தண்ணிய தடமென்றோளே எ-ம். துளித்தலைத் தலைஇயதளிரன்னோளே எ-ம் - மயங்கி வந்தனவருவாம் பிறவெனின் அவைசெய்யுள் புற்றிவருமுவமவழுவாதலி னீண்டைக்கெய்தா அணியியலுட் பெறப்படும். இம்மகள்கண்ணல்லவோ கயனல்லவோவென வழக்கின்கண்ணு மயங்கிவருமாலெனி னுண்மையுணர்தற்கு விளுயதன்றி யையவுவமைவாய்பாட்டாற் கண்ணைப் புனைந்துரைத்தல் கருத்தாகலி னனனவையெல்லா முனைவென்னுஞ் செய்யுளாமென்பது. இந்நங்கைமுலையி னிந்நங்கைகண் ணல்லவென்னுந் தொடக்கத்தன மயக்கமின்மையி னிலக்கணவழக்காம் பிறவெனின் அற்றன்று ஒத்தபண்பு பற்றியன்றே பொருவுவது. கண்ணொடு முலைக்கொத்த பண்பின்மையாற்பொருவுதல் யாண்டையது. ஒத்த பண்புபற்றிய பொருவுதற் கண்ணது இவ்வாராய்ச்சியெனபது. காக்கப்பட்டன செப்புவழாநிலையும் விளுவழாநிலையு மென்பார்செப்பினும் விளுவினுமென்றார். வழாஅலோம்பலென்புழி யடங்குமாயினு நுண்ணுணர்வுடையார்க் கல்லதது ஞுணரலாகாமையின் விரித்துக் கூறியவாறு. தன்னின முடித்தலென்பதனாற் பொனனுந் துகிரு முத்துமணியுமென வெண்ணுங்காலு மினமாயபொருளேயெண்ணப படுமென்பதுகொள்க.

கஎ. தகுதியும்வழக்குந் தழீஇயின வொழுகும், பகுதிக்கிளவிவ ரை நிலையிலவே.

தகுதிபற்றியும் வழக்குப்பற்றியும் நடக்குமிலக்கணத்திற்பக்கசொற்கடியப்படா எ - று. தகுதியென்பதப் பொருட்குரியசொல்லாற் சொல்லுதனீர்மையன்றென்று அதுகளைந்து நக்கதோர வாய்பாட்டாற்கூறுதல். அது செத்தாரைத் துஞ்சினுரொன்றலுஞ் சுடுகாட்டை நன்காடென்றலு மோலையைத் திருமுகமென்றலுங் கெட்டதனைப் பெருகிற்றென்றலுமென விததொடக்கத்தன. வழக்கென்பது காரணமின்றி வழங்கற்பாடே பற்றிவருவது. பண்புகொள்பெயராயினும் பண்புகுறியாது சாதிப்பெயராய் வெள்யாடு-வெண்களமர் - கருங்களமரொன்று வருவனவும், குடதநுள்ளும் பிறகலத்துள்ளுமிருந்த நீரைச் சிறிதென்னுது சிலவென்றலும், அடுப்பின் கீழ்ப்புடையடுப்பை மீயடுப்பென்றலும், பிறவும் வழக்காறும். பொற்கொல்லா பொன்னைப் பறியென்றலும், வண்ணக்கர் காணத்தை நீலமென்றலு முதலாகிய குழுவின்வந்த குறுநிலவழக்கும், கண்கழீஇவருதும்,கான்மே னீரபெய்துவருதுமென்னுந் தொடக்கத் திடக்கரடக்குந் தகுதியென்றும், மரூஉமுடிபை வழக்காறென்று முனையாசிரிய ரமைத்தாராலெனின் குழுவின்வந்த குறுநிலவழக்

குச சானருேரா வழககினகணணு மவாசெயயுடகணணும வாராமையினமை ககப படாவாகலானும, இடககரடக கவையலகிளவியெனவு மறைககுஙகா லெயெனவு முனனரமைககப படுதலானு மரூஉமுடி பெழுததிகாரததுக கூ றபபடடமையானு மவாககது கருததனறெனபது. கருமைமுதலாயின வொ ருஙிகரன வனமையிற காககையொடு சாாததிக களமபழததைவிதநத துணை யலலது காககைககு வெணமைநேராமையிற காககையிறகரிது களமபழமெ னபுழிக கரிதுவெளிதாயிறறனறு. சிறககுமேறகெனபன வரையறையினறி யொனறனெடு சாாததிப பெறபபடுவனவாகலி னெனறறகுக கீழபாலதனை ட பிறிதொனறறகு மேலபாலதெனறாலும வழுவனறு. சிறுவெளவாயெனப திடுகுறி. அதனுனிவை வழககாறென வமைககபபடடவாயினு முறையாசிரி யா பிறாமதமுணாததிய கூறினுரெனபது. தததமககுரிய வாயபாடடானன றிய பிறவாயபாடடாறகூறுதல வழுவாயினு மமைகவென மரபுவழு வமை ததவாறு.

கஅ. இனசசுடடிலலாப பணபுகொளபெயாககொடை, வழக
காறலல செயயுளாறே.

இனபபொருளைசசுடடுதலினறிய பணபடுதது வழஙகபபடுமபெயா வழ ககுநெறியலல செயயுணெறி. எ - று. செஞஞாயிறறு நிலவுவேணடினும வெ ணடிஙகளுள வெயிலவேணடினும எனவரும. பலபொருடகுப பொதுவாகிய சொலலனறே யொருபொருடகுச சிறநத பணபான விசேடிககபபடுவது. ஞாயிறு திஙகளெனபன பொதுசசொ லனமையிற செஞஞாயிறெனறும வெணடிஙகளெனறும விசேடிககபபடடாவாயினுஞ செயயுடகணணியாய நிற றலி னமைககவெனருா. பெருஙகொறறன - பெருஞசாததன என இலகுண மடுதது வழககினகணணுமினஞசுடடாதுவருதலிறசெயயுளாறெனறல திரம பாதெனின அவையினஞ சுடடாமையின வழுவாயினவலல இலகுணமடு ததலின வழுவாயின. இனஞசுடடலாவது இனததைச சுட்டியவறறினின்று ம விசேடிககபபடுதல. வெணமைமுதலாயின விசேடிததலாவது அக்குணமி லலா வினபபொருளினீககி யககுணமுடையதனை வரைநது சுடடுவிததலன றே. சுடடபபடுவதனக ணககுணமிலலையாயின வரைநது சுட்டுவிககுமாறெ னனை! அதனுன விசேடிககறபாலது விசேடியாது நினறதனருகலின ஈண் டைககெயதா. வழககிஞகிய வுயாசொறகிளவியெனபுழி யொனறென முடி ததலெனபதனு னமைககபபடும. குறுஞசூலி - குறுநதடியெனனுந தொடக கததன சூலிதடியெனபபிரிநது நிலலாமையிற பணபுகொளபெய ரெனபப டா. பணபடாது வடவேஙகடம - தெனகுமரி - முட்டாழை - கோடசுரு எனததினசயு முறுபபுநதொழிலு முதலாய வடையடுததினஞ சுடடாதுவரு வன ஒனறெனமுடிதத லெனபதனுற செயயுளாறென வமைததுககொளள பபடும. ஒனறனதாறறலா னெனறுபெறபபடுதலின வழககாறலலவெனரு னுஞ செயயுளாறெனருனுங கூறவமையுமெனி னுயததுணாவது சொலலில

வழியெனமறுக்க. பண்புகொள்பெய ரினங்குறித்து வருதன்மரபு. அம்மரபு வழக்கின்கண் வழுவற்கவென்றுஞ் செய்யுட்கண் வழுவமைக்கவென்றுங் காத்தவாருயிற்று.

கசுை. இயற்கைப்பொருளை யிற்றெனக்கிளத்தல்.

தன்னியல்பிற் றிரியாதுநின்றபொருளையதனியல்புகூறுங்கா லாக்கமுங் காரணமுங் கொடாதிற்றெனச் சொல்லுக. எ - று. இயல்பாவது பொருட்குப் பின்றோன்று துடனிகழுந தன்மை. உ - ம். 'நிலம்வலிது - நீர்தண்ணிது - தீவெய்து - வளியுளரும் - உயிருணரும் - எனவரும். இற்றென்பது வினைக்குறிப்பு வாயபாடாயினும் உளரும் - உணரும் என்னுந் தெரிநிலைவினையு மிற்றென்னும் பொருள்படநிற்றலி னிற்றெனக்கிளத்தலேயாம். நிலம்வலிதாயிற்றென வியற்கைப்பொருளாக்கம்பெற்று வருமாலெனின் கல்லுமிட்டிகையும்பெய்து குற்றுச்செய்யப்பட்டநிலத்தை வலிதாயிற்றெனி னிது செயற்கைப்பொருளேயாம்.நீர்நிலமுஞ்சேற்றுநிலமு முன்மிதித்துச்சென்று வன்னிலமிதித்தால் நிலம் வலிதாயிற்றென்றவழிமெலிதா யதுவலிதாய வேறுபட்டதென வாக்கம வேறுபாடு குறித்துநிறறலி னியறகைப்பொருளாக்க மொடு வநததன்றும். அல்லது நிலத்திறகு வன்மைவிகாரமென்றோதாது நிலம் வலிதாயிற் றென்னுமாயிற் றிங்கள கரிதென்பதுபோலப் பிறழவுணர்நதார் வழக்காயாராயப்படாதென்க.

உ௦. செயற்கைப்பொருளை யாக்கமொடுகூறல்.

காரணத்தாற் றன்மைதிரிந்தபொருளை யத்திரிபுகூறுங்காலாக்கங்கொடுத்துச் சொல்லுக. எ - று. ஆக்கமொடுகூற லென்பதனுற திரிபுகூறுதல்பெற்றும். என்னை! அதன்கணல்லது வாராமையின்] இயறகைப்பொருள் செயற்கைப்பொருளென்பன விருபெயர்ப் பண்புத்தொகை.

உக. ஆக்கந்தானே காரணமுதற்றே.

செயற்கைப்பொருளை யாக்கமொடு கூறுங்காற் காரணத்தை முற்கூறிஅதன்வழி யாக்கங்கூறுக. எ - று. தானேயென்பது செய்யுட்சுவை குறித்துநின்றது. கடுக்கலநதகைபிழியெண்ணெய் பெற்றமையான் மயிர்நல்லவாயின, எருபபெய்திளங்களைகட்டு நீகால்யாத்தமையாற் பைங்கூழ் நல்லவாயின, நீர்கலத்தலா னிலமெலிதாயிற்று, தீசசார்தலா னீர்வெய்தாயிற்று எனவரும். மயிர்நல்ல - பயிர்நல்லவெனச் செயறகைப்பொரு ளாக்கம்பெறுது வந்ததாலெனின் அந்நன்மைபொருட்குப் பின்றோன்றுதுடன்றோனறிற்றே லியற்கையேயாம். அவ்வாறன்றி முன்றீயவாய்ப் பினநல்லவாயினவேனுந் தீயநிலைமை காணுதான் மயிர்நல்ல - பயிர்நல்லவென்றுற்படுமிழுக்கென்னை! அது செயற்கையாவதுணர்ந்தா ராக்கங்கொடாது சொல்லினன்றே வழுவாவதென்க. செயற்கைப்பொருளை யாக்கமுங் காரணமுங் கொடுத்துச்சொல்லுகவென்பதே கருத்தாயிற் சூத்திரமொன்றுகற் பாற்றெனின் அவ்வாறோதின்

ஆக்கமுங் காரணமுஞ் செயற்கைப்பொருட்கிளைத்தவாயினவென்பது பட்டுக்காரணமின்றியும் போக்கின்றென்பதனொடு மாறுகோடலானுங் காரணஞ் செயற்கைப்பொருளதோவாக்கத்ததோவென வையுறப்படுதலானுமாக்கந்தானே காரணமுதற்றெனப் பிரித்துக்கூறினாரென்பது. இயற்கைப்பொரு ளாக்கமுங் காரணமும் பெறாதுவருதலுஞ் செயற்கைப்பொருளவை பெற்றுவருதலு மிலக்கணமெனவே யிவ்வாறன்றி வருவன மரபுவழுவென்பதாம். நுண்ணுணர்வுடையோர்க்குத் தம்மரபினவேயென வடங்குவவாயினு மேனையுணர்வினோர்க் கிவ்வேறுபா டுணரலாகாமையின் விரிதத்துக்கூறினார்.

௨௨. ஆக்கக்கிளவி காரணமின்றியும், போக்கின்றென்ப வழக்கினுள்ளே.

காரணமுதற்றெனப்பட்டவாக்கச்சொல்காரணமின்றிவரினுங் குற்றமின்று வழக்கினுள் எ - று. மயிர்நல்லவாயின - பயிர்நல்லவாயின - எனவரும். வழக்கினுட்காரணமின்றியே வருமெனவே செய்யுளுட்காரணம் பெற்றே வருமென்பதாம். பரிசிலர்க்கருங்கலனல்கவுங்குரிசில்வலியவாகுநின்றோடோய்தடக்கை - எ - ம். குருதிபடிந்துண்ட காகமுருவிழந்து குக்கிற்புறத்த சிரல்வாய - எ - ம். கருமுருகன் சூடியகண்ணி திருநுதாலின்றென்குரற் கூந்தற்பெய்தமையாற்பண்டைத்தன்சாயலவாயினதோள் - எ - ம் காரணம் பெற்று வந்தவாறு கண்டுகொள்க. குக்கிற்புறத்த சிரல்வாய எனவாக்கமின்றி வந்தனவாலெனின் தொகுக்கும்வழித் தொகுத்தலென்பதனா னுண்டாக்கந் தொக்குநின்றதென்பது. அரியகானஞ் சென்றோர்க்கெளியவாகிய தடமென்றோளே - எ - ம் - நல்லவையெல்லாந் தீயவாந்தீயவு நல்லவாஞ்செல்வஞ்செயற்கு. எ - ம் - செயற்கைப்பொருள்செய்யுளுட்காரணமின்றிவந்தனவாலெனின் கனவுக்காலத்தரியனவிக்காலத்தெளியவாயினவென்பது கருத்தாகலானக்காலங்காரணமென்பது பெறப்படுதலானும், ஊழானென்பது அதிகாரத்தான் வருமாகலானு மவைகாரணமின்றிவந்தனவெனப் படாவென்பது.

௨௩. பான்மயக்குற்ற வையக்கிளவி, தானறிபொருள்வயிற் பன்மைகூறல்.

திணைதுணிந்து பால்துணியாத வையப்பொருளை யவ்வத்திணைப் பன்மையாற்கூறுக. எ - று. கிளவியென்ப தீண்டுப்பொருளை. ஐயப்பொருளாவது சிறப்பியல்பாற்றோன்றாது பொதுவியல்பாற் றோன்றியபொருள். உ - ம். ஆண்மகன்கொல்லோ பெண்டாட்டிகொல்லோ விஃதோதோன்றுவார். எ- ம். ஒன்றோ பலவோசெய்புக்கன - எ - ம் வரும். திணைவயினென்னாது தானறிபொருள்வயினெனப்பொதுப்படக்கூறியவதனான் ஒருவன்கொல்லோ பலர்கொல்லோ கறவையுய்த்தகள்வர் - எ - ம், ஒருத்திகொல்லோ பலர்கொல்லோ விக்குருக்கத்திநீழல்வண்டலயர்ந்தார் - எ - ம் திணையோடாண்மை பெண்மைதுணிந்தபன்மையொருமைப்பாலையமுங்கொள்ளப்படும். ஒருமையாற்கூறின் வழுப்படுதனோக்கிப்பன்மைகூறலென வழாநிலைபோலக்கூறினாரேனு மொரு

மையைப்பன்மையாற்கூறுதலும் வழுவாதலினையப்பொருண்மேற்சொன்னிக ழுமாறுணர்த்தியமுகத்தாற் பால்வழு வமைத்தவாறும்.

உச. உருபெனமொழியினு மஃறிணைப்பிரிப்பினு, மிருவீற்றுமு ரித்தே சுட்டுங்காலை.

உருபெனச் சொல்லுமிடத்தும் ஒருமையும் பன்மையுமாகப் பிரிக்கப்ப டு மஃறிணைப் பொதுச்சொற்கண்ணு மிவ்விருகூற்றினுமையப் புலப்பொதுச் சொல்லாதலுரித்து - எ - று. எனவே ஆண்மகன்கொல்லோ பெண்டாட்டி கொல்லோ தோன்றுநின்றவுருபு எ - ம். ஒன்றுகொல்லோ பலகொல்லோ செய்புக்கவுருபு எ - ம், குற்றிகொல்லோ மகன்கொல்லோ தோன்றுநின்றவு ருபு - எ - ம், ஒன்றுகொலலோ பலகொல்லோ செய்புக்கபெற்றம் - எ - ம்- சொல்லுகவென்பதாம். ஐயக்கிளவியென்பததிகாரத்தாற்பெற்றும். உருபினு மென்னுதுருபெனமொழியினுமென்றதனு னுருபின்பொருளவாகியவடிவுபிழ ம்பு பிண்டமென்னுந் தொடக்கத்தனவுங்கொள்க. பன்மைகூற லுயர்திணைப் பாலையத்திற் குரித்தென்றும் - உருபெனமொழிதல் திணையையத்திற்குரித்தெ ன்று முறையாசிரியர் கூறினாராலெனின் அவையவற்றிற்கே யுரியவாயினஃ றிணைப் பிரிப்பென்றாற்போல வுயர்திணைப் பான்மயக்குற்றவென்றுந் திணை யையத்தென்றும் விதந்தோதுவராசிரியர் அவ்வாறோதாமையானும் நடையு ளவை பொதுவாய் வருதலானு மவைபோலியுளாயென்க.ஒருவன்கொல்லோ பலர்கொல்லோவென்றற்றொடக்கத் துயர்திணைப் பன்மையொருமைப்பாலை யத்திற்குருபுமுதலாயினவேலாமையுந்திணையையத்திற்கு மேனைப்பாலையத்தி ற்குமேற்புடைமையுஞ்சுட்டி யுணர்கவெனபது போதரச்சுட்டுங்காலையென் றார். சுட்டுதல் கருதுதல்.

உரு. தன்மைசுட்டலு முரித்தெனமொழிப, வன்மைக்கிளவி வே றிடத்தான.

ஐயுற்றுத்துணியும்வழியன்மைக்கிளவியன்மைத்தன்மையைச் சுட்டி நிற்றலு முரித்தென்றுசொல்லுவர் துணிந்ததற்இக்கொள்ளப்பட்ட பொரு ளின்வேறாய பொருளிடத்து எ - று. என்றது குற்றிகொல்லோ மகன்கொல் லோ வென்றுனும், ஒருவன்கொல்லோ ஒருத்திகொல்லோவென்றுனும், ஒன் றுகொல்லோ பலகொல்லோவென்றுனும ஐயநிகழ்ந்தவழித்துணிதலுமுண் டு - பிறநடையுட்டுணிந்தவழி மறுக்கப் படும்பொருண்மே லன்மைத்தன்மை யேற்றினுமமையும் - எ - று. மகனென்று துணிந்தவழிக்குற்றியன்றுமக னெனவும், குற்றியென்று துணிந்தவழி மகனல்லன் குற்றியெனவும் - ஆ ண்மகனெனத்துணிந்தவழிப் பெண்டாட்டியல்லள் ஆண்மகனெனவும், பெ ண்டாட்டியென்று துணிந்தவழி ஆண்மகனல்லன் பெண்டாட்டியெனவும் - ஒன்றென்று துணிந்தவழிப் பலவல்ல ஒன்றெனவும், பலவென்று துணிந்த வழி ஒன்றன்று பலவெனவும் மறுக்கப்படும்பொருண்மேல் அன்மைக்கிளவி

யன்மைத் தன்மையைச்சுட்டி நின்றவாறு. உம்மை எதிர்மறையாகலான் வே றிடத்துச் சுட்டாமையே பெரும்பான்மையென்பதாம். ஆகவே யிவ்வுருபுகுற் றியன்று மகனென ஐயப்புலமாகிய பொதுப்பொருண் மேலானும், குற்றியல் லன் மகனெனத் துணிபொருண் மேலானும் அனமைக்கிளவி அன்மைசுட்டி நிற்றல் பெரும்பான்மை யென்பதாம். என்னை? வேறிடத்துச் சுட்டாமையாவ தீண்டுச் சுட்டலேயாகலான்] குற்றியன்று மகனென்றவழி மகனென்பது நின்றுவற்றுமெனின் எவ்வயிற்பெயரும் வெளிப்படத்தோன்றி யவ்வயினிலே யல் செவ்விதென்பவென்பதனு னெழுவாய் வெளிப்படாதுநிற்றலுமுண்மை யான் வெளிப்படாதுநின்ற விவனென்னுமெழுவாய்க் கதுபயனிலையாகலி னி ன்றுவற்றுதல் யாண்டையதென்க. அல்லனவற்றிற்கு மீதொக்கும். குற்றிய ல்லனென்புழிக் குற்றியென்ப தல்லனென்னுஞ் சொலலொடியைந்தவா றெ ன்னையெனின் இவ்வுருபு குற்றியாமென்றவழி யாமென்றதனொடு குற்றியெ ன்பதூஉ மெழுவாயாய்நின்றே யியைநதாற்போல விவன்குற்றியல்லனென் புழியாமென்பத னெதிர்மறையாகிய வன்மைக்கிளவியொடுங் குற்றியென்ப தெழுவாயாய்நின்றே யியையுமென்பது. எழுவாயா யியைதலினன்றேயாயி ன்நீயல்லனென்புழி நீயென்பது வேற்றுமைக்கேற்ற செய்கைபெறுது நின்ற தென்க.

உசு. அடைசினைமுதலென முறைமூன்று மயங்காமை, நடைபெ ற்றியலும் வண்ணசினைச்சொல்.

பண்புச்சொல்லுஞ் சினைச்சொல்லு முதற்சொல்லுமெனமூன்றுங் கூறப் பட்ட முறைமயங்காமல் வழக்கைப்பொருநதிநடக்கும் வண்ணச்சொல்லொ டுதொடர்ந்த சினைச்சொல்லையுடைய முதற்சொல் - எ - று. வடிவுமுதலாகிய பிறபண்புமுளவேனும் வண்ணப்பண்பினது வழக்குப்பயிற்சிநோக்கி வண்ண ச்சினைச்சொலென்முர். உ - ம், செங்காலுரை - பெருந்தலைச்சாத்தன் - என வரும் - கால்செந்நாரை - தலைபெருஞ்சாத்தன் எனமுறைமயங்கிவரின் மர புவழுவாமென்க. வழக்கினுண் மயங்காதுவருமெனவே, கவிசெந்தாழைக் கு விபுறத்திருந்த செவிசெஞ்சேவலும் பொருவலும் வெருவா வாய்வன்காக்கை யுங் கூகையுங்கூடி எனச்செய்யுளுண்மயங்கியும் வரப்பெறுமென்றவாறும். செவிசெஞ்சேவல் - வாய்வன்காக்கை - என்பன செஞ்செவிச்சேவல் - வல் வாய்க்காக்கையென்னும் பொருள்படநின்றமையின் வண்ணச்சினைச்சொன் மயக்கமாயின. அஃதேற்சினையடையாகிய செம்மையும்வன்மையும் முதலடை யாயினவா றென்னையெனின் சினையொடு முதற்கொற்றுமை யுண்மையா னவைமுதலொடு மியைபுடையவென்பது. பெருந்தோட் சிறுநுசுப்பிற் பேரம ர்க்கட்பேதையென்புழி மூன்றும்வழிமுதல்கிடவாது பின்னுமடையுஞ்சினையு ம் புணர்த்தமையான் வண்ணச்சினைச்சொற் செய்யுளுண்மயங்கிவந்ததென் றுரையாசிரியர்கூறினாராலெனின் மூன்றும்வழிப்புணர்க்கப்படும் பேதையெ ன்னு முதற்சொல் பேரமர்க்கணென்னுந் தொகையொடுவேற்றுமைப் பொரு ள்படத்தொக்கதொங்க - சிறுநுசுப்பென்னுந்தொகையொடுமப்பொருள்பட்த்

தொக்கொருசொல்லாய்ப் பெருந்தோட்பல்யாகசாலைமுதுகுடுமிப் பெருவ
ழுதியென்றாற்போல மூன்றும்வழிப் பிறசொல்லடுத்துப் பேதையென்னு மு
தல்கிடந்ததெனவேபடுதலின் மயக்கமின்மையானவர்க்கது கருத்தன்றென்
க. அன்றிப்பெருந்தோண் முதலாகியமூன்றும் பலபெயரும்மைத் தொகை
படத் தம்முட்டொக்கொருசொல்லாய்ப் பின்பேதையென்பதனொடு வேற்று
மைத்தொகைபடத் தொக்கனவெனினும், அவை உம்மைத் தொகைபடத்தொ
காதுநின்று பேதையென்பதனொடு வேற்றுமைத்தொகைபட வொருங்குதொ
க்கனவெனினுந் தம்முளியையாது பேதையென்பதனொடியைதலி னுண்டு ம
யக்கமின்மையறிக. அஃதே லிவ்வாறுவருதல் வழக்கிற்குமுரித்தோவெனின்
அடுக்கிய வடையுஞ்சினையும் பொதுமைநீக்குதற்கன்றி யணிகுறித்து நிற்றலி
ற் செய்யுட்கேயுரிததென்பது. சிறுபைந்தூவியெனச் சினையொடுகுண மிரண்
டடுக்கிவருதல் செய்யுட் குரித்தென்றும், இளம்பெருங் கூத்தனென முதலொ
டு குணமிரண்டடுக்கிவருதல் வழக்கிற்குரித்தென்றும் பிறர்மதமேற் கொண்
டுகூறினார். ஒன்றாகப் பலவாக வினஞ்சுட்டாதன செய்யுட்குரியவாம்; இன
ஞ்சுட்டிநின்றன வழக்கிற்குரியவாமென்பதே யுரையாசியர்கருத்தென்க. அ
ன்றிப் பிறநூன்முடிந்தது தானுடம்படுதலென்பதனாற் சினையொடுகுணமி
ரண்டடுக்கல் செய்யுளாறென்று கொள்ளினுமமையும். முதலொடுகுண மிர
ண்டடுக்கல் வழக்கியல்; சினையொடடுக்கல் செய்யுளாறே யென்றாராகலின்]
வண்ணச்சினைச்சொ லென்றதனான் வண்ணமுஞ் சினையுமுதலுங் கூறுதற்கண்
ண திவ்வாராய்ச்சியென்பதாம். எனவே இளம்பெருங்கூத்தன் - பெரும்பலா
க்கோடு - என்னுந்தொடக்கத்தன வேண்டியவாறு வரப்பெறுமென்றவாறு.
மயங்காதுவருகவென மரபுவழுக்காத்தவாறு.

உஎ. ஒருவரைக்கூறும் பன்மைக்கிளவியு, மொன்றனைக்கூறும்
பன்மைக்கிளவியும், வழக்கினாகிய வுயர்சொற்கிளவி, யில
க்கணமருங்கிற் சொல்லாறல்ல.

ஒருவனையு மொருத்தியையுஞ் சொல்லும் பன்மைச்சொல்லும், ஒன்ற
னைச்சொல்லும் பன்மைச்சொல்லும் வழக்கின்கணுயர்த்துச் சொல்லுஞ்
சொல்லாம் இலக்கணமுறைமையாற் சொல்லுநெறியல்ல - எ - று. உ - ம்.
யாம்வந்தேம் - நீயிர்வந்தீர் - இவர்வந்தார எனவரும். உயர்சொலுயர்க்குஞ்
சொல். உயர்சொற்கிளவியென்புழிக் கூறியதுகூறலன்மை பண்புத்தொகை
யாராய்ச்சிக்கட்சொல்லுதும். தாம்வந்தார் தொண்டனொனப் பன்மைக்கி
ளவி யிழித்தற்கண்ணும் வந்ததாலெனின் ஆண்டுயர்சொற்றானே குறிப்பு நி
லையாயிழிபு விளக்கிற்றென்பது. இலக்கணமருங்கிற் சொல்லாறல்லவென்றத
னா னிலக்கணமன்மையும், வழக்கினாகிய வுயர்சொற்கிளவியென்றதனான் வழு
வன்மையுங்கூறினார். கூறவே வழுவமைதியென்றவாறும். அஃதேல் வழக்கி
னாகிய வுயர்சொற்கிளவியெனவே வழுவமைதியென்பது பெறுது மிலக்கண
மருங்கிற் சொல்லாறல்லவெனல் வேண்டாவெனி னிங்ஙனங்கூறிற்செய்யுள்
வழாந்தவாறே வழுவமைத்தவாறேவென வையமாக்கலி னவ்வாறு கூறல்

வேண்டுமென்பது. பன்மைக்கிளவியுமெனப் பொதுவகையாற் கூறினாரேனு முயர்த்தற்கண் வழங்கப்பட்டுவரு முயர்திணைப்பன்மையும் விரவுப்பன்மையு மே கொள்ளப்படுமென்றற்கு வழக்கினாகியவென்றார். தன்னினமுடித்த லெ ன்பதனா னெருத்தையுமாவையும் எந்தைவந்தான் - எம்மனைவந்தாள் - என வுயர்திணையா யுயர்த்துவழங்கலும், ஒன்றென முடித்தலென்பதனாற் கன்னி ஞாழல்-கன்னியெயில்-எனவஃறிணையாய்நின் றுயர்திணைவாய்பாட்டாற்கூற ப்படுதலும், பண்புகொள் பெயர்க்கொடை வழக்கினகத்தும் பெருங்கொற்ற ன் - பெருஞ்சாத்தன்என இல்குணமடுத்துயர்சொல்லாய் வருதலுங்கொள்க.

உஅ. செலவினும்வரவினுந் தரவினுங்கொடையினு, நிலைபெற த்தோன்று மந்நாற்சொல்லுந், தன்மைமுன்னிலை படர்க் கையென்னு, மம்மூவிடத்து முரியவென்ப.

செலவுமுதலாகிய நான்குதொழிற்கண்ணு நிலைபெறப் புலப்படாநின்ற வந்நான்குசொல்லுந தன்மை முன்னிலைபடர்க்கையென்னு மம்மூவிடத்திற்கு முரியவாய்வரும். எ - று. செலவுமுதலாகியதொழிற்கட் சிறப்புவகையா னி லைபெறாது பொதுவாய்வரு மியங்குத லீதலென்னுந் தொடக்கத்தனவற்றினீ க்குதற்கு நிலைபெறத்தோன்றுமென்றார். முற்றுமெச்சமுந் தொழிற்பெயருமா கிய தொழில்பற்றிவரும்வாய்பாடு பலவாயினுமவையெல்லா மிந்நான்குதொ ழிலும்பற்றித் தோன்றுதலி னான்குசொல்லென்றார். பொருள்வகையான் மு ன்னறியப்பட்டமையானந்நாற்சொல்லுமென்றார். இச்சூத்திரத்து ளிங்குமு தலாகிய தன்மைக்கண்ணு மாங்குமுதலாகிய படர்க்கைக்கண்ணு மடக்கப் பட்டன. வினைச்சொன் மூன்றிடத்திற்கு முரியவாதல் வினையியலுட் பெறப் படுதலி னீண்டுக்கூறல்வேண்டாவெனின் ஆண்டுப்பாலுணர்த்து மீற்றானிடத் திற் குரிமைகூறினா ரீண்டீற்றானன்றிச் செல்வுமுதலாயின முதனிலைதாமே யி டங்குறித்து நிற்றலுடைமையா னிவ்வேறுபா டாண்டுப் பெறப்படாமையி னீ ண்டுக்கூறினாரென்பது. அஃதேற்றருசொல் வருசொல்லாயிருகிளவியுந தன் மைமுன்னிலை யாயிரிடத்தபடர்க்கையிடத்தகொடைச்சொல்லுஞ் செலவுச் சொல்லுமெனவோதுக; இச்சூத்திரம் வேண்டாவெனின் அங்ஙனமோதினிட ஞ்சுட்டுமுதனிலை யிந்நான்குமேயென்னும் வரையறை பெறப்படாமையினி து வேண்டுமென்பது. அஃதேற்போதல் புகுதலென்னுந் தொடக்கத்தனவு மி டஞ்சுட்டுதலினான்கென்னும் வரையறை யமையாதெனின் அவை யிக்காலத்து ச் சிலவிடத்துப்பயின்றுவருமாயினு மூன்றிடத்திற்கும் பொதுவாகலினன்றே யாசிரியரந்நாற்சொல்லுமெனவிவற்றையே வரைந்தோதுவாராயிற்றென்பது.

உகூ. அவற்றுள், தருசொல்வருசொ லாயிருகிளவியுந், தன்மை முன்னிலை யாயீரிடத்த.

கூறப்பட்டநான்குசொல்லுட் டருசொல்லும் வருசொல்லுமாகியவிரண் டுந் தன்மை முன்னிலையாகிய விரண்டிடத்திற்குமுரிய - எ - று. உ-ம். எனக் குத்தந்தான் - நினக்குத்தந்தான் - என்னுழைவந்தான் - நின்னுழைவந்தான் -

எ - ம், ஈங்கு வந்தான் எ - ம் வரும். ஈற்றுனன்றித் தரப்படும்பொருளையேற்பான் றானுமுன்னின்றானு மாகலானும், வரவுத்தொழில் தன்கண்ணுமுன்னின்றான்கண்ணுஞ் சென்று முடிதலானு மவ்விருசொல்லுந் தன்மைமுன்னிலைக் குரியவாயினவாறு கண்டுகொள்க. நிலைபெறத்தோன்று மந்நாற்சொல்லுந் தன்மைமுன்னிலை படர்க்கையென்னுமம் மூவிடத்துமுரியவென்று மூன்றிடத்திற்கும் வரைவின்றியாமெனவுங் கொள்ளவைத்தமையாற் பெருவிறலமரர்க்கு வென்றிதந்த - எ - ம் - தூண்டில்வேட்டுவன் வாங்கவாராது - எ - ம் - மயங்கிவருவனவு மமைக்கப்படும். அஃதேற்படர்க்கைச்சொன்மயக்கமு மெய்துமாலெனின் அஃதெச்சவியலுட்பெறப்படுதலி னீண்டுக்கொள்ளப்படாதென்க. ஒருவன் சேய்நிலத்துநின்று மணிநிலத்துப் புகுந்தானாயிற் சேய்நிலநோக்கவணிநில மீங்கெனப்படுதலின் அவன்கண்வந்தான் - ஆங்குவந்தான் என்பன விலக்கணமேயாம். இந்நான்குங் கொடைப்பொருளவென் றாசிரியர்கூறினாராலெனின் தூண்டில்வேட்டுவனவாங்க வாராதென்பதனை யமைத்தாராகலி னு புகுகலு கருத்தன்றெனக. தரவு வரவையுணர்த்துவனவற்றைத் தருவதும் வருவதும்போலத் தருசொல வருசொலெனப்படும்.

௩௰. ஏனையிரண்டு மேனையிடத்த.

செலவுச்சொல்லுங் கொடைச்சொல்லும் படர்க்கைக்குரிய - எ - று. உ-ம். அவன்கட்சென்றான் - அங்குச்சென்றான் - அவற்குக்கொடுத்தான் - என வரும். செலவுத்தொழில்படர்க்கையானகட்சென்று றுதலானுங் கொடைப்பொருளேற்பான படர்க்கையானாகலானு மீரண்டனுள் இவ்விருசொல்லும்படர்க்கையிடத்திற்குரியவாயினவாறுகண்டுகொள்க.

௩௰௧. யாதெவனென்னு மாயிருகிளவியு மறியாப்பொருள்வயிற் செறியத்தோன்றும்.

யாதெவனென்னுமிரண்டுசொல்லுமறியாபபொருளிடத்துவினாவாயாப்புறத்தோன்றும் - எ - று. உ - ம். இச்சொற்குப்பொருளியாது - இச்சொற்குப் பொருளெவன் எனவரும். எவ்வகையானு மறியாப்பொருளவினாவப்படாமையினீண்டறியாப்பொருளென்றது பொதுவகையானறியப்பட்டுச் சிறப்புவகையானறியப்படாதபொருளையாம். யா-யாவை- யாவன் - யாவள் - யாவர் - யார் - யாண்டு - யாங்கு - என்னுந்தொடக்கத்தன திணையும்பாலுமிடமுமுதலாகிய சிறப்புவகையானுஞ்சிறிதறியப்பட்டபொருளவாகலின அறியாப்பொருள்வயிற்செறியத்தோன்றாமையா னிவற்றையொழிந்தறியாப்பொருள்வயிற்செறியத்தோன்றுமென்றார். இவையுந்திணையும்பாலுங்குறித்து வருதலிற்சிறப்புவகையானுமறியப்பட்ட பொருளவேயன்றோவெனின அன்றுஇச்சொற்குப்பொருள்யாது எவனெனறுவினாயவழியிருப்பானும் அஃறிணையொருமையும பொதுமையுந்துணிந்தவற்றுட்பகுதி யறிதற்குவினாவுகின்றானல்லன்பொதுவகையான்வினாவுகின்றானென்றுணருமாகலின்.] அவ்வாறாதல்வழக்கினைத்

துவினுவுவானது மிறுப்பானதுங்குறிப்பொடுபடுத்துணர்க. முன்னர்வழுவமைத்தற்கவையின்னபொருட்குரியவெனஅவற்றதிலக்கணங் கூறியவாறு.

௩௨. அவற்றுள், யாதெனவரூஉம் வினுவின்கிளவி,யறிந்தபொருள்வயினையந்தீர்தற்குத், தெரிந்தகிளவியாகலுமுரித்தே.

கூறப்பட்டவிரண்டனுள்யாதென்னும் வினுச்சொல்லறியாப்பொருள் வினுவாதலேயன்றியறிந்தபொருட்கணையநீக்குதற்காராய்ந்த சொலலாதலுமுரித்து. எ - று. உ-ம். இம்மரங்களுட்கருங்காலியாது - நம்மெருதைந்தனுட்கெட்டவெருதியாது எனவரும். நமருள்யாவர்போயினர் - அவற்றுளெவ்வெருதுகெட்டது - எனப்பிறவுமறிந்தபொருள்வயினையந்தீர்தற்குத்தெரிநதகிளவியாய்வருதலினவையுமீண்டமைக்கற்பாலவெனின் அவையறிந்தபொருள்வயினையந்தீர்தற்கல்லதியாண்டும்வாராமையினீண்டமைக்கப்படாவென்பது. இதனுன்வினுவழுவமைத்தார.

௩௩. இனத்தெனவறிந்த சினைமுதற்கிளவிக்கு, வினைப்படு தொகுதியி னும்மைவேண்டும்.

கேட்போரா னித்துணையென்றறியப்பட்ட சினைக்கிளவிக்கு முதற்கிளவிக்கும் வினைப்படுதொகுதிக்க ணும்மைகொடுத்துச்சொல்லுக. எ - று. பன்னிருகையும் பாற்படவியற்றி - எ-ம், முரசுமுழங்குதானை மூவருங்கூடி - எ-ம் வரும். அறிந்த சினைமுதற்கிளவியெனவே முன்னறியப்படாக்கால் முருகற்குக் கைபன்னிரண்டு - தமிழ்நாட்டிற்கு வேந்தர்மூவர் - எனவுமமைபெருது வருமென்பதாம். ஐந்தலைநாக முடன்றது - நான்மறைமுதல்வர்வந்தார் - என்புழி இனைத்தெனவறிந்த சினைமுதற்கிளவியாயினும் வினைப்படுதொகுதி யன்மையி னும்மைபெருவாயின. அஃதேற் பன்னிருகையு மென்புழியுந தொகுதிப்பெயர் வினையொடுதொடராது கையென்பதனெடொட்டிநிற்றலின் வினைப்படுதொகுதியன்ரும்பிறவெனின் ஒட்டிநின்றதாயினு மைந்தலைநாகம் நான்மறைமுதல்வரென்பனபோலா திருசொல்லு மொருபொருண்மேல்வருதலிற் கையென்பதனெ டியைந்த வியற்றியென்னும்வினை தொகுதிப் பெயரொடுமியைந்ததாம். அதனு னதுவினைப்படுதொகுதியாமென்பது. அஃதேற்கண்ணிரண்டுங்குருடு - எருதிரண்டுமூரி எனப்பெயர்கொண்டவழி யும்மை பெறுமாறென்னையெனின் பெயராக வினையாகமுடிக்குஞ் சொல்லொடுபடுதலை யீண்டு வினைப்படுதலென்ருராகலின் அவையும் வினைப்படுதொகுதியாமென்க. ஐந்தலை-நான்மறையென்பனவற்றிற்குநாகமுதல்வரென்பன முடிக்குஞ்சொல் லன்மையினவையும் வினைப்படுதொகுதியாகாமையுணர்க. சிறப்புடைப்பொருளைத்தானினிதுகிளத்தலென்பதனுற் சினைமுதற்கிளவியென்ருராயினுஞ் சிறவாத பண்புமுதலாயினவுங் கொள்ளப்படும். சுவையாறுமுடைத்திவ் வடிசில் கதியைந்து முடைத்திக்குதிரை-எனவரும். இருதோடோழர்பற்ற எ-ம், ஒண்குழையொன்ருெல்கி யெருத்தலைப்ப-எ-ம் உம்மையின்றி வந்தனவாலெனின் ஆண்டும்மைசெய்யுள் விகாரந்தாற்றொக்குநின்றன வென்பது.

௩௪. மன்னாப்பொருளு மன்னவியற்றே.

இல்லாப்பொருட்கு மிடமுங் காலமும் பொருளு முதலாயினவற்றொடு படுத்தின்மைகூறுதற்க ணும்மைகொடுத்துச்சொல்லுக. எ - று. பவளக்கோட்டு நீலயானை சாதவாகனன் கோயிலுள்ளுமில்லை எ - ம், குருடுகாண்டல் பகலுமில்லை எ-ம், உறற்பாலநீக்க லுறுவர்க்குமாகா எ-ம் வரும். இல்லாப் பொருட் கொருகாலு நிலையுறுதலின்மையின் மன்னாப்பொருளென்றார். இட முதலாயினவற்றொடு படுத்தற்கண்ணென்ப தேற்புழிக்கோடலென்பதனாற்பெற் றாம். அவற்றொடுபடாதவழிப் பவளக்கோட்டு நீலயானையில்லையென வும்மை யின்றி வருமென்பதாம். முற்றும்மையு மெச்சவும்மையுமாகிய வேறுபாடு டையவேனு மும்மைபெறுத லொப்புமையா லன்னவியற்றென்றார். இரண்டு சூத்திரத்தானு மரபுவழுக்காத்தவாறு.

௩௫. எப்பொருளாயினு மல்லதில்லெனி, னப்பொருளல்லாப் பிறிதுபொருள்கூறல்.

யாதானு மொருபொருளையாயினு மொருவனல்ல தில்லென்னும் வாய் பாட்டானில்லையெனலுறி னப்பொருடன்னையேகூறா தப்பொருளல்லாத பிறி துபொருள்கூறுக. எ - று. உ-ம். பயறுளவோ வணிகிரென்று வினவுழி உழுந்தல்லதில்லை, கொள்ளல்லதில்லையென அல்லதில்லென்பான் பிறிது பொ ருள்கூறியவாறுகண்டுகொள்க. அல்லதில்லெனினெனப்பொருள்பற்றியோ தினாராகலி னல்லதிலலென்னும் வாய்பாடேயன்றி யுழுந்தன்றியில்லை உழு ந்தேயுள்ளதென வப்பொருள்படுவனவெல்லாங்கொள்க. உழுந்தல்லதில்லை யெனப்பிறிதுபொருள்கூறாது பயறல்லதில்லையெனவப்பொருள்கூறிற் பய றுளஅல்லனவில்லையென மறுதலைப்பொருள்பட்டுச் செப்புவழுவாமாறறிக. யாதானுமாகவல்லதில்லெனிற் பிறிதுபொருள்கூறுகவென வெஞ்சாமற்றழீஇ யாப்புறுத்தற்கெப்பொருளாயினுமென்றார். அல்லதில்லென்பதற்குத் தன்னு ழையுள்ளதல்லதென்றும், அப்பொருளல்லாப் பிறிதுபொருள்கூற லென்பதற் கு இனப்பொருள்கூறுகவென்று முரைத்தாராலுரையாசிரியரெனின்பயறுள வோவென்று வினயவழிப்பயறில்லையென்றற்படும் வழுவின்மையானும், உள் ளதல்லதென்றல் கருத்தாயி னாசிரியரல்லதெனக் குறித்தபொருள்விளங்கா மையி னகப்படச்சூத்திரியாமையானும், பாம்புணிக்கருங்கல்லும் பயறும்விற் பானொருவனுழைச்சென்று பயறுளவோவென்றவழிப் பாம்புணிக்கருங்கலல் லதில்லையென்று வினப்பொருள்கூறாமையாற்பட்ட விழுக்கின்மையானுமவை போலியுரையென்க. அல்லதூஉமினப்பொருள் கூறுகவென்பதே கருத்தாயின் அப்பொருளல்லாவினப்பொருள்கூறலென்னது பிறிதுபொருள்கூறலென்னா ரன் ஆசிரியர் அதனானுமஃதுரையன்மையுணர்க.

௩௬. அப்பொருள்கூறிற் சுட்டிக்கூறல்.

அல்லதிலலென்பான் பிறிதுபொருள்கூறாதப்பொருடன்னையே கூறுமா யினிப்பயறல்ல தில்லையெனச்சுட்டிக்கூறுக. எ- று. பயறுளவோவென்றவழி

ச்சுட்டாது பயறல்லதில்லையெனிற் பயறுளவுமுந்துமுதலாயின வில்லையென ப்பிறிதுபொருளேற்பித்துச் செப்புவழுவாமெனபது. அல்லதில்லெனபததிகா ரத்தாற்பெற்றும். தன்னினமுடித்தலென்பதனாற் பசும்பயறல்லதில்லை- பெரு ம்பயறல்லதில்லையெனக் கிளந்துகூறுதலுங்கொள்க. செப்பும்வினாவுமென்ற தனானிவ்வேறுபா டினிதுவிளங்காமையானும், பொருளொடுபுணராச்சுட்டெ னவழுவமைக்கின்றாராகலானு மிவற்றைவிதந்தோதுகூறினார்.

கூஎ. பொருளொடுபுணராச் சுட்டுப்பெயராயினும், பொருள் வேறுபடாஅ தோன்றும்மே.

சுட்டானன்றிப் பொருள்வரையறுத்துணர்த்தாச் சுட்டுப்பெயராற் கூற ம்பொருள் வேறாகா திப்பயறெனச்சுட்டிக்கூறிய பொருளேயாம் -எ-று. என் சொல்லியவாறோவெனி னிவையல்லதில்லை யென்றவழி யிவையென்பது பய ற்றையே சுட்டா துழுந்துமுதலாயினவற்றிற்கும் பொதுவாய்நிற்றலின் வழு வாமன்றேயாயினு முன்கிடந்த பயறுகாட்டி யிவையெனறு ரைகளினவற்றை யே சுட்டுமுதலா னமைகவெனச் செப்புவழுவமைத்தவாறு. சாதியம் பண்பு ந்தொழிலு முதலாயினபற்றி யொருபொருளை வரைந்துணர்த்தா தொல்லா ப்பொருண்மேலுஞ் சேறலிற்பொருளொடு புணராச்சுட்டுப்பெயரென்றார். வேறுபடாதொன்றுகு மென்பனவறறுளொன்றே யமையுமெனின்பொருள் வரைந்துணர்த்தும்பெயரோடு பொருள்வரைந்துணராதாச் சுட்டுப்பெய ரொடு வேறுபாடுடைத்தேனும் ஒருபொருண்மேன் முடிதலின் ஒருபொரு ட்டாமெனபது விளக்கியபொருள் வேறுபடாதொன்றுகுமென்றார். அப்பொ ருள்கூறுதற்கண்ணென்றது பொதுப்படக்கூறியவதனாற் பிறிதுபொருள்கூறும் வழியுமிவையல்ல தில்லையெனச் சிறுபான்மை சுட்டுப்பெயராற் கூறினுமமை யுமெனபதாம். யானைநூல் வல்லானொருவன் காட்டுட்போவழியோர்யானை யடிச் சுவடுகண்டு இஃதரசுவாவாதற்கேற்ற விலக்கணமுடைத்தென்றவழியு ம், இஃதோர் செல்வற்கொத்த வெம்மானனமெலல வென்மகன்வயிற்பெ யர்தந்தேனே யென்புழியுஞ் சுட்டுப்பெயர் பொருளொடுபுணராது நிற்றலி னவற்றையமைக்கின்ற திச்சூத்திரமென்பாருமுளர்.

கூஅ. இயற்பெயர்க்கிளவியுஞ் சுட்டுப்பெயர்க்கிளவியும், வினை க்கொருங்கியலுங்காலந்தோன்றிற், சுட்டுப்பெயர்க்கிளவி முற்படக்கிளவா, ரியற்பெயர்வழிய வென்மனார்புலவர்.

இயற்பெயருஞ் சுட்டுப்பெயருமொன்றன்வினையொன்று கொள்ளாதிரண்டு ம் பிறிதுவினைகோடற் கொருங்கு நிகழுங்காலந்தோன்றுமாயி னுலகத்தார சு ட்டுப்பெயனா முற்படக்கூறாரியற்பெயர்க்கு வழியவாகக் கூறுவரென்றுசொ ல்லுவர் புலவர் - எ - று. வினைக்கொருங்கியலுங் காலப்பெயரொழுவாயாயு மு ருபேற்றுநின்றனவெல்லாங் கொள்ளப்படும். வினைக்கென்புழி யவ்விருபெய ரு மொருவினைகோடலுந் தனித்தனி வினைகோடலுங்கொள்க. ஒருங்கியலு

என்றதனு லவையொருபொருண்மேல் வருதல்கொள்க. உ-ம். சாத்தன் அவன்வந்தான்-சாத்தன்வந்தான் அவன்போயினன் எ-ம், சாத்திவந்தாள் அவட்குப் பூக்கொடுக்க எ-ம் வரும். அவன்தான்வந்தான் - அவனொருவனுமறந் கூறும்-அஃதொன்றுகுருடு என இயற்பெயரல்லா விரவுப்பெயர்க்கு முயர்திணைப்பெயர்க்கு மஃறிணைப்பெயர்க்கும் வரையறையின்றிச் சுட்டுப்பெயர் முற்கிளக்கவும்படுதலின் இயற்பெயர்க்கிளவியென்றார். அவ்வாறவை முற்கிளக்கப்படுவ தொருவினைகோடற்கண்ணேயென்பது. அற்றேல் அவைமுடவன்வந்தான் அவற்குச்சோறுகொடுக்க- நங்கைவந்தாள் அவட்குப்பூக்கொடுக்க-குதிரைவந்தது அதற்குமுதிரைகொடுக்க எனத் தனித்தனி வினைகோடற்கட் சுட்டுப்பெயர் பிற்கிளக்கப்படுதல முன்னையதற்குத் தன்னினமுடித்தலினானு மேனையிரண்டற்கு மியற்பெயரொன்ற மிகையானுங்கொள்க. பிறிதுவினை கோடற்கண்ணவே அவன்சாத்தன் - சாத்தனவன் என ஒன்றற்கொன்று பயனிலையாதற்கண்ணும், ஒருபொருண்மேல் நிகழுமெனவே அவனுஞ் சாத்தனும்வந்தார் - சாத்தனும் அவனும்வந்தார் என வேறுபொருளவாய் வருதற்கண்ணும் யாப்பு முறைகூறினுமமையுமென்பதாம். வினையென்றது முடிக்குஞ்சொல்லை. சுட்டுப்பெயர்யாண்டும் இயற்பெயர்வழிக் கிளக்கப்படுமென யாப்புறுத்தற்கு முற்படக்கிளவாவொன்று மியற்பெயர் வழியவென்றுங் கூறினார். சுட்டுப்பெயரொன்றாயினும அகர வுகரச் சுட்டுப்பெயரேகொள்க. இதுவுமோர் மரபு வழாநிலை.

௩௯. முற்படக்கிளத்தல் செய்யுளுளுரித்தே.

இயற்பெயருஞ் சுட்டுப்பெயரும் வினைக்கொருங்கியலும்வழிச் சுட்டுப்பெயரை முற்படக்கூறுதல் செய்யு ளுளுரித்து. எ - று. அவனணங்கு நோய் செய்தா னாயிழாய்வேலன், விறன்மிகுதாரச் சேந்தன்பேர்வாழ்த்தி - முகனமர்ந், தன்னையலைக் கடப்பந் தாரணியினென்னைகொல், பின்னையதன்கண்விளைவு. எனவரும். இதனுட்சேந்தனென்ப தியற்பெயர். ஒருவினைகொள்வழிச் சுட்டுப்பெயர் முற்கிளத்தலவந்தவழிக் கண்டுகொள்க. இது செய்யுளிடத்து மரபு வழுவமைத்தவாறு.

௪௦. சுட்டுமுதலாகிய காரணக்கிளவியுஞ், சுட்டுப்பெயரியற்
கையிற் செறியத்தோன்றும்.

சுட்டைமுதலாகவுடைய காரணப்பொருண்மையை யுணர்த்துஞ்சொல்லுஞ் சுட்டுப்பெயர்போலத் தன்னாற்சுட்டப்படும்பொருளை யுணர்த்துஞ்சொற்குப் பின்கிளக்கப்படும். எ - று. ஈண்டுச்சுட்டப்படும்பொருள் தொடர்மொழிப்பொருள். சாத்தன் கையெழுதுமாறுவல்லனதனாற் றந்தையுவக்கும் - சாத்தி சாந்தரைக்குமாறு வல்ல ளதனாற் கொண்டானுவக்கும்-சுட்டுமுதலாகிய காரணக்கிளவி யுருபேற்றுநின்ற சுட்டுமுதற்பெயரொ டொப்பதோரிடைச்சொல்லாகலிற சுட்டுப்பெயரியற்கையிற் செறியத்தோன்றுமென்றார். செயற்கென்னும் வினையெச்சமு முருபேற்றுநின்ற தொழிற்பெயரொ டொப்புமை

யுடைத்தாயினு முருபும் பெயருமொன்றாகாது பகுப்பபபிளவு பட்டிசையா தொன்றுபட்டிசைத்தலா னதனின்வேறாயினாற்போல விதுவுமுருபேற்ற சுட்டுப்பெயரொ டொப்புமையுடைத்தாயினும் பிளவுபட்டிசை யா தொன்றுபட்டிசைத்தலான் வேறாகவே கொள்ளப்படுமெனபது. அஃதேற்சாத்தன்வந்தா னஃதரசற்குத் துப்பாயிற்றெனத்தொடர்மொழிப்பொருளையுஞ் சுட்டிவருஞ் சுட்டுப்பெயர்கூறாது யாரணக்கிளவியே கூறியதென்னையெனின் அவ்வாறுவருவன தன்வினை முடித்தலெனபதனுனடங்கும்; ஈண்டுச் சுட்டப்படும்பொருளையுணர்த்துவது பெயரனமையிற சுட்டுப்பெயரியறகையென்றது வழக்கினகத்துச் சுட்டப்படும்பொருளையுணாத்துஞ் சொற்குப்பின்னிறறலுஞ் செய்யுளகத்து முனனிற்றலுமாகிய வத்துணையேயாம. செய்யுட்கண் முன்னிற்றல் வநதவழிக்கண்டுகொள்க. பொருள்பற்றாது பண்புமுதலாயின பற்றிவநத சுட்டாதலின வேறோதப்பட்டதென் றுரையாசிரியர் கூறினாராலெனின் சாத்தன்வந்தா னஃதரசற்குத் துபபாயிற்று - எ - ம், கிழவன்பிரிநதா னதனைக் கிழத்தியுணர்நதிலள் - எ - ம்- எழுவாயாயு மேனைவேற்றுமை யேற்றுமசசுட்டுப்பயின்றுவருதலாற பண்புமுநலாயினவற்றைச் சுட்டுஞ்சுட்டெனப் பொதுவகையாற்கூறாது காரணக்கிளவியென ஒருசார் வேற்றுமைக்குரிய வாய்பாடுபற்றியோதுதல் குன்றக்கூறலாகலானுஞ் சுட்டுப்பெயராயிற் சுட்டுமுதலாகிய காரணக்கிளவியென்றுஞ் சுட்டுபெயரியற்கையிற செறியத்தோன்றுமென்றுங்கூறுதல பொருந்தாமையானு மதுபோலியுரையெனக. இதனுன் வழக்கின்கண் மரபுவழாநிலையுஞ் செய்யுட்கண்மரபுவழுவமைதியுமுணாத்தினர்.

சக. சிறப்பினாகிய பெயர்நிலைகிளவிக்கு, மியற்பெயர்க்கிளவி முறபடக்கிளவார்.

வினைக்கொருங்கியலும்வழிச் சிறப்பினாகிய பெயர்க்கு மியற்பெயரை யுலகத்தார் முற்படக்கிளவாா பிற்படக்கிளபபா - எ - று. வினைக்கொருங்கியலு மென்ப தேற்புழிக்கோடலென்பதனாற்பெறாும். ஈண்டுச்சிறப்பாவது மன்னர்முதலாயினாாற் பெறும்வரிசை. ஏனாதிநல்லுதடன் - காவிதிகண்ணந்தை எனவரும். உம்மையாற்றவங்கலவிகுடியுறுப்பு முதலாயினவற்றானாகிய பெயருங்கொள்ளப்படும். அவை முனிவனகத்தியன் - எ - ம், தெய்வப்புலவன் திருவள்ளுவன - எ - ம, சேரமான் சேரலாதான் - எ - ம், குருடன் கொற்றன் எ - ம் வரும். திருவிரவாசிரியன் - மாநதக்கோங்கேனாதி என இயற்பெயர் முன்வந்தனவாலெனின் அவை தொகைச்சொல்லாகலா னவற்றினகண்ணதன் றிவ்வாராய்ச்சியென்பது. ஆண்டியற் பெயர்முன்னிற்றல் பண்புத்தொகையாராய்ச்சிக்கட்பெறுதும்.

சஉ. ஒருபொருள்குறித்த வேறுபெயர்க்கிளவி, தொழில்வேறு கிளப்பி னென்றிடனிலவே.

ஒருபொருளைக்குறித்துவநத பலபெயர்ச்சொற்க ளொருதொழிலே முடிபாகக்கூறாது பெயாதோறும் வேறாகியதொழில்களைக்கொடுத்து முடிப்பி

ஞெருபொருளவாயொன்முகா. எ - று. ஆசிரியன்பேரூர்கிழான் செயிற்றியன் இளங்கண்ணன் சாத்தன்வநதான் என்றுது, ஆசிரியன்வந்தான்-பேரூர்கிழா னுண்டான் - செயிற்றியன்சென்முன் என வேறு தொழில் கிளந்தவழி வநதானு முண்டானுஞ் சென்முனு மொருவனுகாது வேருய்த்தோன்றிய வா றுகண்டுகொள்க. எநதைவருக எம்பெருமான்வருக மைந்தன்வருக மணுளன் வருக என்புழிக காதன்முதலாயினபற்றி யொருதொழில் பலகால்வந்தமை யல்லது வேற்றுத்தொழிலன்மையி ஞெருதொழில் கிளத்தலே யாமென்பது ஈண்டுத்தொழிலென்றது முடிக்குஞ்சொல்லே. ஆசிரியன் வநதானென்ருெரு காற்கூறி யிடையிட்டவனேயே பின்ஞெருகாற் பேரூர்கிழான் சென்முனென் று கூறியவழி யொருதொடரன்மையா னுண்டாராய்ச்சியில்லையென்பது. அஃதேல்ஆசிரியன்வந்தான் பேரூர்கிழானுண்டான்செயிற்றியன்சென்முனென விடையீடின்றி நின்றனவு' மொருதொடரன்மையி னுராய்ச்சியின்றும்பிறவெ னின் ஆற்றன்றுஉட்டொடர் பலவாயிறு மவறறின்ருெருதியா யவன்ருெழி லபலவுங் கூறுதற்பொருண்மைத்தாய பெருகதொடரொன்றெனவே படுமெ ன்பது. ஆசிரியன்பேரூர்கிழானசெயிறறியனிளங்கண்ணன்சாத்தன்வந்துண்டு சென்முனென்று தாசிரியன்வநதான் - பேரூகிழானுணடான் - செயிற்றிய ன் சென்முனெனப் பெயர்தொறும் வேறுதொழில்கிளத்தன்மரபன்மையின் மரபுவழுக்காத்த வாருயிறறு.

சங. தன்மைச்சொலலே யஃறிணைக்கிளவியொ, டெண்ணுவ ழிமருங்கின் விரவுதலவரையார.

தன்மைச்சொல்லு மஃறிணைச்சொல்லு மெண்ணுதற்கண் விராய்வரப் பெறும் - எ - று. என்சொல்லியவாறேவெனின் உயர்திணைச்சொல்லு மஃறி ணைச்சொல்லு மெண்ணுதற்கண்விராய்வந் துயர்திணைமுடிபுகொள்ளினு மஃ றிணை முடிபுகொள்ளினும் வழுவாமாகலின் மயஙகல்கூடாதம மரபினவென வே யவைவிரா யெண்ணப்படாமையுமெய்திநின்றது. தன்மைப்பன்மைச் சொல்லா லஃறிணைச்சொல்லு முடியுமாகலாற் றன்மைச்சொல்லும் அஃறிணை ச்சொல்லும் விராய்வந் துயாதிணைமுடிபுகொள்ளினு மமையுமெனத்திணை வழுக்காத்தவாறு. யானுமென்னெஃகமுஞ்சாறும் எனவரும். பன்மைத்தன்மை வினைகோடலெற்றுற் பெறுதுமோவெனின் தன்மைச்சொல்லே யென்றதனு னும், பன்மையுரைகுரு தனமைக்கிளவி யெண்ணியன் மருஙகிற் றிரிபவையு ளவே யென்பதனுலும் பெறுதுமென்பது. அஃதேல் எண்ணியன்மருங்கிற் றி ரிபவையுளவே யென்பதனன்விராய்வந் துயர்திணை முடிபுகோடலும் பெறப் படுதலி னிச்சூத்திரம்வேண்டாவெனின் உய்த்துணர்ந் திடர்ப்படுவதெடுத்தோ த்தில்வழியெனமறுக்க.

சச. ஒருமையெண்ணின் பொதுப்பிரிபாற்சொ, லொருமைக் கல்ல தெண்ணுமுறைநில்லாது.

ஒருமை யெண்ணினையுணர்த்தும் பொதுப்பிரிபாற்சொல்லாகிய ஒருவ ஞெருத்தியென்னுஞ் சொற்க ளொருமைக்கணல்ல திருமைமுதலாகிய வெ

ண்ணுமுறைக்கணில்லா - எ - று. எனவே பொதுப்பிரியாப் பாற்சொல்லாகிய ஒருவரெனனுஞ்சொல் இருவர் மூவரெனவெண்ணு முறைக்கண்ணு நிற்கு மென்பதாம். பொதுப்பிரிபாற்சொலென்றானு மொருவனொருத்தி யென் பனவற்றது பாலுணர்த்துமீறே கொள்ளப்படும். என்னை? எண்ணுமுறை நில் லாவென்று விலக்கப்படுவன அவையே யாகலினென்பது. மகன் மகளென் னுந் தொடக்கத்துப்பெயர் பொதுப்பிரிபாற்சொல்லி னீக்குதற் கொருமை யெண்ணினென்றும, ஒருவா ஒன்றென்பனவற்றி னீக்குதற்குப் பொதுப்பிரி பாற்சொலென்றுங்கூறினா. ஒருவரென்னு மாண்மை பெண்மைப்பொதுவி ற் பிரிதலிற் பொதுப்பிரி பாற்சொலென்றா. பொதுப்பிரி பாற்சொலென்னு மொற்றுமையானில்லாதென வொருமையாற்கூறினா. ஒருவனொருத்தியென ஒருமைக்கணிற்றலு மிருவன் மூவ னிருத்தி மூத்தியென எண்ணு முறைமைக்க ணில்லாமையுங் கண்டுகொள்க. ஒனறெனமுடித்த லென்பதனு னொருவெ னொருவையெனனும் ஈனமை முன்னிலையீறு மெண்ணுமுறை நிலலாமைகொ ள்க. இது பால்வழுக்காத்தவாறு.

சரு. வியங்கோளெண்ணுப்பெயர் திணைவிரவுவரையார்.

வியங்கோளொடு தொடருமெண்ணுப்பெயா திணைவிராய் வருசல்வரை யார். எ - று. ஆவுமாயனுஞ்செல்க எனவரும். தன்மைபபனமைவினைபோ லாது வியங்கோளிருதிணைககு முரியசொல்லாகலா னிருதிணைச்சொல்லையுமு டிக்குமன்றே யதனானுவுமாயனுஞ்செல்க வென்புழிவழுவின்மையி னமைக்க ற்பாற் றன்றெனின இருதிணைபபொருட்கு முரித்தேனுமொருசொல்லு டனெ ண்ணுதறக ணிருதிணைபபொருளு முணாததாமையின் ஒருதிணையேயுணர்த்து தல்வேண்டும்; ஒருதிணையுணாத்தியவழி யேனைத்திணைபபெயரொடு வைகா மையிற் றிணைவழுவா மதனு னமைக்கலவேண்டுமென்பது. எண்ணெனருவு றழ்ன்று வாயிரண்டு மிளொனென்றல் வேண்டுமென்பது இலக்கணமாகலான் யானுமென் னெஃகமுஞ் சாறுமென்புழியு மாவுமாயனுஞ்செலக வென்புழி யுமினனல்லன வுடனெண்ணபபடுதல்ன் வழுவென்றா லுரையாசிரியரொ னின் திணைவேறுபாடுண்டேனும் யானுமென்னெஃகமுமென்புழி வினைமுதலு ங் கருவியுமாகிய வினையபும், ஆவுமாயனு மென்புழிமேய்ப்பபானும் மேய்க்கப் படுவனவுமாகிய வினையபுமுண்மையா னுடனெண்ணப்படுதலானும், யானை தேர் குதிரை காலாளெறிந்தானென முன்னருதாரணங் காட்டுபவாதலானும், பிறண்டுமெண்ணுத திணைவிரவுபபெய ரஃறிணைமுடிபினவெனவாசிரியர்க்கா ராய்ச்சிமுடிபு கோடற்கண்ணதாகலானு மவர்க்கது கருத்தன்றென்க. அல்ல தூஉந் திணைவிராயெண்ணல் வழுவென்பதே கருத்தாயின, நெடுநல்யானையுந தேருமாவும படையமைமறவரு முடையம்யாம. எ-ம், இருமனப்பெண்டிரு ங் கள்ளுங்கவறும், எ-ம், படர்க்கைச்சொல்லு மஃறிணைக்கிளவியும் விராயெ ண்ணுதல் வழக்குப்பயிறசியுடைமையா னவையுமடங்க வுயர்திணைச்சொல் லே யஃறிணைக்கிளவியெனப் பொதுப்படவோதாது தன்மைச்சொல்லே யஃ றிணைக்கிளவியெனத் தன்மைச்சொல்லையே விதந்தோதல் குன்றக்கூறலாமா

கலானு மவர்க்கது கருத்தன்மையறிக. ஆவுமானியற் பார்ப்பனமாக்களும் பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்தென்புல வாழ்நர்க்கருங்கட னிறுக்கும் பொன்போற் புதல்வர்ப்பெறாஅதீரு மெம்மம்பு கடிதுவிடுது நும்மரண்சேர்மின எனத் திணைவிராய்வந்து முன்னிலைவினை கோடலெற்றாற் பெறுதுமெனின் அங்கிகரனசெய்யுண் முடிபெனப்படும், அவற்றை யதிகாரப்புறநடையாற் கொள்க. திணைவிராயெண்ணப்படும் பெயர்வியங்கோளல்லா விரவுவினையொடு தொடர்ந்துவருவன வழக்கினுள்ளவே லொன்றெனமுடித்த லென்பதனாற் கொள்க.

சகூ. வேறுவினைப்பொதுச்சொ லொருவினைகிளவார்.

வேறுபட்டவினையையுடைய பலபொருட்கும் பொதுவாகிய சொல்லை யொன்றற்குரிய வினையாற் கிளவார். எ - று. எனவே பொதுவினையாற் கிளப்பரென்றவாறாம். அவை அடிசில், அணி, இயம், படையென்றுந் தொடக்கத்தன. அடிசிலென்பது உண்பன, தின்பன, பருகுவன, நக்குவனவென்னு நால்வகைக்கும், அணியென்பது கவிப்பன, கட்டுவன, செறிப்பன, பூண்பனவென்னுந் தொடக்கத்தனவற்றிற்கும், இயமென்பது கொட்டுவன, ஊதுவன, எழுவனவென்னுந் தொடக்கத்தனவற்றிற்கும், படையென்பது எய்வன, எறிவன, வெட்டுவன, குத்துவன என்னுந் தொடக்கத்தனவற்றிற்கும் பொதுவாகலின் அடிசிலயின்றார் மிசைந்தார் - எ-ம், அணியணிந்தார் மெய்ப்படுத்தார் - எ-ம், இயமியம்பினார் படுத்தார் எ-ம், படைவழங்கினார் தொட்டார் - எ-ம் பொதுவினையாற் சொல்லுக. அடிசிறின்றார் பருகினார் - எ-ம், அணிகவித்தார், பூண்டார் - எ-ம், இயங்கொட்டினார் ஊதினார்-எ-ம், படையெறிந்தார் எய்தார்-எ-ம் ஒருசார்க்குரிய வினையாற்சொல்லின் மரபுவழுவாமென்பது. பொருளின் பொதுமையைச் சொன்மேலேற்றி வேறுவினைப் பொதுச்சொலென்றார்.

சஎ. எண்ணுங்காலு மதுவதன்மரபே.

வேறுவினைப்பொருள்களைப் பொதுச்சொல்லாற்கூறாது பிரிந்தெண்ணுமிடத்து மந்நிலைக்கண் ஒருவினையாற்கிளவாது பொதுவினையாற் கிளத்தலேயாம். எ - று. சோறுங்கறியு மயின்றார், யாழுங்குழலுமியம்பினார் என வரும். சோறுங்கறியுந்தின்றார், யாழுங்குழலுமூதினார் எனின் வழுவாம். அஃதேல் ஊன்றுவை கறிசோறுண்டு வருந்துதொழிலல்லது என்புழி உண்டலென்பதொன்றற்கேயுரிய வினையாகலின் வழுவாம் பிறவெனின் உண்டலென்பது உண்பன தின்பனவெனப் பிரித்துக்கூறும்வழிச் சிறப்புவினையாம்; பசிப்பிணிதீர நுகரப்படும் பொருளெல்லா முணவெனப்படுமாகலிற் பொதுவினையுமாமாகலானது வழுவன்றென்பது. கறியொழித் தேனையவற்றிற்கெல்லா முண்டற்றொழி லுரித்தாகலிற் பன்மைபற்றிக் கூறினாரெனினு மமையும்.

சஅ. இரட்டைக்கிளவி யிரட்டைப்பிரிந்திசையா.

இரட்டித்துநின்று பொருளுணர்த்துஞ்சொற்க ளிரட்டித்துநிற்றலிற் பிரிந்துநில்லா. எ - று. சுருசுருத்தது, மொடுமொடுத்தது என இசைபற்றியும், கொறுகொறுத்தார், மொறுமொறுத்தார் எனக் குறிப்புப்பற்றியும், குறுகுறுத்தது, கறுகறுத்தது, எனப் பண்புபற்றியும் இரட்டித்துவந்தன பிரிந்துநில்லாமை கண்டுகொள்க. அஃதேல் குறுத்தது குறுத்தது எனப்பிரிந்தும் வந்தனவாலெனின் அற்றன்று-குறுத்ததென்பதோர்சொல் குறுவென்பதோர்சொல்லடுத்துக் குறுகுறுத்ததென நின்று குறுமைமிகுதி யுணர்த்திற்றாயிற் குறுத்ததென்பது குறுமையுணர்த்தக் குறுவென்பது மிகுதியுணர்த்திற் றாகல்வேண்டும்; குறுவென்பது மிகுதியுணர்த்தாமையிற் குறுகுறுத்ததென்பதொருசொல்லாய்நின் றப்பொரு ளுணர்த்திற்றெனவேபடும். அதனாற்றான் அக்குறுமைமாத்திரமுணர்த்திநிற்ப ததனின்வேறுமென்பது. கறுகறுத்ததென்பதற்குமீதொக்கும். கறுத்தது கறுத்தது, குறுத்தது குறுத்தது எனச்சொன் முழுவதும் இருமுறைவாராமையி னடுக்கன்மையறிக. ஈண்டிரட்டைக்கிளவியென்றது மக்களிரட்டை, விலங்கிரட்டைபோல வேற்றுமையுடையனவற்றையன்றி யிலையிரட்டையும், பூவிரட்டையும்போல வொற்றுமையும்வேற்றுமையு முடையவற்றையென்றுணர்க. இரட்டித்து நின்று பொருளுணர்த்துவனவற்றைப் பிரித்து வழங்கன் மரபன்மையின்மரபு வழுக்காத்தவாறு.

௪௯. ஒருபெயர்ப்பொதுச்சொ லுள்பொருளொழியத், தெரிபு
வேறுகிளத்த றலைமையும்பன்மையு, முயர்திணைமருங்கி
னு மஃறிணைமருங்கினும்.

உயர்திணைக்கண்ணு மஃறிணைக்கண்ணுமொருபெயராய்ப் பலபொருட்குப் பொதுவாகியசொல்லைப் பிறவுளபொருளொழியத் தெரிந்துகொண்டு பொதுமையின் வேறாகச்சொல்லுக தலைமையானும் பன்மையானும் - எ-று. தெரிபென்பதற்குச் செயப்படுபொருட்டலைமையும் பன்மையுமேயாம். பிறரும் வாழ்வாருளரேனும் பார்ப்பனச்சேரியென்ற லுயர்திணைக்கட் டலைமைபற்றியவழக்கு. எயினர் நாடென்பதத்திணைக்கட் பன்மைபற்றியவழக்கு. பிறபுல்லு மரனுமுளவேனுங் கமுகந்தோட்டமென்ற லஃறிணைக்கட்டலைமைபற்றியவழக்கு. ஓடுவங்காடென்பதத்திணைக்கட் பன்மைபற்றியவழக்கு. பார்ப்பார்பலராயினுங் கமுகுபலவாயினு மவைதாமே பன்மைபற்றியவழக்காம். பலபொருளொருசொல்லினீக்குதற் கொருபெயரென்றார். ஒன்றெனமுடித்தலென்பதனான் அரசர்பெருந்தெரு, வெண்குடை, பெருவிறல், வயிரகடகம், ஆதீண்டுகுற்றி, ஆனதர், எருத்தில எனப்பொதுச்சொலின்றி வருவனவுங்கொள்க. உளபொருளெல்லாங்கூறா தொன்றனையெடுத்துக்கூறுதன் மரபன்றாகலிற் பொதுச்சொன்மேற் சொன்னிகழுமாறுணர்த்தியமுகத்தான் மரபுவழுக்காத்தவாறு.

௫௰. பெயரினுந்தொழிலினும் பிரிபவையெல்லா, மயங்கல்கூ
டா வழக்குவழிப்பட்டன.

உயர்திணைக்கண்ணு மஃறிணைக்கண்ணும் பெயரினானும் வினையினானும் பொதுமையிற்பிரிந் தாண்மைக்கும் பெண்மைக்குமுரியவாய் வருவனவெல்லாம் வழுவாகா வழக்குவழிப்பட்டனவாகலான் - எ - று. உயர்திணைக்கண்ணு மஃறிணைக்கண்ணு மென்பததிகாரத்தான்வந்தது. தொடியோர் கொய்குழையரும்பிய குமரிஞாழலென்பதுஉயர்திணைக்கட்பெயரிற்பிரிந்த வாணொழிமிகுசொல். வடுகரசராயிரவர்மக்களையுடையரென்பது பெயரிற்பிரிந்தபெண்ணொழிமிகுசொல். இவர்வாழ்க்கைப் பட்டாரென்பது தொழிலிற்பிரிந்தவாணொழிமிகுசொல். இவர்கட்டிலேறினாரென்பது தொழிலிற்பிரிந்தபெண்ணொழிமிகுசொல். நம்பிநூறெருமையுடையனென்பதுஅஃறிணைக்கட்பெயரிற்பிரிந்தவாணொழிமிகுசொல், நம்மரசனாயிரம்யானையுடையனென்பது பெயரிற்பிரிந்தபெண்ணொழிமிகுசொல். தொடிசெறித்தலும, மக்கட்டன்மையும், இல்வாழ்க்கைப்படுதலும, கட்டிலேறுதலும், எருமைத்தன்மையும, யானைத்தன்மையுமொழிக்கப்படும்பொருட்கு முண்மையாற் பொதுவாய்நிற்ப றபாலன வொருபாற்குரியவாய்வருதலின் மரபுவழுவமைத்தவாறு. பிறசொல்லாற்பிரிவன வேறுபடுவினையினுமினத்தினுஞ் சார்பினுமெனவும், தெரிநிலையுடைய வஃறிணையியற்பெயரெனவும், நினையுங்காலைத் தத்தமரபின்வினையொடல்லது பாலறிபிலவேயெனவு முன்னோதப்படுதலானு மாண்டுவழுவின்மையானு மீண்டுத் தாமேபிரிவனவேகொள்க. தமமாற்றும்பிரியுமென்பார் பெயரினானுந்தொழிலினானுமென்றார். பெயர்க்கண்ணும வினைக்கண்ணுந்தாமேபிரிவன வெனினுமமையும். அஃறிணைக்கட் டொழிலிற்பிரிந்தனவுளவேற் கண்டுகொள்க. இன்றிவ்வூர்பெற்றமெல்லாமறங்கறக்கும் உழவொழிந்தன எனவுரையாசிரியர்காட்டினாராலோவெனின்பெற்றமென்னும பொதுப்பெயர்கறத்தலு முழுதலுமாகிய சிறப்புவினையாற்பொதுமைநீங்குதல வழுவன்மையானீண்டைக்கெய்தாமையி னவர்க்கதுகருத்தன்றென்பது.

௫௧. பலவயினானுமெண்ணுத் திணைவிரவுப்பெயர, அஃறிணைமுடிபின செய்யுளுள்ளே.

திணைவிராயெண்ணப்பட்ட பெயர்செய்யுளகத்துப் பெரும்பான்மையு மஃறிணைச்சொற் கொண்டுமுடியும் - எ - று. வடுகரருவாளர் வான்கருநாடர், சுடுகாடுபேயெருமையென்றிவையாறுங், குறுகாரறிவுடையார் - எ - ம், கடுஞ்சினத்த கொல்களிறுங் கதழ்பரியகலிமாவு, நெடுங்கொடியநிமிர்தேரு, நெஞ்சுடையபுகன் மறவருமென நான்குடன்மாண்டதாயினும - எ - ம், வரும். எண்ணுத்திணை விரவுப்பெயர்பெரும்பான்மையு மஃறிணைச்சொற்கொண்டு முடியுமெனவே சிறுபான்மை யுயர்திணைச்சொற்கொண்டு முடியவும்பெறுமென்பதாம். பார்ப்பாரறவோர் பசுப்பத்தினிபெண்டிர், மூத்தோர்குழவியெனுமிவரைக்கைவிட்டு - எ - ம், பார்ப்பார்தவரே சுமந்தார்பிணிப்பட்டார், மூத்தாரிளையார் பசுப்பெண்டிரென்றிவர்கட், காற்றவழிவிலங்கினாரே - எ - ம் வரும். இருதிணைப்பெயரும் விராய்வந்து ஒருதிணைச்சொல்லான் முடிதல்வழுவாயினுஞ் செய்யுளகத்தமைகவெனத் திணைவழு வமைத்தவாறு. பாணன்

பறையன் றுடியன் கடம்பனென்றந் நான்கல்லது குடியுமில்லை எனவிருதிணைப்பெயரும் விரவிவாராதுயர்திணைப்பெயரேவந்து செய்யுளு ளஃறிணைமுடிபுகொண்டனவென் றுரையாசிரியர் கூறினாராலெனின் பாணன் முதலாயினாரைக் குடியென்று சுட்டியவழிக் குடிக்கேற்றதொகை கொடுத்தல் வழுவன்மையா னவ்வுரை போலியுரையென்க. குடியென்று சுட்டாதவழிப் பாணன்பறையன் றுடியன்கடம்பனென் றந்நால்வருமல்லது குடியுமில்லையென்றேயாம். தம்முடைய தண்ணளியுந் தாமுந் தம்மான்றேரு மெம்மைமங்ஙனை யாதுவிட்டாரோல் விட்டகல்க - எ-ம், யானுந்தோழியு மாயமுமாடுந் துறைநண்ணித், தானுந் தேரும்பாகனும் வந்தென்னலனுண்டான் - எ - ம் இவையெவ்வாறு வந்தனவோவெனின் அவை தலைமைப்பொருளையுந் தலைமையில் பொருளையும் விராயெண்ணித் தலைமைப்பொருட்கு வினைசொற்பவே தலைமையில் பொருளுமுடிந்தன வாவதோர் முறைமைபற்றிவந்தன விலக்கெய்தாவென்பது. தானுந் தன்புரவியுந் தோன்றினனென்பதுமது.

௫௨. வினைவேறுபடூஉம் பலபொருளொருசொல், வினைவேறுபடாஅப்பலபொருளொருசொலென், றாயிருவகைய பலபொருளொருசொல்.

வினைவேறுபடும் பலபொருளொருசொல்லும் வினைவேறுபடாப்பலபொருளொருசொல்லுமென விரண்டுவகைப்படும் பலபொருளொருசொல். எ-று. இனமுஞ்சார்புமுளவேனும் வேறுபடுத்தற்கண் வினைசிறப்புடைமையி னதனாற் பெயர்கொடுத்தார் ஆதீண்டு குற்றியென்பதுபோல வென்பது. இலக்கணச் சூத்திரங்களானேயமையு மிச்சூத்திரம்வேண்டா பிறவெனின் இருவகையவெனலும் வரையறையவற்றாற் பெறப்படாமையானும், வகுத்துப்பின்றுமிலக்கணங்கூறியவழிப் பொருளினிதுவிளங்குதலானு மிச்சூத்திரம்வேண்டுமென்பது.

௫௩. அவற்றுள், வினைவேறுபடூஉம் பலபொருளொருசொல், வேறுபடுவினையினு மினத்தினுஞ்சார்பினுந், தேறத்தோன்றும் பொருடெரிநிலையே.

அவ்விரண்டனுள்ளும் வினைவேறுபடும் பலபொரு ளொருசொலொரு பொருட்கேசிறந்தவினையானுமினத்தானுஞ்சார்பானும் பொருடெரிநிலைக்கட் பொதுமைநீங்கித்தெளியத்தோன்றும். எ - று. மாவென்பதொருசார்விலங்கிற்குமொருமரத்திற்கும் வண்டிற்கும்பிறபொருட்கும்பொது. குருகென்பதோர்பறவைக்குமுலைமூக்கிற்கும்வளைக்கும் பிறவற்றிற்கும்பொது. நாகமென்பது மலைக்குமொருசார்மரத்திற்கும் யானைக்கும்பாம்பிற்கும் பிறவற்றிற்கும்பொது. சேவென்பதொருசார்பெற்றத்திற்கு மொருமரத்திற்கும் பிறவற்றிற்கும் பொது. மாப்பூத்தது - மாவுமருதுமோங்கினவெனவேறுபடுவினையானு மினத்தானுமாமரமென்பது விளங்கிற்று. கவசம்புக்குநின்றுமாகொளுவென்றவழிக் குதிரையென்பது சார்பினால்விளங்கிற்று. குருகுமுதலாயினவுமன்ன. வேறு

Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090.

படுவினையினுமென்றாறோனுமொன்றனைமுடித்தலென்பதனானிம்மாவயிரம் வெ
ளிறுஎனவேறுபடுக்கும்பெயருங்கொள்ளப்படும். இனத்தொடுசார்பிடை வே
ற்றுமையென்னையெனின்ஒருசாதிக்கணணைந்த சாதியினமெனப்படும். அணை
ந்தசாதியன்றி யொருவாற்றானியைபுடையது சார்பெனப்படுமென்பது.

௫௪. ஒன்றுவினைமருங்கி னொன்றித்தோன்றும், வினைவேறுப
டாஅப் பலபொருளொருசொ, னினையுங்காலைக் கிளந்
தாங்கியலும.

வேறுபடாதவினைகொண்டவழிவேறுபடாததோன்றும்வினை வேறுபடா
ப்பலபொருளொருசொலாராயுங்காற் கிளந்தசொல்லப்படும். எ - று. மாம
ரமவீழ்ந்தது - வில்வகுமாவீழ்ந்தது - எனவரும். வினைவேறுபடாப்பலபொரு
ளொருசொலெனவேறுநிறபனவில்லை வேறுபடுவினைமுதலாயினவற்றான் வே
றுபடுவனதாமேபொதுவினைகொண்டவழி வினைவேறுபடாப் பலபொருளொ
ருசொல்லாமென்பதறிவித்தற்கொன்று வினைமருங்கி னொன்றித் தோன்றுமெ
ன்றார். ஒன்றுவினைமருங்கினொன்றித்தோன்றுமெனவொருசூத்திரமாக வுரை
யாசிரியர்பிரித்தாராலெனின அங்ஙனம்பிரிப்பினொன்றுவினைமருங்கினொன்றி
த்தோன்றுதலும், வினைவேறுபடாமபலபொருளொருசொல்லுக்கே யிலக்க
ணமாய்மாறுகோடலாலும் வினைவேறுபடுவனதாமே பொதுவினைகொண்டவ
ழிவினைவேறுபடாசனவாமென்பது உதனாற்பெறப்படாமையானு மதுபோலி
யுரையெனக. முன்னும்பின்னுமவருஞ்சாட முதலாயினவற்றாற்குறித்தபொரு
ள்விளங்காக்கால் கிளந்தேசொல்லுகவெனப் படாதற்கு நினையுங் காலையெ
ன்றார். ஆங்கென்பதுரையசை. குறித்தபொருள் விளங்காமைக்கூறல் மரபன்
மையின்மரபுவழுக்காத்தவாறு.

௫௫. குறித்தோன்கூற்றந் தெரித்துமொழிகிளவி.

ஒருபொருள்வேறுபாடுகுறித்தோன் அஃறாற்றன்முதலாயினவற்றான் வி
ளங்காதாயினதனைத் தெரித்துச்சொல்லுக. எ - று. அரிதாரச்சாந்தங்கலந்
ததுபோல, வுருகெழத்தோன்றிவருமே, முருகுறழு, மன்பன்மலைபெய்தநீர்
எ - ம். வாருமதுச்சோலைவண்டுதிாத்தநாணமலரா, னாறுமருவிநளிமலைநன்னா
ட- எ-ம்வரும். கலந்ததுபோலவருமேயிலங்கருவியன்பனமலைபெய்தநீரெனவு
ம், நாறுமருவிநளிமலைநன்னாடனவுந்தெரித்து மொழியாதவழிக் குறித்தது
விளங்காதுவழுப்படுதலின்மரபுவழுக்காத்தவாறு. வடநூலாரிதனைநேயமென்
ஊட்டியன்னவொண்டளிர்ச்செயலையென்புழி இன்னதனையென்றுதெரித்
துமொழியாமையின்வழுவாம் பிறவெனின்-உவமையென்னு மலங்காரமாயின
ன்றே யின்னதொன்றனையென்றல்வேண்டுவது செயலையந்தளிரினதுசெய்யா
ந்நிறத்தைச்செய்ததுபோலக் கூறுங்கருத்தினுசலிற்பிறிதோரலங்காரமாம்
அதனுனதுகடாவன்றெனபது. படுசுடரவைத்தன்னபாறைமருங்கினெடுத்துநி
றுத்தன்னவிட்டருஞ்சிறுநெறிஎனவின்ஞோரன்னவெல்லா மவ்வலங்காரம்பற்

றிவந்தன. ஒல்லேங்குவளைப்புலான்மகன்மார்பிற்புல்லெருக்கங்கண்ணிநறிது என்புழிக்குவளைபுலானாறுதற்குமெருக்கங்கண்ணிநறிதாதற்குங்காரணங்கூறாமையின்வழுவாம்பிறவெனின்புதல்வற்பயந்த பூங்குழன்மடந்தைபரத்தையிற்பிரிந்துவந்தகிழவனொடுபுலந்துரைக்கின்றாளாகலிற்குவளை புலானாறுதற்கவன்றவனொடுகூடியவவள்காதல்காரணமென்பதூஉம், எருக்கங்கண்ணிநறிதாதற்குமகிழ்நன்செய்ததுனிகூர்வெப்பமுகிழ்நகைமுகத்தாற்றணிகருமட்புதல்வன்மேலொருகாலைக்கொருகாற்பெருகுமன்புகாரணமென்பதூஉம் பெறப்படுதலின்வழுவாகாதென்பது. மீக்கூற்றமென்புழிப்போலக் கூற்று கூற்றமென நின்றது.

௫௬ குடிமையாண்மை யிளமைமூப்பே, யடிமைவன்மை விருந்தேகுழுவே, பெண்மைபரசே மகவேகுழவி, தன்மைதிரிபெய ருறுப்பின்கிளவி, காதல்சிறப்பே செறற்சொல் விறற்சொலென், றவறுமூன்றுமுளப்படத்தொகைஇ, யன்னபிறவுமவற்றொடு சிவணி, முன்னத்தினுணருங்கிளவியெல்லா, முயர்திணைமருங்கினிலையினவாயினு, மஃறிணைமருங்கிற் கிளந்தாங்கியலும்.

குடிமைமுதலாகவிறற்சொலீறாகச்சொல்லப்பட்டபதினெட்டு முளப்பட அன்னபிறவுமவற்றொடுபொருந்தித்தோக்கு முன்னத்தினுணருங்கிளவிகளெல்லாம் உயர்திணைபொருண்மே னின்றனவாயினு மஃறிணைப்பொருளையுணர்த்திநின்றவழிப்போல வஃறிணைமுடிபேகொள்ளும். எ - று. குடிமைநன்று- குடிமைதீது - ஆண்மைநன்று - ஆண்மைதீது - எனவரும். ஒழிந்தனவற்றிற்குமிவ்வாறுபொருந்தும்வினைதலைப்பெய்க. தன்மைதிரிபெயர் - அலி. இதனொடொருபொருட்கிளவியாய்வருவனவுங்கொள்க. உறுப்பின்கிளவிகுருடு,முடம் என்னுந்தொடக்கத்தன. காதற்சொல்-பாவை - யானையென ஒப்புமைகருதாது காதல்பற்றிவருவன. சிறப்புச்சொல்-கண்போலச்சிறந்தானைக் கண்ணென்றலும், உயிர்போலச்சிறந்தானைஉயிர்என்றலும்என இவைமுதலாயின. செறற்சொல்-செறுதலைப்புலப்படுக்கும்பொறியறை, கெழியிலிஎன்னுந்தொடக்கத்தன. விறற்சொல்-விறலையுணர்த்தும்பெருவிறல்அருந்திறலென்னுந்தொடக்கத்தன. தன்மைதிரிபெயர்முதலாயினபொருள்வகையானறுகவடக்கப்பட்டன. குடிமையாண்மை யிளமை மூப்படிமை வன்மைபெண்மை யுறுப்பின்கிளவி சிறப்புச்சொல் விறற்சொலெனபன உயர்திணைக்கண் ஆகுபெயரா யல்லதுவாரா அல்லன இருதிணைக்கண்ணும் ஒத்தவுரிமையவெனககொள்க. காதல்பற்றுச் சிறுவனை யானையென்றலும் ஆகுபெயரா மன்றோவெனின் யாதானுமோரியைபுபற்றி யொன்றன்பெய ரொன்றற்காய தாகுபெயராம் இயைபுகருதாது காதன்முதலாயினவற்றான் யானையென்றவழி ஆகுபெயருள் அடங்காவென்பது. ஒன்றன்பெயரொன்றற்காதலொப்புமையான் ஆகுபெயரொன்பாருமுளர். சொல்லானன்றித் திணைவேறுபாடு சொல்லுவான் குறிப்பொடுபடுத்து

ரப்படுதலின் முன்னத்தினுணருங்கிளவியென்றார். அஃறிணைமுடிபினவென்றது அஃறிணைமருங்கிற் கிளந்தாங்கியலும் எனப்பொதுப்படக்கூறியவதனாற் குடிமைநன்று - குடிமைநல்ல - அடிமைநன்று - அடிமைநல்ல எனவேற்புழி ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாய்நிற்றலுங்கொள்ளப்படும். அன்ன பிறவு மென்றதனான்வேந்து - வேள் - குரிசில் - அமைச்சு - புரோசுஎன்னுந் தொடக்கத்தனவுங்கொள்க. குடிமைமுதலாயின உயர்திணையுணர்த்தும்வழி அஃறிணையான் முடிதல்வழுவாயினு மமைகவெனத் திணைவழுவமைத்தவாறு.

௫எ. காலமுலக முயிரோயுடம்பே, பால்வரைதெய்வம் வினை
யேபூதம், ஞாயிறுதிங்கள் சொல்லெனவரூஉ, மாயீரைந்
தொடு பிறவுமன்ன, வாவயின்வரூஉங் கிளவியெல்லாம்,
பால்பிரிந்திசையா வுயர்திணைமேன.

காலமுதலாகச் சொல்லப்பட்டபத்து மத்தன்மையபிறவுமாகிய வப்பகுதிக்கண்வருஞ் சொல்லெல்லா முயர்திணைச்சொல்லாயினுமுயர்திணைக்கட்பால் பிரிநதிசையாவஃறிணைப்பாலாயிசைக்கும் - எ - று. இவற்குக்காலமாயிற்று - உலகம்பசித்தது-உயிர்போயிற்று - உடம்புநுணுகிற்று - தெய்வஞ்செய்தது - வினைவிளைநதது - பூதம்புடைத்தது - ஞாயிறுபட்டது- திங்களெழுநதது- சொன்னன்று - எனவரும். பிறவுமென்றதனல் - பொழுதுநன்று - யாக்கைதீது - விதிவலிது - கனலிகடுகிற்று - மதிநிறைநதது - வெள்ளியெழுந்தது - வியாழநன்று - என்பனபோல்வனகொள்க. காலமென்றது காலக்கடவுளை. உலகமென்பதிண்டு மக்கட்டொகுதியை. உயிரோயுடம்பே யெனப்பொதுவகையாற் கூறினாரேனு மக்களுயிருமுடம்புமேகொள்ளப்படும். என்னை? உயர்திணை முடிபுகொள்ளாவென விலக்கப்படுவனவவையே யாகலினென்பது. அஃறிணையென்மனாரவரலபிறவேயென்புழி யஃறிணையாயடங்கியுயர்திணை முடிபெய்தாமையின் அவையும்விலக்கற்பாட்டிற் கேலாவெனின் அற்றன்றுமக்கட்சுட்டுடைமையானவையுயர்திணையேயாமென்பது. யாதோமக்கட்சுட்டுடையவாறெனின் அறஞ்செய்து துறக்கம்புக்கான் - எ-ம், உயிர்நீத்தொருமகன்கிடநதான - எ - ம். உயிருமுடம்புமவரின்வேறன்றியவராகவுணரப்பட்டு உயர்திணைக்கேற்றமுடிபுகொண்டுநிற்றலின்மக்கட்சுட்டுடையவென்பது. ஓராவைஎம்மன்னைவந்தாளென்றும், ஓரொருத்தைஎந்தைவநதானென்றும் உயர்திணைவாய்பாட்டாற்கூறியவாறுபோல உயிருமுடம்பு மவ்வாறுகூறப்பட்டனவென்றுகொள்ளாமோவெனின்கொள்ளாம். அவற்றான் வரும்பயனோக்கிக்காதலானெம்மன்னை யெந்தையென்றுணெண்டு. ஈண்டுக்காதன்முதலாயினவின்மையின்மக்கட்சுட்டுடையவென்பது. பால்வரைதெய்வமென்பதுஎல்லார்க்குமின்பத்துன்பத்திற்குக்காரணமாகிய விருவினையையும்வகுப்பது. வினையென்பது அறத்தெய்வம். சொல்லென்பது நாமகளாகியதெய்வம். அஃதேறகுடிமை யாண்மையென்பனவற்றொடிவற்றிடைவேற்றுமையென்னையெனின் அவையிருதிணைப்பொருட்கண்ணுஞ்சேறன்மாலைய; இவையன்னவல்லவென்பது. உலகமென்பதிடத்தையுமாகுபெயரானிடத்துநிகழ்பொருளாகிய மக்கட்டொகுதியையுமு

ணர்த்துமாகலா னிருதிணைக்கண்ணுஞ்சென்றதன்றோவெனின் அற்றன்றுவட நூலுலகமென்ப திருபொருட்குமுரித்தாக வோதப்பட்டமையின் மக்கட் டொகுதியையுணர்த்தும் வழியுமுரியபெயரேயாகலி னாகுபெயரன்று. அதனா லொருசொலிருபொருட் கண்ணுஞ்சென்றதெனப்படாதிருபொருட்குமுரிமை யானிரண்டுசொல்லெனவேபடுமென்பது. வேறுபொருளுணர்த்தலின் வேறு சொல்லாதலேதுணிவாயினும் பலபொருளொருசொலென்புழி யெழுத்தொப் புமைபற்றியொருசொலென்றார். மேலென்பதேழாம்வேற்றுமைப்பொருளுண ர்த்துவதோரிடைச்சொலாகலினீறுதிரிந்துமேனவெனநின்றது. இதுவுந்திணை வழுவமைதி.

௫௮. நின்றாங்கிசைத்தலிவணியல்பின்றே.

ஈறுதிரியாதுநின்றாங்குநின்றுயர்திணையாயிசைத்தலீண்டியல் பின்று- எ - று. ஈண்டென்றதுகாலமுதலாகியசொற்களை. அவையிடையீடின்றி மேற் சொல்லப்பட்டு நிற்றலினிவணென்றார். இவணியல்பின்றெனவேகுடிமை யாண்மைமுதலியசொல்லின்கண்-குடிமைநல்லன்- வேந்துசெங்கோனல்லனென நின்றாங்குநின்றுயர்திணையாயிசைத்தலியல்புடைத்தென்பதாம்.

௫௯. இசைத்தலுமுரிய வேறிடத்தான.

காலமுதலாகிய சொல்லுயர்திணையாயிசைத்தலு முரியவீறுதிரிந்து வாய் பாடுவேறுபட்டவழி - எ - று. காலன்கொண்டான்- உலகர்பசித்தார்- எனவா ய்பாடு வேறுபட்டவழி யுயர்திணையா யிசைத்தவாறுகண்டுகொள்க.

௬௦. எடுத்தமொழியினஞ்செப்பலுமுரித்தே.

இனமாகிய பலபொருட்களொன்றனைவாங்கிக் கூறியவழியச்சொற்றன் பொருட்கினமாகிய பிறபொருளைக் குறிப்பாலுணர்த்தலுமுரித்து - எ-று. உம் மை யெதிர்மறையாகலா னுணர்த்தாமையுமுரிதென்பதாம். அறஞ்செய்தான் றுறக்கம்புகும்-எ-ம், இழிவறிந்துண்பான்கணின்பமெய்தும்-எ-ம்வரும். இவை சொல்லுவார்க்கினப் பொருளியல்புரைக்குங் குறிப்புள்வழிமறஞ்செய்தான் றுறக்கம்புகான், கழிபேரிரையா னின்பமெய்தான் எனவினஞ்செப்புதலுமக் குறிப்பில்வழி யினஞ்செப்பாமையுங்கண்டுகொள்க. எடுத்தபொருளை யுணர்த் துமொழியை எடுத்தமொழியென்றார். இனனல்பொருளினீக்குதற்கினமென்றார். அஃதேன்மேல் சேரிக்கோழியலைத்ததெனக் கீழ்ச்சேரிக்கோழியலைப்புண்டதெ னவும், குடங்கொண்டான் வீழ்ந்தானெனக் குடம்வீழ்ந்ததெனவுமிவையின ஞ்செப்புமென்றும், ஆவாழ்க - அந்தணர்வாழ்கஎன்பன வினஞ்செப்பாவென் று முரையாசிரியர் கூறினாராலெனின் அற்றன்று கீழ்ச்சேரிக்கோழியலைப்பு ண்டலின்றி மேல்சேரிக்கோழியலைத்த லமையாமையானுங் குடம்வீழ்தலின்றி க் குடங்கொண்டான் வீழ்தலமையாமையானுங் கீழ்சேரிக்கோழியலைப்புண் டலும், குடம்வீழ்தலுஞ்சொல்லானன்றி யின்றியமையாமையாகிய பொருளா ற்றலாற் பெறப்படுமாகலா னீண்டைக்கெய்தா இது சொல்லாராய்ச்சி யாகலா

னென்பது. இன்னோரன்ன சொல்லாற்றலாற் பெறப்பட்டனவெனின் புகையுண்டென்றவழி எரியுண்மைபெறுதலுஞ் சொல்லாற்றலாற் பெறப்பட்டதாமென்பது. இனிஆவாழ்க, அந்தணர்வாழ்க என்புழிச்சொல்லுவாரொழிந்[illegible]லங்குமொழிந்த மக்களுஞ்சாகவென்னுங் கருத்தினையினிவையுமினஞ் [illegible]புவனவன்றோவென்பது. அதனனைவைபோலியுரையென்க. ஒருதொடர் ஒருபொருளுணர்த்தியமையாது வேறொருபொருளுங் குறித்துநிற்றல்வழுவாயினு மமைகவெனமரபு வழுக்காத்தவாறு.

௬௧. கண்ணுந்தோளு முலையும்பிறவும், பன்மைசுட்டிய சினைநிலைக்கிளவி, பன்மைகூறுங் கடப்பாடிலவே, தம்வினைக் கியலு மெழுத்தலங்கடையே.

தம்வினைக்கியலு மெழுத்தான்முடிதலுந் தம்முதல்வினைக்கியலு மெழுத்தான்முடிதலுமெனச் சினைநிலைக்கிளவி யிருமுடிபுடையவற்றுண் முதல்வினையெழுத்தான முடிவுழியென்பார் தம்வினைக்கியலு மெழுத்தலங்கடையென்றார். பன்மைகூறுங் கடப்பாடிலவேயென்றது கண்முதலாயவும் பிறவும்பன்மை குறித்துநின்ற சினைநிலைக்கிளவி பன்மையாற்சொல்லப்படும் யாப்புறவுடையவல்ல முதலொன்றாயினொருமையானும் பலவாயிற் பன்மையானுங்கூறப்படும் - எ - று. உ - ம்- கண்ணல்லள் - தோணல்லள் - முலைநல்லள் - எ - ம், கண்ணல்லர் - தோணல்லர் - முலைநல்லர் - எ - ம் வரும. பிறவுமென்றதனாற் புருவங்காதென்றாற் தொடக்கத்தனவுங்கொள்க. பன்மைகூறுங் கடபபாடிலவேயென்றதனாற் பால்வழுவுந் தமவினைக்கியலு மெழுத்தலங்கடையேயென்றதனாற் றிணைவழுவுமமைத்தார். பன்மைகொண்டன பன்மையொருமை மயக்கமில்லாத் திணைவழுவாகலிற் றம்வினைக்கியலு மெழுத்தலங்கடையே [illegible]ன்பதனானமைக்கப்படும். மூக்குநல்லள் - கொப்பூழ்நல்லள் - எனஒருமைச்சினைப்பெயர்நின் றுயர்திணைகொண்டனவும், சிறங்கரியள், கவ்வுக்கடியள் - எனப்பண்புந்தொழிலுநின றுயாதிணைகொண்டனவு ந் தன்னினமுடித்தலென்பதனனைமைக்கப்படும். கோடுகூரிதுகளிறு - குளம்புகூரிதுகுதிரை எனவஃறிணைப் பன்மைச்சினைப்பெயர்நின்று முதல்வினையாகிய வொருமையான் முடிந்தனவுமமையுமாறென்னையெனின் ஆண்டுப்பன்மை யொருமைமயக்கமல்லது திணைவழுவின்மையினீண்டைக்கெய்தா அப்பன்மையொருமைமயக்க மொன்றெனமுடித்தலென்பதனனைமைக்கப்படும். அஃதேலிச்சூத்திரத்தாற் றிணைவழுவொடுகூடிய பால்வழுவமைக்கப்பட்டதென்ப தெறறாற்பெறுதுமெனின் சினைக்கிளவிக்குத் தம்வினைக்கியலு மெழுத்தாவதஃறிணைவினைக்குரியவெழுத்தாம் அஃதல்லாததுயர்திணை வினைக்குரியவெழுத்தேயாம். என்னை? அஃறிணைக்கு மறுதலையுயர்திணையேயாகலான்] அதனாற் றிணைவழுவுதலும் பெறுதுமென்பது. அஃதேற் றம்வினைக்கியலுமெழுத்தாவன சினைவினைக்குரியவெழுத்தென்று மவையல்லாதனவாவன முதல்வினைக்குரிய வெழுத்தென்றுமுரைக்க. உரைக்கவேயயாதிணைச்சினையு மஃறிணைச்சினையு மெல்லாமடங்குமெனின் அற்றன்று அஃறிணைக்கட் சினைவினைக்குரியவெழுத்தொடு முதல்வினைக்குரியவெழுத்திற

கு வேறுபாடின்றி யெல்லாமஃறிணை யெழுத்தேயாகலிற் றம்வினைக்கியலுமெ ழுத்தலங் கடையென்பதற்கேலாதாகலாற் கண்முதலாயின வுயர்திணைச்சினை யே[illegible]மென்பது.

முதலாவது
கிளவியாக்கம் - முற்றிற்று.

இரண்டாவது

வேற்றுமையியல்.

———:o:———

௬௨. வேற்றுமைதாமே யேழெனமொழிப.

நான்குசொற்கும் பொதுவிலக்கண முணர்த்தின ரதற்கிடையீடின்றி யவற்றது சிறப்பிலக்கண முணர்த்துதன் முறைமையாயினும் வேற்றுமையில க்கண முணர்த்துதற்கு வேறிடமின்மையானும், பொதுவிலக்கணமாத லொ ப்புமையானும், உருபேற்றல் பெயர்க்கிலக்கணமாகலின் வேற்றுமையுணர்த் திப் பெயருணர்த்தன் முறையாகலானுங் கிளவியாக்கத்திற்கும் பெயரியற்கு மிடைவேற்றுமையிலக்கண முணர்த்திய வெடுத்துக்கொண்டார். வேற்றுமை யாவன பெயருமோரிடைச் சொல்லுமாகலி னவற்றதிலக்கணமும் பொதுவி லக்கணமேயாம். வேற்றுமையிலக்கணமென வொன்றாயினுஞ் சிறப்புடைய வெழுவகைவேற்றுமையு மவற்றது மயக்கமும் விளிவேற்றுமையுந் தனித் தனி யுணர்த்தத்தகும் வேறுபாடு யாப்புடைமையான் மூன்றோத்தா னுணர் த்தினர். பொதுவிலக்கணமுணர்த்திச் சிறப்பிலக்கண முணர்த்துதன் முறை மையாகலின் முதற்கண்ணதாகிய பெயர்ச்சொற்குப் பயனிலைகோடலு முரு பேற்றலுங் காலந்தோன்றாமையுமாகிய விலக்கணமுணர்த்துவா ரியைபுபட் டமையான் வேற்றுமையிலக்கணமுணர்த்தினரெனமேலோத்தினொடிவ்வோ த்திடையியைபு கூறினரா லுரையாசிரியரெனின் அற்றன்று இவ்வோத்துப் பெயரிலக்கண நுதலியெடுத்துக்கொள்ளப்பட்டதாயினு முருபேற்றலும் பய னிலைகோடலுங் காலந்தோன்றாமையுமாகிய பெயரிலக்கண முன்னோதியியை புபடுதலான் வேற்றுமையுணர்த்துங் கருத்தினராயினவற்றையு மின்னவிலக் கணத்த வெனவுணர்த்திப் பின்னுமெடுத்துக்கொண்ட பெயரிலக்கணமேபற்றி யோதிப்பெயரியலென வோரோத்தான் முடியற்பாற்றன்றே யவ்வாறன்றி வேற்றுமையிலக்கணமேமுன்கூறி யன்றியனைத்தும்பெயர்ப் பயனிலையேயெ னவும் ஈறுபெயர்க்காகு மியற்கையவென்பவெனவும் வேற்றுமையிலக்கணங் கூறி யச்சூத்திரத்தாற் பயனிலைகோடலு முருபேற்றலும் பெயர்க்கிலக்கண மென்ப தய்த்துணரவைத்துப் பின்னும் வேற்றுமையிலக்கணமே யுணர்த்தி யிதனை வேற்றுமையோத்தென்று மவற்றது மயக்கமுணர்த்திய வோத்தைவே ற்றுமை மயங்கியலென்றுஞ் சிறப்பில்லா விளிவேற்றுமை யுணர்த்தியவோத் தை விளிமரபென்று நுதலி யதனாற்பெயர்கொடுத்து மூன்றோத்தாகவைத்து

ப் பெயரியலென வேற்றுமையோத்திற்குப் பெயர்கொடுத்தமையானு மெல்லாச் சொல்லும் பொருள்குறித்தனவே யென்பதுமுதலாகிய வைந்துசூத்திரமும் பெயரிலக்கணமுணர்த்து மோத்தின்முன் வையாதிடைவைத்தல் பொருந்தா மையானு மிவ்வோத்துப் பெயரிலக்கண நுதலியெடுத்துக் கொள்ளப்பட்ட தன்று வேற்றுமையிலக்கணமே நுதலியெழுந்ததெனவே படுமதனு னவ ராக்கது கருத்தன்றென்க. அஃதேற் பெயர்நிலைக்கிளவி காலந்தோன்றாவென ப்பெயரிலக்கணமீண்டுக் கூறியதென்னையெனிற் பயனிலைகோடலு முருபேற் றலும் பெயர்க்கிலக்கணமென்ப தீண்டுப் பெறப்பட்டமையா னவற்றொடி யையக்காலந்தோன்றாமையுமீண்டேகூறினார். பெயரிலக்கணமாதலொப்புமை யானென்பது (வேற்றுமை - மொழிப) என்றதுவேற்றுமையாவன வேழென் றுசொல்லுவர்தொல்லாசிரியர். எ-று. செயப்படுபொருண்முதலாயினவாகப் பெயர்ப்பொருளை வேறுபடுத்துணர்த்தலின் வேற்றுமையாயின. செயப்படு பொருண்முதலாயினவற்றின் வேறுபடுத்துப் பொருண்மாத்திரமுணர்த்தலி னெழுவாயும் வேற்றுமையாயிற்று. அல்லதூஉம்வேற்றுமையென்பதுபன்மை பற்றியவழக்கெனினுமமையும். தாமேயென்பதுகட்டுரைச்சுவைபடநின்றது. ()

௬௩. விளிகொள்வதன்கண்விளியொடெட்டே.

விளிகொள்வதன்கண்ணதாகிய விளியொடுதலைப்பெய்ய வேற்றுமை யெட்டாம். எ - று. வேற்றுமையென்பததிகாரத்தான்வந்தது. முன்னர்விளியெனப்படுவகொள்ளும்பெயரொடு தெளியத்தோன்றுமியற்கையவென்பவென்ப வாகலின்விளிகொள்வதென்றது விளிகொள்ளும்பெயரை. அதன்கண்விளியென்றதனாற்பெயருமன்று பெயரின்வேறுமன்று; விளிவேற்றுமையாவது திரிந்துமியல்பாயுநிற்கும் பெயரிறுதியென்பதாம். வேற்றுமைதாமேயேழெனமொழிபஎனப்பிறர்மதங்கூறியிச்சூத்திரத்தாற்றந்துணிபுரைத்தார். (௨)

௬௪. அவைதாம், பெயரையொடுகு, வின்னதுகண்விளியென் னுமீற்ற.

எட்டெனப்பட்ட வேற்றுமையாவன விளிவேற்றுமையை யிறுதியாகவு டைய பெயர் ஐ ஒடு கு இன் அது கண் ஆம். எ - று. பெயர் ஐ ஒடு கு இன் அது கண் என்பனபலபெயரும்மைத்தொகை. அஃதொருசொல்லாய்விளியெ ன்னுமீற்றவென்பதனான் விசேடிக்கப்பட்டது. பெயரும், ஐயும், ஒடுவும், குவ் வும், இன்னும்,அதுவும், கண்ணும்எனவிரியும். சிறப்புடைப்பொருளைத்தா னினி து கிளத்தலென்பதனான் ஒடுவென்று மதுவென்றுமோதினாராகலின் ஆனுருபு ம்,அகரவுருபுங்கொள்ளப்படும். விளிவேற்றுமையினதுசிறப்பின்மைவிளக்கிய பெயரையொடுகு வின்னது கண்விளியென்றூ விளியென்னு மீற்றவெனப் பிரித்துக்கூறினார். (௩)

௬௫. அவற்றுள், எழுவாய்வேற்றுமைபெயர்தோன்றுநிலையே.

மேற்சொல்லப்பட்ட வேற்றுமையுண்முதற்கட்பெயரொன்று கூறப்பட்ட வேற்றுமையாவது பெயர்தோன்றியதுணையாய்நிற்கு நிலைமையாம். எ - று.

பெயர்தோன்றிய துணையாய்நிற்குநிலைமையாவது உருபும் விளியுமேலாதுபி
றிதொன்றனொடுதொகாதுநிற்குநிலைமை. எனவேயுருபும்விளியுமேற்றுப் பிறி
தொன்றனொடு தொக்குநின்றபெயர் எழுவாய் வேற்றுமையாகாதென்றவாறு
ம். ஆ, அவன் -எனவரும். (௪)

௬௬. பொருண்மைசுட்டல் வியங்கொளவருதல், வினைநிலையு
ரைத்தல் வினாவிற்கேற்றல், பண்புகொளவருதல் பெயர்
கொளவருதலென், றன்றியனைத்தும்பெயர்ப்பயனிலையே.

பொருண்மைசுட்டல் ஆவுண்டென்பது. வியங்கொளவருதல் ஆசெல்க என்பது. வினைநிலையுரைத்தல் ஆகிடந்ததென்றல். வினாவிற்கேற்றல் அஃதியாவது, அஃதெவன் எனவினாச்சொல்லொடுதொடர்தல். பண்புகொளவருதல் ஆகரிதுஎன்பது. தன்வினைமுடித்தலென்றதனால் ஆவில்லை, ஆவல்ல என்னுந்தொடக்கத்துக் குணப்பொருளவல்லாவினைக்குறிப்பொடுதொடர்தலுங்கொள்க. பெயர்கொளவருதல் ஆபலஎன்பது. அன்றியனைத்தும் பெயாப்பயனிலையேயென்பதவ்வாறும் பெயர்வேற்றுமைப்பயனிலையாம் - எ-று. முடிக்குஞ்சொற்பொருளத்தொடர்மொழிக்குப் பயனாகலிற்பயனிலையென்றார். உண்டென்பதுபண்புமுதலாயினசுட்டா துண்மையேசுட்டலின் வேறுகூறினார். பொய்ப்பொருளின் மெய்ப்பொருட்கு வேற்றுமையுண்மையாகலி னவ்வுண்மையைப்பொருண்மையென்றார். வியங்கொளவருதல் வினைநிலையுரைத்தற்கண்ணும், வினாவிற்கேற்றல் பெயர்கொளவருதற்கண்ணும், வினைக்குறிப்பாயவழிப பண்புகொளவருதற்கண்ணு மடங்குமாயினும் வினையும், பெயரும், பண்புமுடிக்குஞ்சொல்லாதலேயன்றி முடிக்கப்படுஞ்சொல்லாதலுமுடைய. வியங்கோளும் வினாவுமுடிக்குஞ்சொல்லாயல்லது நில்லாமையின் வேறுபாடறிவித்தற்கு வேறுகூறினொன்பது. பெயர்தோன்று நிலையென்பதனானு மன்றியனைத்தும்பெயாப்பயனிலையேயென்றதனானும் பெயர்தோன்றிய துணையாய்நின்று பயனிலைத்தாதலெழுவாய் வேற்றுமையிலக்கணமென்பதுபெற்றாம். ஆபலவென்புழிப்பலவென்பதற்குப் பயனிலையாதெனின் அது பயனிலையாய் ஆவென்பதனைமுடித்தற்கு வந்ததாகலிற்றான் பிறிதோர்சொன்னோக்காது ஆவென்பதனொடுதொடர்நததனை முடித்தமைநதுமாறுமென்பது. அஃதேற் பயனிலைகொள்ளாததெழுவாய் வேற்றுமையாமாறென்னையெனின் உருபேற்றல் பெயர்க்கிலக்கணமாயினுமுருபேலாதவழியும பெயராமாறுபோல எழுவாய்வேற்றுமை பயனிலைகொள்ளாதவழியு மெழுவாய்வேற்றுமையேயாமெனபது. இலக்கியமெங்குஞ் செல்லாதனவிலக்கணமாமாறென்னையெனின் ஆண்டிலக்கணமாவன வுருபேற்றற்கேற்றதன்மையும் பயனிலையும் பயனிலைகோடற்கேற்ற தன்மையுமாகலி னத்தன்மையெல்லாவற்றிற்கு முண்மையினிலக்கணமாமெனபது. அகரச்சுட்டன்றியென வீறுதிரிந்துநின்றது. அன்றியனைத்தும்பெயர்ப்பயனிலையெனவே பயனிலைகோடல் பெயர்க்கிலக்கண மென்பதூஉம்பெற்றாம. (௫)

௬௭. பெயரினாகிய தொகையுமாருளவே, யவ்வுமுரிய வப்பா
லான.

பெயரும்பெயருந்தொக்க தொகையுமுளவவையுமுரிய வெழுவாய் வேற்றுமையாய்ப் பயனிலைகோடற்கு - எ - று. யானைக்கோடுகிடந்தது, மதிமுகம் வெயர்த்தது, கொல்யானைநின்றது, கருங்குதிரையோடிற்று, உவாப்பதினான்குகழிந்தன, பொற்றொடிவந்தாள் எனவரும். பெயரினாகிய தொகையுமென்னு மும்மையாற் பெயரொடுபெயர்தொக்கனவேயன்றி நிலங்கடந்தான்மாகொணர்ந்தான்எனப் பெயரொடு வினைவந்துதொக்கவினையினாகிய தொகையுமுள வென்பதாம். ஆகவே பெயரொடுபெயரும் பெயரொடுதொழிலுந் தொக்கன தொகையென்பதுபெற்றாம். அவ்வுமுரியவெனப் பொதுவகையாற்கூறினாரேனு மேற்புழிக்கோடலென்பதனான் எழுவாய்வேற்றுமையாதற் கேற்புடைய பெயரினாகிய தொகையேகொள்ளப்படும். இருதொடர்படச் சூத்திரித்திடார்ப் படுவதென்னை? பெயரினாகிய தொகையு மெழுவாய்வேற்றுமையாமென்றோதவமையாதோவெனின் அங்ஙனமோதிற் பெயரொடுபெயரும், பெயரொடுவினையுந் தொக்கனதொகைச்சொல்லாமென்னுந் தொகையிலக்கணம் பெறப்படாதாம்; அவ்விலக்கண முணர்த்துதற்கிவ்வாறு பிரித்தோதினானென்பது. பெயரினாகிய தொகையுமென்றவும்மையான் வினையினாகிய வினைத்தொகை தழுவப்பட்டதென்றும், எல்லாத்தொகையு மொருசொன்னடையவென்பதனாற் றொகைச்சொலெல்லா மெழுவாய்வேற்றுமையாதல் பெறப்படுதலினீண்டவ்வுமுரியவப்பாலானவென்றது தொகைச்சொற்குப் பயனிலைகோடன் மாத்திரமெய்துவித்தற்கென்று முரையாசிரியர் கூறினாராலெனின் அற்றன்று வினைத்தொகைக்கு நிலைமொழிவினையென்ப துரையாசிரியர்க்குக்கருத்தன்மை வினையின்றொகுதி காலத்தியலு மென்னுஞ்சூத்திரத்திற்சொல்லுதும். இனியெல்லாத்தொகையு மொருசொன்னடையவென்பதற்கு ஒருசொன்னடையவாமென்பதல்ல தெழுவாய்வேற்றுமையாமென்னுங் கருத்தின்மையானு மக்கருத்துண்டாயி னவையு மெழுவாய்வேற்றுமையாய்நின் றன்றியனைத்தும் பெயர்ப்பயனிலையேயென்றதனாற் பயனிலையெய்துமாகலி னவ்வுமுரியவப்பாலான வென்றல்கூறிய கூற்றுமாகலானு மதுவுமுரையாசிரியர் கருத்தன்றென்க. அஃதேற்றொகையு மெழுவாய்வேற்றுமையாமென்பதே யிச்சூத்திரத்திற்குக் கருத்தாயினெழுவாய்வேற்றுமை பெயர்தோன்று நிலையேயென்னுஞ் சூத்திரத்தின் பின்வைக்கவெனிற் பெயர்தோன்றிய துணையாய்நிற்றலும் பயனிலைகோடலுமாகிய வெழுவாய்வேற்றுமை யிலக்கணமிரண்டுந் தொகைச்சொற்கு மெய்துவித்தற் கவ்விரண்டுசூத்திரத்திற்கும் பின்வைத்தானென்பது. ஆண்டுவைப்பினன்றியனைத்தும் பெயர்பயனிலையேயென்றதனாற் பயனிலைகோடல் பெயர்க்கேயா யத்தொகைக்கெய்தாதாமென்பது. (௬௭)

௬௮. எவ்வயிற்பெயரும் வெளிப்படத்தோன்றி, யவ்வியனிலை
யல் செவ்விதென்ப.

மூன்றிடத்துப்பெயருஞ் செவிப்புலனாகத்தோன்றிநின்று பயனிலைகோடல் செவ்விதென்பவாசிரியர் - எ - று. எனவேயவ்வாறு தோன்றாதுநின்று பயனிலைகோடலுமுண்டு; அது செவ்விதன்றென்றவாறாம். பெயரொன்ற நீண்டெ

ழுவாயை. கருவூர்க்குச்செல்லாயோ சாத்தாவென்றவழிச் செல்வல்-எ-ம், யான்யாது செய்வலென்றவழி இதுசெய்-எ-ம், இவன் யாரென்றவழிப்படைத்தலைவன் - எ - ம் செப்பியவழியா னீ யிவனென்னுமெழுவாய் வெளிப்படாது நின்று செல்வல், இதுசெய், படைத்தலைவனென்னும் பயனிலைகொண்டவாறு கண்டுகொள்க. எவ்வயிற்பெயருமென்றதென்னையெனின் செல்வல், இதுசெய்என்னுந் தன்மைமுன்னிலைவினைகளான் யானீயென்பனவற்றின் பொருளுமுணரப்படுதலின் யான்செல்வல், நீயிதுசெய் எனப்பெயர்வெளிப்படுதல் பயமின்றாயினும் வழக்குவலியுடைத்தாகலி னவ்வாறுவருதல் பயமின்றெனப்படாதென்பதுவிளக்கிய எவ்வயிற்பெயருமென்றாரென்பது. அவ்வியலானிலையல் எனவிரியும். பயனிலைக்கிருநிலைமையு மோதாதெழுவாய்க்கே யோதுதலாற் பயனிலைவெளிப்பட்டேநிற்கும். எவ்வயிற்பெயரும் பயனிலைகோடல் செவ்விதெனவுருபேற்றல்செவ்விதன்றாமெனவுரைத்து அவ்வாய், நீயி ரென்பனவுருபேலாவென்று காட்டினாராலுரையாசிரியரெனின் அவ்வாயென்பதிடைச்சொல்லா யாண்டென்னும்பொருள்பட நின்றவழியுருபேயன்றிப் பயனிலையுமேலாதாம். இனியல்வழிக்கண் நும்மென்பதுதிரிந்து நீயிரெனநின்ற திரிபைப்பெயரெனக்கொண் டுருபேலாதென்றாராயின் நீயென்பதன்றிரிபாகிய நின்னென்பதனையும் பெயராகக்கொண்டு பயனிலைகொள்ளாதென்றுங்கூறல்வேண்டும். அன்றி நும்மின்றிரிபாகிய நீ யிரென்பதனை எல்லாநீயிர் நீயெனக்கிளந்தென-இயற்கைப்பெயரொ டொருங்குவைத்தது நீயிரென்னுந் திரிபேயியல்பாக வேற்றுமைக்கண் நும்மெனத்திரிபிற மமையுமென்னுங்கருத்தினராயன்றே; அதனுனியல்பாகக்கொள்ளப்பட்ட நிலைமைக்கணீயிரென்பதனை யுருபேலாதெனருராயி னும்மெனத்திரிந்துருபேற்பதனை யுருபேலாதென்றல பொருந்தாதாமதனுனது போலியுரையென்க. (எ)

௬௬. கூறியமுறையி னுருபுநிலைதிரியா, தீறுபெயர்க்காகு மியற்
கையவென்ப.

எழுவாய்வேற்றுமை யுணர்த்தி யேனையறுவகைவேற்றுமை யிலக்கணமுமுணர்த்தியவெடுத்துக்கொண்டார் பெயர் ஐ ஒடு கு இன் அது கண் என்றுகூறப்பட்ட முறைமையையுடைய வுருபுதந்நிலை திரியாதுபெயர்க்கீறா மியல்பையுடையவென்று சொல்லுவராசிரியர் - எ - று. சாத்தனை - சாத்தனொடு - சாத்தற்கு - சாத்தனின் - சாத்தனது - சாத்தன்கண் - எனவரும். அம்முறை பற்றியவையெண்ணுப்பெயரான் வழங்கப்படுதலிற் கூறியமுறையினுருபென்றார். வினைச்சொலிறுதிநிற்கு மிடைச்சொற்றாமென வேறுணரப்படா தச்சொற்குறுப்பாய்நிற்குமன்றே யிவையவ்வாறு பெயர்க்குறுப்பாகாது தாமென வேறுணரப்பட்டிறுதிநிற்குமென்பார் நிலைதிரியாதென்றார். உருபுபெயர்சார்ந்து வருமெனவேயுருபேற்றலாகிய பெயரிலக்கணமும்பெறப்பட்டது. (அ)

௭0. பெயர்நிலைக்கிளவி காலந்தோன்றா, தொழினிலையொட்டு
மொன்றலங்கடையே.

பெயர்ச்சொல் காலந்தோன்றாவினைச்சொல்லொடொக்கு மொருகூறல்லாதவிடத்து-எ-று. சாத்தன் - கொற்றன் - உண்டல் - தின்றல்-எனக்காலந்தோன்றாதுநிற்றலும், உண்டான்-தின்றான் - எனத் தொழினிலையொட்டுவன காலந்தோன்றிநிற்றலுங் கண்டுகொள்க. உண்டான் - தின்றான் - என்னுந்தொடக்கத்துப் படுத்துச்சொல்லப்படுந்தொழிற்பெயர் வினைச்சொற்போலத்திணையும்பாலுங் காலமுமுதலாயினவற்றைவிளக்கி, அன் ஆன்முதலாகிய வீற்றவாய் வருதலிற் றொழினிலையொட்டுமென்றார். ஒட்டுமென்ப துவமச்சொல். பெயராகிய நிலையையுடையது பெயர்நிலையென வன்மொழித்தொகைப்பெயர்ப்பொருள். தொழினிலையுமது. காலந்தோன்றாவென்பன வொருசொல்லாய்ப் பெயர்நிலைக்கிளவியென்பதற்குமுடிபாயின. பயனிலைகோடலு முருபேற்றலுமாகிய பெயரிலக்கண மீண்டுப்பெறப்படுதலி னவற்றொடியையக் காலந்தோன்றாமையாகிய பெயரிலக்கணமு மீண்டேகூறினார். பெரும்பான்மைபற்றிக் காலந்தோன்றாமை பெயரிலக்கணமாயிற்று. (௧)

௭௧. இரண்டாகுவதே, ஐயெனப்பெயரிய வேற்றுமைக்கிளவி, யெவ்வழிவரினும் வினையேவினைக்குறிப், பவ்விருமுதலிற் றோன்றுமதுவே.

பெயரை யொடு கு என்னுஞ்சூத்திரத்து ஐயெனப் பெயர்பெற்றவேற்றுமைக்கிளவிஇரண்டாவதாம்; அஃதியாண்டுவரினும்வினையும் வினைக்குறிப்புமாகிய வவ்விரண்டுமுதற்கண்ணுந்தோன்றுமவை பொருளாகவரும். எ-று. குடத்தைவனைந்தான் - குழையையுடையன்-எனவரும். எண்ணுமுறையானிரண்டாகுவதென்பதுபெறப்படுமாயினுமிக்குறிதொல்லாசிரியர் வழக்கென்பதறிவித்தற்குஐயெனப்பெயரிய வேற்றுமைக்கிளவியிரண்டாகுவதென்றார். இதுமூன்றாகுவது முதலாயினவற்றிற்குமொக்கும். பெயரியவென்பது பெயரென்பதுமுதலாக முடிந்ததோர்பெயரெச்சம். தம்மையுணர்த்துவனவும் பெயரெனப்படுதலின் ஐயெனப்பெயரியவென்றார். வினையேவினைக்குறிப்பென்றாராயினுமவற்றின்செயப்படுபொருளேகொள்ளப்படும். அவ்விருமுதலிற் றோன்றுமென்றமையான் முதலாதற்கும் வேற்றுமைப்பொருளாதற்கு மேற்பனவவையேயாகலின்]என்னை? அவைமுதலாதற்கேற்றவாறெனின் செயப்படுபொருண்முதலாயின தொழிற்குக்காரணமாகலானும், ஆயெட்டென்ப தொழின்முதனிலையேயென வவற்றை முதனிலையென்று கூறுபவாகலானுமென்பது. அஃதேற்செயப்படுபொருளாவது தொழிற்பயனுறுவதாகலாற் குழைமுதலாயினவற்றிற் கவ்விலக்கணம்பெறாமையிற்செயப்படுபொருளன்மையான் வினைக்குறிப்பெனல்வேண்டாவெனின் அற்றன்று அம்முக்காலமுங் குறிப்பொடுங்கொள்ளு மெய்ந்நிலையுடையவென்றாராகலிற் குறிப்புச்சொல் காலமொடுதோன்றித் தொழிற்சொல்லாதலுங் குழைமுதலாயின தொழிற்பயனுறுதலுமாசிரியர் துணிபாகலினவையுஞ் செயப்படுபொருளாமென்பது. ஆயிற்செயப்படு பொருட்கட்டோன்றுமெனவமையும்; வினையேவினைக்குறிப்பெனல்வேண்டாவெனின் அங்ஙனங்கூறிற் செயப்பாடினிதுவிளங்குஞ் சிறப்புடைத் தெரிநிலைவினைச்செயப்படு

பொருளையேகூறினரோ குறிப்புப்பொருளுமடங்கப் பொதுவகையாற்கூறினரோவென் றையமாமையநீங்க வினையேவினைக்குறிப்பென்றொன்பது. வினைவினைக்குறிப்பென்பன வீண்டாகுபெயர். புகழைநிறுத்தான் - புகழைநிறுத்தல் - புகழையுடையான், புகழையுடைமை-எனவிரண்டாவதுபெயரொடுதொடர்ந்தவழியும் வினைச்செயப்படுபொருளுங் குறிப்புச்செயப்படு பொருளும்பற்றியேநிற்குமென்பாரெவ்வழிவரினுமென்றியாப்புறுத்தார். இயற்றப்படுவதும், வேறுபடுக்கப்படுவதும், எய்தப்படுவதுமெனச்செயப்படுபொருண்மூன்றும். இயற்றுதலாவதுமுன்னில்லதனையுண்டாக்குதல். வேறுபடுத்தன்முனனுள்ளதனைத்திரித்தல், எய்தப்படுதலியற்றுதலும் வேறுபடுத்தலுமின்றித்தொழிற்பயனுறுந்துணையாய்நிற்றல். (௧0)

௭௨. காப்பிறோப்பினூர்தியினிழையி, னோப்பிற்புகழிற்பழியினென்று, பெறலினிழவிற்காதலின்வெகுளியிற், செறலினுவத்தலிற்கற்பினென்று, வறுத்தலிற் குறைத்தலிற்றொகுத்தலிற்பிரித்தலி, னிறுத்தலினளவினெண்ணினென்று, வாக்கலிற்சார்தலிற்செலவிற்கன்றலி, னோக்கலினஞ்சலிற்சிதைப்பினென்று, வன்னபிறவுமம்முதற்பொருள, வென்னகிளவியுமதன்பாலவென்மனார்.

செயப்படுபொருண் மூன்றனையும்பற்றி வரும்வாய்பாடுகளை விரிக்கின்றார். காப்புமுதலாகச் சிதைப்பீறுகச்சொல்லப்பட்ட விருபத்தெட்டுப்பொருளும் அவைபோல்வனபிறவுமாகிய வம்முதற்பொருண்மேல் வருமெல்லாச்சொல்லுமிரண்டாம்வேற்றுமைப்பாலவென்று சொல்லுவர்புலவர். எ - று. என்றுவென்பதெண்ணிடைச்சொல். இன்னெல்லாம்புணரியனிலையிடைப்பொருணிலைக்குதவாதெண்ணின்கண்வந்தன. முன்னர்வருவனவற்றிற்கு மீதொக்கும். அம்முதலென்றது கூறப்பட்டசெயப்படுபொருளென்றவாறு. எயிலையிழைத்தான்-என்பது இயற்றப்படுவது. கிளியையோப்பும் - பொருளையிழக்கும்-நாணையறுக்கும் - மரத்தைக்குறைக்கும் - நெல்லைத்தொகுக்கும் - வேலியைப்பிரிக்கும் - அறத்தையாக்கும் - காட்டைச்சிதைக்கும் - என்பனவேறுபடுக்கப்படுவன. குறைத்தல்சுருக்குதலுஞ்சிறிதிழககச்சிதைத்தலுமாம். அறுத்தல்சிறிதிழவாமற்சினையையாயினும் முதலையாயினுமிருகூறுசெய்தல். ஊரைககாக்கும் - தந்தையையொக்கும் - தேரையூரும் - குரிசிலைப்புகழும் - நாட்டைப்பழிக்கும் - புதல்வரைப்பெறும் - மனைவியைக்காதலிக்கும் - பகைவரைவெகுளும் - செற்றாரைச்செறும் - நட்டாரையுவக்கும் - நூலைக்கற்கும் - பொன்னைநிறுக்கும் - அரிசியையளக்கும் - அடைக்காயையெண்ணும் - ஊரைச்சாரும் - நெறியைச்செல்லும் - குதிரைக்கன்றும் - கணையைநோக்கும - கள்வரையஞ்சும் - என்பனஎய்தப்படுவன. வெகுடலுஞ்செறலுங்கொலைப்பொருளவாயவழி வேறுபடுக்கப்படுவனவாம். செறல்வெகுளியதுகாரியம். இயற்றப்படுவதொருதன்மைத்தாகலி னதற்கொருவாய்பாடேகூறினர். ஏனையபல்லிலக்கணத்தவாகலிற்பலவாய்பாட்டான் விரித்துக்கூறினர். அன்னபிறவு மென்றதனு

ற்பகைவரைப்பணித்தான் - சோற்றையட்டான் - குழையையுடையான் - பொருளையிலன் - என்னுந்தொடக்கத்தன கொள்க. காப்புமுதலாயின பொருள்பற்றியோதப்பட்டமையான் ஊரைப்புரக்கும் - ஊரையளிக்கும் - தந்தையைநிகர்க்கும் - தந்தையையொட்டும் - தேரைச்செலுத்தும் - தேரைக்கடாவும் - என்பனபோல்வனவெல்லாங்கொள்க. இயற்றப்படுதன்முதலாகியவேறுபாடு குறிப்புவினைச்செயப்படுபொருட்கணேற்பனகொள்க. (௧௧)

௭௩. மூன்றுருவதே, ஒடுவெனப்பெயரியவேற்றுமைக்கிளவி,
வினைமுதல்கருவியனைமுதற்றதுவே.

மேல் ஒடுவெனப் பெயர்கொடுத்தோதிய வேற்றுமைச்சொல் மூன்றுவதாம்; அதுவினைமுதலுங் கருவியுமாகிய விரண்டுமுதலையும்பொருளாகவுடைத்து. எ - று. மேல்ஐயொடுகுவ்வென்றோதியவழி யானுருபுந்தழுவப்பட்டமையானீண்டு மவ்வாறே கொள்ளப்படும்; படவே மூன்றுவதாதலும் வினைமுதல்கருவிப்பொருட்டாதலும் ஆனுருபிற்குமெய்தும். வினைமுதலாவது கருவிமுதலாயினகாரணங்களைத் தொழிற்படுத்துவது. கருவியாவது வினைமுதற்றொழிற் பயனைச் செயப்படுபொருட்கணுய்ப்பது. அனையென்ப தத்தன்மையவாகிய முதலென வவற்றதிலக்கணத்திற்குத் தோற்றுவாய்செய்தவாறு. முதலென்பதற்கு மேலேயுரைத்தாம். கொடியொடுதுவக்குண்டான் - ஊசியொடுகுயின்ற தூசும்பட்டும்-எ-ம், அகத்தியனாற்றமிழுரைக்கப்பட்டது - வேலானெறிந்தான் எ-ம் வரும். பிறபொருளுமுளவேனும் வினைமுதல்கருவி சிறந்தமையான் வினைமுதல்கருவி யனைமுதற்றென்றார். வினைமுதலகருவிக்கணொடுவெனுருபிக்காலத்தருகியல்லது வாராது. (௧௨)

௭௪. அதனினியற லதற்றகுகிளவி, யதன்வினைப்படுத லதனி
னாதல், லதனிற்கோட லதனொடுமயங்க, லதனொடியைந்த
வொருவினைக்கிளவி,யதனொடியைந்தவேறுவினைக்கிளவி,
யதனொடியைந்த வொப்பலொப்புரை,யின்னானேது வீங்
கெனவரூஉ, மன்னபிறவு மதன்பாலவென்மனார்.

அதனினியறல்-மண்ணானியன்றகுடம் - என்பது. மண்முதற்காரணம். முதற்காரணமாவது காரியத்தொடொற்றுமையுடையது. அதற்றகுகிளவி - வாயாற்றக்கதுவாய்ச்சி - அறிவானமைந்த சான்றோர்-என்பன. இவைகருவிப்பாற்படும். அதன்வினைப்படுதல் - சாத்தனான்முடியுமிக்கருமம்-என்பது. இது வினைமுதற்பாற்படும். அதனினாதல் - வாணிகத்தானாயினான்-என்பது. அதனிற்கோடல்- காணத்தாற்கொண்டவரிசி என்பது. இதுவுங் கருவிப்பாற்படும். இவையைந்துபொருளும் ஒடுவுருபிற்குஞ் சிறுபான்மையுரியவாயினும் பெரும்பான்மைபற்றி ஆனுருபிற்கேயுரியபோலக்கூறினார். அதனொடுமயங்கல் - எண்ணொடுவிராயவரிசி-என்பது. அதனொடியைந்த வொருவினைக்கிளவி - ஆசிரியனொடுவந்த மாணாக்கன்-என்பது. வருதற்றொழி லிருவர்க்குமொத்தலி னொருவினைக்கிளவியாயிற்று. அதனொடியைந்த வேறுவினைக்கிளவி- மலையொடுபொ

ருத மால்யானை-என்பது, பொருதல் யானைக்கல்ல தின்மையின் வேறுவினைக்கிளவியாயிற்று. அதனொடியைந்த வொப்பலொப்புரை-பொன்னொடிரும்பனையர் நின்னொடுபிறரோ - என்பது, ஒப்பல்லதனை யொப்பாகக்கூறலின் ஒப்பலொப்புரையாயிற்று. இம்மூன்றிற்கு முடனிகழ்தல் பொதுவென்பதூஉம், அவை ஒடுவெனுருபிற்கே யுரியவென்பதூஉமுணர்த்திய வதனொடியைதன் மூன்றிற்குங்கூறினார். அதனொடுமயங்கற்கு மீதொக்கும். எல்லாப்பொருட்கண்ணு மதுவென்ற தூருபேற்கும் பெயர்ப்பொருளை. அதற்குவினையுடைமையி னென்பதற்கு மீதொக்கும். இன்னானேதுவென்பது முயற்சியிற்பிறத்தலா னொலிநிலையாது-என்பது. அதனானதலெனக்காரகவேது முற்படக்கூறப்பட்டமையா னிது ஞாபகவேதுவாம். இப்பொருள் ஆனுருபிற்கும் இன்னுருபிற்குமுரித்தென்பது விளக்கிய ஏதுவென்னாது இன்னானேதுவென்றார். இன்னானென்ப தும்மைத்தொகை. அவற்றதேதுப்பொருண்மையெனறவாறு. எனவென்பதனைமாற்றி யேதுவென்பதனபின்கொடுத் தீங்குவரூஉ மன்னபிறவுமெனவியைக்க. ஈங்கனமெனறு பாடமோதுவாருமுளர். அதனினியறலென்பதற்குத் தச்சனுற்செய்த சிறுமாவையமெனறும், இன்னானென்பதற்குக் கண்ணாறகொதத்தை காலானமுடவனென்று முதாரணங்காட்டினாரா லுரையாசிரியரெனின் அற்றன்று தச்சன்செய்த சிறுமாவையமென்பது வினைமுதல்கருவி யனைமுதற்றென்புழி யடங்குதலா னீண்டுப்பாறபடுக்க வேண்டாமையானும், சினைவிகாரத்தை முதன்மேலேற்றிக்கூறும்பொருண்மை யின்னானெனபதனும் பெறப்படாமையானு மதுபோலியுரையெனக. ஒடுவுமானு மிரண்டுவேற்றுமையாகற்பாலவெனின் அற்றனறு வேற்றுமைமயக்கமாவ தொருவேற்றுமைய தொருபொருட்கணுகச் சிலபொருட்கணுக வேனைவேறறுமையுஞ்சேறலன்றே யவ்வாறன்றிச் சிறிதொழித்தெல்லாப் பொருட்கண்ணு மிரண்டுருபுஞ் சேறலானும், வடநூனுட் பொருள்வேற்றுமையலல துருபு வேற்றுமையினொருவேற்றுமையாக வோதபபடாமையானு மீண்டெல்லாவாசிரியரு மொரு வேற்றுமையாகவே யோதினாரெனக. வடநூலொடு மாறுகொள்ளாமைக்கூற லாசிரியர்க்கு மேற்கோளாயின் விளிவேற்றுமையை யெழுவாய்வேற்றுமைக்க ணடக்கற்பாலராவரவ்வாறடக்கலிலரெனின் அற்றன்று விளிவேற்றுமையை யெழுவாய்வேற்றுமைக்க ணடக்கலாணடெல்லார்க்கு மொப்பமுடிந்ததன்று. வழியன்முறைய தெதிர்முகவேற்றுமை வேறெனவிளம்பான்பெயரதுவிகாரமென் றோதியபுலவனுமுளனொருவனகயா னிந்திரனெட்டாம்வேற்றுமையென்றுளனென்பதாகவி னைந்திர நூலார் விளிவேறறுமையை யெட்டாம்வேற்றுமையாக நேர்ந்தாரென்பதுபெறப்படும். ஆசிரியரவர்மதம்பற்றிக் கூறினாராகலினதனொடுமாறுகொள்ளாதெனபது. இக்கருத்து விளககியவன்றே பாயிரத்துளைந்திரநிறைந்த தொல்காப்பியனெனக் கூறிற்றெனக. அன்னபிறவுமென்றதனாற் கண்ணாற்கொத்தை - தூங்குகையானோங்குநடைய - மதியொடொக்குமுகம் - நூலொடுகழுதையாரஞ்சுமந்தது - என்பனபோல்வனகொள்க. (௭௪)

௭௫. நான்காகுவதே, குவ்வெனப்பெயரிய வேற்றுமைக்கிளவி, யெப்பொருளாயினுங் கொள்ளுமதுவே.

மேல் கு எனப்பெயர்கொடுத் தோதப்பட்ட வேற்றுமைக்கிளவி நான்காவதாம்; அதுயாதானு மொருபொருளாயினு மதனையேற்றுநிற்கும். எ-று. அந்தணர்க்காவைக்கொடுத்தான் - எனவரும். மாணாக்கற்கு நூற்பொருளுரைத்தானெனக் கொடைப்பொருளவாகிய சொல்லானன்றிப் பிறவாய்பாட்டாற் கூறப்படுவனவும், மாணாக்கற்கறிவுகொடுத்தானெனக் கொடுப்பான்பொருளாய்க்கொள்வான்கட்செல்லாதாண்டுத்தோன்றும்பொருளெல்லா மடங்குதற்கு எப்பொருளாயினுமென்றார். பிறபொருளுமுளவாயினுங் கொடைப்பொருள் சிறந்தமையி னெப்பொருளாயினுங் கொள்ளுமென்றார். (கச)

எசு. அதற்குவினையுடைமையி னதற்குடம்படுதலி, னதற்குப்
படுபொருளி னதுவாகுகிளவியி, னதற்கியாப்புடைமையி
னதற்பொருட்டாதலி, னட்பிற்பகையிற் காதலிற்சிறப்பி
னென், றப்பொருட்கிளவியு மதன்பாலவென்மனார்.

அதற்குவினையுடைமை - கரும்பிற்குவேலி-என்பது, வினைஈண்டுபகாரம். அதற்குடம்படுதல் - சாத்தற்குமகளுடம்பட்டார்- என்பது, சான்றோர்கொலைக்குடம்பட்டார்-என்பதுமது. அதற்குப்படுபொருளாவது- பொதுவாகியபொருளைப்பகுக்குங்காலொருபங்கிற்குப்படும்பொருள் - அதுசாத்தற்குக்கூறுகொற்றன்-என்பது,அதுவாகுகிளவி-கடிசூத்திரத்திற்குப்பொன்-என்பது, பொன்கடிசூத்திரமாய்த்திரியுமாகலினதுவாகுகிளவியென்றார். கிளவி பொருள். அதற்கியாப்புடைமை-கைக்கியாப்புடைத்துக்கடகம்-என்பது,அதற்பொருட்டாதல்-கூழிற்குக்குற்றேவல்செய்யுமென்பது, நட்பு - அவற்குநட்டான் - அவற்குத்தமன்-என்பன, பகை - அவற்குப்பகை - அவற்குமாற்றான் - என்பன, காதல் - நட்டார்க்குக்காதலன்- புதல்வற்கன்புறும்-என்பன, சிறப்பு-வடுகரசர்க்குச்சிறந்தார்சோழியவரசர்-கற்பார்க்குச்சிறந்தனசெவி-என்பன. அப்பொருளென்றதனனபொருளை. இவ்வாடையுமந்நூலாணியன்றதென்றதுபோல] எனவேயன்னபிறவுமென்றவாறாம். அப்பொருட்கிளவியுமென்றதனாற் பிணிக்குமருந்து, நட்டார்க்குத்தோற்கும்-அவற்குத்தக்காளிவள்- உற்றார்க்குரியர்பொற்றொடிமகளிர்-என்பனபோல்வனவெல்லாங்கொள்க. (கரு)

எஎ. ஐந்தாகுவதே, இன்னெனப்பெயரியவேற்றுமைக்கிளவி,
யிதனினிற்றிதுவென்னுமதுவே.

மேல்இன்னெனப்பெயர்கொடுத்தோதப்பட்ட வேற்றுமைக்கிளவி யைந்தாவதாம்; அஃதிப்பொருளினித்தன்மைத்திப்பொருளென்னும் பொருண்மையையுணர்த்தும்.எ-று. ஐந்தாவதுநான்குபொருண்மையுடைத்துப் பொருவுமெல்லையுநீக்கமுமேதுவுமென.அவற்றுட்பொருவிருவகைப்படும்- உறழ்பொருவும் உவமப்பொருவும்என. ஏதுவுமிருவகைப்படும்-ஞாபகவேதுவுங் காரகவேதுவுமென. அவற்றுண்ஞாபகவேதுப்பொருண்மை மேலேகூறப்பட்டது. காரகவேதுப்பொருண்மையச்சமாக்கமென்பனவற்றாற்பெறப்படும். நீக்கப்பொருண்மைதீர்தல்பற்றுவிடுதலென்பனவற்றாற்பெறப்படும். ஏனையிரண்டுமிதனினி

ற்றிதுவென்பதனாற்கொள்ளப்படும். அவ்விரண்டனையுமஃதிருமுறையானுணர்த்துமாகலான்.]எல்லைப்பொருள்-கருவூரின்கிழக்கு-இதனினூங்கு-எனவரும். கிழக்கூங்கென்பனவினைக்குறிப்பல்லவேனுமிற்றென்னும் பொருள்படநிற்றலினிற்றென்றலேயாம். பொரூஉப்பொருட்குதாரணமுன்னர்ப்பெறப்படும். (கசு)

எஅ. வண்ணம்வடிவேயளவேசுவையே, தண்மைவெம்மையச்சமென்று, நன்மை*தீமைசிறுமைபெருமை,வன்மைமென்மைகடுமையென்று, முதுமையிளமைசிறத்தலிழித்தல், புதுமைபழமையாக்கமென்று, வின்மையுடைமைநாற்றந்தீர்தல், பன்மைசின்மைபற்றுவிடுதலென், றன்னபிறவுமதன்பாலவென்மனார்.

வண்ணமுதலாகப்பற்றுவிடுதலீறாகச் சொல்லப்பட்டனவு மவைபோல்வனபிறவு மைந்தாம்வேற்றுமைத்திறத்தனவாம். எ-று. வண்ணம்வெண்மைகருமைமுதலாயின. வடிவுவட்டஞ்சதுரமுதலாயின. அளவு நெடுமைகுறுமைமுதலாயின. சுவைகைப்புப்புளிப்புமுதலாயின. நாற்றம் நறுநாற்றமுந்தீநாற்றமுமுதலாயின. காக்கையிற்கரிதுகளம்பழம் - இதனின்வட்டமீது- இதனினெடிதீது-இதனிற்றீவிதீது-இதனிற்றண்ணிதீது - இதனின்வெய்தீது - இதனினன்றீது - இதனிற்றீதீது - இதனிறசிறிதீது- இதனிற்பெரிதீது-இதனின்வலிதீது-இதனின்மெலிதீது - இதனிற்கடிதீது - இதனின்முதிதீது - இதனினிளிதீது - இதனிற்சிறந்ததீது-இதனினிழிந்ததீது - இதனிற்புதிதீது-இதனிற்பழைதீது-இவனினிலனிவன்- இவனினுடையனிவன்-இதனினாறுமீது-இதனிற்பலவிவை-இதனிற்சிலவிவை,எ-ம்.அச்சமு-கள்ளரினஞ்சும்-எ-ம், ஆக்கம் - வாணிகத்தினாயினான்-எ-ம், தீர்தல்-ஊரிற்றீர்ந்தான்-எ-ம், பற்றுவிடுதல்-காமத்திற்பற்றுவிட்டான்-எ-ம்வரும். அச்சமுதலியநான்குமொழித் தொழிந்தவிருபத்துநான்குமொத்த பண்புவேறுபாடுபற்றிப்பொரூஉப்பொருள்விரித்தவாறு. அன்னபிறவுமென்றதனால் அவனினளியனிவன்- அதனிற்செய்ததீது - இகழ்ச்சியிறகெட்டான்-மகிழ்ச்சியின்மைந்துற்றான்-என்பனபோல்வனகொள்க.பலவாய்பாட்டொடுவழக்கின்கட்பயின்றுவருதலுடைமையாற் பொரூஉப்பொருளிதற்குச் சிறப்புடைத் தாகலிற்பெரும்பான்மையுமதனையேவிரித்தார். (கஎ)

எகூ. ஆறுகுவதே, அதுவெனப்பெயரியவேற்றுமைக்கிளவி,தன்னினும்பிறிதினுமிதனதிதுவெனு,மன்னகிளவிக்கிழமைத்ததுவே.

அதுவெனப்பெயர்கொடுத்தோதப்பட்டவேற்றுமைக்கிளவியாறுவதாம்; அதுஉடையதாய்நிற்குந்தன்னானும்பிறிதொன்றானுமிதனதிதுவென்பதுபட நிற்குமதனாற்கிளவியிற்றோன்றுங்கிழமையைப் பொருளாகவுடைத்து. எ-று. எ

னவேயாறுவதுகிழமைப்பொருட்டென்றும், அக்கிழமைதன்னுள்வந்ததற்கிழமையும் பிறிதானவந்தபிறிதின்கிழமையுமென விரண்டென்றுங்கூறியவாறும். தன்னென்றது தன்னொடொற்றுமையுடையபொருளை. பிறிதென்றது தன்னின் வேறாகியபொருளை. அஃதேற் றன்னினும்பிறிதினுமாகியகிழமைத் தென்னாதி தனதிதுவென்னுமன்னகிளவிக்கிழமைத்தென்றதென்னையெனின் பொருட்கிழமையும் பண்புக்கிழமையுந்தொழிற்கிழமையுமவைபோல்வனவுமெனக்கிழமை தாம்பல அவற்றுளொன்றுசுட்டா திதனதிதுவென்னுஞ்சொல்லாற்றோன்றுங் கிழமைமாத்திரஞ் சுட்டுமென்றற் கிதனதிதுவென்னு மன்னகிளவிக்கிழமைத் தென்றார். இதனவிவையென்னும் பன்மையுருபுத்தொடரு மடங்குதற்கன்ன கிளவியென்றார். ஒன்றுபலகுழீஇயதற்கிழமையும் வேறுபலகுழீஇயதற்கிழமை யுமொன்றியற்கிழமையுமுறுப்பின்கிழமையுமெய்திரிந்தாயதற்கிழமையு மென் றற்கிழமையைந்துவகைப்படும். பொருளின்கிழமையு நிலத்தின்கிழமையுங் காலத்தின்கிழமையுமெனப் பிறிதின்கிழமைமூன்றுவகைப்படும். அவற்றிற்கு தாரணமுன்னர்க்காட்டுதும். (௧௮)

௩௱. இயற்கையி னுடைமையின் முறைமையிற் கிழமையிற், செ
யற்கையின் முதுமையின் வினையி னென்று, கருவியிற் றுணை
யிற் கலத்தின் முதலின், ஒருவழி யுறுப்பிற் குழுவி னென்று,
தெரிந்துமொழிச் செய்தியி னிலையின் வாழ்ச்சியிற், றிரிந்
துவேறுபடூஉம் பிறவு மன்ன, கூறிய மருங்கிற் றோன்றுங் கி
ளவி, யாறன் பால வென்மனார் புலவர்.

இயற்கைமுதலாக வாழ்ச்சியீறாகச்சொல்லப்பட்டனவும் திரிந்து வேறுபடூஉ மன்னபிறவுமாகிய மேற்கூறப்பட்ட கிழமைப்பொருட்கட்டோன்றுஞ் சொல்லெல்லா மாறாம்வேற்றுமைத் திறத்தனவென்று சொல்லுவர்புலவர். எ - று. திரிந்துவேறுபடூஉமன்னபிறவுமென்றோனாற் றிரிந்துவேறுபடுதலன்ன பிறவுமென்றதனாற் றழுவப்படுவனவற்று ளொருசாரனவற்றிற்கே கொள்க. எள்ளதுகுப்பை - படையதுகுழாம் என்பனகுழூஉக்கிழமை. அவைமுறையா னே யொன்றுபலகுழீஇயதும் வேறுபலகுழீஇயதுமாம். சாத்தனதியற்கை நிலத்ததகலம் - என்பன இயற்கைக்கிழமை. சாத்தனதுநிலைமை - சாத்தனதில்லாமை என்பனநிலைக்கிழமை. இவையொன்றியற்கிழமை. யானையதுகோடு - புலியதுகிர் - என்பனவுறுப்பின்கிழமை. உறுப்பாவதுபொருளினேகதேசமென்பது தறிவித்தற் கொருவழியுறுப்பென்றார். சாத்தனதுசெயற்கை - சாத்தனது கற்றறிவு - என்பன செயற்கைக்கிழமை. அரசனது முதுமை - அரசனது முதிர்வு - என்பன முதுமைக்கிழமை. முதுமையென்பது பிறிதோர் காரணம்பற்றாது காலம்பற்றியொருதலையாக வப்பொருட்கட் டோன்றும்பருவமாகலிற் செயற்கையுளடக்காது வேறுகூறினார். சாத்தனதுதொழில் - சாத்தனது செலவு - என்பனவினைக்கிழமை. இவைமெய்திரிந்தாயதற்கிழமை. சாத்தனதுடைமை சாத்தனதுதோட்டம் - என்பனவுடைமைக்கிழமை. மறியதுதாய் - மறியதுதந்தை - என்பனமுறைமைக்கிழமை. இசையதுகருவி - வனைகலத்தது திகிரி - என்ப

னகருவிக்கிழமை. அவனதுதுணை-அவனதிணங்கு-என்பனதுணைக்கிழமை. நிலத்ததொற்றிக்கலம்- சாத்தனதுவிலைத்தீட்டு-என்பனகலக்கிழமை. ஒற்றியது முதல்-ஒற்றியதுபொருள்-என்பனமுதற்கிழமை. கபிலரதுபாட்டு-பாணரதுபாட்டியல்-என்பனசெய்யுட்கிழமை. தெரிந்துமொழியாற்செயயப்படுதலிற்றெரிந்துமொழிச்செய்தியாயின. இவைபொருட்பிறிதின்கிழமை. முருகனதுகுறிஞ்சிநிலம்-வெள்ளியதாட்சி-என்பனகிழமைக்கிழமை. காட்டதியானை-யானையதுகாடு- என்பனவாழ்ச்சிக்கிழமை. அவற்றுண்முருகனது குறிஞ்சிநிலம்- யானையதுகாடு-என்பனநிலப்பிறிதினகிழமை. காட்டதியானை- என்பது பொருட்பிறிதின்கிழமை. ஏனையதுகாலப்பிறிதின்கிழமை. திரிந்துவேறுபடூஉமன்னபிறவுமென்றதனால்-எட்சாந்து-கோட்டுநூறு-சாத்தனதெ. ப்பு-தொகையதுவிரி-பொருளதுகேடு-சொல்லதுபொருள்-என்னுந்தொடக்கத்தனகொள்க. அவற்றுள்-எட்சாந்து-கோட்டுநூறு-என்பனமுதலாயினமுழுவதூஉந்திரிதலின் வேறு கூறினர். மேற்சொல்லப்பட்டதற்கிழமை பிறிதின்கிழமையென்பனவற்றைவிரித்தவாறு. (கக)

அக. ஏழாகுவதே, கண்ணெனப்பெயரியவேற்றுமைக் கிளவி,
வினைசெய்யிடத்தினிலத்திற்காலத்தி, னனைவகைக்குறிப்
பிற்றேன்றுமதுவே.

கண்ணென்றுபெயர்கொடுத்தோதப்பட்ட வேற்றுமைச்சொலேழாவதாம்; அதுவினைசெய்யாநிற்றலாகிய விடத்தின்கண்ணு நிலமாகியவிடத்தின்கண்ணுங் காலமாகியவிடத்தின்கண்ணுமெனவம்மூவகைக்குறிப்பின்கண்ணுந்தோன்றும். எ-று. எனவேயேழாவதிடப்பொருண்மைத்தென்றவாரும். குறிப்பிற்றேன்றுமதுவென்றது அவற்றையிடமாகக்குறித்தவழியவ்வேற்றுமை தோன்றுமென்றவாறு. எனவேஇடமாகக்குறிக்கப்படாதவழியப்பெயர்க்கண் வேற்றுமைதோன்றுதென்பதாம். தன்னினமுடித்தலென்பதனானேனைவேற்றுமைச்சொற்களு மவ்வப்பொருட்கட் குறிப்பில்வழியவ்வப்பெயர்க்கண் வாராமைகொள்க. தட்டுப்புடைக்கண்வந்தான் - மாடத்தின்கணிருந்தான்-கூதிர்க்கண் வந்தான்- எனவரும். (உ0)

அஉ. கண்கால்புறமகமுள்ளுழைகீழ்மேல், பின்சாரயல்புடை
தேவகையெனுஅ,முன்னிடைகடைதலைவலமிடமெனுஅ,
வன்னபிறவுமதன்பாலவென்மனுர்.

கண்முதலாக விடமீருகச்சொல்லப்பட்ட பத்தொன்பதுபொருளுமவை போல்வனபிறவுமேழாவதன்றிறத்தன. எ- று. கண்ணென்னும்பொருளாவது கண்ணின்றுகூறுதலாற்றுனவனுயின். எ - ம், சண்ணகன்ஞாலம். எ-ம்- கண்ணென்னுமிடச்சொல்லானுணர்த்தப்படு மிடப்பொருண்மை. தேவகையென்பது திசைக்கூறு. கண்கால்புறமகமுள்ளென்பனமுதலாயின அவற்றது பொருள்வேற்றுமைவழக்குநோக்கி யுணர்ந்துகொள்க. கண்ணின்றுசொல்லியானை-யென்கணின்றிவைசொல்லற்பாலையல்லையென்றும், உளர்க்காற்செய்யை-ஊர்

க்கட்செய்யென்றும், ஊர்ப்புறத்து நின்ற மரத்தை ஊர்க்கண் மரமென்றும், எயிலகத்துப் புக்கானை - எயிற்கட் புக்கானென்றும், இல்லுளிருந்தானை - இற்கணிருந்தானென்றும், அரசனுழையிருந்தானை அரசன்கணிருந்தானென்றும், ஆலின்கீழ்க்கிடந்த வாளை ஆலின்கட் கிடந்ததென்றும், மரத்தின்மேலிருந்த குரங்கை - மரத்தின்கணிருந்ததென்றும், ஏற்பின் சென்றானை ஏற்கட் சென்றானென்றும் காட்டுச்சார் ஓடுவதனை காட்டின்கண் ஓடுமென்றும், உறையூர்க்கயனின்ற சிராப்பள்ளிக்குன்றை உறையூர்க்கட் குன்றென்றும், எயிற்புடை நின்றானை - எயிற்கணின்றானென்றும், வடபால் வேங்கடந் தென்பாற் குமரியென்பனவற்றை - வடக்கண் வேங்கடந் தெற்கட் குமரியென்றும், புலிமுன் பட்டானை - புலிக்கட் பட்டானென்றும், நூலினிடையுங் கடையுந் தலையு நின்ற மங்கலத்தை நூற்கண் மங்கலமென்றும், கைவலத்துள்ளதனை கைக்கணுள்ளதென்றும், தன்னிடத்து நிகழ்வதனை - தன்கணிகழ்வதென்றும் அவ்விடப்பொருள் பற்றி ஏழாம்வேற்றுமை வந்தவாறு கண்டுகொள்க. ஏனையவென்பதெண்ணிடைச்சொல். கண் முதலாயினவெல்லா முருபென்றா ராசிரியரொன்னின் உருபாயினேழாவதற்குக் கண்ணென்ப துருபாதன் மேல் பெறப்பட்டமையாற் பெயர்த்துங் கண் காலென்றல் கூறியது கூறிற்றாகலானும் - ஊர்ப்புறத்திருந்தான், ஊரகத்திருந்தான், கைவலத்துள்ளது கொடுக்குமென்ப புறமகம் வலமென்பனவற்றுவழி யத்துச்சாரியை கொடுத்துதாரணங் காட்டினமையானு மவ்வாக்கத்த கருத்தன்றெனக். உருபல்ல வேலென்னுமை யென்முன்னென நிலைமொழி யுருபிற்கோதிய செய்கை பெற்றவாறென்னையெனின் அசுறப்பொருட்டாகலினெனவுந் தம்முடைய தண்ணளியுந் தாமுமென வுருபின்பொருள்படவரும் பிறமொழி வந்துழியு நிலைமொழிச்செய்கை பெறுதற்றலி னச்செய்கை யுருபுபுணர்ச்சிக்கேயென்னும் யாப்புறவின்றெனக். அன்னபிறவுமென்றதனாற் பொருட்ணுணர்வு - என்கண்ணன்புடையன் - மலர்க்கணாற்றம் - ஆகாயத்துக்கட் பருந்து எனவுந் தெரீட்டுக்கத்தனகொள்க. (உக)

அரு. வேற்றுமைப்பொருளை விரிக்குங்காலை, யீற்றுநின்றியலுந்
தொகைவயிற்பிரிந்து, பல்லாறாகப் பொருள்புணர்ந்தி
சைக்கு, மெல்லாச்சொல்லு முரியவென்ப.

வேற்றுமைத்தொகையை விரிக்குமிடத்து வேற்றுமையேயன்றி யன்மொழித்தொகையை விரிப்புழிப் பல்லாற்றா னன்மொழிப்பொருளொடு புணர்ந்து வரு மெல்லாச்சொல்லும் விரிக்கப்படும் எ - று. உருபுதொகப் பொருணிற்றலின் வேற்றுமைத்தொகையை வேற்றுமைப் பொருளென்றார். தொகையை வேற்றுமை பொருளென்றும் யாண்டு மாளப. அன்மொழித்தொகை பண்புத்தொகைமுதலாகிய தொகையிறுதிநின் றியறலின் ஈற்று நின்றியலுந் தொகையென்றார். தாழ்குழல் - பொற்றொடி - மட்காரணம் - என்னு மன்மொழித்தொகைகளை விரிப்புழித் தாழ்குழலையுடையாள் பொற்றொடியையணிந்தாள் மண்ணாற் காரணத்தானியன்றதென வரும். உடைமையுமணிதலுமியற்றலுமாகக் கருங்குழற்பேதை - பொற்றொடியரிவை - மட்சடம் என்னும் வேற்றுமைத்தொகை

கனை விரிப்புழியுங் கருங்குழலையுடையபேதை - பொற்றொடியையணிந்தவரி வை-மண் ஞனியன்றகுடம் எனவந்தவாறு கண்டுகொள்க. பொருள்புணர்ந்தி சைக்குமெனவே யிருதொகைக்கண்ணு மொருவாய்பாட்டானன்றிப் பொரு ள்சிதையாம லுணர்த்துதற்கேற்ற வாய்பாடெல்லாவற்றானும் வருமென்பதா ம். அவ்வாறுதன மேற்காட்டப்பட்டனவற்றுட் கண்டுகொள்க. அன்மொழித் தொகையிற் சொற்பெய்துவிரித்தல் யாண்டுப்பெற்றுமெனின் அதுவுமனுவாத முகத்தானீண்டே பெற்றுமென்க. பெறவே யிரண்டுதொகையும் விரிப்புழிவ ரும் வேறுபாடு கூறியவாறும். இதனை வேற்றுமைத்தொகையே யுவமத்தொ கையேயென்னுஞ் சூத்திரத்தின்பின் வைக்கவெனின் அதுவுமுறையாயினு மினிவருஞ்சூத்திரங்களான் வேற்றுமைத்தொகைவிரிப்பற்றிய மயக்க முணர் த்துதலா னுண்டுப்படுமுறைமை யுணாத்துத லீண்டுமியையுடைத்தென்க. உ ரையாசிரிய ரிரண்டுசூத்திரமாகவறுத் தாசிரியர் மதவிகற்பங்கூறித் தம்மத மிதுவெனபதுபோதர வொன்றுக வறுப்பாருமுளரென்றார். இரண்டாயொ ன்றுயவழிப் பிறிதுரையின்மையி னுரையாசிரியாகருத் திதுவேயாம். (உஉ)

வேற்றுமையியல் - முற்றிற்று.

மூன்றுவது

வேற்றுமைமயங்கியல்.

-:0:-

அச. கருமமல்லாச் சார்பென்கிளவிக், குரிமையுமுடைத்தே கண்ணென்வேற்றுமை.

மேற்கூறபபட்டவேற்றுமை தம்முண்மயங்குமாறுணர்த்திய வெடுத்து க்கொண்டார். அம்மயக்கமிருவகைப்படும். பொருண்மயக்கமு முருபுமயக்க முமென] பொருணமயக்கமாவது தன்பொருளிற்றீராது பிறிதொன்றன்பொ ருட்கட்சேறல். உருபுமயக்கமாவது தன்பொருளிற்றீர்ந்துசேறல். யாதனுரு பிற் கூறிற்றுயினுமென்பதனு னுருபுமயக்க முணர்த்தினாரல்லனவற்று னெல் லாம் பொருண்மயக்கமுணாத்தினார். இவ்விருவகைமயக்கமு முணர்த்துதலா னிவ்வோத்து வேற்றுமைமயங்கியலென்னும்பெயர்த்தாயிற்று. மயக்கமேயன் றி வேற்றுமைக்கோதிய விலக்கணத்திற்பிறழ்ந்து வழீஇயமைவனவும் பிறவு மியைபுடையன வீண்டுணர்த்துதலா னிக்குறி பன்மைநோக்கிச்சென்ற குறி யெனவுணர்க. (கருமமல்லா-வேற்றுமை) இரண்டாவதற்கோதப்பட்ட சார்பு பொருண்மை கருமச்சார்புங் கருமமல்லாச்சார்புமென இரண்டுவகைப்படும். அவற்றுட் கருமச்சார்பு தூணைச்சார்ந்தானெனை வொன்றனையொன்று மெய் யுறுதலாம். கருமமல்லாச்சார்பு மெய்யுறுதலின்றி யரசனைச்சார்ந்தானென வருவதாம். கருமமல்லாச்சார்புபொருண்மைக் குரித்தாய் வருதலுமுடைத் தேழாவது. எ - று. அரசர்கட்சார்ந்தானெனவரும். கருமமாவ தீண்டுமெய்

யுறுதலாயி னரசர்கட்சார்ந்தானென்புழி யுறுதலின்மையிற் சார்பாமாறென்னையெனின் தூண்பற்றுக வொருசாத்தன் சார்ந்தாற்போல வரசர்பற்றுக வச்சார்ந்தானெழுகுதலிற் சார்பாயிற்றென்பது. உம்மையெதிர்மறை. தூணின்கட்சார்ந்தானெனக் கருமச்சார்ச்சிக்க ணேழாவதுசென்றாற்படி மிழுக்கென்னையெனின் அன்னதோர்வழக்கின்மையே பிறிதில்லையென்க. இக்காலத்தவ்வாறு வழங்குபவாலெனின் கருமமல்லாச் சார்ச்சிக்கண்வரு முருபைச்சார்தலொப்புமையாற் கருமச்சார்ச்சிக்கண்ணுங்கொடுத் துலகத்தாரிடைத்தெரிவின்றிவழங்குகின்றாெனவேபடும் ஆசிரியர் கருமமல்லாச்சார்பென்கிளவியென விதந்துகூறினமையானென்பது. (க)

அரு. சினைநிலைக்கிளவிக் கையுங்கண்ணும், வினைநிலையொக்குமென்மனார்புலவர்.

சினைமேனிற்குஞ்சொல்லிற்கிரண்டாவது மேழாவதும் வினைநிலைக்கணொக்கும். எ - று. கோட்டைக்குறைத்தான் - கோட்டின்கட்குறைத்தான் எனவரும். வினைக்குறிப்பைநீக்குதற்கு வினையென்றார். வினைநிலையொக்குமென்றாேனும் புகழ்தல்பழித்தலென்னுந் தொடக்கத்தனவொழித்து மயங்குதற்கேற்கு மறுத்தல்குறைத்தன் முதலாயின வினையேகொள்ளப்படும். இரண்டாவதன்பொருட்க ணேழாவது சென்றதாயினுஞ் சிறுவரவிற்றன்றி யிரண்டாவதுபோல வேழாவதுவழக்கின்கட் பயின்றுவருதலி னொக்குமென்றார். அதுகாரணத்தாற் கருமமல்லாச்சார்ச்சிக்குஞ் சினைக்கிளவிக்கு மேழாவதுரிமையுடைத்தென வுடன்கூறாது வேறுகூறினாெனன்பது. (உ)

அசு. கன்றலுஞ்செலவு மொன்றுமார்வினையே.

கன்றற்பொருண்மேலவருஞ்சொலலுஞ் செலவுப்பொருண்மேல் வருஞ்சொல்லுமிரண்டாவதற்குமேழாவதற்கு மொருதொழில. எ - று. சூதினைக்கன்றினன் - சூதின்கட்கன்றினன் - நெறியைச்சென்றான் - நெறிக்கட்சென்றான் - எனவரும். பொருள்பற்றியோதினமையாற் சூதினையிவறினன்- சூதின்கணிவறினன்-நெறியைநடந்தான்- நெறிக்கணடந்தான்-எனவருவனவுங்கொள்க. இரண்டாவதற்கிப்பொருண்மேலேகூறப்பட்டமையாற்கன்றல் செலவென்னும்பொருட்கேழாவது முரித்தென்றேதவமையுமெனின் அங்ஙனமோதினேழாவதன்வரவுசிறுபான்மையென்பதுபடுமாகலி னுடனோதினாென்பது. சினைநிலைக்கிளவி நிலைமொழிவரையறையாகலானு மிதுவருமொழிவரையறையாகலானும் வேறுகூறினாென்பது. (ங)

அஎ. முதற்சினைக்கிளவிக் கதுவென்வேற்றுமை, முதற்கண்வரினே சினைக்கைவருமே.

முதற்சொல்லொடு தொடர்ந்த சினைச்சொல்லிற் காறும்வேற்றுமைமுதற்கண்வருமாயிற்சினைச்சொல்லின்கணிரண்டாம்வேற்றுமையேவரும். எ - று. யானையதுகோட்டைக்குறைத்தான்- எனவரும். சினைநிலைக்கிளவிக்கையுங்கண்

னுமென்றதனான் முதற்சினைக்கிளவிக்குயிரண்டுவேற்றுமையுமபருவதனைநி யமித்தவாறு. இதுவருஞ் சூத்திரத்திற்குமொக்கும். (ச)

அஅ. முதன்முனைவரிற்கண்ணென்வேற்றுமை, சினைமுன்வரு தறெள்ளிதென்ப.

அம்முதற்சினைக்கிளவிககண்முதற்சொன்மு னைகாரவேற்றுமைவரிற்சினை ச்சொன்முன் கண்ணென்றும்வேறறுமைவருதறெள்ளிது. எ - று.யானையைக் கோட்டின்கட்குறைத்தான் - எனவரும். தெள்ளிதென்றதனான் யானையைக் கோட்டைக்குறைத்தா னெனச்சிறுபான்மையைகாரவேற்றுமையும வருமெ ன்பதாம். சினைக்கிளவிக்கண மயக்கமுணர்த்துகின்றசூத்திரத்திடைக் கன்றலு ஞ்செலவுமென்னுஞ்சூத்திரம்வைத்ததென்னையெனின் - ஐயுங்கண்ணுமென்பத திகாரத்தான்வரச் சூத்திரஞ்சுருங்குமாகலிற் சினைநிலைகிளவிக்கென்னுஞ்சூ த்திரத்தின்பின்னதனைவைத்தாரென்பது. (ரு)

அகூ. முதலுஞ்சினையும்பொருள்வேறுபடாஅ, நுவலுங்காலைச் சொற்குறிப்பினவே.

முதலுஞ்சினையு முதலாயதுமுதலேயாய்ச் சினையாயதுசினையேயாய்த்த ம்முள்வேறுபொருளாகா சொல்லுங்காற்சொல்லுவா னதுசொல்லுதற்குறிப் பினான் முதலென்றுஞ்சினையென்றும் வழங்கப்படும். எ- று. சொற்குறிப்பின வென்றது முதலெனபபட்ட ததானே தன்னைப்பிறிதொன்றற் கேகதேசமாகக் குறித்தவழிச்சினையுமாஞ் சினையெனப்பட்டதுதானே தன்க ணேகதேசத்தை நோக்கிமுதலெனக்குறித்தவழிமுதலுமாமென்றவாறு. கோட்டதுநுனியைக் குறைத்தான்-கோட்டைநுனிக்கட்குறைத்தான்- கோட்டைநுனியைக்குறைத் தான் - எனமுதற்கோதபபட்ட வுருபுசினைக்கண்ணும்வநததாலென் றையுற்று ர்க்குக்கருத்துவகையாற் கோடென்பதாண்டுமுதலாய்நிற்றலின் முதற்கோதி யவுருபேமுதற்கண்வந்ததெனவையமகற்றியவாறு. (சா)

கூ0. பிண்டப்பெயரு மாயியறிரியா, பண்டியன்மருங்கின்மரீஇ யமரபே.

பிண்டத்தையுணர்த்தும்பெயரு முதற்சினைப்பெயரியல்பிற் றிரியா வவ் வாறவற்றைமுதலுஞ் சினையுமாக வழங்குதன் மேற்றொட்டுவழங்கிவாராநின் ற கூற்றுன்மருவியமுறை - எ - று. பிண்டம் பலபொருட்டொகுதி. ஈண்டா யியறிரியாவெனமாட்டெறிநதது முதற்சினைக்கிளவிக்குப்போலப் பிண்டப்பெ யர்க்கு முதற்க ணுருவதுவரிற்சினைக்கிரண்டாவது வருதலுமுதற்கிரண்டாவ துவரிற் சினைக்கேழாவது வருதலுஞ் சிறுபான்மையிரண்டாவதுவருதலுமாம். குப்பையதுதலையைச்சிதறினான் - குப்பையைத் தலைக்கட்சிதறினான் - குப் பையைத் தலையைச்சிதறினான் - எனவரும். பிண்டமுமுதலுஞ் சினையுமேயாக லின் வேறுகூறல்வேண்டாவெனின் குப்பையென்புழித் தொக்கபலபொருள ல்லது அவற்றின்வேறு யவற்றுனியன்று தானென்றெனப் படும்பொருளின்

மையிற் றெல்லாசிரியரதனை முதலென்றுவேண்டா ரதனான்வேறுகூறினாரொன்பது. படை காடுமுதலாயினவுமன்ன. (௭)

௯௧. ஒருவினையொடுச்சொ லுயர்பின்வழித்தே.

அதனொடியைந்த வொருவினைக்கிளவியென மூன்றுவதற்கோதிய வொருவினையொடுச்சொ லுயர்பொருளை யுணர்த்தும்பெயர்வழித்தோன்றும். எ-று. அரசனொடிளையர்வந்தார் - ஆசிரியனொடுமாணாக்கர்வந்தார் - எனவரும். உயர்பொருட்பெயர்வழி யொடுக்சொடுக்கவெனவே யுயர்பில்வழிச்சாத்தனுங் கொற்றனும்வந்தானென விருபெயருமெழுவாயாய் நிற்குமென்பதாம். நாயொடுவந்தான்சாத்தனென விழிபெயர்க்கண்ணு மொருவினையொடுச்சொல் வந்ததாலெனின் யாதானுமோராற்ற னதற்குயர்புண்டாயினல்ல தவ்வாறுகூறார். கூறுபவாயின் அஃ தொருவினையொடுச்சொலெனப்படாது; கைப்பொருளொடுவந்தானென்பதுபோல அது தனக்குண்டாகவந்தானெனப் பிறிதுபொருள்படுவதோரொடு வுருபாமென்க. இதனை வேற்றுமையோத்தின்க ணதனினியறலென்னுஞ் சூத்திரத்தின்பின்வையா தீண்டு வைத்ததென்னையெனின் வேற்றுமையது பெயருமுறையுந்தொகையும்பொதுவகையானவற்றதிலக்கணமு முணர்த்தியதல்ல தின்னவேற்றுமை யின்னபொருட்கணின்னவாறுமென்னும் விசேடவிலக்கணவதிகாரம் பட்டின்றாகலானங்குவையாது மூன்றுவதிப்பொருட்கணிவ்வாறுமென விசேடவிலக்கண மூன்றனுமைந்தனுமெனக் கூறுகின்றாராகலி னதனொடியைய வீண்டுவைத்தார் இதுவுமொருபொருட்பற்றி யோதுகின்ற விசேடவிலக்கணமாகலானென்பது. (௮)

௯௨. மூன்றனுமைந்தனுந் தோன்றக்கூறிய, வாக்கமொடுபுணர்ந்த வேதுக்கிளவி, நோக்கோரனைய வென்மனார்புலவர்.

மூன்றும்வேற்றுமைக்கண்ணு மைந்தாம்வேற்றுமைக்கண்ணும் விளங்கச் சொல்லப்பட்ட வாக்கத்தொடுகூடிய வேதுச்சொ லவ்வேதுப்பொருண்மையை நோக்குநோக்கொருதன்மைய - எ - று. வாணிகத்தானாயினான் - வாணிகத்தானாயபொருள் - எ - ம், வாணிகத்தினாயினான்-வாணிகத்தினாயபொருள்- எ- ம் வரும். வாணிகத்தான் - வாணிகத்தின்-எனவுருபொடுதொடர்ந்துநின்ற சொல்லையேதுக்கிளவியென்றார். அதன்வினைப்படுத லதனினாதலென்றும், புதுமை பழமையாக்கமென்று மூன்றுவதற்கு மைந்தாவதற்கும் ஏதுப்பொருண் மேற்கூறப்பட்டமையா னிச்சூத்திரம்வேண்டாவெனின் அற்றன்று பிரிநிலையேகாரமுதலிய விடைச்சொல்லு மொருசார்வினைச்சொல்லு முன்னோதப்பட்டனவேனு மெச்சமாதலொப்புமையா னெச்சவாராய்ச்சிக்க ணவைதம்மையே பிரிநிலைவினையே பெயரேயொழியிசை யெதிர்மறையும்மையெனவே சொல்லேயெனப் பின்னுங்கூறினாற்போல வேதுப்பொருண்மை மூன்றுவதற்கு மைந்தாவதற்கு மேற்கூறப்பட்டதாயினு மயக்கமாகலொப்புமையான் மயக்கவாராய்ச்சிக்க ணீண்டுங்கூறினாராகலிற கூறியதுகூறலென்னுங் குற்றமின்றென்பது. இஃதச்சக்கிளவியென்பதற்குமொக்கும். அஃதேன்மயக்கமாவதொரு

வேற்றுமை பிறிதொன்றன்பொருட்கட் சேறலன்றே யேதுவின்கண்வரு மூன்றுவது மைந்தாவதுந் தமபொருளேபற்றிநிற்றலின் மயங்கினவெனப்படாவெனின் நன்றுசொன்னாய் ஏதுப்பொருண்மை தனக்குரியவாற்றானவற்றிற்குத் தன்பொருளாயினவாறுபோலப் பிறிதொன்றற்குரியவாற்றாற் பிறிதொன்றன் பொருளாகலுமுடைமையி னம்முகத்தான் மயங்கினவெனவே படுமென்பது. அல்லதூஉ மொருபொருட்க,ணிரண்டுருபுசென்றதுணையான் மயககமாயிற்றெனினுமமையும். ஆக்கமொடுபுணர்ந்த வேதுக்கிளவியெனவே யாக்கமொடுபுணராது ஞாபகவேதுப் பொருண்மைக்கண்வரு மின்னுமானுமொத்த வரவினவல்லவென்பதாம. ஆண்டைநதாவது பெருவரவிற்றெனக்கொள்க. (௧)

௯௩. இரண்டன்மருங்கி னோக்கனோக்கமவ், விரண்டன்மருங்கி னேதுவுமாகும்.

நோக்கலினஞ்சலினென விரண்டாவதற்கோதிய நோக்கப்பொருண்மை நோக்கியநோக்கமு நோக்கனோக்கமுமென விரண்டுவகைப்படும். நோக்கிய நோக்கங் கண்ணானோக்குதல், நோக்கனோக்க மனத்தானொன்றனைநோக்குதல்; அந்நோககனோக்கமாகியபொருண் மூன்றாவதற்கு மைநதாவதற்குமுரிய வேதுப்பொருண்மையுமாம் - எ-று. நோக்கனோக்கத்தா னோக்கப்படும்பொருளை நோக்கனோக்கமென்றார். நோக்கனோக்க மவ்விரண்டன்மருங்கி னேதுவுமாகுமெனவே யவ்வேதுப்பொருண்மைககுரிய விரண்டுருபு மவ்வேதுப்பொருண்மையிற்றீரா திரண்டாவதன்பொருட்கண் வருமென்பதாம். ஓம்படைப்பொருட்கண வருவனவற்றிற்கு மீதொக்கும். வானோக்கி வாழுமுயிரெல்லாமன்னவன், கோனோக்கிவாழுங்குடி - என்புழிவானைநோக்கிவாழும், கோலைநோக்கிவாழுமெனவிரண்டாவது வருதலேயன்றி வானானோக்கிவாழும் - வானினோக்கிவாழும் - கோலானோக்கிவாழும்- கோலினோககிவாழுமென மூன்றாவதுமைந்தாவதும் வந்தவாறுகண்டுகொள்க. ஏதுவாயினவாறெனனையெனின உயிருங்குடியும் வானையுங்கோலையு நோக்குவதவற்றானாய பயம்பற்றியவறறைத் தாமின்றி யமையாமையன்றே யதனானவ்வாறு பயப்படுவனவவற்றதின்றியமையாமைக் கேதுவாகலுமுடையவென்பது. அஃதேல்வானுங் கோ... வழி நோக்கப்படுவன பிறவாவான்செல்லுமெனின் அற்றன்று ...குத்தொழிலானென்றவழிக் கண்ணேசெயப்படுபொருளாகலும் பெறப்பட்டாற்போல வானானோக்குங் கோலானோக்குமென்புழியு மவைதாமே செயப்படுபொருளாகலும் பெறப்பட்டமையால் நோக்கப்படுவன பிறவாவான்செல்லாவென்பது

௯௪. அதுவென்வேற்றுமை யுயர்திணைத்தொகைவயி, னதுவெனுருபுகெடக் குகரம்வருமே.

ஆறும்வேற்றுமைப்பொருண்மேல்வரு முயர்திணைத்தொகைக்க ணுருபு விரிப்புழியதுவென்னு முருபுகெட வதனபொருட்கணான்காமுருபுவரும். எ-று ஈண்டதுவெனுருபு கெடுதலாவ தவ்வுருபாண்டுவாராமை. நம்பிமகன் - நங்கைகணவன் என்னுந்தொகைகளைவிரிப்புழி நம்பிக்குமகன் - நங்கைக்குக்

கணவன் - எனநான்கனுருபு வந்தவாறுகண்டுகொள்க. உயர்திணைத்தொகைவயினதுவெனுருபுகெடக் குகரம் வருமென்றதனு னுருமுருபஃறிணைப்பாறே ன்றநிற்றல்பெற்றும். உயர்திணைத்தொகைவயி னுருவதனைவிலக்கி நான்காவதே சேறலினிதனதிதுவிற்றென்னுஞ் சூத்திரத்தாற் கூறப்படும்பொருளொடுடன்வையாதிதனை வேறுகூறினா. (கக)

கூடு. தடுமாறுதொழிற்பெயர்க் கிரண்டுமூன்றுங், கடிநிலையில வே பொருள்வயினான.

தனக்கேயுரித்தாய்நில்லா தொருகாலீற்றுப்பெயரொடுஞ்சென்று தடுமாறுந்தொழிலொடுதொடர்ந்த பெயர்க்கிரண்டாவது மூன்றுவதுங் கடியப்படாவவ்வேற்றுமைதொக வவற்றின்பொருணிற்குந்தொகையிடத்து. எ - று. புலிகொன் றயானை-பு-லிகொல்யானை- என்புழிப்புலியைக்கொன்றயானையெனவும், ப[illegible]வப்பட்டயானையெனவும் இரண்டாவது மூன்றுவது மயங்கியவா[illegible]கொள்க. கொன்றகொல்லென்பனவினைமுதறபொருட் குரியவாகப் புலியென்பதுசெயப்படுபொருளாயவழியல்ல திரண்டாவது வாராமையாலுமச்சொற்கள்செயப்படுபொருட்குரியவாகப் புலிவினைமுதலாயவழியல்லது மூன்றுவதுவாராமையானு மிவையொருபொருட்கண்வாரனவன்மையின் மயக்கமாமாறென்னையெனின் ஒருபொருட்கண் வாராமைமயின் மயக்கமெனப்படாதாயினுந் தடுமாறுதொழிற்றொகைக்க ணிரண்டும்வந்துநிற்றலின் மயக்கப்பாற்படுமென்பது. (கஉ)

கூகூ. ஈற்றுப்பெயர்முன்னர் மெய்யறிபனுவலின், வேற்றுமை தெரிப வுணருமோரே.

தடுமாறுதொழிலொடுபுணர்ந்தபெயருளிறுதிப்பெயர்முன்னர்ப்பொருள் வேறுபாடுணர்த்துஞ் சொல்வரினச்சொல்லானப்பொருள்வேற்றுமை தெரிவநுணர்வோர். எ - று. புலிகொல்யானையோடாநின்றது, புலிகொல்யானைக் கோடுவந்தன-எனவரும். பிறமய[illegible]ம்போலாதீண்டுப்பொருள் வேறுபாடுணர்ந்தல்லதுருபுவிரிக்கலாகாமையின் மெய்யறிபனுவலின் வேற்றுமைதெரிபவென்றூர். முன்புலியைக்கொன்றயானைபின்பிறிதொன்றனுனிறந்துழியும்புலிகொல்யானைக்கோடுவந்தனவென்ப.அவ்வழிக்கொன்றது கொல்லப்பட்டதென்னும் வேறுபாடுகுறிப்பானுணரப்படுமென்பாருணருமோரென்றூர். பிறவுமன்ன. ()

கூஎ. ஓம்படைக்கிளவிக் கையுமானுந், தாம்பிரிவிலவே தொகைவருகாலை.

ஓம்படைப்பொருண்மைக் கைகாரவுருபுமானுருபுமொத்தவுரிமைய வவ்வேற்றுமைதொக்கவழி. எ-று. ஓம்படுத்தல் பாதுகாத்தல். புலிபோற்றிவாவென்புழி யோம்படைக்கிளவியிரண்டாவதற்கோதியகாப்பின்க ணடங்குதலிற்புலியைப்போற்றிவாவென ஐகாரவுருபும், புலியவன்போற்றி வருதற்கேதுவாகலுமுடைமையாற் புலியாற்போற்றிவாவென வானுருபுமொத்தவுரிமைய

வாய்வந்தவாறுகண்டுகொள்க. புலியேதுவாகவுமுடைத்தாயினிரண்டன் மருங்கினோக்கனோக்கமுமோம்படைக்கிளவியு மேதுவாகுமெனவமையுமிச்சூத்திரம்வேண்டாவெனின் அங்ஙனமோதினோம்படைப்பொருண்மைக் கைநதாமுருபுமெய்து மதனைவிலக்குதற்கையுமானுநதாம்பிரிவிலவெனவேறுகூறினார். இவைபிரிவிலவெனவேயின்னுருபுபிரிவுடைத்தாய்ப் புலியிற்போற்றிவா வெனச்சிறுபான்மைவருமென்பதாம். இரண்டுவேற்றுமைக்குமோம்படைப்பொருண்மையிச்சூத்திரத்தானெய்து விததாரொனினுமமையும். தாமென்பது செய்யுட்சுவைபடநின்றது. (௧௪)

௯௮. ஆறன்மருங்கின்வாழ்ச்சிக்கிழமைக், கேழுமாகுமுறைநிலத்தான.

ஆறும்வேற்றுமைக்கணோதியவாழ்ச்சிக்கிழமைக் குறைநிலத்தின் கணேழாவதும்வரும். எ - று. காட்டியானையென்பது காட்டதியானையெனவிரித்தலேயன்றிக்காட்டின்கண்யானையெனச் சிறுபான்மை யேழாவதுவிரிப்பினுமமையுமென்றவாறு. யானைக்காடு, நம்பியூர்-என்பனவாழ்ச்சிக்கிழமைப்பொருளவாயினுமாண்டேழாவது மயங்காதெனறற்குறைநிலததானவென்றார். எனவேயுறைநிலபபெயரபின்மொழியாயவழியதிம்மயக்கமென்பதாம். (௧௫)

௯௯. குத்தொகவரூஉங் கொடையெதிர்கிளவி, யப்பொருளாறற் குரித்துமாகும்.

குவ்வென்னுமுருபுதொகவருங்கொடையெதிர்கிளவியாகிய தொகையினதுகொடையெதிர்தலாகிய வப்பொருண்மை யாறும்வேற்றுமைக்குரித்துமாம. எ - று. நாகர்பலி-என்பது நாகர்க்குநோநதபலியெனவிரிதலேயன்றி, நாகரதுபலியென்று விரியினுமமையுமென்றவாறு. கொடையெதிர்கிளவி யென்பதற்குத்தருசொல்வருசொற்குரைத்ததுரைக்க. கொடையெதிர்தல் கொடையைவிரும்பிமேறகோடல். நாகர்க்குக்கொடுத்தலைவிரும்பி மேறகொண்டவழிததிரிபின்றியவர்க்கஃதாகலிறகிழமைப்பொருட்குரியவுருபாறகூறினுமமையுமென்றவாறு. (௧௬)

௧00. அச்சக்கிளவிக் கைந்துமிரண்டு, மெச்சமிலவே பொருள்வயினான.

அச்சப்பொருண்மைக் கைநதாம்வேற்றுமையு மிரண்டாம்வேற்றுமையுமொத்தகிழமைய வேற்றுமைதொக வவற்றின்பொருணின்றவழி - எ-று. பழியஞ்சுமென்புழிப் பழியினஞ்சும் - பழியையஞ்சுமென விரண்டுமொத்த கிழமையவாய் நின்றவாறறிக. அஃதேல் ஒருபொருட்கண்வரினன்றே மயககமாவ திவை செயப்படுபொருளு மேதுவுமாகிய பொருள்வேறுபாடுடையவாகலின் மயக்கமாமா றென்னையெனின் அற்றன்று ஈண்டேதுவாதலே யஞ்சப்படுதலாய் வேறன்றிநிறறலினொருபொருட்கண் வநதனவேயாம. அதனான் மயககமாமென்பது. (௧௭)

௧௦௧. அன்னபிறவுந் தொன்னெறிபிழையா, துருபினும்பொருளினு மெய்தடுமாறி, யிருவயினிலையும் வேற்றுமையெல்லாந், திரிபிடனிலவே தெரியுமோர்க்கே.

மேன்மயக்கங்கூறப்பட்ட வேற்றுமையேயன்றி யவைபோல்வனபிறவுந் தொன்றுதொட்டுவரும்வழக்கிற்பிழையா துருபானும்பொருளானுமொன்றனிலைக்களத் தொன்றுசென்றுபிறிதொன்றன்பொருளுந் தன்பொருளுமாகிய வீரிடத்து நிலைபெறும் வேற்றுமையெல்லாந்திரிபுடைய வல்லதெரிந்துணர்வோர்க்கு - எ - று. பொதுவகையா னிருவயினிலையுமென்றேனும் வழிபோயினா ரெல்லாங் கூறைகோட்பட்டாரொன்றவழிக் கூறைகோட்படுதல் கடவுளரை யொழித் தேனையோர்க்கே யாயினவாறுபோல வேதுப்பொருண்மைக்கண் வருமூன்றாவது மைந்தாவது மொருபொருளே பற்றிநிற்றலி னிருவயினிலையற் கேலாமையி னவற்றையொழித் தஃதேனையவற்றிற்கேயாம். என்னை? அதன் பொருளிற்றீராது பிறிதொன்றன்பொருட்கட் சேறலுடைமையா னிருவயினிலையற்கேற்றவாறறிக. அன்னபிறவாவன நோயினீங்கினான் - நோயைநீங்கினான் - எ - ம், சாத்தனைவெகுண்டான் - சாத்தனொடுவெகுண்டான் - எ - ம், முறையாற்குத்துங்குத்து - முறையிற்குத்துங்குத்து - எ - ம், கடலொடு காடொட்டாது - கடலைக் காடொட்டாது - எ-ம்- வருவனவும் பிறவுமாம். இக்காலத்துச்சிதைந்து வழங்குமயக்கமுண்மையாற் றொன்னெறிபிழையாதன வாராய்ந்துணரப்படுமென்பார் தெரியுமோர்க்கென்றார். (௧௮)

௧௦௨. உருபுதொடர்ந்தடுக்கிய வேற்றுமைக்கிளவி, யொருசொன்னடைய பொருள்சென்மருங்கே.

பலவுருபுந்தம்முட் டொடர்ந்தடுக்கிவந்த வேற்றுமைச்சொற்களெல்லா முடிக்குஞ்சொலொன்றனான்முற்றுப்பெற்றுநடக்குமவ்வொன்றனாற்பொருள் செல்லுமிடத்து. எ - று. ஈண்டுவேற்றுமைக்கிளவியென்றது வேற்றுமையுருபை யிறுதியாகவுடையசொல்லை. என்னொடுநின்னொடுஞ்சூழாது-எ - ம், அந்தணர்நூற்குமறத்திறகு மாதியாய்,நின்றதுமன்னவன்கோல்-எ-ம்- வரும். சாத்தன்றாயைக்காதலன், நாய்தேவனுயிற்று- என்புழித்தாயைத் தேவனென்பன காதலனுயிற்றென்னும் பயனிலைக்கடையா யிடைநின்றாற்போலக் கோட்டைநுனிக்கட்குறைத்தான் - தினையிற்கிளியைக்கடியும் - என்புழிநுனிக்கண் கிளியையென்பன குறைத்தான் கடியுமென்னுமுடிக்குஞ்சொல்லிற்கடையா யிடைநின்றவாகலானவையடுக்கன்மையினவையுதாரணமாகலுரையாசிரியர் கருத்தன்றென்க. குழையைச்சாத்தனது கள்ளரினெனவிவ்வாறுதொடராது வருவனவற்றை நீக்குதற் குருபுதொடர்ந்தடுக்கியவென்றும், நீதந்தசோற்றையுங் கூறையையுமுண்டுடுத்திருந்தேமென வின்னோரன்னுழியொருசொல்லாற் பொருள்செல்லாமையி னவற்றைநீக்குதற்குப் பொருள்சென்மருங்கென்றுங் கூறினார். பிறவுமன்ன. (௧௧)

௧௦௩. இறுதியுமிடையு மெல்லாவுருபு, நெறிபடுபொருள்வயி
னிலவுதல்வரையார்.

வேற்றுமைத்தொடரிறுதிக்கண்ணு மதனிடைநிலத்து மாறுருபுந் தத்தமக்கோதியபொருட்க ணிற்றலைவரையார். எ-று. கடந்தானிலத்தை - வந்தான் சாத்தனொடு-கொடுத்தான்சாத்தற்கு-வலியன்சாத்தனின் - இருந்தான்குன்றத்துக்கண்-எ-ம், நிலத்தைக்கடந்தான்- சாத்தனொடுவந்தான்-சாத்தற்குக்கொடுத்தான்-சாத்தனின்வலியன்-சாத்தனதாடை-குன்றத்துக்கணிருந்தான் - எ-ம்- வரும். நெறிபடுபொருள்வயி னிலவுதல்வரையாரெனவே அப்பொருளுணர்த்தாக்காணிலவுதல்வரையப்படுமென்பதாம். அங்ஙனம் வரையப்படுவனயாவையெனின் ஆறுவது மேழாவதும்- சாத்தனதாடை- குன்றத்துக்கட்கூகையெனவிடைநின்று தம்பொருளுணர்த்திற்றுறாற்போல ஆடைசாத்தனது கூகைகுன்றத்துக்கண் எனவிறுதிநின்றவழி யப்பொருளுணர்த்தாமையா னவ்வுருபுகளாண்டுவரையப்படும். ஆறனுருபேற்றபெய ருருபொடுகூடிப்பெயராயும் வினைக்குறிப்பாயுநிற்றலுடைமையானந்நிலைமைக்கண் ஆடைசாத்தனதென விறுதிக்கண்ணுநிற்குமென்பது.இவ்வரையறையுணர்த்துதற்கும்,மெய்யுருபுதொகாவிறுதியானவென முன்னருணர்த்தப்படும் வரையறைக்குடம்படுத்தற்கும் ஈறுபெயர்க்காகுமென் றோதப்பட்டவுருபுதம்மையே யிறுதியுமிடையுநிற்குமெனவருத்துக்கூறினானென்பது. (௨௦)

௧௦௪. பிறிதுபிறிதேற்றலு முருபுதொகவருதலும், நெறிபட
வழங்கிய வழிமருங்கென்ப.

பிறிதோருருபு பிறிதோருருபை யேற்றலு மாறுருபுந்தொக்குநிற்றலு நெறிபடவழங்கிய வழக்கைச்சார்ந்துவருதலான் வழுவாகா - எ - று. ஏற்புழிக்கோடலென்பதனாற் பிறிதோருருபேற்பதாறுவதேயாம். பிறிதேற்றலுமென்றமையாற் றனல்லாப்பிறவுருபேற்றல்கொள்க. சாத்தனதனை - சாத்தனதனொடு - சாத்தனதற்கு - சாத்தனதனின் - சாத்தனதன்கண் - எனவுருபுருபேற்றவாறும், நிலங்கடந்தான் - தாய்மூவர் - கருப்புவேலி - வரைவீழருவி- சாத்தன்கை - குன்றக்கூகை - எ - ம், கடந்தானிலம் - இருந்தான்குன்றத்து - எ - ம் - உருபுதொக்கு நின்றவாறுங்கண்டுகொள்க. இறுதியுமிடையுமென்பதனை யதிகாரத்தான்வருவித் திரண்டிடத்துங் கூட்டியுரைக்க. சாத்தனதனதெனச்சிறுபான்மை தன்னையுமேற்றலுரையிற் கோடலென்பதனாற்கொள்க. பெயரிறுதிநின்றவுருபு தன்பொருளொடு தொடராது பிறிதோருருபை யேற்றலும், தாநின்று தம்பொருளுணர்த்தற்பாலன தொக்குநிற்றலு மிலக்கணமன்மையின் வழுவமைத்தவாறு. (௨௧)

௧௦௫. ஐயுங்கண்ணு மல்லாப்பொருள்வயின், மெய்யுருபுதொ
காஅ விறுதியான.

ஐகாரவேற்றுமைப்பொருளுங் கண்ணென்வேற்றுமைப்பொருளு மல்லாத பிறபொருண்மேனின்றவுருபு தொடர்மொழியிறுதிக்கட் டொக்குநில்லா. எ - று. இறுதியுமிடையுமென்ப ததிகரிக்க வுருபுதொகவருதலுமென்றமையின் வரைவின்றி யெல்லாவுருபு மிறுதிக்கண்ணுந் தொகுமென்பது பட்டதனைவிலக்கி யிவ்விருபொருட்கண்ணும் வருவனவே யிறுதிக்கட்டொகுவன அல்லனதொகாவென வரையறுத்தவாறு. அறங்கறக்குமென விடைக்கட்டொக்குநின்ற நான்காவது கறக்குமறநென விறுதிக்கட்டொக்குநில்லாமை கண்டுகொள்க. பிறவுமன்ன. (௨௨)

௧0௬. யாதனுருபிற் கூறிற்றாயினும், பொருள்சென்மருங்கின் வேற்றுமைசாரும.

ஒருதொடர்யாதானுமோரவேற்றுமைய துருபுகொடுத்துச்சொல்லப்பட்டதாயினுமவ்வுருபுதன்பொருளா னத்தொட ரபபொருள்செல்லாதவழிப்பொருள்செல்லும்பக்கதது வேற்றுமையைச்சாரும். எ - று. பொருள்செல்லாமையாவதுருபேற்றசொல்லு முருபுநோக்கியசொல்லுந தம்முளியையாமை. அவ்வேற்றுமையைச் சார்தலாவததன்பொருட்டாதல். கிளையரிநாணற்கிழங்கு மணற்கீன்றமுளையோரன்ன முள்ளெயிற்றுத்துவர்வாயென்றவழி நான்காவதன்பொருளா னவ்வுருபேற்றசொல்லு மவ்வுருபுநோக்கியசொல்லுந் தம்முளியையாமையி னவற்றையியைவிக்கு மேழாவதன்பொருட்டாயினவாறு கண்டுகொள்க. உருபு தன்பொருளிற்றீரந்து பிறவுருபின்பொருட்டாய் நிற்குமெனஉருபுமயக்கங்கூறியவாறுமாயிற்று. அஃதேல் அரசர்கட்சார்நதானென்புழியு மிரண்டாவதன்பொருட்க ணேழாவது சென்றதென்றமையானத ●னுடித னிடை வேற்றுமையென்னையெனின் அரசர்கட்சாரந்தானென்புழி யரசனது சார்தற்கிடமாதலேசாரப்படுதலுமா யிருபொருண்மையு மொற்றுமைப்பட்டு நிற்றலிற றத்தம்பொருள்வயிற் றம்மொடுசிவணு மாகுபெயர்போல விடப்பொருண்மைக்குரிய கண்ணெனுரு பவ்விடப்பொருண்மையொடொற்றுமையுடைத்தாகிய செயப்படுபொருட்கு மாண்டுரித்தேயாம். மணற்கின்றவென்புழி நான்காவதன்பொருளொ டேழாவதன்பொருட்கென்னு மியைபின்மையி னுெப்பில்வழியாற் பிறிதுபொருள்சுட்டுமாகுபெயர்போல வப்பொருட்குரித்தன்றி வந்ததெனப்படும். அனனபிறவற்றுள்ளு மிவ்வேறுபாடு தெரிந்துணர்க. தம்பொருளிற்றீர்த விலக்கணமன்மையி னிதனையிலக்கணத்தொடுறழ்ந்து வருவனவற்றொடுவைத்தார். (௨௩)

௧0௭. எதிர்மறுத்துமொழியினுந் தத்தமரபிற், பொருணிலைதிரியா வேறறுமைசொல்லே.

விதிமுகத்தாற்கூறு தெதிர்மறுத்துக்கூறினுந தத்தமிலக்கணத்தான்வரும்பொருணிலைமைதிரியா வேற்றுமையுருபு. எ - று. மரத்தைக்குறையான - வேலானெறியான் - எனவரும. என்சொல்லியவாறோவெனின்- குறையானெ

றியானென்றவழி வினைநிகழாமையின் மரமும்வேலுஞ்செயப்படுபொருளுங் கருவியுமெனப்படாவாயினு மெதிர்மறைவினையும் விதிவினையொடொக்குமென்பது நூன்முடிபாகலா னுண்டுவந்தவுருபுஞ் செயப்படுபொருண்முதலாயினவற்றுமேல் வந்தனவெனப்படுமென வழுவமைத்தவாறு. பிறவுமன்ன. (௨௪)

௧௦௮. கு ஐ ஆனெனவரூஉமிறுதி, அ ஒடு சிவணுஞ்செய்யு
ளுள்ளே.

கு ஐ ஆனெனவரு மூன்றுருபுந்தொடரிறுதிக்கணின்றவழி அகரத்தொடுபொருந்திநிற்றலுமுடைய செய்யுளுள். எ - று. கடிநிலையின்றே யாசிரியற்க-எ - ம், காவலோனக்களிறஞ்சும்மே- களிறஞ்சுமக்காவலோன-எ-ம், புரைதீர்கேள்விப்புலவரான - எ-ம், உள்ளம்போல வுற்றுழியுதவும் புள்ளியற்கலிமாவுடைமையான - எ - ம் வரும். குகரமுமைகாரமு மீறுகெடவகரத்தொடு சிவணுதலுடைமையான், ஐ ஆன்கு எனமுறையிற்கூறுது கு ஐ எனவவற்றையியையவைத்தார். இயையவைக்கின்றவர் ஐகார முன்வைக்கவெனின் முறைஅதுவாயினுஞ்செய்யுளின்பநோக்கிக் குகரமுன்வைத்தாரெனபது. அஃதேலித்திரிபு தம்மீறுதிரிதலென விடைச்சொற்கோதிய பொதுவிலக்கணத்தாற் பெறப்படுதலினீண்டுக்கூறலவேண்டாவெனின் அப்பொதுவிலக்கணத்தானெய்துவனவுருபிற்குமெய்துமேற் பிறிதுபிறிதேற்றலும் பிறிதவணிலையலாயடங்குதலானீண்டுக்கூறல்வேண்டாவாம்; அதனானன்னபொதுவிலக்கண முருபிற்கெய்தாதெனமறுக்க. (௨௫)

௧௦௯. அ எனப்பிறத்த லஃறிணைமருங்கிற்,குவ்வுமையு மில்லெ
னமொழிப.

அஃறிணைப்பெயர்க்க ணகரத்தொடு சிவணியீற்றுதிரிதல் குவ்வுமையுமில வென வெய்தியது விலக்கியவாறு. அ எனத்திரிதலை அ எனப்பிறத்தலென்றார்

௧௧௦. இதனதிதுவிற் றென்னுங்கிளவியு, மதனைக்கொள்ளும்
பொருள்வயினானு, மதனாற்செயற்படற் கொத்தகிளவியு,
முறைக்கொண்டெழுந்த பெயர்ச்சொற்கிளவியும், பால்
வரைகிளவியும் பண்பினாக்கமுங், காலத்தினறியும் வேற்
றுமைக்கிளவியும், பற்றுவிடுகிளவியுந் தீர்ந்துமொழிக்
கிளவியு, மன்னபிறவு நான்கனுருபிற், றொன்னெறிமர
பின தோன்றலாறே.

இதனதிதுவித் தன்மைத்தென்னு மாறாவதன்பொருண்மையும், ஒன்றனையொன்றுகொள்ளுமென்னு மிரண்டாவதன்பொருண்மையும், ஒன்றனானொன்று தொழிற்படற்கொக்குமென்னுமூன்றாவதன்பொருண்மையும், முறைப்பொருண்மையைக்கொண்டுநின்ற பெயர்ச்சொல்லின தாறாம்வேற்றுமைப்பொருண்மையும், நிலத்தை வரைந்துகூறும்பொருண்மையும்- பண்பின்கணும் பொ

ருவுமாகிய வைநதாவதனபொருணமையும, காலததினக ணறியபபடுமேழா மவேறறுமைப பொருணமையும, பறறுவிடுபொருணமையும-தீாநதுமொழிப பொருணமையுமாகிய வைநதாவதனபொருணமையும, அவைபோலவன பிற நானகனுருபாற ரேனறுதறகட டொனனெறிமரபின-எ-று. யானைககுககோ டுகூரிது - எ - ம, இவடகுககொளளுமிவவணி - எ - ம, அவறகுச செயயத் தகுமககாரியம - எ - ம, ஆவிறகுககனறு - எ - ம, கருவூாககுககிழககு-எ-ம், சாததறகுநெடியன - எ - ம, காலைககுவரும - ஏ - ம, மனைவாழககைககுப பறறுவிடடான - எ - ம. ஊாககுததீாநதான - எ - ம் - அபபொருணமொலலாவற றினகணணு நானகாமுருபு வநதவாறு கணடுகொளக. உனபான மெனபாலெ னபவாகலி னிலததைப்பாலெனறுா, சிறபபேநிலனே காதலவஃியொடநாற டணபுநிலைககளமெனப எனவுவமை நிலைககளததைப பணபெனபவாகலிற பணபிறுககமெனறுா. இதுவும வேறறுமைமயககமாகலின மேறகூறபபடட வறறொடுவையா திததுணையுமபோதநது வைததெனனையெனின அதுதொ கை, விரிபபமயஙகுமதிகாரமிது, தொகையலவழி யானையதுகோடுகூரிதென னுந தொடாமொழிபபொருள சிதையாமல யானைககு கோடுகூரிதென நான காவதாணடுசசெனறு நினறதாகலா னவறறொடுவையாராயிறுொனபது. அஃ தேல ஆவினகனறெனவுங கருவூாககிழககெனவுந தொகையாயும வருதலினி பபொருடக ணானகாவதுவருத லீணடுககூறறபாறறனறெனின அஃதொககு மன, ஆயினும பிறவேறறுமைபபொருடக ணானகாவது சேறலொபபுமையா னவறறிறகு வேறுொககுததிராகுசெயயா திவறறொ டொருஙகோதினுொனப து. அனனபிறவுமெனறதனுன ஊாககடசெனறுன - ஊாககணுறறதுசெய ஏானெனனு மேழாவதனபொருடகணணும, ஊரிடசேயனெனனு ணைநதாவ தனபொருடகணணும, ஊாககுசசெனறுன, ஊாககுறறதுசெயவான, ஊாக குசசேயனென நானகாவது வருதலகொளக. பிறவுமனன. (௨௭)

௧௧௧. ஏனையுருபு மன்னமாபின, மானமிலவே சொனமுறை யான.

நானகனுருபலலாத பிறவுருபுந தொகையல்லாத தொடாமொழிககணு ணறனபொருள சிதையாமையொனறு மயஙகுதறகட குறறமிலவழஙகுமுறை மையான - எ - று. உ - ம. நூலதுகுறறஙகூறினுனெனனுந தொடாமொழிக க ணூலைககுறறஙகூறினுனெனவும, அவடகுக குறறேவலசெயயுமெனனுந தொடாமொழிகக ணவளதுகுறறேவலசெயயுமெனவும வருவனகொளக. பி றவுமனன. (௨௮)

௧௧௨. வினையேசெயவது செயபபடுபொருளே, நிலனேகாலங கருவியென்று, வின்னதறகிதுபய மாகவெனனு, மனன மரபி னிரணடொடுந்தொகைஇ, யாயெடடெனப தொ ழின்முதனிலையே.

வினையும் வினைமுதலுஞ் செயப்படுபொருளு நிலமுங் காலமுங் கருவியுமா கியவாறு மின்னதற்கிதுபயமாகவென்று சொல்லப்படுமிரண்டொடுந் தொக் குத் தொழிலதுமுதனிலையெட்டாமென்று சொல்லுவராசிரியர் - எ-று. ஈண் டேதுப்பொருண்மை கருவிக்கணடக்கப்பட்டது. தொழின்முதனிலையென்ற து தொழிலதுகாரணத்தை; காரியத்தின் முன்னிற்றலின் முதனிலையாயிற்று. காரணமெனினுங் காரகமெனினுமொக்கும். வனைந்தானென்றவழி வனைதற ஷெழிலும், வனைந்தகருத்தாவும், வனையப்பட்டகுடமும், வனைதற்கிடமாகிய நிலமும், அத்தொழினிகழுங்காலமும், அதற்குக் கருவியாகிய திகிரிமுதலாயி னவும், வனையப்பட்டகுடத்தைக்கொள்வானும், வனைந்ததனும் பயனுமாகி யவெட்டும்பற்றி யத்தொழினிகழ்ந்தவாறு கண்டுகொள்க. அஃதேல் தொழிலி ன்வேறாயது காரகமாகலின் வனைதற்றொழிலிற் கதொழிற்ன் காரகமாமா றென்னையெனின், வனைந்தானென்பது வனைதலைச்செய்தானென்னும் பொரு ட்டாகலிற் செய்தற்குவனைதல் செயப்படுபொருணீர்மைத்தாய காரகமாமெ ன்பது. அற்றாகலினன்றே கொளலோகொண்டானென்ப திரண்டாம்வேற்று மைத் தொடராயிற்றென்பது. இன்னதற் கிதுபயமாகவென்னுமிரண்டு மருகி யல்லதுவாராமைமி னன்னமரபினிரண்டொடுமெனப்பிரித்துக்கூறினார். அஃ தேற்செய்வதுமுதலாகியமுதனிலை வேற்றுமையோத்தினுட் கூறப்பட்டமை யி னிச்சூத்திரம்வேண்டாவெனின் அற்றன்று இரண்டாவதற்கோதிய பொரு ளெல்லாவற்றையுஞ் செயப்படுபொருளெனத்தொகுத் தேதுவைக்கருவிக்க ண்ணும் வினைசெய்யிடத்தைக் காலத்தின்கண்ணுமடக்கி யேழாகச்செய்தவற் றொடாண்டுப்பெறப்படாத வினையென்னுமுதனிலைகூட்டி யெட்டென்றாராக லி னிப்பாகுபாடாண்டுப் பெறப்படாமையா னிச்சூத்திரம்வேண்டுமென்பது. இதனாற் பய னிலனும் பொருளுங் காலமுங் கருவியுமெனவுஞ் செயப்படுபொ ருளைச செய்ததுபோல வெனவு மேல்வரும்வினைக்கிலக்கணங் கூறுதலும்பிற வுமாம். (உக)

௧௧௩. அவைதாம், வழங்கியன்மருங்கிற் குன்றுவகுன்றும்.

மேற்கூறப்பட்ட தொழின்முதனிலைதா மெல்லாத்தொழிற்கு மெட்டும் வருமென்னும்யாப்புறவில்லை வழக்கின்கட்சிலதொழிற்கட் குன்றத்தகுவன குன்றிவரும் - எ - று. குன்றத்தகுவனவாவன செயப்படுபொருளு மேற்பது ம்பயனுமாம். கொடியாடிற்று-வளிவழங்கிற்று- என்புழிச்செயப்படுபொருளு மேற்பதும்பயனுமாகியமுதனிலை யில்லையாயினு மொழிந்தனவற்றானுடுதலும் வழங்கலுமாகிய தொழினிகழ்ந்தவாறுகண்டுகொள்க. இதனாற் பயனெல்லாத் தொழிற்கு முதனிலையெட்டுங் குன்றாதுவருமோ சிலதொழிற்குச் சிலகுன் றிவருமோவென்னு மையநீங்குதலுஞ் செயப்படுபொருளகுன்றியவினையை யுணர்த்துஞ்சொல் லிரண்டாவதனொ டியையாதென்பது பெறுதலுமாம்.()

௧௧௪. முதலிற்கூறுஞ் சினையறிகிளவியுஞ், சினையிற்கூறு முத லறிகிளவியும், பிறந்தவழிக்கூறலும் பண்புகொள்பெய

MAHAM... U.V. SWAMINATHA IY... SANT NAGAR. MADRAS-600 090

ரு, மியன்றதுமொழிதலு மிருபெயரொட்டும், வினை
முதலுரைக்குங் கிளவியொடுதொகைஇ, யனையமரபின
வாகுபெயர்க்கிளவி.

முதற்சொல்வாய்பாட்டாற்கூறப்படுஞ் சினையறிகிளவியும், சினைச்சொல்வாய்பாட்டாற்கூறப்படு முதலறிகிளவியும்,நிலத்துப் பிறந்தபொருண்மேலந் நிலப்பெயர்கூறலும், பண்புப்பெய ரப்பண்புடையதனையுணர்த்திப் பண்புகொள்பெயராய்நின்றதூஉம், முதற்காரணப்பெயரா னக்காரணத்தானியன்ற காரியத்தைச்சொல்லுதலும், அன்மொழிப்பொருண்மேனின்ற விருபெயரொட்டும், செய்யப்பட்டபொருண்மே லதனைச்செய்தான்பெயரைச் சொல்லுஞ் சொல்லுமென வப்பெற்றிப்பட்டவிலக்கணத்தையுடைய வாகுபெயர். எ-று. கடுத்தின்றான்-தெங்குதின்றான்- எனமுதற்பெயர் சினைமேலும், இலைநட்டுவாழும் - பூநட்டுவாழும் எனச்சினைப்பெயர் முதன்மேலும், குழிப்பாடி நேரிதென நிலப்பெயரந்நிலத்துப்பிறந்த வாடைமேலும், இம்மணிநீலமெனப் பண்புப்பெய ரப்பண்புடையதன்மேலும், இக்குடம்பொன்னெனக் காரணப்பெய ரதனானியன்றகாரியத்தின்மேலும், பொற்றொடிவந்தாளென விருபெயரொட் டன்மொழிப் பொருண்மேலும், இவ்வாடைகோலிகனெனச் செய்தான்பெய ரச்செய்யப்பட்டதன்மேலும் வந்தவாறுகண்டுகொள்க. அன்மொழித்தொகை யெச்சவியலுளுணர்த்தப்படுதலி னீண்டுக்கூறல்வேண்டாவெனின் அன்மொழித்தொகை தொகையாகலுடைமையி னீண்டுக்கூறினார். இயற்கைப்பெய ராகுபெயரெனப் பெயரிரண்டாயடங்கும்வழி யொருபெயர்ப்பட்டதன்மேலும் வந்தவாறுகண்டுகொள்க. அன்மொழித்தொகை யெச்சவியலு ளுணர்த்தப்படுமதனா லவ்வாகுபெயராதலுடைமைபற்றி யீண்டுக்கூறினார். எச்சவியலுட் கூறப்பட்டவாயினும் வினையெச்சமுதலாயின வினைச்சொலாதலு மிடைச்சொலாதலுமுடைமையா னவற்றை வினையியலுள்ளு மிடைச்சொலோத்திலுள்ளுங் கூறியவாறுபோலவென்பது. தொல்காப்பியனானுங் கபிலனானுஞ் செய்யப்பட்டநூலைத் தொல்காப்பியங் கபிலமென்றல் வினைமுதலுரைக்குங் கிளவியென்றாரா லுரையாசிரியரெனின் அற்றன்று ஒருமொழியிலக்கணமீண்டுக் கூறினாராயினும் வெற்புச்சேர்ப்பென்னும்பெயரிறுதி இதனையுடையானென்னும் பொருண்மைதோன்ற அன்னென்பதோரிடைச்சொல் வந்து வெற்பன்சேர்ப்பனென நின்றாற்போலத் தொல்காப்பியன் கபிலனென்னும்பெயரிறுதி யிவனாற்செய்யப்பட்டதென்னும் பொருடோன்ற அம்மென்பதோரிடைச்சொல்வந் தன்கெடத் தொல்காப்பியம் கபிலமெனநின்றன வென்பதாசிரியர்கருத்தா மதனானவையுதாரணமாகலுரையாசிரியர்க்குக் கருத்தன்றென்க. அனையமரபினவென்ற தவ்வாறியாதானுமோ ரியைபுபற்றியொன்றன்பெய ரொன்றற்காகலென வாகுபெயரிலக்கணத்திற்குத் தோற்றுவாய் செய்தவாறு. ஒன்றன்பொருட்க ணொன்றுசேறலென்னு மொப்புமையானவற்றை யீண்டுக்கூறினார். அஃதேலாகுபெயரொழுவாய் வேற்றுமைமயக்கமாகலா னீண்டுக்கூறினாரென்றாரா லுரையாசிரியரெனின் ஆகுபெய ரேனைவேற்றுமை

யுமேற்றுநிற்றலானு மெழுவாய்வேற்றுமையாய்நின்றவழியு மதுபிறிதோர் வேற்றுமைப்பொருட்கட்சென்று மயங்காமையின் வேற்றுமைமயக்கமெனப் படாமையானு மதுபோலியுரையென்க. (ருக)

ககரு. அவைதாந், தத்தம்பொருள்வயிற் றம்மொடுசிவணலு, மொப்பில்வழியாற் பிறிதுபொருள்சுட்டலு, மப்பண்பி னவே நுவலுங்காலை, வேற்றுமைமருங்கிற் போற்றல் வேண்டும்.

மேற்கூறப்பட்டவாகுபெயர்தாந் தத்தம்பொருளினீங்காது தம்பொருளின் வேறல்லாதபொருளொடுபுணர்தலுந் தம்பொருட்கியைபில்லாத பிறிதுபொருளைச் சுட்டிநிற்றலுமென விரண்டியல்புடையவேறுபாடு போற்றியுணரப்படும் - எ - று. கடுவென்னுமுதற்பெயர் முதலோடொற்றுமையுடைய சினைமேனிற்றல் தத்தம்பொருள்வயிற் றம்மொடுசிவணலாம். குழிப்பாடியென்னுமிடப்பெய ரிடத்தின்வேறுயவாடைமேனிற்ற லொப்பில்வழியாற் பிறிதுபொருள்சுட்டலாம். அஃதேற்குழிப்பாடியுமாடையு மிடமுமிடத்துநிகழ்பொருளுமாகிய வியைபுடையவாகலினன்றே யதன்பெயரதற்காயிற்று அதனானஃதொப்பில்வழியாற் பிறிதுபொருள் சுட்டலாமாறென்னையெனின் நன்றுசொன்னாய் அவ்வியைபுடையவேனு முதலுஞ்சினையும் பண்பும் பண்புடையதுமாகலுமுதலாகிய வொற்றுமையாகிய வியல்பிலவாகலி னவைதம்முள்வேறெனவேபடும். அதனாற் குழிப்பாடியென்ப தொப்பில்வழியாற்பிறிதுபொருள் சுட்டலேயாமென்பது. ஒற்றுமையாகிய வியைபுள்வழி யதுதத்தம்பொருள்வயிற் றம்மொடுசிவணிற்றென்று மவ்வியைபின்றி யிடமுமிடத்துநிகழ்பொருளுமாகன்முதலாகிய வியைபேயாயவழி யிஃதொப்பில்வழியாற் பிறிதுபொருள் சுட்டிற்றென்றும் வேறுபடுத்துணரப்படுமென்பார் வேற்றுமைமருங்கிற் போற்றல்வேண்டுமென்றாரென்பது. அஃதேலிதனைப் பிரித்தொருசூத்திரமாக வுரைத்தாராலுரையாசிரியரெனின் அங்ஙனம் பிரிப்பிற்றம்மொடு சிவணலும் பிறிதுபொருள்சுட்டலுமாகிய விவற்றதுவேறுபாட்டின்க ணென்பதினிதுபெறப்படாமையானு மெழுத்தோத்தினுட் புள்ளியிறுதியு முயிரிறுகிளவியுமென்னுஞ் சூத்திரத் திங்ஙிகர்ப்பதுகாவலைப் பிரியாதொன்றாகவே யுரைத்தலானு மவர்க்கது கருத்தன்றென்க. (ருஉ)

ககசா. அளவுநிறையுமவற்றொடுகொள்வழி, யுளவெனமொழிப வுணர்ந்திசினோரே.

அளவுப்பெயரு நிறைப்பெயரு மாகுபெயராகக்கொள்ளு மிடமுமுடையவென்று சொல்லுவாருணர்ந்தோர். எ-று. பதக்குத்தூணி யென்னு மளவுப்பெயர் இந்நெற்பதக்கு-இப்பயறுதூணியெனவும், தொடிதுலாமென்னு நிறைப்பெயர் இப்பொன்றொடி இவ்வெள்ளிதுலாமெனவு மளக்கப்பட்டபொருண்மேலு நிறுக்கப்பட்டபொருண்மேலு மாகுபெயராய்நின்றவாறு கண்டுகொள்க. ஒன்றிரண்டென்னுந்தொடக்கத் தெண்ணுப்பெயரு மெண்ணப்பட்

பொருண்மேனின்றவழி யாகுபெயரோயாகலி னவற்றை யொழித்ததென்னை யெனின் அவையேனைப்பொருட்கு முரியவாகலி னாகுபெயரெனப்படா வத னானவற்றை யொழித்தாரென்பது. (கஙு)

ககஎ. கிளந்தவல்ல வேறுபிறதோன்றினுங், கிளந்தவற்றியலா னுணர்ந்தனர்கொளலே.

சொல்லப்பட்டவையேயன்றிப் பிறவுமாகுபெயருளவே லவையெல்லா ஞ்சொல்லப்பட்டவற் றியல்பானுணர்ந்துகொள்க. எ-று. சொல்லப்பட்டவற் றியல்பாவது யாதானுமோரியைபுபற்றி யொன்றன்பெயரொன்றன்மேல் வழ ங்கப்படுதல். யாழ்குழலென்னுங் கருவிப்பெயர் யாழ்கேட்டான்-குழல்கேட் டானென வவற்றானாகிய வோசைமேலும் ஆகுபெயராய்நின்றன. யானைபா வையென்னு முவமைப்பெயர் யானைவந்தான்-பாவைவந்தாள்- எனவுவமிக்க ப்படும் பொருண்மேலும், ஏறுகுத்தென்னுந் தொழிற்பெயர் இஃதோரேறு- இஃதோர்குத்து - எனவத்தொழிலானும் வடுவின்மேலும் வருவனவெல்லாங் கொள்க. பிறவுமன்ன. இயைபுபற்றியொன்றன்பெய ரொன்றற்காங்கா லவ் வியைபோரிலக்கணத்ததன்றி வேறுபட்ட விலக்கணத்தையுமுடைத்து; அவ் விலக்கணமெல்லாங் கடைப்பிடித்துணர்கவென்பார் வேறுபிறதோன்றினுமெ ன்றார். (கூச)

மூன்றாவது

வேற்றுமைமயங்கியல் - முற்றிற்று.

நான்காவது

விளிமரபு.

ககஅ. விளியெனப்படுப கொள்ளும்பெயரொடு, தெளியத்தோ ன்று மியற்கையவென்ப.

நிறுத்தமுறையானே விளிவேற்றுமையுணர்த்திய வெடுத்துக்கொண்டா ர் அதனானிவ்வோத்து விளிமரபென்னும் பெயர்த்தாயிற்று. விளியென்றுசொ ல்லப்படுவன தம்மையேற்கும் பெயரொடுவிளங்கத்தோன்று மியல்பையுடை யவென்று சொல்லுவராசிரியர். எ-று. விளிவேற்றுமை யெதிர்முகமாக்குதற் பொருட்டாதல் பெயரானேவிளங்குதலிற் கூறாராயினார். ஈறுதிரிதலுமீற்றய னீடலும் பிறிதுவந்தடைதலுமியல்பாகலுமென்னும் வேறுபாடுடைமையான் விளியெனப்படுபவென்றார். கொள்ளும்பெயரொடெனவே கொள்ளாப்பெய ருமுளவென்பதாம். இயல்புவிளிக்கட்டிரியாதுநின்ற பெயரீறே விளியெனப் படுதலி னதுநீக்கற்கெனை விளங்குமென்பார் தெளியத்தோன்றுமென்றார்.

ககக. அவ்வே, யிவ்வெனவறிதற்கு மெய்பெறக்கிளப்ப.

விளிகொள்ளும்பெயருங்கொள்ளாப்பெயருமிவையென மாணாக்கனுணர்த
ற்பொருட்டவை யிவ்வோத்தினகத்துப் பொருள்படக்கிளக்கப்படும். எ-று.
இதுமொழிவாமென்னுந்தந்திரவுத்தி. அவையேயெனக் கொள்ளும்பெயரோடு
தெளியத்தோன்றுமெனப் பெயரானுணர்த்தப்படுவதாயின்ற விளியைச்சுட்
டியபெயரைச்சுட்டுதலிடருடைத்தென்னின் விளிவேற்றுமையாவது கொள்ளு
ம்பெயரின்வேறன்றி யவைதாமேயாய்நிற்றலி னப்பெயரைச்சுட்டவேவிளியு
ஞ்சுட்டப்பட்டனவேயா மதனானிடரின்றென்பது. இவ்வாறுரையாதவே
யெனச்சுட்டப்பட்டன விளிவேற்றுமையென்னின் வருஞ்சூத்திரத்தி னவைதா
மெனப்பட்டனவும் விளிவேற்றுமையேயாய் மெய்ப்பொருள்சுட்டிய விளி
கொள்பெயரென்பதனொடியையாவாமென்பது. விளிகொள்ளும்பெயருங்கொ
ள்ளாப்பெயருமுயர்திணைவிரவுப்பெய ரஃறிணைப்பெயருளுமடங்குத
லினுணர்வினோர்க்கல்லதறிய லாகாமையி னேனோருமறிதற்கவை கிளக்
கப்படுமென்பா ரியவெனவுரைத்தற்கென்றார். (உ)

கஉ0. அவைதாம், இ உ ஐ ஓ வென்னுமிறுதி, யப்பானான்கே
யுயர்திணைமருங்கின், மெய்ப்பொருள்சுட்டிய விளிகொ
ள்பெயரே

கிளக்கப்படுவனவாகிய பெயர்தாம் இ, உ, ஐ, ஓ என்னு மிறுதியையு
டைய வக்கூற்றுநான்குபெயரு முயர்திணைப்பெயருள் விளிகொள்ளும்பெய
ர். எ - று. அஃறிணைப்பெய ராகுபெயராயுயர்திணைக்கண்வந்தவழியும் விரவு
ப்பெய ருயர்திணைக்கண் வருங்காலு மவைவிளியேற்குமிடத் துயர்திணைப்பெ
யராமென்றற்குயர்திணைமருங்கின் மெய்ப்பொருள்சுட்டியவென்றார். சுட்டாத்
தொடீஇகேளாய் - எ - ம், சாத்தீ - எ - ம் அவையுயர்திணைப்பெயராய விளி
யேற்றவாறுகண்டுகொள்க. மெய்ப்பொருள்சுட்டியவிளிகொள்பெய ரப்பானா
னகெனப்பனவெழுவாயும்பயனிலையுமாயியைந்தொருசொன்னீர்மையவா யவை
தாமென்னுமெழுவாய்க்குப்பயனிலையாயின. அஃதே லுயர்திணைவிரவுப்பெய
ரைப்பொருள்பற்றி யுயர்திணைப்பெயர்க்கண்டக்கினாரெனின் முன்னர்விள
ம்பியநெறியவிளிக்குஞ்சாலை யெனல்வேண்டாவாம் பிறவெனின், நன்றுசொ
ன்னாய் விளம்பியநெறியவிளிக்குங்காலையெனப்புழி விரவுப்பெயரென்றது உ
யர்திணைவிரவுப்பெயரென வஃறிணைக்கண்வருவனவற்றை விதந்தோதுதலா னுய
ர்திணைக்கண்வருவன வுயர்திணைப்பெயருளடங்குமென்பதற்கு அச்சூத்திரமே
கரியாயிற்றென்பது.அல்லதூஉம்புள்ளியிறுயர்திணைப்பெயர்க்கண்வவிற்றுயர்
திணைவிரவுப்பெயருமடங்கி விளிகோடலெய்துதலானன்றே தானீயிரெனப்ப
விளிகொள்ளாவெனவெய்தியது விலக்குவாராயிற் றதனானுமடங்குதல் பெறு
துமென்பது. அல்லதூஉ முயர்திணையதிகாரத்து முறைப்பெயர்விளியேற்குமா
று கூறினமையானும்பெறப்படும்.விரவுப்பெயரை யுயர்திணைப்பெயரொடு மா
ட்டெறிபவாகலின் மாட்டேற்றுண்முறைப்பெயராகாரமுமேகாரமும்பெற்று
விளியேற்றலெய்தாமையி னீண்டுக்கூறினொன்றா லுரையாசிரியரெனின்
அக்கருத்தினராயி னஃறிணையென்னுஞ்சொல்லொழித்துக் கிளந்தவிறுதிவிர

வுப்பெயர் விளம்பியநெறியவிளிக்குங்காலையெனவும், இதன்பின் முறைப்பெ யர்மருங்கினையெனிறுதி யாவொடுவருதற்குரியவுமுளவேயெனவும், இதன்பி ன்னகாரளகாரவீற்றிருவகை முறைப்பெயருமடங்கப் புள்ளியிறுதியேயொடு வரும்மெயெனவும ஓதுவார்மன்ஞசிரியர். என்னை? மயங்கக்கூறலென்னுங்குற் றமுநீங்கிச் சூத்திரமுஞ்சுருங்குமாகலா னவ்வாறோதாமையானு முறைப்பெ யரோயன்றிநதாநீயிரென்பனவு மீண்டுக்கூறப்பட்டமையானு முனையாசிரியர்க் கது கருத்தன்றென்க. (ங)

சஉக. அவற்றுள், இ ஈ யாகும் ஐயாயாகும்.

மேறகூறப்பட்ட நானகிறும் விளியேறகுமாறுகூறுகின்றார். அவற்றுளொ ன்ற நநகான்கேறறிறுசொனறவாறு. நமபி - நமபீ-என இகரமீகாரமாயும், நங் கை-நஙகாய-என ஐகாரமாயாய் மீறுதிரிநது விளியேற்கும். எ - று. (ச)

கஉஉ. ஓவுமுவவு மேயொடுசிவணும்.

கோ-கோவே-எ-ம,வேநது-வேநதே-எ-ம்-ஓகாரமும் உகாரமும் ஏகாரம் பெறறு விளியேற்ரும். எ - று. (ரு)

கஉங. உகரந்தானே குற்றியலுகரம்.

மேற்கூறப்பட்ட உகரமாவது குற்றியலுகரம் - எ - று. திரு - திருவே யெனச் சிறுபான்மை முறறுகரவீறுமுளவேனு மோதியமுறைமையானே வி ளியேற்பன குற்றுகரவீறேயாகலிற குற்றியலுகரமென்றார். (சு)

கஉச. ஏனையுயிரே யுயர்திணைமருங்கிற், றம்விளிகொள்ளா வென்மனார்புலவர்.

மேறகூறப்பட்ட நான்கீறுமல்லாவுயிரீ றுயர்திணைக்கண் விளிகொள்ளா வென்று சொலலுவர் புலவர் - எ - று. கொள்வனவிவையென வரையறுத்து ணாத்தவே யேனையகொள்ளாவென்பதுணரப்படும். வரையறைக்குப்பயனது வாகலான்] அதனானிச்சூத்திரம்வேண்டாவெனின் அஃதொக்கும். வரையறை யாற் பெறப்படுவதனையே பொருபயனோக்கிககூறினார். யாதோபயனெனின் ஏனையுயிர்விளிகொள்ளாவென மேற்கூறப்பட்ட வுயிர்கூறியவாறன்றிப்பிறவா றருனும் விளிகொள்வனவுளவென்பதுணாத்துதற்கென்பது. கணி - கணியே, கரி - கரியே - எனவருவன. பிறவுமன்ன. தாமென்றதனு னேனையுயிர்தம்மிய ல்பாற் கொள்ளாவாயினுஞ்சொல்லுவான் குறிப்புவகையாற் கொள்வனவு முளவென்பதாம். மகவெனபது விளிபெருதாயினுஞ்சொல்லுவான் குறிப்பா ன்மகவேயென விளிபெற்றவாறுகண்டுகொள்க. (எ)

கஉரு. அளபெடைமிகூஉ மிகரவிறுபெய, ரியற்கையவாகுஞ் செயற்கையவென்ப.

அளபெடை தன்னியல்புமாத்திரையின்மிக்கு நான்குமைந்துமாத்திரை பெற்றுநிற்கு மிகரவீற்றுப்பெயா இ ஈ யாகாதியல்பாய் விளியேற்குஞ்செய

'ற்கையையுடையவாம் - எ - று. அளபெடைமிக்கியற்கையவாகுஞ் செயற்கை யுமென்றாது மிகூஉ மிகரவிறுபெயரென வனுவதித்தாரோ மாத்திரைமிக்கியல்பாமென்பததனாற்பெறப்படும். தோழீஇஇஇ, தோழீஇஇஇஇ, எனவரும். இ ஈ யாகாமையி னியற்கையவாகுமென்றும், மாத்திரைமிகுதலாகிய செயற்கையுடைமையாற செயற்கையவென்றுங்கூறினார். இகரவிறுபெயரென்ப திகாரததானிற்றபெயரெனவிரியும். (அ)

கஉசு. முறைப்பெயர்மருங்கி னையெனிறுதி, யாவொடுவருதற் குரியவுமுளவே.

முறைப்பெயரிடத் தையென்னுமுடி பாயாகா தாவொடுவருதற்குமுரிய வவுள - எ - று. அன்னை - அன்னா - எ - ம், அத்தை - அத்தா - எ - ம் வரும். உம்மையான அன்னாய் - அத்தாய் எனவாயாதலுமுடையவென்பதாம். உம் மைபிரிநதுநின்றது. (கூ)

கஉஎ. அண்மைசசொல்லே யியற்கையாகும்.

நான்கீற்றண்மைச்சொல்லுமியற்கையாய் விளியேற்கும். எ - று. அண் மைக்கண்விளிகொள்வதனையண்மைச்சொலென்றார். நம்பிவாழி - வேந்துவாழி-நங்கைவாழி - கோவாழி - எனவரும். (௰)

கஉஅ. னரலளவென்னு மந்நான்கென்ப, புள்ளியிறுதி விளி கொள்பெயரே.

உயிரீற்றுயர்திணைப்பெயர் விளியேற்குமாறுணர்த்தி யினிப்புள்ளியீற்று யர்திணைப்பெயர் விளியேற்குமாறுணர்த்துகின்றார். புள்ளியீற்றுயர்திணைப்பெயானரலளவென்னு மநநான்கீற்றவெனறுசொலலுவராசிரியர். எ - று. னரலளவென்னுமொற்றையீற்கவுடையசொலலை னரலளவென்றார். (கக)

கஉகூ. ஏனைப்புள்ளி யீறுவிளிகொள்ளா.

அந்நான்குமலலாதபுள்ளியீற்றுப்பெயர் விளிகொள்ளா. எ - று. ஈண்டு மவிளிகொள்ளாவென்றதனாற்பயன் கூறப்பட்ட புள்ளியீறுபிறவாற்றான்விளி கொள்வனவுளவென்பதுணர்த்துதலாம். பெண்டிர் - பெண்டிரோ - எ-ம், தம் முன் - தம்முனா - எம் வரும. பிறவுமன்ன. விளங்குமணிக் கொடும்பூணாஅ யெனவேனைப்புள்ளி சிறுபானமைவிளியேறறலுங்கொள்க. (கஉ)

கஙo. அவற்றுள், அன்னெனிறுதியாவாகும்மே.

அவற்றுளனெனென்னும்னகரவீறாவாய்விளியேற்கும். எ - று. சோழன்- சோழா - சேர்ப்பன் - சேர்ப்பா - எனவரும். (கங)

கஙக. அண்மைசசொலலிற் ககரமாகும்.

அண்மைவிளிக்கணன்றி நகரமாய்விளியேற்கும். எ-று. துறைவன் - துறைவ, ஊரன் - ஊர - எனவரும். (கச)

கஙஉ. ஆனெனிறுதி யியற்கையாகும்.

ஆனென்னும்னகரவீறியல்பாய்விளியேற்கும். எ-று. சேரமான் - மலையமானென்பனகூவுதற்கண்ணு மவ்வாறுநிற்றல்கண்டுகொள்க. (கரு)

கஙங. தொழிலிற்கூறுமானெனிறுதி, யாயாகும்மே விளிவயினான.

தொழிலானொருபொருளைச்சொல்லு மானீற்றுப்பெயர் விளிக்கணாயாம். எ-று. வந்தான் - வந்தாய், சென்றான் - சென்றாய் - எனவரும். விளியதிகாரமாகலான் விளிவயினானவெனல்வேண்டாவெனிற் சொல்லில்வழியதுய்த்துணர்வதென்றுமறுக்க. (கசு)

கஙச. பண்புகொள்பெயரு மதனோரற்றே.

ஆனீற்றுப்பண்புக்கானபெயருமவ்வீற்றுத் தொழிற்பெயர்போலவாயாய் விளியேற்கும். எ-று. கரியான்-கரியாய், செய்யான்-செய்யாய்-எனவரும்.

கஙரு. அளபெடைப்பெயரே யளபெடையியல.

ஆனீற்றளபெடைப்பெயரிகரவீற்றளபெடைப்பெயரேபோல மூன்றுமாத்திரையினீண்டியல்பாய்விளியேற்கும். எ-று. உழாஅஅன், கிழாஅஅன் - எ-ம் வரும். அளபெடை மூன்றுமாத்திரையினீண்டிசைத்தலாகிய விகாரமுண்டேனுமியானென்னிறுதியியற்கையாகுமென்புழியடங்காமையறிக. (கஎ)

கஙசு. முறைப்பெயர்க்கிளவி யேயொடுவருமே.

னகரவீற்றுமுறைப்பெய ரேகாரம்பெற்றுவிளியேற்கும். எ-று. மகன் - மகனே, மருமகன் - மருமகனே - எனவரும். (கஅ)

கஙஎ. தானென்பெயருஞ் சுட்டுமுதற்பெயரும், யானென்பெயரும் வினாவின்பெயரு, மன்றியனைத்தும் விளிகோளிலவே.

தானென்னும்பெயரு மவனிவனுவனென்னுஞ் சுட்டுமுதற்பெயரும் யானென்னும்பெயரும்யாவனென்னும்வினாப்பெயருமாகியவவ்வனைத்தும் னகரவீறேயாயினும் விளிகொள்ளா எ-று. (உ0)

கஙஅ. ஆருமருவு மீரொடுசிவணும்.

நிறுத்தமுறையானே ரகாரவீறுவிளியேற்குமாறுணர்த்துகின்றார். ரகாரவீற்றுள் ஆர், அர்- எனநின்றவிரண்டுமீராய்விளியேற்கும். எ-று. பார்ப்பார் - பார்ப்பீர், கூத்தர் - கூத்தீர்-எனவரும். (உக)

ககூகூ. தொழிற்பெயராயி னேகாரம்வருதலும், வழுக்கின்றெ ன்மனார் வயங்கியோரே.

மேற்கூறியவிரண்டீற்றுத்தொழிற்பெயர்க்குமீரொடேகாரம்வருதலுங்கு ற்றமின்று. எ - று. வந்தார் - வந்தீரோ, சென்றா - சென்றீரோ- எனவரும். அ ரீஈற்றுத்தொழிற்பெயர்வந்தவழிக்கண்டுகொள்க. ஏகாரம்வருதலும் வழுக்கி ன்றென்றதனு னேகாரம்பெறுதீரொடுசிவணலேபெரும்பானமையென்பதாம்.

கச0. பண்புகொள்பெயரு மதனோரற்றே.

அவ்விரண்டீற்றுப் பண்புகொள்பெயரு மவ்வீற்றுத தொழிறபெயர்போ ல வீரொடுசிவணியுஞ் சிறுபான்மையீரொ டேகாரமபெறறும் விளியேற்கும் எ - று. கரியார் - கரியீர், இளையர் - இளையீர் - எ - ம், கரியீரோ - இளையீரோ - எ - ம்-வரும். (உகூ)

கசக. அளபெடைப்பெயரே யளபெடையியல.

ரகாரவீற்றளபெடைப்பெயர் முறகூறிய வளபெடைபெயரேபோல மூன்றுமாத்திரையின்மிக் கியல்பாய் விளியேற்கும் - எ - று. சிறுஅஅர் - மகாஅஅர்-எனவரும். (உச)

கசஉ. சுட்டுமுதற்பெயரே முற்கிளந்தன்ன.

அவர், இவர், உவர் - எனவரும் ரகாரவீற்றுச் சுட்டுபபெயா ணகாரவீற றுச் சுட்டுப்பெயரேபோல விளிகொள்ளா - எ - று. (உரு)

கசங. நும்மின்றிரிபெயர் வினவின்பெயரொன், றம்முறையிர ண்டு மவற்றியல்பிபலும்.

நும்மின்றிரிபாகியநீயிரும் வினாவினபெயராகியயாவரு மிரண்டு மேற கூறிய சுட்டுப்பெயரேபோல விளியேலா - எ - று. நீயிரொன்பதனை நும்மென த்திரியாது நும்மென்பதனை நீயிரெனத்திரிபினு மிழுக்காதென்னுங் கருத்தா னெழுத்தோத்தி னும்மெனநிறுத்தித்திரித்தாராகலா னதுபறறிநீயிரொன்பதனை நும்மின்றிரிபெயரொன்றார். (உசு)

கசச. எஞ்சியவிரண்ட னிறுதிப்பெயரே, நின்றவீற்றய னீட் டம்வேண்டும்.

நிறுத்தமுறையானே லகாரளகார வீறறுப்பெயா விளியேற்குமாறுணா த்தியவெடுத்துக்கொண்டார். உணர்த்தாதுநின்ற லகாரளகாரமென்னு மிரண் டுபுள்ளியை யிறுதியாகவுடைய பெயரீற்றயலெழுத்து நீண்டு விளியேற்கும் - எ - று. உ - ம் - குரிசில் - குரிசீல், மக்கள் - மக்காள் - எனவரும். (உஎ)

கசரு. அயனெடிதாயி னியற்கையாகும்.

ஈறறயலெழுத்து நெட்டெழுத்தாயி னியல்பாய்விளியேற்கும் - எ - று. பெண்பால், கோமாள். எனவரும். (உஅ)

கசசு. வினையினும்பண்பினும், நினையத்தோன்று மாளெனிறு தி, யாயாகும்மே விளிவயினான.

வினையின்கண்ணும் பண்பின்கண்ணும் வருமாளீற்றுப்பெயரியல்பாய் வி ரியாகா தாயாய்விளியேற்கும் - எ - று. நின்றாள் - நின்றாய் - எ - ம், கரியா ள் - கரியாய் - எ - ம் - வரும். விளிவயினானவென்பதனை முன்னும்பின்னுங் த குவனவற்றொடுகூட்டுக. (உகூ)

கசஎ. முறைப்பெயர்க்கிளவி முறைப்பெயரியல.

ளகாரவீற்றுமுறைபபெயர் னகாரவீற்றுமுறைப்பெயரேபோல வேகார மபெற்றுவிளியேற்கும் - எ - று. மகள - மகளே, மருமகள் - மருமகளே - எனவரும். (௩0)

கசஅ. சுட்டுமுதற்பெயரும விறுவின்பெபரும், முற்கிளந்தன் ன வெண்மனார்புலவர்.

அவளிவளுவளென்னும் ளகாரவீறறுச் சுட்டுமுதறபெயரும் யாவளென் னுமவினாப்பெயரு மேற்கூறிய சுட்டுப்பெயரும் வினாப்பெயரும்போல விளி கொள்ளா - எ - று. (௩க)

கசகூ. அளபெடைப்பெயரே யளபெடையியல.

லகாரளகாரவீற் றளபெடைப்பெயர் மேற்கூறிய வளபெடைப்பெயரே போல வளபுநீண் டியல்பாய்விளியேற்கும்- எ - று. மாஅஅல், கோஒஒள்-என வரும். இவையளபெடைப்பெயராயின்மால்கோளெனவளபெடையின்றி வரு வனசெய்யுளுேக்கியளபுசருங்கிவந்தனவாம். இவையளபெடைப்பெய ரல்லு வாயி னளபெடைபபெயர் வநதவழிக்கண்டுகொள்க. (௩உ)

கரு0. கிளந்தவிறுதி யஃறிணைவிரவுப்பெயர், விளம்பியநெறிய விளிக்குங்காலை.

உயர்திணைப்பெயருமுயர்திணைவிரவுப்பெயரும் விளிகொள்ளுமாறுணர்த் தியினியஃறிணைவிரவுப்பெயர் விளிகொள்ளுமாறுணர்த்துகின்றார். கிளந்தவி றுதியாவன உயிரீறுநான்கும் புள்ளியீறுநான்குமாகும். அவற்றையிறுதியாக வுடையவஃறிணைக்கண்வரும் விரவுப்பெயர் முற்கூறியநெறியான் விளியேற் கும். எ - று. சாத்தி - சாத்தீ, பூண்டு - பூண்டே, தந்தை - தந்தாய், எ-ம், சா த்தன் - சாத்தா, கூநதல் - கூந்தால், மக்கள் - மக்காள், எ-ம்-வரும். சாத்தி, பூண்டு, தந்தை, சாத்தனவண்மைவிளியாய்வருவனவுங்கொள்க. ஓகாரவீறு மாகாரவீறுமாய்வருவனவிரவுப்பெயருளவேற்கொள்க. பிறவுமன்ன. (௩௩)

௧௫௧. புள்ளியுமுயிரு மிறுதியாகிய, வஃறிணைமருங்கி னெல்லாப்பெயரும், விளிநிலைபெறூஉங் காலந்தோன்றிற்,றெளிநிலையுடைய வேகாரம்வரலே.

புள்ளியீறுமுயிரீறுமாகிய வஃறிணைப்பெயரெல்லாம் விளிகொள்ளுங்காலந்தோன்றி னேகாரம்பெறுதலைத்தெற்றெனவுடைய. எ-று. மரம்- மரமே, அணில் - அணிலே, நரி - நரியே, புலி - புலியே - எனவரும். அஃறிணைப்பெயருள்விளிகேட்குமொருசார்விலங்கின்பெயரும் விளிகொளாதனவற்றைக்கேட்பனவாகச்சொல்லுவார்கருதியவாற்றான்விளியேற்பனவுமல்லதொழிந்தபெயரெல்லாம் விளியேலாமையின் விளிநிலைபெறூஉங்காலந்தோன்றினென்றார். அதனானேசுட்டுப்பெயர்முதலாயினவிளியேலாமையுங்கொள்க. தெளிநிலையுடைய வேகாரம்வரலேயென வேகாரம்பெற்றுவிளியேற்றலையாப்புறுப்பவே யாப்புறவின்றிச் சிறுபான்மை பிறவாற்றான்விளியேற்பனவுமுளவென்பதாம். அவை வருந்தினைவாழியென்னெஞ்சம், கருங்கால்வெண்குருகொன்றுகேண்மதி, காட்டுச்சாரோடுங்குறுமுயால், ஒண்டொடிநாராய் - என்றற்றொடக்கத்தன. (௩௪)

௧௫௨. உளவெனப்பட்டவெல்லாப்பெயரு, மளபிறந்தனவேவிளிக்குங்காலை, சேய்மையினிசைக்கும் வழக்கத்தான.

உயர்திணைக்கண்ணுமஃறிணைக்கண்ணும் விளியேற்பனவாகச் சொல்லப்பட்டவெல்லாப்பெயரும விளிக்குமிடத்துத்தமாத்திரையி னிறந்திசைத்தனவாஞ்சேய்மைக்கணொலிக்கும்வழக்கின்கண். எ-று. நம்பீஇ, சாத்தாஅ-எனவரும். அளபெடைமிகூஉமென்றமையானளபெடைப்பெயரொழித்து நின்றபெயர்கொள்க. அளபிறந்தனவென்றதுநெட்டெழுத்தளபெடையாயுமளபெடைமூன்றுமாத்திரையினிறந்துசேய்மைக்குத் தக்கவாறுநீண்டிசைக்குமென்றவாறு. சேரமான், மலையமான்- என்னுமீற்றயலளபிறந்தவழி யியல்புவிளியென னுதீற்றயனீண்டதாகக்கொள்க. அளபிறப்பனவெழுத்தாகலி னொற்றுமைநயத்தாற்பெயரளபிறந்தனவென்றார். (௩௫)

௧௫௩. அம்மவென்னு மசைச்சொனீட்ட, மம்முறைப்பெயரொடு சிவணாதாயினும், விளியொடுகொள்ப தெளியுமோரே.

அம்மவென்னுமசைச்சொல்லினதுநீட்டம் விளிகொள்ளும்பெயரொடு தோன்றா திடைச்சொல்லொடுதோன்றிற்றாயினும்விளியாகக்கொள்வர் தெளிவோர். எ-று. அம்மாசாத்தா. எனவரும். சாத்தாவென்பதேயெதிர்முகமாக்குமாயினு மம்மாவென்பதுமவ்வெதிர்முகமாக்குதலே குறித்துநிற்றலின்விளியாகக்கொள்ளப்படுமென்பார் விளியொடுகொள்பவென்றார். (௩௬)

௧௫௪. தநநு எ என வவைமுதலாகித்,தன்மைகுறித்த னரள வெனிறுதியு, மன்னபிறவும் பெயர்நிலைவரினே, யின்மைவேண்டும விளியொடுகொளலே.

தநநு என்னுமுயிர்மெய்யையும், எ என்னுமுயிரையுமுதலாக வுடையவா யொருவனது கிழமைப்பொருண்மையைக்குறித்துநின்ற னரளவென்னுமூன் றுபுள்ளியையிறுதியாகவுடையசொல்லு மவைபோல்வனபிறவுமாகியபெயர் ச்சொல்வருமாயின் விளியொடுபொருந்துதலில. எ - று. தமன், தமா, தமள், நமன், நமர், நமள், நுமன், நுமர், நுமள், எமன், எமா, எமள்-எ-ம், தம்மான், தம்மார், தம்மாள். நமமான, நமமார், நம்மாள். நும்மான, நும்மார், நும்மாள், எம்மான், எம்மார், எம்மாள்-எ-ம்வரும். அனனபிறவுமெனறதனான்மற்றை யான், மற்றையார், மற்றையாள், பிறன். பிறா. பிறள்- எனவருவனகொள்க. அஃதேலிவறறைத்தமீற்றகத்துணாத்தாதிணைக்கூறிய தென்னையெனினிவ ற்றையீற்றகத்துணா்கின் மூன்றுசூத்திரத்தானுணர்த்தல்வேண்டுதலிற் சூத் திரம்பல்குமதனானுணர்த்தாராயினர். அஃதேலுயர்திணை யதிகாரத்துப்பி ன்வைக்கவெனின் ஆண்டுவைப்பின விளமபியநெறியவிளிகருஞ்சாலையென்னு மாட்டே றினிதுபொருள்கொள்ளாதா மதனாற்பிறிதிடமின்மையினீண்டுவை த்தாரொன்பது. (கள)

நான்காவது

விளிமரபு - முற்றிற்று.

ஐந்தாவது

பெயரியல்.

கநரு. எல்லாச்சொல்லும் பொருள்குறித்தனவே.

நான்குசொல்லும்பொதுவகையானுணர்த்திபொதுவிலக்கணமாதலொ ப்புமையானும வேற்றுமை பெயரொடியைபுடைமையானும் பெயரிலக்கணத் திற்கும் பொதுவிலக்கணத்திற்கு மிடைவேற்றுமையிலக்கணமுணர்த்தி யினி ச்சிறப்புவகையா னான்குசொலலுமுணர்த்துவானெடுத்துக்கொண்டிவ்வோத் தானவற்றின்முதற்கண்ணதாகிய பெயரிலக்கணமுணாத்துகின்ற ரதனானிது பெயரியலென் றும்பெயர்த்தாயிற்று. (எல்லா - னவேயென்றது) பெயர்ச்சொ ல்லும் வினைச்சொல்லு மிடைச்சொல்லு முரிச்சொலலுமாகியவெல்லாச்சொ ல்லும்பொருள்குறித்தனவே பொருளகுறியாதுநில்லா. எ - று. ஆயிருதிணை யினிசைக்குமென்றதனானிதுபெறபபடுதலி னிச்சூத்திரம்வேண்டாவெனின்அ ற்றன்றுசொல்லிசைக்கும் பொருளாவன விவ்விரண்டுதிணையுமே பிறிதில்லை யென்பதல்லது சொல்லெல்லாம்பொருளுணர்த்துதன்மாலையவேயுணர்த்தாத னவில்லையென்னும்யாப்புற வதனாற்பெறபபடாமையினசைநிலைமுதலாயினவு ம்பொருள்குறித்துநிற்குமென வையமறுத்தற் கிச்சூத்திரம்வேண்டுமென்ப து. அசைநிலைமுதலாயினபொருளுணர்த்துமாறு மேலேகூறிப்போநதாம். மு யற்கோடு, யாமைமயிர்க்கம்பலம் என்பனபொருளுணர்த்தாவாலெனின்அவை தொடர்மொழியாகலானீண்டைக்கெய்தாவென்பது. அஃதேற்றொடர்மொழி

தாம்பொருள்குறியாதுவருமோவெனின்வாரா. அவைமெய்ப்பொருள் குறிப்பனவும் பொய்ப்பொருள்குறிப்பனவுமெனவிருவகைப்படும்; அவற்றுள்பொய்ப்பொருள் குறிப்பனவும் பொருளுணர்த்துவனவேயாம். அல்லாக்கால் இல்லோன்றலைவனுகவருந்தொடர்நிலைச்செய்யுள் பொருளுணர்த்தாமையினவை புலவராற் கொள்ளப்படாவாமென்பது. அஃதேலிச்சூத்திரமுதலாக வைந்து சூத்திரத்தாற் கூறப்பட்டன பொதுவிலக்கணமாகலா னிவற்றை யீண்டுவையாதுகிளவியாக்கத்துளவைக்கவெனின இவை பொதுவிலக்கணமேயெனினு மாண்டுக்கூறப்பட்டனவழூஉக்காத்தலும்வழூஉக்காத்தற்குபகாரமுடையனவுமன்றேயெல்லாச்சொல்லும்பொருள்குறித்தனவென வையமகற்றலுஞ்சொற்பொருளினைத்துப்பாகுபடுமென்றலுஞ் சொல்லினைத்தென்றலுமெனவழூக்காத்தலும்வழூக்காத்தற்குபகாரமுடையனவுமன்மையா னுண்டுணர்த்தாது பொருள்வேறுபாடுபற்றிச்சிறப்புவகையா னன்குசொல்லுமுணர்த்துங்கா லவையுணர்த்தியல்லதுணர்த்தலாகாமையி னவற்றையீண்டுணர்த்தினுரென்பது. பொருள்வேறுபாடுபற்றிச்சொல்லுணர்த்துமாறுமுன்னர்க்காணப்படும். (க)

கருசு. பொருண்மைதெரிதலுஞ் சொன்மைதெரிதலுஞ், சொல்லினுகு மென்மனூர்புலவர்.

தன்னின்வேருகியபொருளறியப்படுதலும் பொருளறியப்படாதச்சொற்றனையறியப்படுதலுமிரண்டுஞ்சொல்லானுமென்றுசொல்லுவர்புலவர். எ-று. சாத்தன்வந்தான, பண்டுகாடுமன், உறுகால் - என்பனவற்றுல் பொருளுணரப்பட்டவாறும், நீயென்கிளவி, செய்தெனெச்சம், தஞ்சக்கிளவி, கடியென்கிளவி-என்பனவற்றுற் பொருளுணரப்படாதச்சொற்றுமேயுணரப்பட்டவாறுங்கண்டுகொள்க. ஆயிருதிணையி னிசைக்குமன்சொல்லே. எல்லாச் சொல்லும் பொருள்குறித்தனவே - ஈறுபெயர்க்காகுமியற்கையவென்ப - என்புழிச்சொல்லென்னுஞ்சொல்லும் பெயரென்னும்பெயருமறியப்படுதற்கட்சொன்மைதெரிதலாமேனைச்சொல்லுமேனைப்பெயரு மறியப்படுதற்கட்பொருண்மைதெரிதலாமதனுனுண்டுச்சொன்மைதெரிதலும் பொருண்மைதெரிதலு மொருங்குவந்தனவெனப்படும். அல்லாக்காற்சொல்லென்னுஞ்சொற்பொருளுணர்த்துதலும் பெயரென்னும்பெயரிறுதியுருபுவருதலும் பெறப்படாவாமென்பது. மேலைச்சூத்திரத்தாற்சொற்கள் பொருளுணர்த்துமென்பதுபெறப்பட்டமையாற்றுனும் பிறிதுமெனப்பொருளிரண்டுவகைப்படுமெனவதனதுபாகுபா டுணர்த்தியவாறு. இதனுற்பயன்சொற்றன்னையுணரநின்றவழியுஞ்சொல்லேயாமெனவையமறுத்தலாம். (உ)

கருஎ. தெரிபுவேறுநிலையலுங் குறிப்பிற்றேன்றலு, மிருபாற்றென்ப பொருண்மைநிலையே.

மேற்கூறப்பட்டபொருண்மைதெரிதல்சொன்மாத்திரத்தான்விளங்கிவேறுநிற்றலுஞ்சொன்மாத்திரத்தாற்றேன்றுது சொல்லொடுகூடிய குறிப்பாற்றேன்றலுமென விரண்டுகூற்றையுடையதெல் று கூறுவராசிரியர். எ - று.

உ-ம்-அவன் - இவன் - உவன் - வந்தான் - சென்றான் - என்றவழிப் பொரு டெரிபுவேறுநின்றன. ஒருவர்வந்தாரென்றவழி யாண்பால்பெண்பாலென்ப தூஉம், சோறுண்ணாநின்றான் சுற்கறித்துநன்கட்டாயென்றவழித் தீங்கட்டா யென்பதூஉங்குறிப்பிற்றோன்றின. கடுத்தின்றான்-தெங்குதின்றான்-எனப்பிறி தின்பெயராற்பிறிதுபொருடோன்றலுங் குறிப்பிற்றோன்றலாம். தின்றானென் னுந் தொழிலொடு முதற்பொரு ளியையாமையினதனொடியையுஞ் சினைப்பொ ருடொடராற்றலாற் பெறப்பட்டமையாற் குறிப்பிற்றோன்றலாகாதெனின் அற் றன்று அவ்வியையாமை சொல்லுவான்குறிப்புணர்தற்கேதுவாவதல்லது மு தற்பெயரைச் சினைப்பொருட்டாக்கு மாற்றலின்றாகலா னதுவுங்குறிப்பிற்றோ ன்றலேயாமென்க. பிறவுமன்ன. இளைதாகமுண்மரங்கொல்கவளைகுநர் கை கொல்லுங்காழ்த்தவிடத்து என்னுந்தொடர்மொழியா னிலைபெற்றபின்களைய லுறிற் களையலுற்றாரை யவர்தாங்கொலவ ரதனாற்றீயாரையவர்நிலைபெறாக் காலத்தே களைகவென்னும்பொருள்விளங்குதலுங்குறிப்பிற்றோன்றலாம்.அவ்வ ணியிலக்கணங்கூறுவா ரின்னோ ரன்னவற்றைப் பிறிதுமொழிதலென்பதோ ரணியென்ப. (ங)

கருஅ. சொல்லெனப்படுப பெயரேவினையென், றாயிரண்டெ ன்ப வறிந்திசினோரே.

சொல்லாவனபெயர்ச்சொல்லும வினைச்சொல்லுமென விரண்டென்று சொல்லுவரறிந்தோர் - எ - று. பெயர்ச்சொற்கிலக்கணம் வேற்றுமையோத் தினுட்கூறினார். வினைச்சொற்கிலக்கணம் வினையியலுட்கூறுப. பிறசொல்லு முளவாயினு மிவற்றதுசிறப்புநோக்கிப் பெயரேவினையென் றாயிரண்டென்ப வென்றார். இவற்றுள்ளும் பொருளதுபுடைபெயர்ச்சியாகியதொழில்பற்றாதப் பொருள்பற்றிவருஞ் சிறப்புடைமையாற் பெயரைமுற்கூறினார். (ச)

கருகூ. இடைச்சொற்கிளவியு முரிச்சொற்கிளவியு, மவற்றுவ ழிமருங்கிற் றோன்றுமென்ப.

இடைச்சொல்லு முரிச்சொல்லும்பெயரையும் வினையையுஞ்சார்ந்துதோ ன்றும் - எ - று. அவற்றுவழிமருங்கிற்றோனறு மென்றாரேனும் பெயரையும் வினையையுஞ்சார்ந்து தோன்றுமிவ்விரண்டையு மவற்றொடுதலைபெய்யச் சொன்னானாமென்பது கருத்தாகக்கொள்க. சார்ந்துதோன்றுமெனவே ய வற்றது சிறப்பின்மைபெறப்படும். வழக்குப்பயிற்சிநோக்கி யிடைச்சொன் முற்கூறினார். (ரு)

கசு0. அவற்றுள், பெயரெனப்படுபவை தெரியுங்காலை, யுயர் திணைக்குரிமையு மஃறிணைக்குரிமையு, மாயிருதிணைக்கு மோரன்னவுரிமையு, மம்மூவுருபின தோன்றலாறே.

பொருள்வேறுபாடுபற்றிச் சிறப்புவகையா னான்குசொல்லுமுணர்த்து தற குபகாரமுடைய பொதுவிலக்கணமுணர்த்தி நிறுத்தமுறையானே யினிப்

பெயர்ச்சொலுணர்த்துகின்றார். மேற்கூறப்பட்ட நால்கனுட்பெயரொன்றுசொல்லப்படுவன வுயர்திணைக்குரியவாய்வருவனவு மஃறிணைக்குரியவாய் வருவனவு மிரண்டுதிணைக்குமொத்த வுரிமையவாய்வருவனவு மூன்றுவேறுபாட்டனவாந் தோன்றுநெறிக்கண் - எ - று. (௬)

௧௬௧. இருதிணைப்பிரிந்த வைம்பாற்கிளவிக்கு, முரியவையுரிய
பெயர்வயினான.

இருதிணைப்பிரிந்த வைம்பாற்கிளவியாதற்குப் பெயருளுரியனவுரியவாம் - எ - று. அவன் - பெண்மகன் - சாத்தன் - எனனகரவீ றாடூஉவிற்குமகடூஉவிற்குமஃறிணை யாண்பாற்கு முரித்தாய்வருதலானும், அவள் - மக்கள் - மகள் - எனளகரவீறு மகடூஉவிற்கும் பல்லோர்க்கு மஃறிணைப்பெண்பாற்கு முரித்தாய்வருதலானும், பெண்டாட்டி - நம்பி - எ - ம், ஆடூஉ - மகடூஉ - எ - ம் - இகரவீறு முகாரவீறு மிருபாற்குமுரியவாய்வருதலானும் வினைச்சொற்போலவின்னவீ றின்னபாற்குரித்தெனப் பெயர்ச்சொலீறுபற்றி யுணர்த்தலாகாமையினுரியவையுரியவென்றார். பிறவுமன்ன. பல்குமென்றஞ்சி யின்னபெயரின்னபாற்குரித்தெனக் கிளந்தோதாராயினார். அஃதேலிவற்றானுபாற்குரிமை யெற்றாற் பெறுதுமெனின் உரியவையென்றது வழக்கின்கட் பாலுணர்த்துதற்குரியவாய் வழங்கப்படுவனவென்றவாறன்றே யதனான்வழக்குநோக்கிக் கொள்ளப்படுமென்பது. மற்றுநஞ்சுண்டான்சாமென்ப தொருபாற்குரிய சொல்லாயினு நஞ்சுண்டாள்சாம் - நஞ்சுண்டார்சாவர் - நஞ்சுண்டதுசாம் - நஞ்சுண்டனசாம் - என ஏனைப்பாற்குமுரித்தாமச்சொல்லென விப்பொருண்மையுணர்த்துகின்ற திச்சூத்திரமென்றாரா லுரையாசிரியரெனின் நஞ்சுண்டல் சாதற்குக்காரணமென்பான் ஒருபான்மேல்வைத்து நஞ்சுண்டான் சாமென்றதல்ல தாண்டுத்தோன்று மாண்மையுமொருமையுஞ் சாதற்குக்காரணமென்னுங் கருத்தினனல்லன் அதனாற் சொல்லுவான் கருத்தொடுகூடிய பொருளாற்றலாற் சாதலைம்பாற்குமொக்குமெனச் சொல்லிலக்கணத்திற் கூறப்படாமையா னாசிரியரொருபாற்கிளவி யேனைப்பாற்கண்ணும் வருவனதாமே வழக்கெனமொழிபவென விப்பொருண்மைபொருளியலிற் கூறினாராகலி னிச்சூத்திரத்திற் கஃதுரையாத லுரையாசிரியர் கருத்தன்றென்க. அல்லதூஉம் பார்ப்பான் கள்ளுண்ணானென்றவழிக் கள்ளுண்ணாமைசாதிபற்றிச் சொல்லுவதொன்றாகலிற பார்ப்பனிக்கும் பார்ப்பாருக்குமல்லது பிறசாதியார்க்கு மஃறிணைக்குஞ்செல்லாமையி னைம்பாற்கிளவிக்கு முரியவென்றல் பொருந்தாமையானு மவர்க்கது கருத்தன்மையறிக. (௭)

௧௬௨. அவ்வழி, அவனிவனுவனென வரூஉம்பெயரு, மவளிவளுவளென வரூஉம்பெயரு, மவரிவருவரென வரூஉம்பெயரும், யான்யாநாமென வரூஉம்பெயரும், யாவன் யாவள் யாவரென்னு, மாவயின்மூன்றோ டப்பதினைந்தும், பாலறிவந்த வுயர்திணைப்பெயரே.

மூவகையவாகமேற் சொல்லப்பட்டபெயருள் அவனென்பது முதலாகயாவ ரென்ப தீறாகச்சொல்லப்பட்ட பதினைந்தும் பாலறிவந்த வுயர்திணைப் பெயர். எ-று. யான் - என்பது ஒருவனொருத்தியென்னும் பகுதிபுணர்த்தாதா யினுமத்திணையொருமைபுணர்த்தலிற பாலறிவந்தபெயராம் அல்லதூஉம்பாலறி வந்த வெனப்பன்மை பறறிக்கூறினுரொனினுமமையும். (ரு)

கசுரு. ஆண்மையடுத்த மகனென்கிளவியும், பெண்மையடுத்த மகளென்கிளவியும், பெண்மையடுத்த விகரவிறுதியு, நம்மூர்ந்துவரூஉ மிகரவைகாரமு, முறைமைசுட்டா மக னுமகளு, மாந்தர்மக்க ளென்னும்பெயரு, மாடூஉமக டூஉவாயிருபெயருஞ், சுட்டுமுதலாகியவன்னுமானு,மவை முதலாகிய பெண்டென்கிளவியு, மொப்பொடுவரூஉங் கிளவியொடு தொகைஇ, யப்பதினைந்து மவற்றோரன்ன.

இப்பெயர் பதினைந்துமேற கூறப்பட்டனபோலப்பாலறிவந்த வுயர்திணைப் பெயராம். எ-று. ஆண்மையடுத்த மகனென்கிளவி ஆண்மகனென்பது. ஒற் றுமைநயத்தானாண்மை யுணர்த்துஞ்சொல்லை யாண்மையென்றார். இதுபெண் மையடுத்த வென்புழியுமொக்கும். பெண்மையடுத்தமகளென்கிளவியும் பெண் மையடுத்த விகரவிறுதியுமாவன- பெண்மகள்- பெண்டாட்டி - என்பன. நம் மூர்ந்துவரூஉமிகரமுமைகாரமுமாவன - நம்பி - நங்கை - என்பன. நமக்கின் றொன்னும் பொருள்படவருதலி னம்மூர்ந்துவருமென்றார். அவைநம்மென்ப துமுதனிலையாக வப்பொருளுணர்த்தாவாயி னம்மூர்ந்துவருமிகரமு நம்மூர்ந் துவருமைகாரமு மெனப்பிரித்துக்கூறல் வேண்டுமென்பது. இவையுயர்சொல் முறைமைசுட்டாமகனுமகளுமாவன-முறைப்பெயரன்றி மகன்மகளெனவாடூஉ மகடூஉவென்னுந் துணையாயவருவன. மாந்தர்மக்களென்பன பன்மைப்பெயர். ஆடூஉமகடூஉவென்பனமேற்சொல்லப்பட்டன. சுட்டுமுதலாகியவன்னுமானுமா வன - அவ்வாளன் - இவ்வாளன் - உவ்வாளன் - அம்மாட்டான் - இம்மாட்டா ன்- உம்மாட்டான் - என்பன. இவற்றுளாணீ றிக்காலத்துப் பயின்றுவாரா. அவைமுதலாகிய பெண்டென்கிளவியிக்காலத்துவிழுந்தனபோலும். பெண்ட ென்கிளவியென்று பாடமோதி அவையாவன - அவ்வாட்டி-இவ்வாட்டி - உவ்வா ட்டி - என்பாருமுளர். ஒப்பொடுவரூஉங்கிளவியாவன - பொன்னன்னன் - பொன்னன்னாள்- என்னுந்தொடக்கத்தன. இவைமேலனபோலப்பயின்றுவா ராமையினவற்றொடொருங்குவையாது வேறுகூறினார். (க)

கசுச. எல்லாருமென்னும் பெயர்நிலைக்கிளவியு, மெல்லீருமெ ன்னும் பெயர்நிலைக்கிளவியும், பெண்மையடுத்த மக னென்கிளவியு, மன்னவியல வென்மனார்புலவர்.

எல்லாருமெனவு மெல்லீருமெனவும் பெண்மகனெனவும்வரு மூன்றுமேற் கூறப்பட்டனபோலப்பாலறிவந்தவுயர்திணைப்பெயராம். எ-று. புறத்துப்போய்

வினையாடும் பேதைப்பருவத்துப் பெண்மகளை மாமேருகத்தா ரிக்காலத்தும்பெ ண்மகனென்று வழங்குப. எல்லாருமெல்லீருமென் புழிப் படர்க்கைப்பன்மை யுணர்த்துமாரும்முன்னிலைப்பன்மை புணர்த்து மீருமும்மையடுத்துவருதலானும் பெண்மகனெனப்பாறிரிதலானுமிவற்றைவேறுகூறினர். (கo)

ககரு நிலப்பெயர் குடிப்பெயர் குழூவின்பெயரே, வினைப்பெ யருடைப்பெயர் பண்புகொள்பெயரே, பல்லோர்க்குறி த்த முறைநிலைப்பெயரே, பல்லோர்க்குறித்த சினைநிலை ப்பெயரே, பல்லோர்க்குறித்த திணைநிலைப்பெயரே, கூ டிவருவழக்கி னுடியற்பெயரே, யின்றிவரொன்னு மெ ண்ணியற்பெயரோ, டன்றியனைத்து மவற்றியல்பினவே.

நிலப்பெயர் முதலாகச்சொல்லப்பட்டனவு மேலனபோலப் பாலறிவந்த வுயர்திணைப்பெயராம். எ - று. நிலப்பெயர் - அருவாளன், சோழியன்-எ ன்பன. குடிப்பெயர்-மலையமான், சேரமான் - என்பன. குழூவின்பெயர் -அ வையத்தார், அத்திகோசத்தார்-என்பன. வினைப்பெயர் - வருவார், செல்வார்- என்பன. தச்சன், கொல்லன்-என்பனவுமவை. உடைப்பெயர் - அம்பர்கிழா ன், பேரூர்கிழான் - என்பன. வெற்பன், சேர்ப்பன்- என்பனவுமவை. பண்பு கொள்பெயர்-கரியான், செய்யான் - என்பன. பல்லோர்க்குறித்த முறைநிலை ப்பெயர்-தந்தையர் - தாயர் - என்பன. பல்லோர்க்குறித்தசினை நிலைப்பெயர்- பெருங்காலர், பெருந்தோளர்-என்பன. பல்லோர்க்குறித்ததிணை நிலைப்பெயர்- பார்ப்பார், அரசர், வணிகர், வேளாளர், ஆயர், வேட்டுவர்-என்பன. பல்லோ ர்க்குறித்தவென்று விசேடித்தலா னிம்மூவகைப்பெயரு மொருமைப்பெயரி ரண்டுதிணைக்கு முரியவாம். கூடிவருவழக்கினுடியற்பெயர்-பட்டிபுத்திரர், கங் கைமாத்திரர்என்பன.இவையாடல்குறித்திளையார்பகுதிப்படக்கூடியவழியல்ல து வழங்கப்படாமையிற் குழூவின்பெயரின் வேறுகுழூவின. அக்குழூவின்பெ யரொருதுறைக்கணுரிமை பூண்டபல்லோர்மே லெக்காலத்துநிகழ்வன. இன்றி வரொன்னு மெண்ணியற்பெயராவன - ஒருவர், இருவர், முப்பத்துமூவர்-என்ப ன. இன்றிவரொன்பதித் துணையரொன்னும் பொருட்டுப்போலும். எண்ணுகிய வியல்புபற்றிப்பொருளுணர்த்துதலானெண்ணியற் பெயரென்றார். ஒருநிமித் தம் பற்றிச்சேறலிற் பல்பெயரொருபெயராக வடக்கப்பட்டமையானிலப்பெ யர் முதலாயினவற்றை வேறுகூறினார். அஃதேலொப்பொடு வருஉங்கிளவியும ன்னதாகலினிவற்றெடு வைக்கற்பாற்றெனின் அற்றேனும் வழக்குப்பயிற்சி யின்மையா னவற்றெடுவைத்தாரென்க. (கக)

ககூகூ. அன்னபிறவு முயர்திணைமருங்கிற், பன்மையுமொருமை யும் பாலறிவந்த, வென்னபெயரு மத்திணையவ்வே.

மேற்சொல்லப்பட்ட பெயர்போல்வனபிறவு முயர்திணைக்கட் பன்மையு மொருமையுமாகியபாலறிவந்த வெல்லாப்பெயரு முயர்திணைப்பெயராம் எ-று.

பாலறிவந்தனவென்று தொருமைப்பாலுணர்த்துவனவு மடங்குதற்குப்பன்மயு மொருமையும்பாலறிவநதவென்றார். அன்னபிறவுமாவன - ஏனுதி, காவிதி, எட்டி, வாயிலான், ஆயிலான், வண்ணத்தான், சுண்ணத்தான், பிறன், பிறள், பிறர், மற்றையான், மற்றையாள்,மறறையார்-என்னுந்தொடக்கத்தன.

௱எ. அதுவிதுவுதுவென வரூஉம்பெயரு, மவைமுதலாகிய வாய்தப்பெயரு, மவையிவையுவையென வரூஉம்பெயரு, மவைமுதலாகிய வகரப்பெயரும்,யாதுயாயாவை யென்னும்பெயரு, மாவயின்மூன்றே டப்பதினைந்தும், பாலறிவந்த வஃறிணைப்பெயரே.

நிறுத்தமுறையானே யுயர்திணைப்பெயருணர்த்தி யினி யஃறிணைப்பெயருணர்த்துகின்றார். அதுவிதுவுதுவென வரூஉம்பெயரும் அப்பெயர்க்குமுதலாகிய சுட்டேமுதலாகவாய்தத்தொடுகூடி அஃது, இஃது, உஃது- எனவரூஉம்பெயரும், அவையிவையுவையெனவரூஉம்பெயரும், அச்சுட்டேமுதலாக - அவ், இவ், உவ் - எனவரூஉம்வகரவீற்றுப்பெயரும், யாது, யா, யாவை- என்னும்வினுப்பெயருமென விப்பதினைந்துபெயரும்பால்விளங்கவரு மஃறிணைப்பெயராம். எ - று. சுட்டுமுதலாகியவாய்தப்பெயரு மவைமுதலாகிய வகரப்பெயருமவையல்லதின்மையினிவ்வாறுகூறினார். (கஉ)

கசுஅ. பல்லபலசில வென்னும்பெயரு,முள்ளவில்ல வென்னும்பெயரும், வினைப்பெயர்க்கிளவியும் பண்புகொள்பெயரு, மினைத்தெனக்கிளக்கு மெண்ணுக்குறிப்பெயரு, மொப்பினாகிய பெயர்நிலையுளப்பட, வப்பாலொன்பது மவற்றோரன்ன.

பல்லவென்பது முதலாகக்கூறப்பட்ட வொன்பதுபெயரு மேற்கூறப்பட்ட வஃறிணைப்பெயர்போலப் பாலுணரநிற்கும். எ - று. பல்லபலசிலவுள்ளவில்லவென்னுமைந்துபெயருந்தம்மையுணர்த்திநின்றன. அல்லனபொருளுணர்த்திநின்றன. வினைப்பெயர்க்கிளவியாவன வருவது, செல்வது - என்பன. பண்புகொள்பெயர் கரியது,செய்யது-என்பன. இனைத்தெனக்கிளக்குமெண்ணுக்குறிப்பெயர் ஒன்று, பத்து, நூறு - எனவெண்பற்றியெண்ணப்படும் பொருண்மேனின்றன. ஒப்பினாகியபெயர்நிலையாவது பொன்னன்னது, பொன்னன்னவை - என்பன. முன்னையபோலப் பல்லமுதலாயினவழக்கின்கட்பயின்றுவாராமையின்வேறுகூறினார். பலசிலவென்பனபயின்றவாயினும் பல்லஇல்லஉள்ளவென்பனவற்றொடொப்புமை யுடையவாகலினிவற்றொடுகூறினார்.

கசுகூ. கள்ளொடுசிவணு மவ்வியற்பெயரே, கொள்வழியுடைய பலவறிசொற்கே.

கள்ளெனனுமீற்றெழுபொருந்து மஃறிணையியற்பெயர்கள்ளீற்றெழுபெ ருந்துதற்கட்பலவறிசொல்லாம். எ - று. அஃறிணையியற்பெயராவன-ஆ,நாய், குதிரை, கழுதை, தெங்கு, பலா, மலை, கடல் - என்றுதொடக்கத்தனவாகிய சாதிப்பெயர். ஒருமைகரும்பன்மைக்கும்பொதுவாய்நிற்றலினியற்பெயரென் றார். இவைகள்ளென்னுமீறறவாய் ஆக்கள், குதிரைகள்- எனநின்றவழிப்பன் மைவிளக்கலிறபலவறிசொல்லாயினவாறுகண்டுகொள்க. அஃறிணை யியற்பெ யரெனவேபாலறிபெயரேயன்றியஃறிணைப்பொதுப்பெயருமுளவென்பதுபெ ற்றும். பாறகுரிமைசுட்டாதஃறிணைக்குரிமைசுட்டிய அவ்வியற்பெயரென்றார்.

கஎ௦. அன்னபிறவு மஃறிணைமருங்கிற், பன்மையுமொருமையு ம் பாலறிவந்த, வென்னபெயரு மத்திணையவ்வே.

மேற்கூறப்பட்டபெயர்போல்வன பிறவுமஃறிணைக்கட்பன்மையு மொரு மையுமாகிய பால்விளங்கவந்தவெல்லாப்பெயருமத்திணைக்குரிய. எ - று.அன னபிறவுமென்றதனாற்கொள்ளபபடுவன - பிறிது, பிற, மற்றையது, மற்றை யன, பல்லவை, சில்லவை, உள்ளது, உள்ளன, இல்லது, இல்லன - என்னும் தொடக்கத்தன. (கசு)

கஎக. தெரிநிலையுடைய வஃறிணையியற்பெய, ரொருமையும்ப ன்மையும் வினையொடுவரினே.

கள்ளொடுசிவணாத வஃறிணையியற்பெய ரொருமையும் பன்மையும் விள ங் தநிலையுடைய வதற்கேற்ற வினையொடுதொடர்ந்தவழி. எ - று. ஆவந்தது, ஆவந்தன, குதிரைவந்தது, குதிரைவந்தன - என வினையாற்பால் விளங்கிய வாறுகண்டுகொள்க. இஃதஃறிணைப்பெய ரிலக்கணமாயினும் பொதுப்பெயர் வினையொடுவந்து பால்விளங்குதலொப்புமைநோக்கி ஈண்டுவைத்தாரென்ப து. அஃதேற் கள்ளொடுசிவணு மென்பதனையு மீண்டுவைக்கவெனின் இயற் பெயர்முன்ன ராரைக்கிளவிபோலக் கள்ளென்ப தஃறிணையியற்பெயர்க் கீறு யொன்றுபட்டு நிற்றலின் வினையானன்றிப்பெயர்தாமே பன்மையுணர்த்திய ...மதனலதனைப் பாலறிவந்தபெய ருணர்த்துமதிகாரத்துவைத்தார். (கஎ)

கஎ௨. இருதிணைச்சொற்கு மோரன்னவுரிமையிற், றிரிபுவேறு படூஉ மெல்லாப்பெயரு, நினையுங்காலைத் தத்தமரபின், வினையொடல்லது பாறெரியிலவே.

இருதிணைச்சொல்லாதற்கு மொத்தவுரிமையவாகலி னுயர்திணைக்கட்செ ன்றுழி யுயர்திணைப்பெயராயு மஃறிணைக்கட்சென்றுழி யஃறிணைப்பெயராயும் வேறுபடும் விரவுப்பெயரெல்லா மாராயுங்காற்றத்த மரபின்வினையொ டியை ந்தல்லது திணைவிளங்கநில்லா. எ - று. வினையொடல்லதெனவே திணைக்கே ற்றவாற்றா னீறுவேறுபடா தோரீற்றவாய்நிற்றலிற் பெயர்தாமேநின்று தத் தமரபினெனறதனாற் பொதுவினையொடுவந்து திணைவிளக்காவென்பது பெற ப்படும். இனியவைதத்தமரபின் வினையொடு பால்விளக்குமாறு-சாத்தன்வந்

தான்- சாத்தன்வந்தது- முடவன்வந்தான்-முடவன்வந்தது - எனவந்தவாறு கண்டுகொள்க. தத்தமரபின் வினையாவன-உயர்திணைக்கு மஃறிணைக்குமுரிய பதினோரீற்றுப்படர்க்கைவினை. எல்லாப்பெயருமென்பதனை ஆறுபோயினாரெல்லாருங் கூறைகோட்பட்டாரென்பது போலக்கொள்க. இருதிணைக்கும் பொதுவாகியசொல் வினையாற்பொதுமைநீங்கி யொருதிணைச்சொல்லாமென்பது கருத்தாகலின் ஈண்டுப்பாலெனப்பட்டது திணையேயாம். சிறப்புடைப்பொருளைத் தானினிதுகிளத்தலென்பதனாற் றத்தமரபின் வினையொடல்லது பாறெரிபிலவென்றாரேனுஞ் சாத்தனொருவன், சாத்தனொன்றெனத் தத்தமரபிற் பெயரொடுவந்து பால்விளக்குதலுங்கொள்க. (கஅ)

• ககூ. நிகழூஉநின்ற பலர்வரைகிளவியி, னுயர்திணையொருமை
தோன்றலுமுரித்தே, யன்னமரபின் வினைவயினான.

நிகழ்காலம்பற்றிவரும்பலர்வரைகிளவியா னுயர்திணையொருமைப்பாறோன்றுதலுமுரித் தவ்வொருமைப்பாறோன்றுதற் கேற்றவினையிடத்து. எ-று. பலர்வரைகிளவியென்றது செய்யுமென்னு முற்றுச்சொல்லை. சாத்தன்யாழெழூஉம்- சாத்திசாந்தரைக்கும் - என்றவழியாழெழூதலுஞ் சாந்தரைத்தலுமாகியவினை யஃறிணைக்கேலா தொருவற்கு மொருத்திக்குமேற்றலி னுயர்திணையொருமைப்பால் விளங்கியவாறுகண்டுகொள்க. நிகழூஉநின்றதொழிலையுணர்த்துஞ்சொல்லை வேற்றுமைநயத்தா னிகழூஉநின்ற பலர்வரைகிளவியென்றார். நிகழூஉநின்றவென்றது நிகழாநின்றவென்றவாறு. நடத்தல்,கிடத்தன்முதலாகிய பிறதொழில்பற்றிவரும் பலர்வரைகிளவியா னுயர்திணையொருமை தோன்றாமையி னன்னமரபின் வினைவயினானவென்றார். தோன்றலுமுரித்தென்னு மெதிர்மறையும்மையா னன்னமரபின்வினைக்கட்டோன்றாமையு முரித்தென்றது பலர்வரைகிளவியாற் றோன்றாமையுமுரித்தென்றுகொள்க. அஃதேல் யாழெழூதலுஞ் சாந்தரைத்தலு முதலாகிய தொழில்வேறுபாடுபற்றி வருமுன்னிலைவினையானும்,வியங்கோளானும்,இருவகையெச்சத்தானு மெல்லா முயர்திணைப்பாறோன்றுதலாற் பலர்வரைகிளவியெனவரைந்துகூறல் பொருந்தாதெனின் அற்றன்றுமுன்னஞ்சேர்த்திமுறையினுணர்தலென முன்னிலைப்பெயராற்பாலுணருமாறுமுன்னருணர்த்தப்படுதலானும், அன்னமரபின்வினைபற்றிவரும் வியங்கோ ளேவற்பெருண்மைத்தாகலின் ஏயதுணர்ந்துசெய்யுமுயர்திணைசுட்டியல்லது பெரும்பான்மையும் வாராமையா னுண்டன்னமரபின் வினையாற்பாலுணர்தலொருதலையன்றாகலானும், பெயரெச்சத்திற்குமுடிபாகியபெயரும்வினையெச்சமுஞ் சிறுபான்மைபொதுவினைகொண்டவழியல்லது தத்தமரபின்வினைகொண்டவழி யவ்வினையேபால்விளக்கலா னுண்டெச்சம்பால்விளக்கல்வேண்டாமையானும் அவையொழித்துப் பலர்வரைகிளவியேவிதந்துகூறினார். இருவகையெச்சத்தானும்,வியங்கோளானுஞ் சிறுபான்மை யுயர்திணைப்பாறோன்ற லொன்றென்முடித்தலென்பதனாற்கொள்க. நிகழ்காலத்துப் பிறசொல்லைநீக்குதற்குப் பலர்வரைகிளவியென்றார். பன்மையிரவுப்பெயரை நீக்குதற்குநிகழூஉநின்றவென்றார். மேல்விரவுப்பெயர் தத்தமரபின்வினையொ

டல்லது பாறெரிபிலவென்றார். இனியவற்றானன்றிப் பொதுவினையானும் பாறெரியநிற்குமென்பதுணர்த்தியவாறு. அஃதேற் சாத்தன்புற்றினனும், சாத்திகன்றீனுமெனச் செய்யுமென்னுஞ்சொல்லா னஃறிணைப்பாலுந் தோன்றுதலின் அதுகூறாராயிற்றென்னையெனின் எழுதலுமறைத்தலு மஃறிணைக்கென்னுமியல்பில்லாதவாறுபோலப் புற்றின்றலுயர்திணைக்கெவ்வாற்றானு மியைபின்றென படாமையானும், கன்றீனுமென்புழி யீனுமென்னும்வினையானன்றிக் கன்றென்னுஞ்சார்பானஃறிணைப்பாறோன்றுதலானும், ஒருமைவினையானொருவழி யஃறிணைப்பாறோன்றினுமதுசிறுபான்மையாகலானுங் கூறாராயினாரென்பது. (

களச. இயற்பெயர்சினைப்பெயர் சினைமுதற்பெயரே, முறைப்பெயர்க்கிளவிதாமேதானே, யெல்லாநீயிர் நீயெனக்கிளந்து, சொல்லியவல்ல பிறவுமாஅங், கன்னவைதோன்றி னவற்றொடுங்கொளலே.

விரவுப்பெயர்பாறெரியநிற்குமாறுணர்த்தியினியவைதமை யுணர்த்துவானெடுத்துக்கொண்டார். இயற்பெயர்முதலாக நீயென்பதீறாகவெடுத்துச்சொல்லப்பட்டனவல்லாத வன்னபிறவுமாண்டுவருமாயிற சொல்லப்பட்டவற்றொடுங்கூட்டுக-எ-று. இயற்பெயராவன சாத்தன்- கொற்றன்-எனவழங்குதற்பயத்தவாய்நிமித்தமின்றிப் பொருளைப்பற்றிவரு மிடுபெயர். இயற்பெயரெனினுமிரவுப்பெயரெனினு மொக்கும். ஆயினவற்றி னொருசாரனவற்றிறகப்பெயர்கொடுத்ததென்னையெனின் அவற்றது சிறப்புநோக்கிஅப்பெயர்கொடுத்தார். பாணினியார்தாளமுமொருபொருளவாயினு மிசைநூலார் தாளத்துளொருசாரனவற்றிற்குபபாணியென்னும் பெயர்கொடுத்தாற்போலவெனபது] சினைப்பெயராவன பெருங்காலன்-முடவன்- எனவச்சினையுடைமையாகிய நிமித்தமபற்றி முதன்மேல்வரும்பெயர். சினைமுதறபெயராவன சீத்தலைச்சாத்தன - கொம்மபுறாருதி- எனச்சினைப்பெயரொடுதொடர்ந்துவருமுதற்பெயர். சாத்தன் மருதிமென்னுமுதற்பெயர் சினைப்பெயரொடுதொடர்ந்தல்லது பொருளுணர்த்தாமையிற்சினைமுதற்பெயராயின. முறைப்பெயராவன தந்தை- தாய-என முறைபற்றி முறையுடைப்பொருண்மேல் வருவன. முறையாவது பிறவியானொருவனொருவற்குவருமியைபு. அல்லனவைதாந் தம்மையுணர்த்தி நின்றவாகலாறறுமென்பதுமுதலாகியசொலலேயாம். பிறவுமென்றதனான் - மக - குழவி- போல்வனகொள்க. இவற்றையுயர்திணைப்பெயரொன்றுராலுரையாசிரியரொனின்மரபியலுள்" மகவும்பிள்ளையும்பறழும்பார்ப்புமவைய மனனவப்பாலான எ - ம், குஞ்சரம்பெறுமே குழவிப்பெயர்க்கொடை எ - ம், அவை யஃறிணைக்காகலானிக் குழவியுமகவுமாயிரண்டலலவைகிழவவல்லமக்கட்கண்ணே எனவுயர்திணைக்குமோதிவைத்தாராகலின் னவைவிரவுப்பெயரேயாம்;அதனானதுபோலியுரையென்க. ஒருநிமித்தத்தானிரண்டுதிணைப்பொருளுணர்த்தலின் விரவுப்பெயர்பொருடொறுநிமித்தம்வேறுபாடுடையபலபொருளொருசொலன்மையறிக.

௧௭௫. அவற்று, ளூறன்கேயியற்பெயர் நான்கேசினைப்பெயர், நான்கெனமொழிமனோர் சினைமுதற்பெயரே, முறைப்பெயர்க்கிளவியிரண்டாகும்மே, யேனைப்பெயரேதத்தமரபின.

மேற்கூறியவிரவுப்பெயருளியற்பெயருஞ்சினைப்பெயருஞ்சினைமுதற்பெயருமோரோவொன்று நந்நான்காம் முறைப்பெயரிரண்டாம் ஒழிந்தனவைந்துபெயருந்தத்தமிலக்கணத்தனவாம்-எ-று. தத்தமிலக்கணநதவென்றது பொதுவிலக்கணத்தவல்லசிறப்பிலக்கணந்தவேயாமென்றவாறு.எனவேயவையோரோவொன்ருய்நிற்குமென்றவாரும். ஈண்டுத்தத்தமென்பது அங்ஙிகரனவெனப்பொதுமைசுட்டா தோரோவொன்ருய்நின்றபெயரைச்சுட்டிநின்றது.தனிப்பெயரைந்தும்விரிப்பெயர்பதினன்குமாகப் பத்தொன்பதென்றவாரும். கூறப்பட்டபெயரதுபாகுபாடாகிய வொருபொருணுதலுதல்பறறி யொருசூத்திரமாயிற்று. நான்காய்விரிதலுமிரண்டாய் விரிதலுநதாமேயாகலுமாகிய பொருள்வேற்றுமையான் மூன்றுசூத்திரமெனினுமமையும. (௨௧)

௧௭௬. அவைதாம், பெண்மையியற்பெய ராண்மையியற்பெயர், பன்மையியற்பெய ரொருமையியற்பெயரொன், றந்நான்கென்ப வியற்பெயர்நிலையே, பெண்மைச்சினைப்பெய ராண்மைச்சினைப்பெயர், பன்மைசசினைப்பெய ரொருமைச்சினைப்பெயரொன், றந்நான்கென்ப சினைப்பெயர்நிலையே, பெண்மைசுட்டிய சினைமுதற்பெயரே, யாண்மைசுட்டிய சினைமுதற்பெயரே, பன்மைசுட்டிய சினைமுதற்பெயரே, யொருமைசுட்டிய சினைமுதற்பெயரொன், றந்நான்கென்ப சினைமுதற்பெயரே, பெண்மைமுறைப்பெய ராண்மைமுறைப்பெயரொன், றுயிரண்டென்ப முறைப்பெயர்நிலையே.

இயற்பெயாமுதலாகிய நான்கன்விரியாகியபதினன்கு மிவையென்வுணர்த்தியவாறு. இவற்றிற்குதாரணமுன்னர்க்காட்டுதும்.இயற்பெயர்முதன்மூன்றுமோரோவொன்றுநான்காய்விரிதலுமுறைப்பெயரிரண்டாகலுமேலைச்சூத்திரத்தாற்பெறப்பட்டமையானநான்குமிரண்டுமாவனவிவையென்பதிச்சூத்திரத்திற்குக்கருத்தாகக்கொள்க. இவ்வாறிடர்ப்படாது தொகைச்சொற்களைப்பயனிலையாகக்கொள்ளவே இச்சூத்திரங்களா னவையின்னவென்றலுமித்துணையவென்றலும்பெறப்படுமாகலின் மேலைச்சூத்திரம்வேண்டாவெனின்அற்றன்று இவ்வாற்றன் விரவுப்பெயர்பத்தொன்பதென்னும் வரையறைபெறப்படாமையானும், வகுத்துக்கூறறந்திரவுத்தியாகலானும் அதுவேண்டுமென்பது. (௨௨)

௧௭௭. பெண்மைசுட்டிய வெல்லாப்பெயரு,மொன்றற்குமொருத்திக்கு மொன்றியநிலையே.

மேற்கூறிய பதினான்குபெயரு மிருதிணையும்பற்றிப்பாலுணர்த்திய வெடு த்துக்கொண்டார். அவைபெண்மைப்பெயர்நான்கும், ஆண்மைப்பெயர்நான்கு ம்,பன்மைப்பெயர்மூன்றும் ஒருமைப்பெயர்மூன்றுமாம். பெண்மைபற்றிவரு நான்குபெயரு மஃறிணைப்பெயரொன்றற்கு முயர்திணைப்பெயரொருத்திக்கு முரிய - எ - று. அந்நான்குமாவன பெண்மையியற்பெயரும், பெண்மைச் சினைப்பெயரும், பெண்மைச்சினைமுதற்பெயரும்,பெண்மைமுறைப்பெயருமே யாம். சாத்திவந்தது - சாத்திவந்தாள்-எ-ம், முடத்திவந்தது - முடத்திவந்தா ள்-எ-ம், முடக்கொற்றிவந்தது - முடக்கொற்றிவந்தாள் - எ-ம், தாய்வந்தது தாய்வந்தாள் - எ-ம் முறையானே யஃறிணைப்பெண்மைக்கு முயர்திணைப்பெ ணமைக்கு முரியவாய்வந்தவாறு கண்டுகொள்க. முடமென்பது சினையது விகாரமாதலிற் சினையாயிற்று. ஒன்றற்குமெனப் பொதுப்படக் கூறினரே னும் பெண்மைசுட்டிய பெயரொன்றமையா னஃறிணைப்பெண்ணென்றேயாம் இஃதாண்மைசுட்டிய வெல்லாப்பெயருமென்புழியு மொக்கும். ஒனறிய நிலை யுடையவற்றை யொன்றியநிலையென்றார். (௨௩.)

௧௭௮. ஆண்மைசுட்டிய வெல்லாப்பெயரு, மொன்றற்குமொரு
வற்கு மொன்றியநிலையே.

ஆண்மைசுட்டிவருநான்குபெயரும் அஃறிணையாணொன்றற்கும் உயர்திணை யொருவனுக்கு முரிய - எ - று. அந்நான்குமாவன ஆண்மையியற்பெயரும், ஆண்மைச்சினைப்பெயரும்,ஆண்மைச்சினைமுதற்பெயரும்,ஆண்மைமுறைப்பெ யருமேயாம். சாத்தன்வந்தது- சாத்தன்வந்தான் - எ-ம், முடவன்வந்தது-மு டவன்வந்தான் - எ-ம், முடக்கொற்றன்வந்தது-முடக்கொற்றன்வந்தான்-எ-ம், தந்தைவந்தது- தந்தைவந்தான்- எ-ம்- அவைமுறையானே யஃறிணையாணொ ன்றற்கு முயர்திணையாண்பாற்கு முரியவாய் வந்தவாறுகண்டுகொள்க. பிறவு மன்ன. (௨௪)

௧௭௯. பன்மைசுட்டிய வெல்லாப்பெயரு, மொன்றேபலவே
யொருவனொன்று, மென்றிப்பாற்கு மோரன்னவ்வே.

பன்மைசுட்டிவருமூன்றுபெயரும் அஃறிணையொருமையு மத்திணைப்பன் மையும் உயர்திணையொருமையுமெனச் சொல்லப்பட்ட மூன்றுபாற்குமுரி ய - எ - று. அம்மூன்றுமாவன பன்மையியற்பெயரும், பன்மைச்சினைப்பெ யரும், பன்மைச்சினைமுதற்பெயருமாம். யானைவந்தது- யானைவந்தன-யானை வந்தான் யானைவந்தாள், எ-ம், நெடுங்கழுத்தல்வந்தது, நெடுங்கழுத்தல்வந் தன- நெடுங்கழுத்தல்வந்தான்- நெடுங்கழுத்தல்வந்தாள்- எ-ம், பெருங்கால் யானைவந்தது- பெருங்கால்யானைவந்தன- பெருங்கால்யானைவந்தான், பெருங் கால்யானைவந்தாள்-எ-ம்- முறையானே யஃறிணையொருமைக்கு மத்திணைப் பன்மைக்கு முயர்திணையொருமைக்கு முரியவாய் வந்தவாறுகண்டுகொள்க. பன்மைக்கேயன்றி யொருமைக்கு முரியவாய்வருவனவற்றைப் பன்மைப்பெ யரொன்றதென்னையெனின் நன்றுசொன்னாய் பெண்மைப்பெயர்முதலாயின

வும் பிறபெயரா னுணர்த்தப்படாத பெண்மைமுதலாயினவற்றையு முணர்த்த லானன்றே யப்பெயரவாயின. என்னை? பெண்மைமுதலாயின பிறபெயரா னுணர்த்தப்படுமாயி னப்பெண்மை முதலாயினவற்று னப்பெயரை வரைந்து சுட்டலாகாமையிற் பன்மைப்பெய ரொருமைபுணர்த்துமாயினும் பிறவாற்று னுணர்த்தப்படாத பன்மையை யொருகாலுணர்த்தலி னப்பன்மையானவ வரைந்துசுட்டப்படுதலி னப்பெயரவாயின. அற்றேனும் பன்மைசுட்டியபெ யரொன்றனைமையாற் பன்மையே புணர்த்தல்வேண்டுமெனின் அற்றன்று இனையின் மை நீக்கலும் பிறிதினியைபு நீக்கலுமென விசேடித்த லிருவகைத்து வெண்கு டைப் பெருவிறலென்றவழிச் செங்குடைமுதலிய வற்றோடியையபு நீக்காது வெ ண்குடையொடியையின்மை மாத்திரை நீக்கிவெண்குடையானென்பதுபடநிற் றலி னஃதியையின்மை நீக்கலாம். கருங்குவளையென்றவழிச் செம்மை முதலா யினவற்றொடியைபு நீக்கலின் பிறிதினியைபு நீக்கலாம். பன்மைசுட்டியபெ யரென்பது வெண்குடைப் பெருவிறலென்பதுபோல வொருமையினியைபு நீக்கா து பன்மைசுட்டுதலொடியையின்மை மாத்திரைநீக்கிப் பன்மைசுட்டுமென்பது படநின்றது; அதனான் விசேடிக்குங்கால் பிறிதினியைபு நீக்கலொருதலையன் றெனக. அஃறிணையொருமையும் பன்மையு முயர்திணையொருமையுமா கிய பலவற்றையு முணர்த்தலாற் பன்மைசுட்டிய பெயரென்பாருமுளர். அஃது ரையாசிரியர் கருத்தன்மை யவ்வுரையான் விளங்கும். என்றிப் பாற்குமென் னுமும்மை யிம்மூன்றுபாற்குமென்பது படநின்றமையின் முற்றும்மை.

௧௭௰. ஒருமைசுட்டிய வெல்லாப்பெயரு மொன்றற்குமொருவ ற்குமொன்றியநிலையே.

ஒருமை சுட்டிவருமூன்றுபெயரும் அஃறிணை யொருமைக்கும் உயர்திணை யொருமைக்குமுரிய. எ-று. அம்மூன்றுமாவன ஒருமையியற்பெயரும், ஒரு மைச்சினைப்பெயரும், ஒருமைச்சினைமுதற் பெயருமாம். கோதைவந்தது-கோ தைவந்தான்-கோதைவந்தாள் -எ-ம். செவியிலிவந்தது-செவியிலிவந்தான்-செ வியிலிவந்தாள்-எ-ம்; கொடும்புறமருதிவந்தது-கொடும்புறமருதிவந்தான்-கொ டும்புறமருதிவந்தாள்-எ-ம், இவைமுறையானே அஃறிணையொருமைக்கும் உயர் திணையொருமைக்கும் வந்தவாறு கண்டுகொள்க. பெண்மைப்பெயருமாண்மைப் பெயருமொருமை யுணர்த்து மேனும் இவைபெண்மையாண்மையென்னும் வே றுபாடுணர்த்தா தொருமை யுணர்த்துதலாற் சிறப்புடைமையா னொருமைப் பெயரெ ன்றார். (௨௬)

௧௭௧. தாமென்கிளவி பன்மைக்குரித்தே.

சாத்தமாயினவெனப்பட்டபெயர் பாற்குரியவாயவருமா றுணர்த்துகின் றார். தாமென்னும்பெயரிருதிணைக்கண்ணும் பன்மைப்பாற் குரித்து. எ-று. தாம் வந்தார்-தாம்வந்தன-எனவரும். (௨௭)

௧௭௨. தானென்கிளவியொருமைக்குரித்தே.

தானென்னும்பெய ரிருதிணைக்கண்ணு மொருமைப்பாற்குரித்து- எ - று
தான்வந்தான்—தான்வந்தாள்—தான்வந்தது-எனவரும். (உஅ)

கஅரு. எல்லாமென்னும் பெயர்நிலைக்கிளவி, பல்வழிநுதலிய நிலைத்தாகும்மே.

எல்லா மென்னும்பெய ரிரண்டுதிணைக் கண்ணும் பன்மை குறித்துவரும்
எ-று. வழியென்றதிடம். பொருள் சொன்னிகழ்தற்கிடமாகலிற் பல்பொருளைப்
பல்வழியென்றார். எல்லாம்வந்தேம்—எல்லாம்வந்தீர்-எல்லாம்வந்தார்— எல்லாம்வ
ந்தன-எனவரும். எல்லாமென்னும்பெய ரிரண்டுதிணைக்கண்ணும் பன்மைகு
றித்துவருமென்றதனாற் பல்வழியென்றது மேனியெல்லாம்பசலையாயிற்றெனவொ
ருபொருளின் பலவிடங்குறித்துநிற்றலுமுடைத்தென்பதூஉங் கொடற்குப்போ
லும். அஃதெஞ்சாப்பொருட்டாய்வருவதோருரிச்சொல்லென்பாருமுளர் (உக)

கஅச. தன்னுளுறுத்த பன்மைக்கல்ல, துயர்திணைமருங்கினாக்க மில்லை.

எல்லாமென்னுஞ்சொல் லுயர்திணைக்கண்வருங்கால் தன்மைப்பன்மைக்கல்ல
துமுன்னிலைப்பன்மைக்கும் படர்க்கைப் பன்மைக்குமாகாது. எ-று. தெரிநிலை
யுருங்கூந்தலின்பெண்டிரெல்லாமெனப்படர்க்கைக்கண்ணும்வந்ததாலெனின்,
எழுத்ததிகாரத்து முயர்திணையாயி னம்மிடைவருமேயெனத் தன்மைக்கேற்ற
சாரியைகூறினமையானும், ஈண்டுநியமித்தலானும் அஃதிடவழுவமைதியாமெ
ன்பது. தன்மைச்சொல் லஃறிணைக்கின்மையின் எல்லாமென்பது பொதுமையிற்பி
ரிந்துதன்னுளுறுத்தபன்மைக்கண்வந்தவழியுயர்திணையீறாய்ப்பெயரெனப்படினு
மிருதிணைப்பன்மையுமுணர்த்தாதுநிற்றற் பொருட்பிரியாது நின்றவழிவிர
வுப்பெயராதற்கிழுக்கின்மையறிக. எல்லாப்பார்ப்பாரும்—எல்லாச்சான்றாருமெ
னப்படர்க்கைக்கண்ணும் வருதலிற் காட்டாகுத் தன்னுளுறுத்தபன்மைக்காங்காலு
யர்திணைமருங்கினல்லதாகாதெனமொழிமாற்றியுரைத்தாராலெனின், ஆசிரியரொலி
ன்படர்க்கைக்கண்வருதலிடவழுவமைதியன்றவழிப்படுமிழுக்கின்மையானும்
தன்மைச்சொல்லே யஃறிணைக்கிளவியெனவும், யான்யாமெனவரூஉம்பெய
ரெனவும் இரண்டிடத்தோதியவாற்றாற்றன்மைச் சொலஃறிணைக்கின்மைபெறப்படு
தலின் ஈண்டுக்கூறல் வேண்டாமையானும், எழுத்ததிகாரத்துமுயர்திணையாயி
ன்னம்மிடைவருமேயெனத்தன்மைக்குரியசாரியையேகூறுதலானு மதுபோலியுரை
யென்க. ஈண்டாக்கம்பெருக்கம். பெருக்கமில்லையெனவே சிறுபான்மையனை
யிடத்திற்குமுரித்தாமென்பாருமுளர். (ரு0)

கஅரு. நீயிர்நீயென வருஉங்கிளவி, பாறெரிபிலவேயுடன்மொழிப்பொருள.

நீயிர் நீயென்னுமிரண்டுபெயர்ச்சொல்லுந்திணைப்பகுதிதெரியநில்லாவிரு
திணையுமுடன்றொன்றும் பொருள. எ-று. உடன்மொழிப்பொருள வென்றதி
ருதிணைப்பொருளு மொருங்குவரத்தோன்று மென்றவாறு. பிரித்தொருதிணைவி

ளக்காவென்றவாறு. நீயிராவந்தீா, நீவந்தாயென விருதிணைக்குமபொதுவாயநின்றவாறுகணடுகொளக. இருதிணைக்குமுரியபெயரொல்லாநததமரபின் வினையொடுவநதுதிணைவிளககுமனறேஇவறறிறகனனவினையினமையிெருவாறருனுந்திணைவிளககாமையிறபாறெரிபிலவேயுடனமொழிபபொருளவெனறுா. ()

கஅசு. அவற்றுள், நீயென்கிளவி யொருமைக்குரித்தே.

மேறசொலலபபட்ட விரண்டுபெயருள நீயெனனுமபெயரொருமைக்குரிததது-எ-று. ஒருமையாவதொருவனெருததியொனறெனபனவறறிறகெலலாம் பொதுமையாகியவொருமை. நீவநதாயெனவநதவாறுகணடுகொளக. (௬௨)

கஅஎ. ஏனைக்கிளவி பனமைக்குரித்தே.

நீயிரெனனுமபெயா பனமைக்குரிததது-எ-று. பனமையாவது பலலோாக்கும்பலவறறிறகுமபொதுவாகியபனமை. நீயிரவநதீரென வநதவாறு கண்டுகொளக. எலலாமநீயிாநீயெனவோதியவாறனறியொருமைபனமையெனனுமுறைபறறியீணடுநீயெனபதனைமுறகூறினா. அனறி முநதுமொழிநததன்றலைதடுமாறெனனுந்தநதிரவுசகியெனினுமமையும. நீயிாநீயெனவிருதிணை யைம்பாலுளொனறனைவரைநதுணாததாவாயினு மொருமைபனமையென்னும் பொருள்வேறுபாடுடையவெனவரையறைபபடுவெழிவரையறுததவாறு. (௬௩)

கஅஅ. ஒருவரென்னும பெயாநிலைக்கிளவி, யிருபாறகுமுரித்தே தெரியுங்காலை.

மேலினறிவரெனனு மெணணியறபெயரொ டோதப்பட்டவறறுள்ஒருவரென்னுமபெயாசசொலுயாதிணையுபபாலு ளொருபாலவிளககாதொருவனெருத்தியெனனு மிருபாறகுமபொதுவாயநிறகும. எ - று. ஒருவாவநதாரெனபொதுவாயநினறவாறுகணடுகொளக. இருபாறகுமெனப் பொதுப்படக்கூறினுமேனு மொருவரெனனு மொருமைபபெயரா னுணாததபபடுதற்கேற்பனவொருவன் ஒருததியெனபனவேயாகலா னவையேகொள்ளபபடும. உயாதிணையொருமைபபா லிரணடெனறறியபபடாமையா னிருபாறகு முரிததென்வழுமமை முறறுமமை. உயாதிணைபபெயராயினு மப்பாலுணர்ததாமையு முனைத்தானுணாததலு மிதறகுமொாககுமாகலி னீண்டுககூறினாரெனபது.(௬௪)

கஅகூ. தன்மைசுட்டிற பன்மைக்கேற்கும்.

ஒருவரெனனுமபெயரதியல்புகருதி னஃதொருமைபபெயராயினும் பல்லோரறியுஞ் சொல்லொடுதொடாதறகேறகும். எ-று. ஒருவாவந்தார்- ஒருவரவா-எனவரும. ஒருமைபபெயா பனமைகொள்ளாதாயினு மிதுவழுவமைதியிலக்கணமென்ப தறிவிததறகுத தனமைசுட்டினெனறுா. (௬௫)

கசுo. இன்னபெயரே யிவையெனல்வேண்டின், முன்னறுமேசுத்தி முறையினுணாதல.

நீயிர் நீ ஒருவனென்பனவற்றை யின்னபாற்பெயரென்றறியலுற்ற சொல்லுவான் குறிப்பொடுகூட்டி முறையானுணர்க. எ - று. ஒருசாத்தனை ஒருவனும், ஒருத்தியானும், பலரானும், ஒன்றானும், பலவானுந் தன்னுழைச்சென்றவழி நீவந்தாய், நீயிர்வந்தீரென்னுமன்றே அண்டது கேட்டா னிவனின்னபால் கருதிக்கூறினானென்பதுணரும். இனியொருவனொருவனைச் சாரந்தொழுகலாற்றி னென்றவழிச்சொல்லுவானொடு கேட்டா னிவனொருமைகுறித்தானென விளங்கும். பிறவுமன்ன. இனியிடமுங் காலமும்பற்றிப்பால்விளக்கும் வழியுமறிந்துகொள்க. ஏகாரம்-தேற்றேகாரம். முறையினுணர்தலென்பது பாதுகாவல். (௫௬)

௧௬௧. மகடூஉமருங்கிற் பாறிரிகிளவி, மகடூஉவியற்கை தொழில வயினான.

இனியொருசாருயர்திணைப்பெயர்க்கும் விரவுப்பெயர்க்கு மெஞ்சின்ற விலக்கணங்கூறுகின்றார். மகடூஉப்பொருண்மைக்கட் பாறிரிந்துவரும் பெண்மகனென்னும்பெயர் வினைகொள்ளுமிடத்து மகடூஉவிற்குரிய வினைகொள்ளும். எ - று. பெண்மகன்வந்தாள் எனவரும். பொருண்மைபற்றி மகடூஉவினைகொள்ளுமோ ஈறுபற்றி யாடூஉவினைகொள்ளுமோ வென்றையுற்றாரக்கையமகற்றியவாறு. சிறப்புடைப்பொருளைத் தானினிதுகிளத்தலென்பதனாற் றொழிலவயினானவென்றாராகலிற் சிறப்பில்லாப்பெயர்வயினானும் பெண்மகனிவளென மகடூஉவியற்கையாமென்பதாம். (௫௭)

௧௬௨. ஆவோவாகும் பெயருமாருளவே, யாயிடனறிதல் செய்யுளுள்ளே.

ஆகாரமோகாரமாய்த் திரியும்பெயர்களுமுள அத்திரியுமிடமறிக செய்யுளுள்-எ-று. வில்லோன்காலன கழலே-தொடியோண்மெல்லடிமேலவுஞ் சிலம்பே-நல்லோர்யார்கொலளியர்தாமே - வேயபயில்பழுவமுன்னியோரே-எ-ம், கழனிநல்லூர்மகிழ்நர்க்கென்னிழைநெகிழ்பருவரல் செப்பாதோயே - எ- ம். ஆகாரமோகாரமாய்த் திரிந்தவாறு கண்டுகொள்க. ஆன், ஆள், ஆர், ஆய்-என்னுமீற்றவாகிய பெயரல்லது சேரமான், மலையமான்-என்னுந் தொடக்கத்தன் வவ்வாறுதிரியாமையி னுயிடனறிதலென்றார். உழவன்,கிழவன்- என்பனவோ வெனி னவையன்னீற்றுப்பெயர் ரொருமொழிப்புணர்ச்சியானவ்வாறுநின்றன வென்பது. ஆனீற்றுப்வழியுழவோன் கிழவோனெனத்திரியுமாற்றிக. (௫௮)

௧௬௩. இறைச்சிப்பொருள்வயிற் செய்யுளுட்கிளக்கு, மியற்பெயர்க்கிளவி யுயர்திணைசுட்டா, நிலத்துவழிமருங் கிற் றோன்றலான

செய்யுட்கருப்பொருண் மேற்கிளக்கப்படு மிருதிணைக்குமுரியபெயருயர்திணையுணர்த்தா வவ்வந்நிலத்துவழியஃறிணைப்பொருளாயநிலத்துவழிமருங்கினவழங்கப்பட்டுவருதலான-எ- று. கடுவன்முதுமகன்கல்லாமூலற்குவ

வைவந்தவன் பறழக குமரி-என்புழிக் கடுவன் மூலன் குமரியென்பன வஃறிணைப் பொருளவாயல்லது நிலத்துவழி மருங்கிற்றோன்றாமையி னுயர்திணைசுட்டாத வாறுகண்டுகொள்க. நிலமாவது முல்லைகுறிஞ்சிமருதநெய்தலென்பன. அஃதே ல இவையுயர்திணையுணர்த்தாவாயினஃறிணைப்பெயரேயாம்; ஆகவேயிச்சூத்திர மவேண்டா பிறவெனின் அற்றன்று கடுவன் மூலனென்பன ஆண்டன் மையுணர்த்துமன்றே யஃறிணைப்பெய ரவ்விருவகைப்பொருளுணர்த்தாமையி னவை விரவுப்பெயரேயாமெனபது. அலவன் - கள்வனென்பனவோவெனி னவை சாதிப்பெயரேயாயல்லி தாண்மைப்பெயரெனப்படாவென்க. குமரியென் பது வடமொழிச்சிதைவாய வடமொழிப்பொருளே யுணர்த்துதலின விரவுப்பெயரேயாம. (ஙக)

ககூச. திணையொடுபழகிய பெயரலங்கடையே.

கருப்பொருளுணர்த்தும்விரவுப்பெய ருயர்திணைசுட்டா தஃறிணைசுட்டு வது அவ்வத்திணைக்குரியவாய வழங்கப்பட்டுவரும்பெயரல்லாதவிடத்து எ-று. எனவே திணைக்குரியவாய வழங்கப்பட்டுவரும்பெய ரிருதிணையுஞ்சுட்டிவரு மென்பதாம். திணையொடுபழகியவிரவுப்பெயராவன காளைவிடலையென்னுந் தொடக்கத்தன. செருமிகுமொய்மபிற்காளைவேறாகாளை-எ-ம. திருந்துவேல்விட லையொடுவருமெனதாயே-எ-ம - உயர்திணை சுட்டிவந்தவாறு கண்டுகொள் க. இவையுயர்திணைப்பொருளன்றேவெனின ஒருத்தைநயுங்காளை விடலையெ ன்பவாகலின் விரவுப்பெயரெனவேபடுமெனபது. கடுவன் மூலன குமரியென பனவுங் கருப்பொருளுணர்த்தல்ற்றிணையொடு பழகியபெயராம பிறவெனின அற்றன்று விலங்குமபுள்ளுமுதலாகியபொருள்வழியெல்லாமவற்றிற்குரியபெ யர்செல்வதல்லது பொருளுண்டாயினு மிந்நிலத்திப்பொரு ளிப்பெயரான வழங்கப்படாவென்னும வரையறையில்லை. தலைமக்களோந்நிலத்து முளராயி னும் பாலைநிலத்துக்காளை, மீளியென்னும்பெயர்செல்லாமருதநிலத்து; மருதநி லத்து மகிணனை ஊரனென்னும் பெயர்செல்லாபாலைநிலத்து. அதனாறபொருள் வகையானன்றிப் பெயர்தந்திணைக் குரிமைபூண்டுநிற்றலி னவற்றைத்திணை யொடுபழகியபெயரெனறானென்பது. (சo)

ஐந்தாவது

பெயரியல் முற்றிற்று.

ஆறாவது

வினையியல்

ககூரு. வினையெனப்படுவது வேற்றுமைகொள்ளாது, நினையு ங்காலைக் காலமொடுதோன்றும.

திருந்தமுறையானே வினைச்சொலாமாறுணர்த்திய வெடுத்துக்கொண் டார அதனானிவ்வோத்து வினையியலென்னும்பெயர்த்தாயிற்று. வினையென்

சொல்லப்படுவது வேற்றுமையொடுபொருந்தாதாராயுங்காற்காலத்தொடுபுல
ப்படும். எ - று. ஈண்டுவேற்றுமையென்றதுருபை. உண்டான்-கரியன் - என
வேற்றுமைகொள்ளாதுகாலமொடுதோன்றியவாறுகண்டுகொள்க. வேற்றுமை
கொள்ளாதென்றது காலமொடுதோன்றுமெனிற் றொழினிலையொட்டுந்தொ
ழிற்பெயரும் வினைச்சொல்லாவான்செல்லுமாகலானும், காலமொடுதோன்று
மென்றது வேற்றுமைகொள்ளாதெனினிடைச்சொல்லு முரிச்சொல்லும் வி
னைச்சொலெனப்படுமாகலானு மவ்விருதிறனுநீக்குதற்கு வேற்றுமைகொள்
ளாது காலமொடுதோன்றுமென்றார். வினைச்சொல்லுள் வெளிப்படக்காலம்
விளக்காதனவுமுள வவையுமாராயுங்காற்காலமுடையவென்றற்கு நினையுங்கா
லைக்காலமென்றார். அவையிவையென்பதுமுன்னர்ச்சூத்திரத்தாற்பெறப்படும்.
உணர்த்தப்படும் வினைச்சொற்கெல்லாம் பொதுவிலக்கணமுணர்த்தியவாறு.

௧௬௬. காலந்தாமே மூன்றெனமொழிப.

மேறசொற்றவாய் செய்யப்பட்டகால மூன்றென்றுசொல்லுவர் புலவர்
எ - று. தாமென்பதுகட்டுரைச்சுவைபடநின்றது. (௨)

௧௬௭. இறப்பினிகழ்வி னெதிர்வினென்றா, வம்முக்காலமுங்
குறிப்பொடு கொள்ளு, மெய்ந்நிலையுடைய தோன்ற
லாறே.

இறப்புநிகழ்வுமெதிர்வுமென்று சொல்லப்படுமம்மூன்றுகாலமுங் குறி
ப்ப வினையொடும்பொருந்து மெய்ந்நிலைமையையுடைய வினைச்சொல்லான
வை தோன்றுநெறிக்கண் - எ - று. எனவேகாலமூன்றாவன இறப்புநிகழ்வு
மெதிர்வுமென்பதூஉம், வெளிப்படக்காலம்விளக்காதன குறிப்புவினையென்ப
தூஉம்பெற்றாம். உ-ம். உண்டான் - உண்ணாநின்றான் - உண்பான்-எனவரும்.
இறப்பாவதுதொழிலதுகழிவு. நிகழ்வாவது தொழிறொடங்கப்பட்டுமுற்றுப்
பெறாதநிலைமை. எதிர்வாவது தொழிலபிறவாமை. தொழிலாவதுபொருளின
துபுடைபெயர்ச்சியாகலி னஃதொருகணநிற்பதல்ல திரண்டுகணநிலையாமை
யினிகழ்ச்சியென்பதொன் றதற்கில்லையாயினும்உண்டல்தின்றலெனப் பஃறொ
ழிற்றொகுதியையொருதொழிலாகக் கோடலின்உண்ணாநின்றான், வாராநின்
றானெனநிகழ்ச்சியுமுடைத்தாயிற்றென்பது. வினைக்குறிப்புக் காலமொடுதோ
ன்றுங்காற்பண்டுகரியன்-இதுபொழுதுகரியன - எனவிறந்தகாலமு நிகழ்கால
முமுறையானேபற்றிவருதலும், நாளைக்கரியனுமெனவெதிர்காலத்தாக்கமொ
டுவருதலுமறிக. மெய்ந்நிலையுடையவென்றது விளங்கித்தோன்றாவாயினுங்கா
லம்வினைக்குறிப்பொடு கோடன்மெய்ம்மையெனவலியுறுத்தவாறு. (௩)

௧௬௮. குறிப்பினும்வினையினு நெறிப்படத்தோன்றிக், கால
மொடுவரூஉம் வினைச்சொலெல்லா, முயர்திணைக்கு
ரிமையு மஃறிணைக்குரிமையு, மாயிருதிணைக்கு மோர
ன்ன வுரிமையு, மம்மூவுருபின தோன்றலாறே.

பொதுவகையாற்கூறிய வினைச்சொல்லைச் சிறப்புவகையா னுணர்த்திய வெடுத்துக்கொண்டார். குறிப்புப்பொருண்மைக்கண்ணுந் தொழிற்பொருண்மைக்கண்ணுந்தோன்றிக் காலத்தொடுவரு மெல்லாவினைச்சொல்லு முயர்திணைக்குரியனவு மஃறிணைக்குரியனவு மிரண்டுதிணைக்கு மொப்பவுரியனவு மென மூன்றுகூற்றனவாந்தோன்று நெறிக்கண் - எ - று. உ-ம். கரியன்-செய்யனென்புழித்தொழின்மைதெற்றெனவிளங்காது குறித்துக்கொள்ளப்படுதலிற்குறிப்பெனறார். உண்டான் - கரியன், சென்றது-செய்யது, வந்தனை-எளியை-எனவரும். குறிப்பொடுங்கொள்ளுமெனமேற்குறிப்பினையுபட்டு நிற்றலிற்குறிப்பினும்வினையினுமென்றார். முன்னர் ஈறுபற்றியுணர்த்தப்படும் வினைச்சொற்களை இஃதிறந்தகாலத்திற்குரித்து. இஃதுநிகழ்காலத்திற்குரித்து. இஃதெதிர்காலத்திற்குரித்தென வழக்குநோக்கியுணர்ந்துகொள்கவென்பது விளக்கியகாலமொடுவரூஉமென்றார். வினைச்சொல் காலமுணர்த்துங்காற்சிலநெறிப்பாடுடையவென்பது விளக்கிய நெறிப்படத்தோன்றியென்றார். நெறிப்பாடாவது அவ்வீற்றுமிசைநிற்குமெழுத்துவேறுபாடு. அவைமுற்ற வுணர்த்தலாகாவாயினுமவ்வீறுணர்த்தும்வழிச்சிறியசொல்லுதும். (ச)

உ௱உ. அவைதாம், அம்மாமெம்மேமென்னுங்கிளவியு, மும்
மொடுவரூஉங் கடதறவென்னு, மந்நாற்கிளவியொடா
யெண்கிளவியும்,பன்மையுரைக்குந்தன்மைச்சொல்லே.

நிறுத்தமுறையானே யுயர்திணைவினையாமா றுணர்த்துகின்றார். அவைதாமிருவகைய தன்மைவினையும்படர்க்கைவினையுமென. தன்மைவினையமிருவகைத்துப்பன்மைத்தன்மையு மொருமைத்தன்மையுமென. தனித்தன்மையுமுளப்பாட்டுத்தன்மையுமெனினுமமையும். இச்சூத்திரத்தாற்பன்மைத்தன்மையுணர்த்துகின்றார். மேன்மூவகையவெனப்பட்டவினைச்சொற்றும அம்,ஆம்,எம்,ஏம்-என்னுமீற்றவாகியசொல்லும்,உம்மொடுவரூஉங்கடதறவாகிய கும்மும், டும்மும், தும்மும், றும்மும் என்னுமீற்றவாகிய சொல்லுமெனவவ்வெட்டும் பன்மையுணர்த்துந்தன்மைச்சொல்லாம் - எ - று. தனக்கொருமைபலவாதின்மையிற்றன்மைப்பன்மையாவது தன்னொடுபிறரையுளப்படுத்ததேயாம். அவ்வுளப்படுத்தன்மூவகைப்படும்முன்னின்றாரையுளப்படுத்தலும், படர்க்கையாரையுளப்படுத்தலும்,அவ்விருவரையுமொருங்குளப்படுத்தலுமென. அம்-ஆம்-என்பனமுன்னின்றாரையுளப்படுக்கும். தமராயவழிப்படர்க்கையாரையு முளப்படுக்கும். எம்-ஏம்-என்பனபடர்க்கையாரையுளப்படுக்கும். உம்மொடுவரூஉங் கடதறவவ்விருவரையுமொருங்குளப்படுத்தலுந் தனித்தனியுளப்படுத்தலுமுடைய. ஈண்டுமவைதாமென்பதற்குமுடிபு அவைதாம்-இ உ ஐ ஓ என்புழியுரைத்தாங்குரைக்க. அம்மாமெம்மேம்என்பனமூன்றுகாலமும்பற்றிவரும். உம்மொடுவரூஉங்கடதறவெதிர்காலம்பற்றிவரும். முன்னின்றநான்கீறுமிறந்தகாலம்பற்றிவருங்கால்அம்மும்எம்முங்கடதறவென்னு நான்கன்முன்அன்பெற்றுவரும். ஏம் அன்பெற்றும்பெறாதும்வரும். ஆம் அன்பெறாதுவரும். நக்கனம்-நக்கனெம்-உண்டனம்-உண்டனெம்- உரைத்தனம்- உரைத்தனெம்-தின்றனம்- தின்றனெம்-

எ-ம், நக்கனெம்- நக்கேம்- உண்டனெம்-உண்டேம்- உரைத்தனெம்- உரைத்தேம்-தின்றனெம்-தின்றேம- எ-ம், நக்காம்-உண்டாம்-உரைத்தாம்-தின்றாம்-எனவரும்-அந்நான்கிறுமேனையெழுத்தின்முன்னகாரமும் றகாரமுமொழித்தின் பெற்றுவரும். அஞ்சினம்- அஞ்சினாம்- அஞ்சினெம- அஞ்சினேம்-உரிஞினம்-உரிஞினாம் - உரிஞினெம் - உரிஞினேம் - எனவரும். பிறவெழுத்தொடு மொட்டிக்கொள்க. கலக்கினம்-தெருட்டினமென்னுந்தொடக்கத்தன குற்றுகரவீறுகலானதுவுமேனையெழுத்தேயாம். இனியவை நிகழ்காலம்பற்றி வருங்கால் கின்றென்பனவற்றொடுவரும். நில்லென்பதுலகாரம் னகாரமாய் றகாரம பெற்றுநிற்கும். உண்ணாநின்றனம்-உண்கின்றனம்-உண்ணாநின்றாம்-உண்கின்றாம் - உண்ணாநின்றனெம் - உண்கின்றனெம் - உண்ணாநின்றனேம், உண்ணாநின்றேம்-உண்கின்றனெம் உண்கின்றேம் - எனவரும், ஈண்டென்பெற்ற விகற்பமிறந்தகாலத்திற்கூறியவாறேகொள்க. உண்ணாகிடந்தனம்-உண்ணாவிருந்தனம்-எனக்கிடவிருவென்பனவுஞ்சிறுபான்மை நிகழ்காலத்துவரும். நிகழ்காலத்துக்குறித்தெனாநில்லென்பது உண்ணாநிற்கும்-உண்ணாநிற்பல்-எனவெதிர்காலத்தும்வந்ததாலெனின் அற்றன்று பண்டொருநாளிச்சோலைக்கண் விளையாடாநின்றேனக்கோரத்தொருத்தானேந்வந்தான் என்றவழி அஃதிறந்தகாலத்து நிகழ்வுபற்றிவந்தாற்போல அவையெதிர்காலத்து நிகழ்வுபற்றிவருதலி னுண்டுமதுநிகழ்காலத்திற்றிரந்ததின்றென்க. அவையெதிர்காலம்பற்றிவருங்காற் பகரமும் வகரமும்பெற்றுவரும். வகரமேற்புழிக் குகரமு முகரமுமடுத்துநிற்கும். உண்குவம்-உரிஞுவம்-செல்லுவம்-உரைப்பம்-எனவரும். ஒழிந்தவீற்றொடுமொட்டிக்கொள்க. பாடுசம்-செல்சம்-என வேற்புழிச்சிறுபான்மை ககரவொற்றுப்பெறுதலுங்கொள்க. உம்மொடுவருஉங்கடதற உண்கும்-உண்டும்-வந்தும்-சேறும்-எனவரும். உரிஞுதும்-திருமுதும்-எனவேற்றவழி யுகரம்பெற்றுவரும். குமமீறுவினைகொண்டுமுடிதலின் ஒழிந்த வும்மீற்றின் வேறெனவேபடும். டதற வென்பன வெதிர்காலத்துக்குரிய வெழுத்தன்மையாற் பாலுணர்த்து மிடைச்சொற குறுபபாய்வந்தனவெனவேபடும். படவேயவற்றை யுறுப்பாகவுடையவீறுமூன்றும்; அதனாலும்மெனவோரீறாக வடக்கலாகாமையி னந்நாற்கிளவியொடென்றார். (௫)

௨00. கடதறவென்று, மந்நான்கூர்ந்த குன்றியலுகரமொ, டென்னேனல்லென வரூஉமேழுந்,தன்வினையுரைக்குந் தன்மைசொல்லே.

கடதறவென்னுநான்கு மெய்யையூர்ந்துவருங் குற்றியலுகரத்தை யீறாகவுடையசொல்லும், என் ஏன் அல்லென்னு மீற்றவாகிய சொல்லுமென வவ்வேழுமொருமையுணர்த்துந் தன்மைச்சொல்லாம் - எ-று. குற்றுகரநான்கும், அல்லுமெதிர்காலம்பற்றிவரும். குன்றுகரங்காலவெழுத்துப்பெறுங்காலும்மீற்றொடொக்கும். அல்லீறுபகரமும் வகரமும்பெற்றுவரும்,என் ஏன் என்பனமூன்றுகாலமும்பற்றிவரும். உண்கு-உண்டு - வருது-சேறு - எ-ம், உரிஞுது-திருமுகு-எ-ம், உண்டனென்-உண்ணாநின்றனென்-உண்குவென்-எ-ம், உண்டேன்.

உண்ணாநின்றேன்-உண்பேன்-எ-ம், உண்பல்-வருவல்-எ-ம் வரும். காலவெழுத்தடுத்தற்கணெம்மீற்றொடெனனீறும்,ஏமீற்றொடேனீறுமொக்கும்.ஆண்டுக்கூறியவிகற்பமெல்லாமறிந்தொட்டிக்கொள்க. குற்றுகரமென வொன்றாகாது நான்காதற்கு முன்னுரைத்தாங்குரைக்க, எதிர்காலம்பற்றி வழக்குப்பயிற்சியுமில்லாக் குற்றுகரத்தை யங்ஙனம்வரும்அல்லொடு பின்வையாது மூன்றுகாலமும்பற்றிப் பயின்றுவரும் என் ஏனென்பனவற்றின் முன்னுமீற்றொடியையவைத்ததுசெய்கென்பதுபோலச் செய்குமென்பதூஉங் காண்கும்வந்தேமென வினைகொண்டு முடியுமென்பதறிவித்தற்கெனக்கொள்க. (௬)

௨0௧. அவற்றுட், செய்கென்கிளவி வினையொடுமுடியினு, மவ்வியறிரியா தென்மனார்புலவர்.

மேற்கூறப்பட்ட வொருமைத்தன்மைவினையேழனுட் செய்கென்னுஞ்சொல் வினையொடுமுடியுமாயினு முற்றுச்சொல்லாதலிற் றிரியாது - எ - று. காண்குவந்தேன்-எனவரும். செய்கென்கிளவி யவ்வியற்றிரியாதெனவே பெயர்த்தனென் முயங்கயான்-எ-ம், தங்கினைசென்மோ - எ-ம், மோயினளுயிர்த்தகாலே-எ-ம்- ஏனைமுற்றுச்சொல் வினைகொளுங்கா லவ்வியற்றிரியுமென்பதாம். அவைதிரிந்தவழி வினையெச்சமாதல் வினையெஞ்சுகிளவியும் வேறுபலகுறிய வென்புழிப்பெறப்படும். இருசாரனவும்பெயர்கொள்ளாதுவினைகொண்டவழிச்செய்கென்கிளவி திரியாதென்று மேனைய திரியுமென்றுங் கூறியகருத்தென்னையெனின் நன்றுசொன்னாய் காண்குவந்தேனென்றவழிச் செய்கென்கிளவி வினையெச்சமாய்த்திரிந்ததாயிற் செய்தெனெச்சமாதற்கேலாமையிற்செயவெனெச்சமாய்த்திரிந்ததெனல்வேண்டும். வேண்டவேசெயவெனெச்சத்திற்குரிய வினைமுதல்வினையும் பிறவினையு மதுகொள்வான்செல்லும்.வினைமுதல்வினையல்லதுகொள்ளாமையிற் செயவெனெச்சமாய்த் திரிந்ததென்றல்பொருந்தாது. திரிபின்மையின் முற்றுச்சொல்லாய்நின்றதெனவேபடும். அதனானவ்வியற்றிரியாதென்றானென்பது. அல்லதூஉஞ்செய்கென்கிளவி சிறுபான்மையல்லது பெயர்கொள்ளாமையிற் பெரும்பான்மையாகிய வினைகோடலதற்கியல்பேயாம். ஆகவேஅதுதிரிந்து வினைகொள்ளுமென்றல் வேண்டாவாம். அதனானு முற்றாய்நின்று வினைகொண்டதென்றலே முறைமையென்றுணர்க. முற்றுச்சொற்கும் வினையொடுமுடியினு முற்றுச்சொல்லென்னு முறைமையிறவாவென்றார் பிறருமெனக்கொள்க. பெயர்த்தனென்முயங்கவென்னுந் தொடக்கத்தன விறந்தகாலமுணர்த்தலிற் செயதெனெச்சமாதற் கேற்புடைமையானவற்றைத்திரிபென்றார். முன்னரொத்திறத்தானும் பெயர்முடிபினவேயென்பதனாற் பெயரொடுமுடிதலெய்துவதனை விலக்கியவாறு. (௭)

௨0௨. அன்னானள்ளா ளென்னுநான்கு, மொருவர்மருங்கிற் படர்க்கைச்சொல்லே.

தன்மைவினையுணர்த்தி யினி யுயர்திணைப்படர்க்கைவினையுணர்த்துகின்றார். அன், ஆன், அள், ஆள்-என்னுமீற்றையுடைய நான்குசொல்லு முயர்திணை

யொருமையுணர்த்தும் படர்க்கைச்சொல்லாம் - எ-று. இவைநான்கிறு மூன்றுகாலமும்பற்றிவரும். உ-ம். உண்டனன் - உண்ணாநின்றனன்-உண்பன்-எ-ம், உண்டான்-உண்ணாநின்றான்-உண்பான்-எ-ம், உண்டனள்-உண்ணாநின்றனள்-உண்பள்-எ-ம், உண்டாள்-உண்ணாநின்றாள்-உண்பாள்-எ-ம் வரும். காலத்துக்கேற்ற வெழுத்துப்பெறுங்கால் அன்னும் அள்ளும் அம்மீற்றோடும், ஆனும் ஆளும் ஆமீற்றோடு மொக்கும். அவ்வேறுபாடெல்லா மறிந்தொட்டிக்கொள்க. (௮)

௨0௩. அர் ஆர்பவென வரூஉமூன்றும், பல்லோர்மருங்கிற் படர்க்கைச்சொல்லே.

அர், ஆர், ப-என்னுமீற்றையுடையவாயவருமூன்றுசொல்லும் பல்லோரையுணர்த்தும படர்க்கைச்சொல்லாம். எ-று. ரகாரவீறிரண்டுமூன்றுகாலமும்பற்றிவரும். பகாரமெதிர்காலம்பற்றிவரும். உண்டனர், உண்ணாநின்றனர்-உண்பர். எ-ம், உண்டார் - உண்ணாநின்றார் - உண்பார். எ-ம், உண்ப - எ-ம்வரும். அன்னீற்றிற்குரியகாலவெழுத்து ஆரீற்றிற்கும், ஆனீற்றிற்குரிய காலவெழுத்து ஆரீற்றிற்குமுரிய. பகரமுகரம்பெறலும் பெறாதும் உரியவுப, உண்டபவென [?] வரும். வருகுபவெனச்சிறுபான்மை குகரமும்பெறும். இவ்வேறுபாடெல்லா மறிந்தொட்டிக்கொள்க. (௯)

௨0௪. மாரைக்கிளவியும்பல்லோர்படர்க்கை, காலக்கிளவியொடு முடியுமென்ப.

முன்னையனவேயன்றி மாரென்றுச்சொல்லும்பல்லோர்படர்க்கையையுணர்த்தும்; அஃது அவைபோலப்பெயர்கொள்ளாது வினைகொண்டுமுடியும். எ-று. பகரத்திற்குரியகாலவெழுத்து மாரைக்கிளவிக்குமொக்கும். எல்லாருமார்வந்தார் - கொண்மார்வந்தார் - எனவரும். குகரம்வாராதவழிக்கண்டுகொள்க. மாரைக்கிளவிவினையொடல்லதுபெயரொடுமுடியாமையினெச்சமாய்த்திரிந்து வினைகொண்டதெனப்படாமையறிக. அஃதேற்பீடினறுபெருகியதிருவிற்பாடின் மன்னைப்பாடன்மாரெமரே - எ-ம், காமப்படர்ட வருந்தியநோய்மலி வருத்தங் காணன்மாரெமரே-எ-ம்- மாரீற்றுச்சொல் பெயர்கொண்டுவந்தனவாலெனின் அவைபாடுவார்காண்பாரென்னும் ஆரீற்றுமுற்றுச்சொல்லினெதிர்மறையா வொருமொழிப்புணர்ச்சியான் மகரம்பெற்றுநின்றன. மாரீறுயினவைபாடாதொழிவார், காணாதொழிவாரென வவற்பொருண்மையுணர்த்துமா றில்லையென்க. (௧0)

௨0௫. பன்மையுமொருமையும் பாலறிவந்த, வந்நாலைந்துமூன்றுதலையிட்ட, முன்னுறக்கிளந்த வுயர்திணையவ்வே.

பன்மையுமொருமையுமாகிய பாலுணரவந்த விருபத்துமூன்றீற்று வினைச்சொல்லுமுன்னுறக்கிளக்கப்பட்ட வுயர்திணையுடையன எ-று. ஈண்டுக்கூறிய படர்க்கைவினையேகிளவியாக்கத்துட்கூறப்பட்டன அவைவேறல்லவென்பார் முன்னுறக்கிளந்தவென்றார். அதனாற்பயன் அன்னனள்ளாளென்பனவான்

பால்பெண்பாலுணர்த்துதலீண்டுப்பெறுதலும், ஸஃகானொற்று முதலாயினப டர்க்கைவினைக்கீறாய்நின்றுபாலுணர்த்துத லாண்டுப்பெறுதலுமாம். அஃதே ன்முற்றுப்பெறவோரிடத்துக்கூறவமையு மீரிடத்திற்கூறிப்பயாதென்னெனி ன் பாலுணர்த்துமிடைச்சொற்பற்றி யுயர்திணைப்படர்க்கைவினையுணர்த்துதலீ ண்டுக்கூறியதனாற்பயன். ஆண்டுக்கூறியதனாற்பயன் வழுக்காத்தற்கிவற்றைத் தொகுத்திலக்கணவழக்குணர்த்துதலாமென்க. பெயரியலுள்ளிப்பெயரிற்றோ ன்றும் பாலறிகிளவியுமென்றாற்போலவினையியலுள்ளிவினையிற் றோன்றும்பா லறிகிளவியுமயங்கல் கூடாவெனவமையும்; ஆண்டுக்கூறல்வேண்டாவெனின் அற்றன்று இருதிணையைம்பாற்சொலுணர்த்தாக்காற்றிணைபால்பற்றிவழுவற்க வெனவும், வழீஇயமைகவெனவும்வழுக்காத்தசூத்திரங்க ளெல்லாவற்றானும் பொருளினிதுவிளங்காமையானும், வினையுள்ளுநதிரிபின்றிப் பால்விளக்குதற் சிறப்புடையன படர்க்கைவினையேயாகலானு மவற்றைப்பிரித் தாண்டுக்கூறி னானென்பது. படர்க்கைபலவற்றானும்பெயரீறுநதிரிபின்றிப்பாலுணர்த் தாமை யி னிலக்கணவெழுத்தொடுகூறு தெதிரதுநோக்கிக்கொள்ள வைத்தானென்க. மூன்றுதலையிட்டவகரவீற்றுமாவன இவையெனவினிதுவிளங்கப் பன்மையு மொருமையும்பாலறிவந்தவென்றார். இதனாற்பயனுயர்திணைவினைமூன்றுதலையி ட்டவீறீற்தென்னும்வரையறை. (கக)

உ0௬. அவற்றுட், பன்மையுரைக்குந் தன்மைக்கிளவி, யெண் ணியன்மருங்கிற் றிரிபவையுளவே.

கூறப்பட்டவிருபத்துமூன்றுசொற்களுட் பன்மையுணர்த்துந் தன்மைச் சொலெண்ணியலும்வழி அஃறிணையையுளப்படுத்துத்திரிவனவுள. எ-று. யா னுமென்னெஃகமுஞ்சாறும் - எனவரும். தன்மைப்பன்மைச்சொ லுயர்திணை வினையாகலினுயர்திணையையுளப்படுத்தற்பாலன வஃறிணையை யுளப்படுத்தல் வழுவாயினுமமைகவென்பார் திரிபவையுளவென்றார். அதனானிச்சூத்திரத்தை மூன்றுறக்கிளர்தவுயர்திணையவ்வேயென்னுஞ் சூத்திரத்தின்பின்வைத்தார். தி ரியுமென்னாதுதிரிபவையுளவென்றதனா னெல்லாந்திரியாசிலவேதிரிவன வெ ன்பதாம். (கஉ)

உ0௭. யாதுவொன்னும் வினாவின்கிளவி, யத்திணைமருங்கின் மு ப்பாற்குமுரித்தே.

யாரென்னும்வினாப்பொருளையுணர்த்துஞ்சொல் உயர்திணைமருங்கின் மு ப்பாற்குமுரித்து. எ-று. உ-ம்-அவன்யார் - அவள்யார் - அவர்யார்-எனவரும். வளைதகூட்டுண்ணுமுருபனியாமத்தெங், கோதைகூட்டுண்ணியதான் யார்மன், போதெலாந், தாதொடுதாழுந்தார்க்கச்சிவளநாடன், றூதொடுவாராதவண்டு. வண்டென்புழிவண்டுதான்யாரென யாரென்பதஃறிணைக்கண்ணும்வந்ததாலெ னின் அது திணைவழுவமைதியெனப்படும். இதுவினைக்குறிப்பாயினும் பல்லோ ர்படர்க்கையுணர்த்தும் ரகாரவீற்றான்மூன்றுபாலுணர்த்தும் வேறுபாடுடை மையினவற்றொடுவையாதீண்டுவைத்தார். செய்யுளின்பநோக்கியளபெழுந்து நின்றது. வினாவின்கிளவியெனவதன்பொருளுணர்த்தியவாறு. (கரு)

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY

௨0௮. பாலறிமரபி னம்மூவீற்று, மாவோவாகுஞ் செய்யுளு ள்ளே.

பால்விளங்கவரு மியல்பையுடைய வம்மூன்றீற்றின்கண்ணு மாகாரமோ காரமாகுஞ்செய்யுளுள - எ - று. பாலறிமரபினென்றதனாற் பாலுணர்த்துதற் சட்டிரிபுடைய ஆமீறுவிலக்குண்ணும்; மார்சிறுவழக்கிற்றாகலானும், ஆகாரம் ஓகாரமாதற் கேலாமையானும் அம்மூவீறுவன-ஆன்-ஆள்-ஆர்-என்பனவேயா ம். வினவிநிற்றந்தோனே-நல்லைமன்னெனநகூஉப்பெயர்ந்தோளே, பாசிலைவா டாவள்ளியங்காடிறந்தோரே-என வாகார மோகாரமாய்த் திரிந்தவாறு கண்டு கொள்க. வந்தோம், சென்றேமென வழக்கினுள் வருவனவோவெனின் அ வை ஏமீற்றின்சிதைவெனமறுக்க. (௧௬)

௨0௯. ஆயென்கிளவியு மவற்றொடுகொள்ளும்.

முன்னிலையீற்றுளாயென்னுமீறு மேற்கூறப்பட்டனபோல ஆகார மோ காரமாஞ்செய்யுளுள் - எ - று. வந்தோய்மன்றதெண்கடற்சேர்ப்ப-எனவரு ம். கூறப்பட்ட நான்கீற்றுத் தொழிற்பெயரு மாகார மோகாரமாதல் பெய ரியலுட்கொள்ளப்படும். ஆயென்கிளவியாவோவாவது பெரும்பான்மையு மு யர்திணைக்கண்வந்தவழியென்ப தறிவித்தற்கு முன்னிலையதிகாரத்துக் கூறா தீண்டுக்கூறினார். அவற்றொடுகொள்ளுமென்ற தவற்றொடொக்குமென்றவாறு.

௨௧0. அதுச்சொல்வேற்றுமை யுடைமையானுங், கண்ணென் வேற்றுமை நிலத்தினானு, மொப்பினானும் பண்பினானு மென், றப்பாற்காலங் குறிப்பொடுதோன்றும்.

ஆறும்வேற்றுமையதுடைமைப்பொருட்கண்ணு மேழாம்வேற்றுமையது நிலப்பொருட்கண்ணுமொப்பின்கண்ணும்பண்பின்கண்ணு மெனவப்பகுதிக்கா லங்குறிப்பாற்றோன்றும். எ-று. அப்பகுதிக்காலமாவதுஅப்பொருட்பகுதிபற்றி வருஞ்சொல்லகத்துக்காலமாம். அப்பகுதிக்காலங்குறிப்பாற்றோன்று மென வே அப்பொருள்பற்றிவினைக்குறிப்புவருமென்றவாறும். உடையான துடைமை த்தன்மையேயன்றியுடைப்பொருளுமுடைமையெனப்படுதலி னுடைமையானு மென்பதற்குடைப்பொருட்கண்ணுமெனவுமுரைக்க. உரைக்கவேயுடைப்பொ ருட்கண்வருங்காலுடைப்பொருட்சொல்லாகிய முதனிலைபற்றிவருதலும்பெற ப்படும். கருமையனென்பதுடைமைப்பொருளாயடங்கலிற்பண்பினானு மென் புழிக்கரியனெனவின்னனென்பதுபடவருதலேகொள்க. வாளானுடைமையா னுமென்றவழியன்மையினென்பதுபோல அவ்வொருவாய்பாடேபற்றிநிற்கும். இதனையஃதுடைத்தென்பது படவருமெல்லாவாய்பாடுந்தழுவுதற்குஅதுச்சொ ல்வேற்றுமையுடைமையானுமென்றார். கண்ணென்வேற்றுமைநிலத்தினானுமெ ன்பதற்குமீதொக்கும். ஆயின் இஃதிரண்டாம்வேற்றுமைப்பொருளாமேனின் ஆண்டுடைமையுருபுநோக்கியசொல்லாய்வருவதல்ல திரண்டாம் வேற்றுமை ப்பொருளெனப்படாது. என்னை? அதுசெயப்படுபொருண்மைத்தாகலின்] இ

தனனுடைமையாருவதன்பொருளெனவேபடுமென்பது. கச்சினன் - கழலின ன்-எ-ம், இல்லத்தன்-புறத்தன்-எ-ம், பொன்னன்னன் - புலிபோல்வன்-எ-ம், கரியன்- செய்யன்- எ-ம் வரும். கச்சினன்-இல்லத்தான்-எனப்பெயருங்குறிப் பாற்காலம்விளக்குதலி னப்பாற்காலங்குறிப்பொடுதோன்று மென்றதனன்வி னைக்குறிப்பென்பதுபெறுமாறென்னையெனின் தொழினிலையொட்டுமொன்றல ங்கடையெனத் தொழிற்பெயரல்லனகாலந்தோன்றுவென்றமையாற் கச்சின ன், இல்லத்தானென்பன காலம்விளக்காமையிற்குறிப்பாறகாலம்விளக்குவன வினைக்குறிப்பாதல்பெறுதும். அல்லதூஉம்வினைக்குறிப்புங்காலந்தோன்றுதலை யிலக்கணமாகவுடைய வினைச்சொல்லேயாகலிற் றெற்றெனவிளக்கா வாயினு ங்காலமுடையவெனவேபடும். பெயர்க்கன்னதோரிலக்கணமின்மையிற்காலந் தெற்றெனவிளக்குவனவுளவேற்கொளவதல்லது காலம்விளக்காதபெயருங்கா லமுடையவெனவேயுய்த்துணருமாறில்லை; அதனனுங்குறிப்பாற் காலமுணர்த் துவனவினைகுறிப்பேயென்பது பெறப்படுமெனக. தன்னினமுடித்த லென்ப தனன் ஐப்பாட்டையன், துணங்கையன்-எனச்சிறுபான்மைகாலமும் வினைசெ யிடமும்பற்றி வருவனவுங்கொள்க. (௧௬)

௨௧௧. அன்மையினின்மைபி னுண்மையின்வன்மையி, னன்ன
பிறவுங் குறிப்பொடுகொள்ளு, மென்னகிளவியுங் குறி
ப்பேகாலம்.

அன்மையின்மையுண்மைவன்மையென்னும்பொருள்பற்றிவருவனவும் அ வைபோல்வனபிறவுங் குறிப்புப்பொருண்மையொடுபொருந்துமெல்லாச்சொ ல்லுங்காலங்குறிப்பானுணரப்படும். எ-று. காலங்குறிப்பானுணரப்படுமென வே யிவையும்வினைக்குறிப்பாமென்றவாறும். அல்லன்-அல்லள்-அல்லர்-எ-ம்,இ லன்-இலள்-இலர்-எ-ம்,உளன்-உளள்-உளர்-எ-ம், வல்லன்-வல்லள்-வல்லர்-எ-ம் வரும். பொதுப்படக்கூறியவதனற் பொருளிலன்-பொருளிலள்- பொருளில ர்-எ-ம்- உடைமைக்குமறுதலையாகியவின்மையுங்கொள்ளப்படும். இவையொ ருவாய்பாடேபற்றிப்பிறத்தலின்வேறுகூறினர். பண்பொடிவற்றிடை வேற்று மையென்னையெனின் இன்மை பொருட்குமறுதலையாகலிற்பொருளின்கட் கிட க்கும்பண்பெனப்படாது. அன்மையுமுண்மையும் பண்பிற்கு மொத்தலிற்பண் பெனப்படா. என்னை? குணத்திற்குக் குணமின்மையின்.]வன்மைஆற்றல். அது வுங் குணத்திற்கு முண்டாகலிற் குணமெனப்படாது; உளதெனினது பண் பாயடங்கும். அதனற்பொருட்கட்கிடந்து தனக்கோர்குணமின்றித் தொழி லின்வேறுய குணத்தினன்மைமுதலாயின வேறெனப்படும். பண்பெனினுங் குணமெனினுமொக்கும். இக்கருத்தேபற்றியன்றே யாசிரிய ரின்மையுமுண் மையுமுணர்த்துஞ்சொற்களை முடிப்பாராயிற்றென்பது. என்னகிளவியுமென் றது அன்னபிறவுமெனப்பட்டவற்றையேயாகக்கொள்க. குறிப்பேகாலமென்ற வழிக் குறிப்பென்பது குறிக்கப்படுவதனை. அன்னபிறவுமென்றதனன் நல்ல ன்-நல்லள்-நல்லர், தீயன்-தீயள்-தீயர், உடையன்-உடையள்-உடையர் - என வித் தொடக்கத்தனவெல்லாங்கொள்க. (௧௭)

௨௧௨. பன்மையுமொருமையும் பாலறிவந்த, வன்னமரபிற்குறி
ப்பொடுவரூஉங், காலக்கிளவி யுயர்திணைமருங்கின், மே
லைகிளவியொடு வேறுபாடிலவே.

பன்மையுமொருமையுமாகிய பால்விளக்கிக் குறிப்புப்பொருண்மையையு டையவாய்வரும் வினைசொன் மேல்வருமுயர்திணைக்கட்கூறிய தெரிநிலைவி னையொடொகரும்-எ - று. தெரிநிலைவினையொடொத்தலாவது உயர்திணைத்தெ ரிநிலைவினைக்கோதியவிற்றுட் டமகேறபனவற்றொடு வினைக்குறிப்புவந்தவழி யவ்வவ்வீற்று னவ்வப்பாலு மிடமும்விளக்கலாம். மேல்வினைக்குறிப்பின்ன பொருள்பற்றிவருமென்றதல்ல தின்னவீறுமின்னபால் விளக்குமென்றிலர தனுனஃதீண்டுக்கூறினுர். கூறப்பட்ட பொருட்கண்வருதனவாயினும் இல்லை, இல், இன்றி-என்பன பாலவிளக்காமையி னவற்றைநீக்குதற்குப் பன்மை யுமொருமையும் பாலறிவந்தவெனமுர். ஒருபொருட்கட் பலவாய்பாடுமொரு பொருட்க ணொருவாய்பாடும்பற்றிவரு மிருதிறமுமெஞ்சாமற்றழுவுதற் கன் னமரபினென்முர். தனமையும் படர்க்கையுமுணாத்துந் தெரிநிலைவினையீற்றுட் குறிப்புவினைசேறபன அம், ஆம், எம், ஏம், என், ஏன-என்னுந தன்மையீரு றும், அன், ஆன், அள், ஆள், அர், ஆர்-என்றும் படர்க்கையீருறுமெனப் பன்னி ரண்டாம். கரியம்-கரியாம்-கரியெம்-கரியேம்-கரியென்-கரியேன்-எ-ம், கரிய ன்-கரியான்-கரியள்-கரியாள்-கரியர்-கரியார்-எ-ம்- அவ்வவ்வீறவ்வவ்விடமும் பாலும் விளக்கியவாறு கண்டுகொள்க. ஒழிந்தபொருட்கண்ணு மொட்டிக கொள்க. ஆன், ஆள், ஆர்-என்பன நிலபொருண்மைக்கணல்லது பிறபொரு ட்கட்பயின்றுவரா. இன்னுமேலைக்கிளவியொடு வேறுபாடில என்றதனுன்வந தனனெனத் தெரிநிலைவினைத்தொழின்மைமேற்படத் தொழிலுடைப்பொரு ள்கீழ்ப்பட முற்றுய்நின் றுணாத்தியவாறுபோல உடையனெனக் குறிப்புவி னையும் உடைமைமேற்பட உடையான் கீழ்ப்படமுற்றுய்நின் றுணர்த்துதலுங் கொள்க. வந்தான், உடையான-எனப் பெயராயவழித் தொழிலுடைப்பொரு ளுமுடைமையானு மேற்பட்டுத்தோன்றுமாறறிக. இஃதஃறிணைமருங்கின் மே லைக்கிளவியொடு வேறுபாடிலவே யெனபதற்குமொக்கும். (௧௮)

௨௧௩. அ ஆ வ எனவரூஉமிறுதி யப்பான்மூன்றே பலவற்றுப்
படர்க்கை.

உயர்திணைவினையுணர்த்தி யினி யஃறிணைவினை யுணர்த்துகின்முர். அக ரமுமாகாரமும் வகரவுயிர் மெய்யுமாகிய வீற்றையுடையவக்கூறுமூன்று மஃ றிணைப் பன்மைப் படர்க்கையாம் - எ - று. அகர மூன்றுகாலமும்பற்றிவ ரும். ஆகாரமெதிர்மறைவினையாய் மூன்றுகாலத்திற்கு முரித்தாயினு மெதிர் காலத்துப்பயின்றுவரும். அகரமிறந்த காலம்பற்றிவருங்கால் கடதறவென்னு நான்கன்முன் அன்பெற்றும் பெருதும்வரும். ஏனையெழுத்தின்முன் ஙகார மூகாரமொழித் தின்பெற்றுவரும். யகரத்தின்முன் சிறுபான்மையின்னே யன்றி யன்பெற்றும்பெருதும்வரும். நிகழ்காலத்தின்க ணில்கின்றென்பன

வற்றொடன்பெற்றும் பெறாதும்வரும். எதிர்காலத்தின்கண் பகரவகரத்தொடன்பெற்றும் பெறாதும் வரும். தொக்கன-தொக்க-உண்டன - உண்ட- வந்தன-வந்த-சென்றன-சென்ற-எ-ம், அஞ்சின-போயின-போயன-போய-எ-ம், உண்ணாநின்றன-உண்ணாநின்ற-உண்கின்றன-உண்கின்ற-எ-ம், உண்பன - உண்ப-வருவன-வருவ-எ-ம் வரும். உரிஞுவன-உரிஞுவ-என வுகரத்தொடேனையெழுத்துப்பேறு மேற்றவழிக்கொள்க. வருவ - செல்வ- என்னுந் தொடக்கத்தன அகரவீறுதலும், வகரவீறுதலு"முடையவென்பது இளவியாக்கத்துட்கூறினும். ஆகாரம் காலவெழுத்துப்பெறாது உண்ணா-தின்னா-எனவரும். வகரம் உண்குவ-தின்குவ-எனவெதிர்காலத்திற் "குரித்தாய்க்குகரமடுத்துநிற்கும்." ஓடுவ-பாடுவ-எனக்குகரமடாதும்வரும். உரிஞுவ-திரும்வ-எனவுகரம் பெறுதலுமேற்றவழிக் கொள்க. ஒழிந்தவெழுத்தொடு மொட்டிக்கொள்க. (௧௯)

௨௧௪. "ஒன்றன்படர்க்கை தறடவூர்ந்த, குன்றியலுகரத் திறுதி யாகும்.

ஒன்றனையுணர்த்தும் படர்க்கைவினையாவது தறடவென்பனவற்றையூர்ந்துநின்ற குற்றியலுகரத்தை யீறாகவுடையசொல்லாம் - எ - று. தகரவுகர மூன்றுகாலத்திற்குமுரித்து. றகரவுகரமிறந்தகாலத்திற்குரித்து. டகரவுகர மூன்றுகாலத்திற்கு முரியவினைக்குறிப்பிற்கல்லது வாராது. அஃதேல் வினைக்குறிப்புக்கூறும்வழிக்கூறா தீண்டுக்கூறியதென்னெனின் அஃறிணை மருங்கின் மேலைக்கிளவியொடு வேறுபாடிலவென வினைக்குறிப்பா லுணர்த்துமாறு தெரிநிலைவினையொடு மாட்டெறியப்படுமாகலின் டகரமூர்ந்த குற்றியலுகரந் தெரிநிலைவினைக்கீறாகாமையின் மாட்டேற்றுவகையாற் பாலுணர்த்துதல் பெறப்படாதா மதனானீண்டுவைத்தார். தகரவுகரமிறந்த காலத்து வருங்கால் புக்கது-உண்டது-வந்தது-சென்றது-போயது- உரிஞியது - எனக்கடதறவும் யகரமுமாகிய வுயிர்மெய்ப்பின்வரும். போனதென னகரவுயிர்மெய்ப்பின் வருவதோவெனின் அதுசான்றோர் செய்யுளுள்வாராமையி னதுசிதைவெனப்படும். நிகழ்காலத்தின்கண் நடவாநின்றது-நடக்கின்றது - உண்ணாநின்றது-உண்கின்றதுஎனநில்கின்றென்பனவற்றொடு டகரம்பெற்றுவரும். எதிர்காலத்தின்கண் உண்பது-செல்வது-எனப்பகரவகரம்பெற்றுவரும். றகரவுகரம்புக்கன்று - உண்டன்று - வந்தன்று - சென்றன்று எனக் கடதறவென்பனவற்றின் முன் அன்பெற்றுவரும். கூயின்று-கூயிற்று - போயின்று - போயிற்று - என வேனையெழுத்தின்முன் இன்பெற்றுவரும். ஆண்டின்னி னகரந்திரிந்துந் திரியாதும் வருதல்கொள்க. வந்தின்றென்பதோவெனின் அஃதெதிர்மறுத்தலையுணர்த்துதற்குவந்த இல்லினது லகரம் னகரமாய்த்திரிந்த வெதிர்மறைவினையெனமறுக்க. அஃதெதிர்மறையாதல் வந்தில-வந்திலன் - வந்திலள் - வந்திலர்-எனவரு மேனைப்பாற்சொல்லானறிக. டகரவுகரம் குண்டுகட்டு - குறுந்தாட்டெனவரும். (௨௦)

௨௧௫. பன்மையுமொருமையும் பாலறிவந்த, வம்மூவிரண்டு மஃறிணையவ்வே.

பன்மையுமொருமைபமாகிய பாலறியவந்த வவ்வாறிறருச்சொல்லு மஃறிணையனவாம் - எ - று. பன்மையுமொருமையும் பாலறிவந்த வென்பதற்கு முன்னுரைத்தாங்குரைக்க. இதனாற்பயன் அஃறிணைச்சொல்லாறே பிறிதில்லையென வரையறுத்தலெனக்கொள்க. (௨௧)

௨௧௬. அத்திணைமருங்கி னிருபாற்கிளவிக்கு, மொக்குமென்ப வெவனென்விறுவே.

எவனென்னும் வினாச்சொன் மேறகூறப்பட்ட வஃறிணையிரண்டு பாற்கு முரித்தென்றுசொல்லுவ ராசிரியர் - எ-று. அஃதெவன்-அவைவெவன் என வரும். னகரவீற்ற யிரண்டுபாற்கும் பொதுவாய்வருதலி னிதனைவேறுகூறினார் அஃதேல் நுமக்கிவன் எவனுமென வுயர்திணைக்கண்ணும் வருமாலெனின் ஆண்டுஅதுமுறைபற்றிநிற்றலி னஃறிணைக்கண்வந்ததெனவே படுமென்பது. அஃதேல் நுமக்கிவனென்னமுறையருமென்பதல்ல தென்ன முறையாமென்பது பொருந்தாதெனின் என்னமுறை யென்ப தாண்டுமுறைமேனில்லாதொறறுமை நயத்தான் முறையுடையான் மேனிற்றலினமையுமென்க. எவனென்பதோர்பெயருமுண் டஃதிக்காலத்தென்னென்று மென்னையென்றுநிற்கும். ஈண்டுக்கூறப் பட்டது வினைக்குறிப்பு முற்றென்க. (௨௨)

௨௧௭. இன்றிலவுடைய வென்னுங்கிளவியு, மன் றுடைத்தல்ல வென்னுங்கிளவியும், பண்புகொள்கிளவியு முளவென் கிளவியும், பண்பினாகிய சினைமுதற்கிளவியு, மொப்பொ டுவரூஉங் கிளவியொடு தொகைஇ,யப்பாற்பத்துங் குறிப் பொடுகொள்ளும்.

இன்று இல என்பன முதலாகியபத்தும் வினைக்குறிப்புச்சொல்லாம் - எ-று, அவற்றுள் இன்று-இல-உடைய-அன்று- உடைத்து-அல்ல - உள - என் பனதம்மையுணர்த்திநின்றன. அல்லனபொருளுணர்த்திநின்றன, இன்று-இல-கோடுடைத்து-கோடுடைய-அதுவன்று-அவையல்ல - உள-எனவரும். ஈண்டுங் கோடின்று-கோடில எனவுடைமைக்கு மறுதலையாய வின்மைபற்றி வருவன வுங்கொள்க, உடையவென்பது முதலாயவற்றைச் செய்யுளின்பநோக்கி மய க்கக்கூறினார், அவ்வேழனையும் பொருள்பற்றி யோதாராயினார் இளங்கோதி யவழிச் சூத்திரஞ் சுருங்கா வாகலானென்பது. உளதென்பது பெருவழக இற்றன்மையி னுளவென்பதேகூறினார், அதுவன்மினமுடிந்த லென்பதனாற் கொள்ளப்படும், பண்புகொள்கிளவி-கரிது-கரிய-செய்யது-செய்ய-எனவரும். பண்பினாகிய சினைமுதற்கிளவி - நெடுஞ்செவித்து - நெடுஞ்செவிய -எனவரும். பண்படுத்த சினைபற்றியல்ல தவ்வினைக்குறிப்பு நில்லாமையிற் பண்பினாகிய வெனப் பண்பை முதனிலையாகக்கூறினார். பெருந்தோளனென உயர்திணைக் கண்ணும் பண்படுத்துவருதலொன்றென முடித்தலென்பதனாற்கொள்க. வேற் றுமைப்பொருள் பற்றிவருங்காற் பிறிதின்கிழமையும் உறுப்பின்கிழமையல்லா த்தற்கிழமையும், ஏழாம்வேற்றுமைப் பொருண்மையும்பற்றி யஃறிணைவினைக்

குறிப்புப் பயின்றுவாராமையிற் சினைக்கிழமையேகூறினார். அப்பொருள்பற்றிப் பயிலாதுவருவன வுரையிற்கொள்ளப்படும். சிறப்புடைப்பொருளைத் தானினிதுகிளத்தலென்பதனாற் கொள்ளினுமமையும். அறிந்தமர்க்கட்டாருகதில்ல-மெல்விரன் மந்தி குறைகூறுஞ்செம்மற்றே - எ-ம், அணித்தோ சேய்த்தோ கூறுமினெமக்கே - எ-ம் வரும். வடாது-தெனாது-என்பனவு மேழாம்வேற்றுமைப்பொருண்மைக்கண்வந்த வினைக்குறிப்புப்பெயருமாம். ஒப்பொடுவருங்கிளவி-பொன்னன்னது-பொன்னன்ன-எனவரும். ஒப்பொடுவருதலாவது பொருள்பற்றிவருதல். வழக்குப்பயிற்சிநோக்கிப் பத்தெனவரையறுத்தவாறு. ()

௨௧௮. பன்மையுமொருமையும் பாலறிவந்த, வன்னமரபிற்குறிப்பொடுவருஉங், காலக்கிளவி யஃறிணைமருங்கின்,மேலைக்கிளவியொடு வேறுபாடிலவே.

பன்மையுமொருமையுமாகிய பால்விளக்கிக் குறிப்புப்பொருள்பற்றிவரும்வினைச்சொன் மேற்கூறப்பட்ட வஃறிணைவினையொடொக்கும் - எ-று. வாய்பாடுபற்றியும் பொருள்பற்றியும்வருங் கூறியவிருவகையு மெஞ்சாமற்றழுவுதற் கன்னமரபினென்றார். ஒத்தலாவ தஃறிணைவினைக்கோதிய வீற்றுட்பொருந்துவன வினைக்குறிப்பின்கண்வருங்காலு மவ்வீற்றானவ்விடமுங் காலமும் விளக்குதல். பொருந்துவனவாவன ஆகாரமும் வகாரமுமொழித்துக் குற்றுகரமூன்று மகரமுமாம். அவற்றுட் டகரமூர்ந்த குற்றுகரமொன்றன் படர்க்கையென்புழிக் கூறுதலானொழிந்த மூன்றுமீண்டுக்கொள்ளப்படும். இவையப்பால்விளக்குதன் மேற்காட்டப்பட்டனவற்றுட் கண்டுகொள்க. (௨௪)

௨௧௯. முன்னிலைவியங்கோள் வினையெஞ்சுகிளவி, யின்மைசெப்பல்வேறென்கிளவி, செய்ம்மனசெய்யுஞ் செய்தவென்னு, மம்முறைநின்ற வாயெண்கிளவியும், பிரிபுவேறுபடூஉஞ் செய்தியவாகி, யிருதிணைச்சொற்கு மோரன்னவுரிமைய.

முன்னிலைமுதலாகச் செய்தவென்பதீறாகக்கூறிய முறையானின்ற வெட்டுச்சொல்லும் பொதுமையிற்பிரிந் தொருகாலுயர்திணையுணர்த்தியு மொருகாலஃறிணையுணர்த்தியும் வேறுபடுந்தொழிலையுடையவா யிருதிணைச்சொல்லாதற்கு மொத்தவுரிமைய - எ - று. முன்னிலைவினைச்சொல்லாவது எதிர்முகமாய்நின்றான் றொழிலுணர்த்துவது. வியங்கோளேவற்பொருட்டாய் வருவது; வாழ்த்துதன்முதலாகிய பிறபொருளுமுடைத்தாகலி னிக்குறிமிகுதிநோக்கிச் சென்ற குறியெனவுணர்க. வினையெஞ்சுகிளவி வினையையொழிபாக வுடைய வினை. இன்மைசெப்பல் இல்லை-இல்-என்பன. வேறென்பது தன்னையுணர்த்தி நின்றது. செய்ம்மனவென்பது மனவீற்றுமுற்றா யெதிர்காலமுணர்த்தும். செய்யுமென்பது முற்றுமெச்சமுமாகிய விருநிலைமையுமுடைத்தா யும்மீற்றானிகழ் காலமுணர்த்தும். செய்தவென்பது அகரவீற்றெச்சமா யிறந்தகாலமுணர்த்

தும். செய்ம்மனமுதலாகிய மூன்றுவாய்பாட்டானு மவ்வவ்வீற்றவாய்க்காலமுணர்த்தும் உண்மன, உண்ணும், உண்ட-என்னுந் தொடக்கத்தனவெல்லாந் தழுவப்பட்டன. அவற்றா னவைதழுவப்பட்டவாறென்னையெனின் - எல்லாத்தொழிலுஞ் செய்தல்வேறுபாடாகலிற் பொதுவாகியசெய்த லெல்லாத்தொழிலையுமகப்படுத்துநிற்குமதனா னவற்றானவை தழுவப்படுமென்க. அவைபொதுவுஞ்சிறப்புமல்லவேல் என்செய்யாநின்றானென்று வினாயவழி உண்ணாநின்றானெனச் செப்புதலியையாதாமென்க. இதுசெய்து செய்பென்பனவற்றிற்கு மொக்கும். அஃதேற்சிலவற்றை யீற்றானுணர்த்திச் சிலவற்றை வாய்பாட்டானுணர்த்தியதென்னையெனின் அம்மீறு மன்னீறு மையீறு முதலாகிய சொற்கள் காலப்பன்மையான்வரும் வாய்பாட்டுப்பன்மையாற் சூத்திரம்பெருகுமென்றஞ்சி அவற்றையீற்றானுணர்த்திக் காலவேறுபா டிலசொற்கொள்ளவைத்தார். அக்காலப்பன்மையில்லனவற்றை வாய்பாட்டானு முணர்த்துமவ்வீற்றானுமுணர்த்துப. முற்றாதலும் பலவாய்பாட்டாற் பயின்றுவருதலு முடைமையான் முன்னிலைவினையைமுன்வைத்தார். ஏவற்பொருண்மை முன்னிலைக்கண்ணுமுண்மையிற் பொருளியை புடைத்தாகலானும், இடங்குறித்து முற்றாய்வருதலொப்புமையானும் அதன்பின்வியங்கோள்வைத்தார். அதன்பின் முற்றாதலொப்புமையா னின்மைசெப்பல், வேறென்கிளவி, செய்ம்மன என்பனவற்றை வைத்தன்முறைமையானும், முற்றின்கண் வினையெச்சமுண்மையானும், ஈற்றுப்பன்மையொடு பயின்றுவருதலானும் வினையெச்சம்வைத்தார். இன்மைபற்றிவரும் வினையெச்சமுமுண்மையா னதனொடியையவின்மைசெப்பல் வைத்தார். வினைக்குறிப்பாத லொப்புமையானும், செய்ம்மனவிற் பயிற்சியுடைமையானு மதன்பின் வேறென்கிளவிவைத்தா. முற்றாதலொப்புமையா னதன்பின் செய்ம்மனவைத்தார். முற்றுநிலைமையு முடைத்தாகலி னதன்பின் செய்யுமென்பதனைவைத்தார். பெயரெச்சமாதலொப்புமையா னதன்பின்செய்தவென்பதனைவைத்தார். இவ்வாறியைபுபற்றிவைத்தமையா னமுறைநின்றவென்றார். பிரிபுவேறுபடூஉஞ் செய்தியவாகியெனவே வேறுவேறுணர்த்தினல்லதொருசொல்சொல்லுதற்க ணிருதிணையு முணர்த்தாமைபெறுதும். (௨௫)

௨௨௦. அவற்றுண், முன்னிலைக்கிளவி, இ ஐ ஆயென வரூஉ
மூன்று,மொப்பத்தோன்றுமொருவர்க்குமொன்றற்கும்.

கூறப்பட்டவிரவுவினைகளுண் முன்னிலைச்சொலிகரவீறு மைகாரவீறுமாயீறுமாகியமூன்று மொருவற்கு மொருத்திக்கு மொன்றற்குமொப்பச்செல்லும். எ-று. முன்னிலைக்கிளவியென்பதற்குமுடிபு அவைதாமம்மா மெம்மேமென்புழியவைதாமெனபதற்குரைத்தாங்குரைக்க. இகரந்தடறவூர்ந்தெதிர்காலம்பற்றிவரும். ஐகாரமம்மீறறிற்குரியவெழுத்துப்பெற்றும், ஆயீறுமீற்றிற்குரியவெழுத்துப்பெற்றுமூன்றுகாலமும்பற்றிவரும். உ-ம். உரைத்தி-உண்டி-தின்றி-எ-ம், உண்டனை-உண்ணாநின்றனை-உண்பை-எ-ம். உண்டாய்- உண்ணாநின்றாய்-உண்பாய்-எ-ம்வரும். ஒழிந்தவெழுத்தொடுமொட்டிக்கொள்க. ஐயசிறிதென்னையூக்கியெனஇகரஞ்சிறுபான்மை ககரம்பெற்றுவரும். உண்- தின்-இட-கி

டு-என்னுந்தொடக்கத்து முன்னிலையொருமைபெறுமாறென்னையெனின் அவை ஆயீருதலெச்சவியலுட்பெறப்படுமென்க. (௨௬)

௨௨௧. இர் ஈர் மின்னெனவரூஉமூன்றும், பல்லோர்மருங்கினும் பலவற்றுமருங்கினுஞ், சொல்லோரனைய வென்மனார் புலவர்.

இர்-ஈர்-மின்னென்றுமீற்றையுடைய மூன்றுசொல்லும்பல்லோர்கண்ணும் பலவற்றின்கண்ணுஞ்சொல்லுதற்கொத்தவுரிமைய- எ-று. இர்ஈறு அர் ஈற்றிற்குரிய வெழுத்துப்பெறறும் ஈரீறுஆரீற்றிற்குரிய வெழுத்துப்பெற்று மூன்றுகாலமும்பற்றிவரும். மின்னீறுபிறவெழுத்துப்பெறாதேறறவழியுகரம் பெற்றெதிர்காலம் பற்றிவரும். உ-ம். உண்டனிர்-உண்ணாநின்றனிர்-உண்குவிர்-எ-ம், உண்டீர்-உண்ணாநின்றீர்-உண்குவீர்-எ-ம், உண்மின் - தின்மின்-உரிஞுமின்-எ-ம் வரும். ஒழிந்தவெழுத்தொடு மொட்டிக்கொள்க. முன்னிலை வினைக்குறிப்புயர்திணை வினைக்குறிப்பிற்கோதிய பொருள்பற்றி யைகாரமுமாயுமிருவுமீருமென்னு நான்கீற்றவாய்க் கழலினை-நாட்டை-பொன்னன்னை - கரியை-எ-ம் கழலினாய்-நாட்டாய்-பொன்னன்னாய் - கரியாய்-எ-ம், கழலினிர் - நாட்டினிர், பொன்னன்னிர்-கரியிர்-எம், கழலினீர்-நாட்டினீர்-பொன்னன்னீர்-கரியீர்-எம் வரும். ஒழிந்தபொருளொடு மொட்டிக்கொள்க. போறியெனவிகாரவீற்றுவினைக்குறிப்புமுண்டாலெனின் போன்றனை-போன்றனை-என்பனபோலவந்து தெரிநிலைவினையாய்நின்றதெனமறுக்க. உயர்திணைவினைக்குறிப்புமுயர்திணைவினைக்குறிப்பிற்கோதியபொருள்பற்றிவருதலினவற்றை யெடுத்தோதிற்றென்னையெனின்-அன்மைமுதலாயின-பொருள்பற்றிவந்தனவெனக்கிளந்தோதலாற் சுருக்கத்தவகையானும், பின்முற்றிகளவிபண்பு மடுத்துவருதலுயர்திணை யதிகாரத்துப்பெறப்படாமையானு மவற்றையோதுவாரேனைப்பொருளுமுடனோதினார் முன்னிலைவினைக்குறிப்புப் பலவாதலாறும், எடுத்தோதா வழிப்படுவதோர்குறைபாடின்மையானுமிவற்றையத்துணரவைத்தாரென்பது. அல்லதெடுத்தோதில்வழியுய்த்துணர்வதெனினு மமையும் முன்னிலைவினையீற்று னெதிர்காலம் பற்றிவருமிகாத்தையுமின்னையுமுதலு மிறுதியும்வைத்து மூன்றுகாலமும்பற்றி வருநான்கீற்றையுந் தம்முளியையவிடைவைத்தார். அல்லது பொருண்மை கருதாது சூத்திரயாப்பிற்கேற்பவைத்தாரெனினுமமையும். (௨௭)

௨௨௨. எஞ்சியகிளவி யிடத்தொடுசிவணி, யைம்பாற்குமுரிய தோன்றலாறே.

முன்னிலைவினையொழித்தொழிந்தவேழுவினைச்சொல்லு மூன்றிடத்துக்குமைந்துபாற்குமுரிய தத்தம்பொருட்கட்டோன்றுமிடத்து. எ - று. இவ்வாறு பொதுவகையானெல்லாவிடத்தொடு மெல்லாப்பாற்குமுரியவாதலெய்தினவெனினு முன்னர்விலக்கப்படுவனவொழித் தொழிந்தவிடமும் பாலும்பற்றிவருமாறீண்டுக்காட்டப்படும். உ-ம்-அவன்செல்க - அவள்செல்க - அவர்செல்க-அது செல்க-அவைசெல்க-எ-ம், உழுதுவந்தேன்-உழுதுவந்தேம் - உழுதுவந்தாய்-உழுதுவந்தீர் - உழுதுவந்தான் - உழுதுவந்தாள் - உழுதுவந்தார் - உழுதுவந்த

து - உழுதுவந்தன-எ-ம், யானில்லை-யாமில்லை-நீயில்லை-நீயிரில்லை- அவனில்லை-அவளில்லை - அவரில்லை - அதுவில்லை - அவையில்லை - எ-ம், யான்வேறு - யாம் வேறு - நீவேறு - நீயிர்வேறு - அவன்வேறு - அவள்வேறு - அவர்வேறு அதுவேறு- அவைவேறு - எ-ம், யானுண்மன - யாமுண்மன - நீயுண்மன - நீயிருண்மன - அவனுண்மன - அவளுண்மன - அவருண்மன - அதுவுண்மன-அவையுண்மன - எம், யானுண்ணுமூண் - யாமுண்ணுமூண் - நீயுண்ணுமூண்-நீயிருண்ணுமூண் - அவனுண்ணுமூண் - அவளுண்ணுமூண் - அவருண்ணுமூண்-அதுவுண்ணுமூண் - அவையுண்ணுமூண் - எ - ம், அவன்வரும் - அவள்வரும்-அதுவரும் - அவைவரும் - எ-ம். யானுண்டவூண் - யாமுண்டவூண் - நீயுண்டவூண் - நீயிருண்டவூண் - அவனுண்டவூண் - அவளுண்டவூண் - அவருண்டவூண்-அதுவுண்டவூண் - அவையுண்டவூண்-எனவரும். (உஅ)

உஉகூ. அவற்றுள், முன்னிலைதன்மை யாயிரிடத்தொடு, மன்னுதாகும் வியங்கோடகிளவி.

மேலெஞ்சிய கிளவியென்னப்பட்ட வேறுளவியங்கோட்கிளவி முன்னிலையுந்தன்மையுமாகிய விரண்டிடத்தொடு நிலைபெருதாம் - எ - று. ஆயிரிடத்தொடு கொள்ளாதென்னுது மன்னுதாகுமென்றதனு னவ்விடத்தொடு சிறுபான்மை வருதல்கொள்க. மன்னுதல் பெரும்பான்மையுநிகழ்தல். சிறுபான்மைவருவன நீவாழகவென்னும் வாழத்துதற்பொருண்மைக்கண்ணும், யானுநின்னொடுடனுறைக வென்னும் வேண்டிக்கோடற் பொருண்மைக்கண்ணும் வருவனவாம். கடாவுகபாக நின்கால்வன்னெடுந்தேரே யென்பதும் - வேண்டிக்கோடற் பொருண்மைக் கண்வந்ததாம். தன்மைக்கணேவலில்லை முன்னிலைக்கண்வருவதுண்டேற் கண்டுகொள்க. அஃதேல்வியஙகோளீறுகூருராயிற றென்னையெனின் எழுத்தோத்தினுள் ஏவல்கண்ணிய வியங்கோட்கிளவியுமென அகரவீற்றுளெடுத்தலாற பொருந்தியமெய்யூர்நதகரவீருய்வருதலும், செப்பும்விளுவும்வழாஅலோம்பல் - எ-ம், சொல்லனாந்தறியப்பிரித்தனர் காட்டல்-எ-ம், மறைகருங்சாலைமரீஇயதொராஅல்-எ-ம், உடம்பொடு புணர்த்தலானல்லீருய் வருதலும், ஆலீருய்வருதலும் பெறுதலின் வியங்கோளீறுங்கூறினுரொன வேபடும்-பிறவுமுளவேறகொள்க. (உக)

உஉசு. பல்லோர்படர்க்கை முன்னிலைதன்மை, யவ்வயின் மூன்று நிகழுங்காலத்துச், செய்யுமென்னுங் கிளவியொடு கொள்ளா.

பல்லோர்படர்க்கையுமுன்னிலையுந்தன்மையுமாகிய வவ்வயின் மூன்றுநிகழுங்காலத்து வருஞ்செய்யுமென்னுஞ் சொல்லொடுபொருநதா எ - று. அவ்வயினென்றதிடமும் பாலுமாகிய வெஞ்சியகிளவிக்குரியபொருட்க ணென்றவாறு நிகழுங்காலத்துச் செய்யுமென்னுங் கிளவியொடென் றதனுற்றேன்றுங்காலமுணர்த்தியவாறு. இவையிரண்டுசூத்திரமும் பொதுவகையானெய்தியனவற்றை விலக்கின்றன. (ஙO)

௨௨௫. செய்துசெய்யூச் செய்புசெய்தெனச், செய்யியர்செய்யி
ய செயின்செயச்செயற்கென, வவ்வகையொன்பதும்
வினையெஞ்சுகிளவி.

பொருவகையானெய்தியவற்றுள்வியங்கோட்கிளவிக்குஞ்செய்யுமென்னுங்கிளவிக்குமெய்தாதனவிலக்கி இனிநிறுத்தமுறையானே வினையெச்சத்தினதுபாகுபாடுணர்த்துகின்றார். செய்தென்பதுமுதலாகச்சொல்லப்பட்டவொன்பதும் வினையெச்சமாம். எ-று. அவ்வகையொன்பதுமென்றது இறுதிநின்றவிடைச்சொல்லான் வேறுபட்டவொன்பதுமென்றவாறு. அவ்விடைச்சொலாவனஉகரமுமூகாரமும் பகரமுமெனவுமியருமியவுமின்னுமகரமுங்குகரமுமாம். செய்கென்கிளவிவினையொடுமுடியினும்-எ-ம், செய்யாவென்னுமுன்னிலைவினைச்சொல்-எ-ம்-இறுதியிடைச்சொலேற்றவாற்றாற்பிரித்துணரவாய்பாடோதினாற்போல ஏற்றவாற்றா னிறுதியிடைச்சொற்பிரித்துணர்ந்துகொள்ள வீண்டும்வாய்பாடுபற்றியோதினார். உகரங்கடதறவூர்ந்தியல்பாயும்,ஏனையெழுத்தூர்ந்திகரமாய்த்திரிந்தும்,நெடிலீற்றுமுதனிலைமுன்னர்யகரம்வரத்தான்கெட்டும்இறந்தகாலம்பற்றிவரும்.இவ்வுகரவீறிகரமாதலும்,யகரம்வரக்கெடுதலும்வினையெஞ்சுகிளவியும்வேறுபலகுறிய என்பதனாற்பெறப்படும். நக்கு-உண்டு-வந்து-சென்று - எ-ம்,எஞ்சி - உரிஞி-ஓடி-எ-ம், ஆய்-போய்-எ-ம்வரும். சினைஇ-உரைஇ-இரீஇ-உடீஇ - பராய்-தாய்-தூயென்பனவோவெனின் அவைசெய்யுண்முடிபென்க. ஆகி-போகி-ஓடி-மலர்த்தி-ஆற்றி-எஞ்சி-என்புழிமுதனிலை குற்றுகரவீற்றுதலினேனையெழுத்தாதலறிக. கடதறஎன்பனகுற்றுகரத்தொடுவரு மிடமுந்தனிமெய்யாய்வருமிடமுந்தெரிந்துணர்க. அஃதேல்-ஆய்-என்பதனை யகரவீறென்றும, ஓடி-என்பதனை இகரவீறென்றுங்கொள்ளா துகரவீறென்றதென்னையெனின் நன்றுசொன்னாய்-இகரவிறுதியிடைச்சொலாயினிறுதியிடைச்சொலெல்லாத்தொழிலும்பற்றிவருதலிற் செலவுவரவென்பனவற்றொடும்வரவேண்டும். இனிச்செய்தெனெச்சத்துகரமிறுதியிடைச்சொலாகலின்ஆகுத லோடுதலென்னுந்தொழில்பற்றியும்வரவேண்டும். செலவுவரவுபற்றியிகரம் வாராமையானும்,ஆகுதலோடுதலபற்றியுகரம்வாராமையானும் இறுதியிடைச்சொலிகரமேயாகவுகரமேயாகவொன்றாவதல்லதிரண்டெனப்படாதாம். உகரமொன்றாய்நின்றுகடதறவூர்ந்தவிதிவினைக்கட்பயின்றுவருதலானும், எதிர்மறையெச்சமெல்லாம்பெரும்பான்மையுமுகரவீறாயல்லதுவாராமையானும் உகரமியல்பாகவிகரந்தன்றிரிபென்றலே முறைமையென்க. யகரவீற்றிற்குமிஃதொக்கும். ஊகாரம் உண்ணூவந்தான்-தின்னூவந்தான்-எனப் பின்வருந்தொழிற் கிடையின்றி முன்வருந்தொழிலின்மே லிறந்தகாலம்பற்றிவரும்; அஃதுண்ணுவென வாகாரமாயும்வரும். பகரவுகரம் நகுபுவந்தானென நிகழகாலம்பற்றிவரும்; நகாநின்றுவந்தானென்றவாறு. ஈண்டுநிகழ்காலமென்றது முடிக்குஞ்சொல்லானுணரப்படுந்தொழிலொ டுடனிகழ்தல். உரினுபு என வுகரமும்,கற்குபு எனக்குகரமுமேற்றவழிப்பெறுதல்கொள்க. எனவென்பது கடதறவூர்ந் திறந்தகாலம்பற்றிமுடிக்குஞ்சொ லுணர்த்தப்படுந் தொழிற்குத் தன்முதனிலைத்தொழில்காரணமென்பது படவரும்; சோலைபுக்கென வெப்பநீங்கிற்று-உண்டெனப்

பசிகெட்டது-உரைத்தெனவுணர்ந்தான்- மருந்துதின்றெனப் பிணிநீங்கிற்று-எனவரும். எஞ்சியென-எ-ம், உரிஞ்சியென - எ -ம்- ஏனையெழுத்தொடுவருமாறறிந்தொட்டிக்கொள்க. இயர்-இய-என்பன வெதிர்காலம்பற்றி உண்ணியர்-தின்னியர், உண்ணிய-தின்னிய-எனவரும். போகியர்-போகிய - எனவேற்றவழிக் ககரம்பெற்றுவருதலுங்கொள்க. இன் எதிர்காலம்பற்றிக் காரணப்பொருட்டாய்வரும்; மழைபெய்யிற் குளநிறையும் - மெய்புணரின் விடெளிதாம்-எனவரும். நடப்பின்-உரைப்பின்-என வேற்றவழிப் பகரமபெற்று வருதலுங் கொள்க. அகரம்-மழைபெய்யக் குளநிறைந்தது - ஞாயிறுபடவந்தான்-உண்ணவந்தான்- என மூன்றுகாலமும்பற்றிவரும். உரைப்ப-உரைக்க-என வேற்றவழிப் பகரமுங் ககரமும் பெறுதல்கொள்க. குகரம்-உணற்குவந்தான் தினற்குவந்தான்-என வெதிர்காலம்பற்றிவரும். புகரமுங் குகரமு முகரத்தின்கண்ணும், எனவுமியல மகரத்தின்கண்ணு மடங்குமெனின் ஆரீற்றின் மாரீறடங்காமைக் குரைத்தாங்குரைக்க. மாரீறு ஆரீற்றின்கண்ணு மடங்குமென்றுரைக்க. செயற்கென்னும் வினையெச்சம் நான்கனுருபேற்றுநின்ற தொழிற்பெயரின் வேறுதல் கிளவியாக்கத்துட்கூறினும். திரியாதுநிற்கும் ஊகாரமும், புகாரமும், எனவும், இயரும், இயவுமென்று மைந்தீற்றுவினையெச்சமும் வழக்கினுளிக்காலத்து வாராவாயினுஞ் சான்றோர்செய்யுளு ளவற்றது வாய்பாட்டு வேற்றுமையெல்லாங் கண்டுகொள்க. (௩௧)

௨௨௯. பின்முன்கால்கடை வழியிடத்தென்னு, மன்னமரபிற்
காலங்கண்ணிய, வென்னகிளவியு மவற்றியல்பினவே.

பின்றுமுன்றுங்காலுங்கடையும்வழியுமிடத்துமென்னு மீற்றவாய்வருவனவு மவைபோலக் காலங்கண்ணிவருவன பிறவும் வினையெச்சமாம்-எ-று. நீயிர்பொய்கூறியபின் மெய்கூறுவாராயார்-எ-ம், நீயிவ்வாறுகூறுகின்றபினுரைப்பதுண்டோ - எ-ம்-பின்னிறப்பு நிகழ்வும்பற்றியும், மருந்துதின்று முன்னோய் தீர்ந்ததென முன்னிறந்தகாலம்பற்றியும், வலனுகவினையென்றுவணங்கி நாம்விடுத்தக்கால்-எ-ம், அகன்றவர் திறத்தினிநாடுங்கால்-எ-ம்- காலீறு மூன்றுகாலமும்பற்றியும், தொடர்கூரத்துவாமைவர்தக்கடை எனக் கடையீறிறந்தகாலம்பற்றியும், உரைத்தவழி-உரைக்கும்வழி, உரைத்தவிடத்து- உரைக்குமிடத்து-என வழியென்னுமீறு மிடத்தென்னுமீறு மூன்றுகாலமும்பற்றியும்வரும். கால்வழியிடத்தென்பனவற்றி . னிகழ்காலத்துவாய்பாடெதிர்காலத்துக்குமேற்றலறிக. கூதிர்போயபின்வந்தார் - எ - ம், நின்றவிடத்துநின்றார் - எ-ம் பின்முதலாயின பெயரொச்சத்தொடும்வந்தவழியிறப்புமுதலாகிய காலங்கண்ணுமையி னவற்றைநீக்குதற்குக் காலங்கண்ணியவென்றார். காலவேறுபாட்டான்வரும் வாய்பாட்டுப்பன்மையெல்லா மொருவாய்பாட்டாற் றழுவலாசாமையி னிவறறையீறுபற்றியோதினார். அன்னமரபிற் காலங்கண்ணியவென்ன கிளவியுமென்றதனான்-உண்பாக்கு-வேபாக்கு எனவரும் பாக்கீறும், உண்பான் வருவானென்னுமானீறும், நனவிற்புணர்ச்சிநடக்கலுமாங்கேயென்றுமும்மீறும். அற்றுலளவறிந்துண்கவென்னு மாலீறும், எதிர்மறைபற்றிக் கூறு

மறகுறித்ததன்மேற்செல்லுமெனவரு மல்லீறும், கூர்மைநோக்கிக் குறிப்பறிவானென்னு மகரவைகாரவீறுங்கொள்க. என்னகிளவியுமென்றதனான் இன்றி-அன்றி-அல்லது - அல்லால் - எனவருங் குறிப்புவினையெச்சமுங்கொள்க. பிறவுமன்ன. (௩௨)

௨௨௭. அவற்றுண், முதனிலைமூன்றும் வினைமுதன்முடிபின.

மேற்சொல்லப்பட்ட பதினைந்துவினையெச்சத்துள் முதற்கணின்றசெய்து செய்யூச்செய்பு என்னுமூன்றுந் தம்வினைமுதல்வினையான் முடியும்-எ-று. உண்டுவந்தான்-உண்ணூவந்தான்- உண்குபுவந்தான்-எ-ம், கற்றுவல்லனாயினான்-கல்லூவல்லனாயினான்-கற்குபுவல்லனாயினான்-எ-ம் வரும். உரற்கால்யானையொடித்துண்டெஞ்சியயாஅவிளை நீழற்றுஞ்சுமெனச்செய்தெனெச்சம் வினைமுதல்வினையல்லா வினையான்முடிந்ததாலெனின் அது வினையெஞ்சுகிளவியும் வேறுபலகுறிய வென்புழிப்பெறப்படும். இதுமுன்னர் வினையெஞ்சுகிளவிக்கு வினையுங்குறிப்பு நினையத்தோன்றிய முடிபாகுமேயெனப்பொதுவகையான் முடிவனவற்றை யெதிரதுநோக்கி யிவைமூன்றும் வினைமுதன்முடிபினவென நியமித்தவாறு. அஃதேலிதனைய மாண்டேகூறுகவெனின் ஆண்டுச்செய்து செய்யூச்செய்பென்னுமூன்றுமெனக் கிளந்தோதுவதல்லது முதனிலை மூன்றுமெனத் தொகுத்தோதலாகாமையானும், ஈண்டியைபுடைத்தாகலானு மாண்டுக்கூறா தீண்டுக்கூறினானென்பது. (௩௩)

௨௨௮. அம்முக்கிளவியுஞ் சினைவினைதோன்றிற், சினையொடு
முடியா முதலொடுமுடியினும், வினையோரனைய வென்
மனார்புலவர்.

வினைமுதன் முடிபினவாய வம்மூன்றுசொல்லுஞ் சினைவினைநின்று சினைவினையொடுமுடியாது முதல்வினையொடுமுடியினும் வினையானொருதன்மைய-எ-று. வினையானொருதன்மையவென்றது முதல்வினையொடுமுடியினு முதலொடு சினைக்கொற்றுமை யுண்மையாற் பிறவினைகொண்டனவாகா; வினைமுதல் கொண்டனவேயாமென்றவாறு. கையிற்றுவீழ்ந்தான்-கையிறாவீழ்ந்தான்-கையிறுபுவீழ்ந்தான்-எனவரும். உரற்கால்யானை யொடித்துண்டெஞ்சிய வென்புழிப்போலக் கையிற்றென்னுஞ் செய்தெனெச்சங் கையிறவெனச் செயவெனெச்சப் பொருட்டாய்நின்றதெனவமையும். இச்சூத்திரம் வேண்டாவெனின் அற்றன்று வினைமுதல் வினைகொள்ளாதவழியன்றே அது பிறபொருட்டாயது வினைமுதல்வினைகொண்டு தன்பொருளை யுணர்த்துவதனையே பிறபொருண்மேனின்றதென்றல் பொருந்தாமையானதுகடாவன்றென்க. (௩௪)

௨௨௯. ஏனையெச்சம் வினைமுதலானு, மானவந்தியையும் வினை
நிலையானுந், தாமியன்மருங்கின் முடியுமென்ப.

முதனிலை மூன்றுமல்லாத பிறவினையெச்சம் வினைமுதல்வினையானுமான்வந்து பொருந்தும் பிறவினையானும் வரையறையின்றித் தாமியலுமாற்றான்

முடியும்-எ-று. மழைபெய்தெனப புகழ்பெற்றது-மழைபெய்தெனமரங்குழைத்தது-எ-ம், மழைபெய்யியரெழுந்தது-மழைபெய்யியர் பலிகொடுத்தார-எ-ம், மழைபெய்யிய முழங்கும் மழைபெய்யியவான பழிச்சுதும்-எ-ம, மழைபெய்யிற் புகழ்பெறும்-மழைபெய்யிற் குளநிறையும் - எ - ம், மழைபெய்யப் புகழ்பெற்றது-மழைபெய்ய மரங்குழைத்தது - எ-ம், மழைபெயற்கு முழங்கும்-மழைபெயற்குக் கடவுள்வாழ்த்துதும்-எ-ம், இறநதபின்னிளமைவாராது-கணவனினிதுண்டபின் காதலிமுகமலாநதது-எ-ம், ஆவைவினைமுதல் வினையும்பிறவினையுங்கொண்டவாறு கணடுகொளக. வரையறையின்றி யல்லனவு மிருவகைவினையுங் கோடலவழக்கினுட் கண்டுகொள்க. வரையறைபின்றியிருவகைவினையுங்கோடலின் வினையுங்குறிபபுநினையத்தோன்றிய முடிபாகும்மேயென்னும் பொதுவிதியான்முடிவனவற்றை யீண்டுக்கூறல்வேண்டாவெனின் வினையெச்சங்களு ளொருசாரன வினைமுதல்வினைகொள்ளுமென்றசஞன் வினையெச்சம் பிறவினையேகொள்ளுமோ விருவகைவினையுங்கொளளுமோ வென்றையமா மதனையகீங்க விவ்வாறுகூறல்வேண்டுமென்பது. அஃதேல் வினையொடுமுடித லீண்டுககூறப்பட்டமையி னெச்சவியலுட் குறிபபு முடிபாகுமெனவமையும் வினையுமெனல வேண்டாவெனின குறிப்புமென்னு மும்மையாற்றழுப்படுவது செய்ததாகலிற் றெற்றெனவிளக்காமையானும், வினைமுதலெனபது பெயாக்கும் வினைக்கும் பொதுவாகலானும் வினையுமெனல்வேண்டுமென்பது.

௨௬௦. பன்முறையானும் வினையெஞ்சுகிளவி, சொன்முறைமுடியா தடுக்குநவரினு, முன்னதுமுடிய முடியுமன்பொருளே.

ஒருவாய்பாட்டானு மறறைபபலவாயபாட்டானும் வினையெஞ்சுகிளவியசொற்கண் முறையானமுடியா தடுககிவரினு முன்னின்றவெச்சமுடியவேனையவும் பொருண்முடிந்தனவாம். எ-று. உ - ம. உண்டுதின்றோடிப்பாடிவநதான்-எ-ம், உண்டுபருகூத்தின்குபுவநதான்-எ-ம வரும். முன்னதுமுடிய முடியுமென்றாராயினும் உண்டுதன்றுமழைபெய்யக்குளநிறையுமென்றவழி முன்னதன்றொழிலா னேனையமுடியாமையிற் பன்முறையானடுக்குங்கான முன்னதன்றொழிலான் முடிதற்கேற்பனவேகொள்க. சொன்முறையான் முடியாமையாவது தம்மொடுதாமும் பிறசொல்லுமுடியாமை. உண்டுவந்தான்-தின்றுவந்தான் எனச்சொற்றொறும் வினையியைதன்மரபு; அங்ஙனமில்லாது தம்முனியைபில்லனவடுக்கிவந் திறுதிவினையெச்சத்திற்கு முடிபாகிய சொல்லானெல்லாமுடியினு மிழுக்காதெனவமைத்தவாறு. வினையெச்சம் பன்முறையானுமடுக்கி யொருசொல்லான் முடியுமெனவே பெயரெச்சமொருமுறையானடுக்கி யொருசொல்லான் முடியுமென்பதாம். நெல்லரியுமிருநதொழுவரொன்னும் புறத்தொகைப்பாட்டினுள் தெண்கடற்றிரைமிசைப்பாயுந்து-எ-ம், தண்குரவைச்சீர்தூங்குந்து-எ-ம், எல்வளைமகளிர் தலைக்கைதரூஉந்து-எ-ம், முந்நீர்ப்பாயும்-எ-ம், செய்யுமென்னும் பெயரெச்சமடுக்கி ஓம்பாவீகைமாவேளெவ்வியுனலம்புதவின் மிழலையென்னு மொருபொருள்கொண்டு முடிந்தவாறு

கண்டுகொள்க. ஆங்குத்தாங்காவுறையுணல்லூர் கெழீஇயவென்னும் பெயரொச்சமிடைநிலையாய்வந்தது. பிறவுமன்ன. (௩௬)

உ௩௧. நிலனும்பொருளுங் காலமுங்கருவியும், வினைமுதற்கிள
வியும் வினையுமுளப்பட, வவ்வறுபொருட்குமோரன்ன
வுரிமைய, செய்யுஞ்செய்த வென்னுஞ்சொல்லே.

வினையெச்சமுணர்த்தி யினிப்பெயரொச்சமுணர்த்துகின்றார். செய்யுஞ்செய்தவென்னுஞ் சொற்க டொழின்முதனிலையெட்டனு ளின்னதற்கிதுபயனாக வென்னு மிரண்டொழித்தேனையாறுபொருட்கு மொத்தவுரிமைய. எ-று. இவ்வாறிற்கொத்த வுரிமையவெனவேயொழிந்த விரண்டற்கு மிவற்றொடொப்பவுரியவாகா சிறுபான்மையுரிமையவென்றவாறும். வாழுமில்-கற்குநூல்-துயிலுங்காலம்-வனையுங்கோல்-ஓதும்பார்ப்பான் - உண்ணுமூண்-எனச் செய்யுமென்னும் பெயரொச்சத்து உம்மீறுசாலவெழுத்துப்பெறு தாறுபொருட்கு முரித்தாய்வந்தவாறு. புக்கவில்-உண்டசோறு-வந்தநாள்-வென்றவேல்-ஆடியகூத்தன்-போயினபோக்கு-எனச்செய்தவென்னும் பெயரொச்சத்திறுதியகரம் - கடதறவும்-யகரனகரமும்-ஊர்ந்தப்பொருட்குரித்தாய் வந்தவாறு. நோய்தீருமருந்து-நோய்தீர்ந்தமருந்து-என்னு மேதுப்பொருண்மை கருவிக்கணடங்கும். அரசன் ஆகொடுக்குமபார்ப்பான்-ஆகொடுத்தபார்ப்பான்-எ-ம், ஆடையொலிக்குங்கூலி-ஆடையொலித்தகூலி-எ-ம்- ஏனையிரண்டற்குஞ் சிறுபான்மையுரியவாய்வந்தவாறு. எல்லாப்பொருள் பஃறொழில்பற்றிவருஞ் சிறப்பின்றாகலிற் றொழின்முதலொடுகூறு தின்மையுடைமை நாற்றந்தீர்தலென்னும் பொருண்மையாற்றழீஇக்கொண்டாராகலாற் பழமுதிருங்கோடு-பழமுதிர்ந்தகோடு- எனச் சிறுபான்மை யெல்லாப்பொருட்குரியவாதலுங்கொள்க. நின்முகங்காணுமருந்தினேனென்னுமாலென்புழிக்காட்சியை மருந்தென்றாகலிற் காணுமருந்தென்பது வினைப்பெயர்கொண்டதாம். பொச்சாவாக்கருவியாற்போற்றிச்செயினென்புழிப் பொச்சாவாக்கருவியென்பதுமது. ஆறுசென்றவிய னென்புழி வியராறுசேறலான் வந்தகாரியமாகலிற் செயப்படுபொருட்கணடங்கும். நூற்றநூலானியன்ற கலிங்கமும் ஒற்றுமைநயத்தான் நூற்றகலிங்கமெனப்படும். நூலாக்கலிங்கம் வாலரைக்கொளீஇ- எனப்பெயரொச்சத்தி னெதிர்மறைபொருட் பெயர்கொண்டுநின்றதூஉம் பிறவுங்கூறப்பட்ட பொருட்கணடங்குமாற்றிற் றடக்கிக்கொள்க. உண்டான்சாத்தன்-மெழுகிற்றுத்திண்ணை என்புழிஉண்டான் மெழுகிற்று என்னுமுற்றுச்சொல்வினைமுதலுஞ் செயப்படுபொருளுமாகிய பொருட்குரியவாமாறுபோல இவ்விருவகைப்பெயரொச்சமு நிலமுதலாகிய பொருட்குரியவாமென வவற்றதுறுபொருட்குமுரிமை யுணர்த்தியவாறு. முடிபெச்சவியலுட்பெறப்படும். பொருளைக்கிளவியென்றார். நிலமுதலாயினவற்றைப் பெயரொச்சப் பொருளென்றது முடிக்குஞ்சொல்லெனின் அவ்வறுபொருட்குமென்று தவ்வாறுபெயர்க்குமென்றேதுவர். ஓதவே பெயரெஞ்சுகிளவி பெயரொடுமுடிமேயென்னுஞ் சூத்திரம்வேண்டாவாம் அதனானிவைபொருளென்றலேயுணா. அம்மாமென்பனமுதலாக வகரமீறாகக்கிடந்த

விறுதியிடைச்சொற்குக் கூறப்பட்டகாலவெழுத்துச் சிறியசிதைந்துவரினுஞ்
சிறுபான்மை பிறவெழுத்துப்பெறினு நுண்ணுணர்வுடையோர்வழக்குநோக்கி
யுணர்ந்துகொள்க. (௩எ)

உ௩உ. அவற்றொடுவருவழிச் செய்யுமென்கிளவி, முதற்கண்
வரைந்த மூவீற்றுமுரித்தே.

நிலமுதலாகிய பொருளொடுவருஞ்சாற் செய்யுமென்னுஞ்சொல் விலக்
கப்பட்ட பல்லோர்படர்க்கை முன்னிலைதன்மையென்னு மூவகைக்குமுரித்தா
ம். எ-று. உரித்தாய்வருமாறெஞ்சியகிளவியென்னுஞ் சூத்திரத்துக்காட்டினு
ம். அவற்றொடுவருவழியெனச் செய்யுமென்னுஞ்சொல் அப்பொருண்மைக்கு
ரித்தாயு முரித்தன்றியும் வருமிருநிலைமையுடைத்தென்பது பெறுதும். அவற்
றொடுவருநிலைமை பெயரெஞ்சுகிளவியாம். அவற்றொடு வாராநிலைமை முற்று
ச்சொல்லாம். அஃதேல நுமுற்றுச்சொலாதற்கண்ணும், பெயரெஞ்சுகிளவி
யாதற்கண்ணும் வேறுமைபென்னையெனின் வினைமுற்றிற்கு மேனையெச்சத்
திற்கும் வேற்றுமையாவதே யீண்டும்வேற்றுமையாமெனக. முற்றுச்சொல்லி
ற்கு மெச்சத்திற்கும் வேற்றுமையாதெனின் பிறிதொருசொல்லொடியையா
து தாமேதொடர்தற்சேறற்கும்வினைச்சொன் முற்றும். பிறிதோர்சொற்பற்றிய
ல்லது நிறறலாற்றாவினைச்சொலெச்சமாம். இதனதம்முள் வேற்றுமையென்க.
அஃதேல் உண்டானென்பது சாத்தனென்னும்பெய ரவாவியன்றேநிற்பதுதா
மேதொடராமென்ற தென்னையெனின் அற்றன்று உண்டான்சாத்தனென்றவ
ழியெற்றையென்னுமவாய்நிலைக்கட்சோற்றையென்பது வந்தியைந்தாறபோல
உண்டானென்றவழியாரென்னு மவாய்நிலைக்கட் சாத்தனென்பது வந்தியை
வதல்ல தப்பெயர்பற்றியல்லது நிற்றலாற்றா நிலைமைத்தன் றச்சொலென்ப
து. இவ்வேற்றுமைவிளங்க வாசிரியர் முற்றுச்சொலென்று மெச்சமென்று
மவற்றிற்குப் பெயர்கொடுத்தார். (௩அ)

உ௩௩. பெயரெஞ்சுகிளவியும் வினையெஞ்சுகிளவியு, மெதிர்மறு
த்துமொழியினும் பொருணிலைதிரியா.

பெயரெச்சமும் வினையெச்சமுஞ் செய்தறபொருளவன்றி யச்செய்தற்
பொருண்மை யெதிர்மறுத்துச்சொல்லினு மிவ்வெச்சப்பொருண்மையிற் றிரி
யா எ-று. பொருணிலையாவது தம்மெச்சமாகிய பெயரையும் வினையையுங்
கொண்டல்ல தமையாதநிலைமை. என்சொல்லியவாறோவெனின் செய்யும்-செ
ய்த-எ-ம், செய்து-செய்யூ-செய்பு-எ-ம்- பெயரெச்சமும், வினையெச்சமும் வி
திவாய்பாட்டானோதப்பட்டமையானுண்டுச்செய்யா, செய்யாதென்னு மெதி
ர்மறைவாய்பாட்டங்காமையி னவையெச்சமாதல்பெறப்பட்டின்றதனு னவை
யுமவ்வெச்சப்பொருண்மையிற்றிரியாதுபெயரும்வினையுங்கொள்ளுமென எய்
தாததெய்துவித்தவாறு. உண்ணுவில்லம்- உண்ணுச்சோறு-உண்ணுக்காலம்-வ
னையாக்கோல்-ஓதாப்பார்ப்பான்-உண்ணூண்-எ-ம், உண்ணுதுவந்தான்-உண்
ணுமடோயினுன்-எ-ம் வரும். உண்ணுஎன்பதுண்ணும், உண்டவென்னு மிர

ண்டற்கெதிர்மறையாம். உண்ணாதவென்பதமது. உண்ணாதென்பது - உண்டு, உண்ணூ, உண்குபு-என்பனவற்றிற்கெதிர்மறை. உண்ணாமைக்கென்பது உண்ணியர், உண்ணிய, உணற்கெனபனவற்றிற்கும், உண்ணவெனச்செயற்கென்பது படவருஞ்செயவெனெச்சத்திற்கும் எதிர்மறையாம். உண்ணாமை, உண்ணாமலென்பனவுமதற்கெதிர்மறையாம். பிறவுமெதிர்மறைவாய்பாடுளவேற்கொள்க. உண்டிலன்-உண்ணாநின்றிலன்-உண்ணலன்-உண்ணானென முற்றுச்சொல்லு மெதிர்மறுத்துநிற்குமாகலிற் பொருணிலைதிரியாதென வதற்கோதாராயிற்றென்னையெனின் விதிவினைக்குமெதிர்மறைவினைக்கும் பொதுவாகவீறுபற்றியோதியதல்லது விதிப்பொருளவாகிய வாய்பாடுபற்றியோதாமையி னுண்டுக்கட்டுரையில்லையென்க. (௩௧)

உ௩௪. தத்தமெச்சமொடுசிவணுங்குறிப்பி, னெச்சொலாயினு
மிடைநிலைவரையார்.

தத்தமெச்சமாகிய வினையொடுபெயரொடுமியையுங் குறிப்பையுடையவெச்சொலாயினு மிவ்வெச்சத்திற்கு மவற்றான்முடிவனவாகிய தமக்குமிடைநிற்றலவரையார். எ-று. உழுதுசாத்தன்வந்தான்-உழுதேரொடுவந்தான்-எ-ம் கொல்லுங்காட்டுளயானை-கொன்றகாட்டுளயானை-எ-ம் வரும். சிவணுங்குறிப்பின்வரையாரெனவே சிவணாக்குறிப்பின்வரைபவென்பதாம். சிவணாக்குறிப்பினவாவன ஒருதலையாகவெச்சத்தொடியைந்துநில்லாது நின்றசொல்லொடுந்தாமேயியைந்து கவர்பொருட்படுவனவென்க. உண்டுவிருந்தொடுவந்தான், வல்லமெறிந்த நல்லிளங்கோசர்தந்தைமல்லல்யானைப்பெருவழுதியென்றவழி விருந்தொடுண்டென வினையெச்சத்தொடுமியைதலிற்பொருள்கவர்க்கும். வல்லமெறிதனல்லிளங்கோசர்க்கு மேற்குமாகலி னுண்டும்பொருள்கவர்க்கும். அன்னசிவணாக்குறிப்பினவாம். எச்சொலாயினு மென்றதனான் உழுதோடிவந்தான், கவளங்கொள்ளாக்களித்தயானையென வெச்சமுமிடைநிலையாதல்கொள்க. சாத்தனுண்டுவந்தான், அறத்தையரசன்விரும்பினான்-உண்டான்வந்தசாத்தனென வேனைத்தொடர்க்கண்ணும் பிறசொல்லிடைநிற்றலொக்குமாயினுமெச்சத்தொடர்க்கிடைநிற்பனவற்றின்க ணாராய்ச்சியுடைமையாற்கூறினார்.(௪௦)

உ௩௫. அவற்றுள், செய்யுமென்னும் பெயரெஞ்சுகிளவிக்கு,
மெய்யொடுங்கெடுமே யீற்றுமிசையுகர,மவ்விடனறித
லென்மனார்புலவர்.

மேற்சொல்லப்பட்ட வெச்சங்களுட்செய்யுமென்னும் பெயரெச்சத்திற் கீற்றுமிசைநின்றவுகரந் தன்னானூரப்பட்டமெய்யொடுங்கெடுமிடமறிக.எ-று. கெடுமிடமறிகவென்றதவ்வீற்றுமிசையுகரம்யாண்டுங்கெடாது வரையறுக்கவும்படாது சான்றோர் வழக்கினுள்ளுஞ் செய்யுளுள்ளும் வந்தவழிக்கண்டுகொள்கவென்றவாறு. வாவும்புரவி-போகும்புழையென்பன வீற்றுமிசையுகர மெய்யொடுங்கெட வாம்புரவி-போம்புழையெனநின்றன. பிறவும்வந்தவழிக்கண்

டுகொள்க. செய்யுமென்னும் பெயரெச்சகிளவிக்கு ஈற்றுமிசையுகரம் மெய்யொடுங்கெடுமெனவே செய்யுமென்னு முற்றுச்சொற்கு ஈற்றுமிசையுகர மெய்யொடுங்கெடும் மெய்யொழித்துங்கெடுமென்பதாம். அம்பலூரு மவனொடு மொழிமே-சாரனுடவென்ஞேழியுங் கலுழ்மே எனவரும். பிறவுமன்ன. (௪௧)

௨௩௬. செய்தெனெச்சத் திறந்தகால, மெய்திடனுடைத்தே வாராக்காலம்.

செய்தென்னும் வினையெச்சத்தின திறந்தகாலம் வாராக்காலத்தையெய்துமிட முடைத்து. எ - று. ஈண்டுச்செய்தெனெச்சத் திறந்தகாலமென்பதுமுடிபாய்வரும் வினைச்சொல்லானுணர்த்தப்படுந்தொழிற் கவ்வெச்சத்தா னுணர்த்தப்படுந்தொழின்முன் னிகழ்தலே. அதுவாராக்காலமெய்தலாவது அம்முன்னிகழ்வுசிதையாம லவ்வெச்சமெதிர்காலத்துவருதல். நீயுண்டுவருவாய்-உழுதுவருவாய்-எனச்செய்தெனெச்சம் பொருள்சிதையாம லெதிர்காலத்துவந்தவாறுகண்டுகொள்க. எய்திடனுடைத்தே வாராக்காலமென்றதனா னுண்டுவந்தா னுழுதுவந்தானென வவ்வெச்சமிறந்தகாலத்துவருத லிலக்கணமென்பதாம். இறநதகாலத்துச்சொல் எதிர்காலத்துவந்ததாயினு மமைகவெனக் கால வழுவமைத்தவாறு. (௪௨)

௨௩௭. முந்நிலைக்காலமுந் தோன்றுமியற்கை, யெம்முறைச் சொல்லு நிகழுங்காலத்து, மெய்ந்நிலைப்பொதுச்சொற் கிளத்தல்வேண்டும்.

மூன்றுகாலத்து முளதாமியல்பையுடைய வெல்லாப்பொருண்மையு நிகழ்காலத்துப் பொருணிலைமையுடைய செய்யுமென்னுஞ்சொல்லாற் கிளக்க. எ-று. முந்நிலைக்காலமுந் தோன்றுமியற்கை யெம்முறைப் பொருளுமாவன மலையதுநிலையும், ஞாயிறுதிங்களதியக்கமு முதலாயின. அவற்றை யிறந்தகாலத்துச்சொல்லானு மெதிர்காலத்துச்சொல்லானு மேனைநிகழ்காலத்துச்சொல்லானுஞ் சொல்லாதிறந்தகாலத்தையு மெதிர்காலத்தையு மகப்படுத்து மூன்றுகாலத்திற்கும் பொதுவாய்நிற்குஞ்செய்யுமென்னுஞ் சொல்லாற்சொல்லுகவென்றவாறு. பொதுச்சொற்கிளத்தல்வேண்டுமெனவே முற்றுனும் பெயரெச்சத்தானுங்கிளக்கவென்பதாம். மலைநிற்கும்-ஞாயிறியங்கும்-திங்களியங்கும்- எ-ம், வெங்கதிர்க்கனலியொடு மதிவலந்திரிதருந் தண்கடல்வையத்து - எ-ம் வரும். நிகழ்காலத்துச்சொல்லாயினு மொருகாற் பொதுவாகலுடைமையாற் பொதுச்சொலென்றார். நிகழ்காலச்சொல் இறந்தகாலமு மெதிர்காலமுமுணர்த்துதல் வழுவாயினு மமைகவெனவமைத்தவாறு. (௪௩)

௨௩௮. வாராக்காலத்து நிகழுங்காலத்து, மோராங்குவரூஉம் வினைச்சொற்கிளவி, யிறந்தகாலத்துக் குறிப்பொடுகிளத்தல், விரைந்தபொருள வென்மனார்புலவர்.

எதிர்காலத்து நிகழ்காலத்து மொருபடியாகவரும் வினைச்சொற்பொரு ண்மையை யிறந்தகாலத்தாற்சொல்லுதல் விரைவுப்பொருளையுடைய. எ-று. சோறுபாணித்தவழி யுண்ணுதிருந்தானைப் போகல்வேண்டுங் குறைவுடையா னொருவ னின்னுமுண்டிலையோவென்றவழி உண்டேன் போந்தேனென்னும் உண்ணாநின்றானு மவனதுசொலலும். ஆண்டெதிர்காலத்திற்கு நிகழ்காலத்தி ற்கு முரியபொருளை விரைவுபற்றி யிறந்தகாலத்தாற் கூறியவாறு கண்டுகொ ள்க. தொழிலிறந்தனவன்றேனுஞ் சொல்லுவான்கருத்துவகையா னிறந்தன வாகச் சொல்லப்படுதலிற் குறிப்பொருட்கிளத்தலென்றார். எதிர்காலத்துப்பொ ருண்மையைக்கிளத்தலும், நிகழ்காலத்துப்பொருண்மையைக்கிளத்தலுமென விரண்டாகலான் விரைந்தபொருளவெனறார். இதுவுங்காலவழுவமைதி.(௬௬)

௨௫௯. மிக்கதன்மருங்கின் வினைச்சொற்சுட்டியப், பண்புகுறி
த்த வினைமுதற்கிளவி, செய்வதில்வழி நிகழுங்காலத்து,
மெய்பெறத்தோன்றும் பொருட்டாகும்மே.

மிக்கதன்கணிகழும் வினைச்சொல்லைநோக்கித திரிவின்றிப்பயக்கும் அம் மிக்கதனதுபண்பைகுறித்துவரும் வினைமுதற்சொற் சுட்டிச்சொல்லப்படு ஞ்சொல்வினைமுதலில்லாதவிடத்து நிகழகாலத்தான யாப்புறுத்த பொருளை யுடைத்தாம். எ-று. முயற்சியுந்தெய்வமுமாகிய காரணங்களுட் டெய்வஞ்சி றந்தமையா னதற்குக்காரணமாகிய தவஞ்செய்தல தாயைக்கோறன்முதலா கிய தொழிலைமிக்கதெனறார். தெய்வமாயவிருவினைமிக்கதன்கண் வினைச்சொ ல்லாவன தவஞ்செய்தான்-தாயைக்கொனறான்-என்னுந் தொடக்கத்தன. அப் பண்புகுறித்தவினைமுதறகிளவியாவன-சுவாக்கம்புகும்-நிரயம்புகும்-என்பன. யாவன்றவஞ்செய்தா னவன்சுவாக்கம்புகும, யாவனறாயைக்கொனறா னவனி ரயம்புகும-எ-ம், ஒருவன்றவஞ்செய்யிற் சுவர்க்கம்புகும், தாயைக்கொல்லி னிரயம்புகும் - எ - ம், மிக்கதன்வினைச்சொனோக்கி யம்மிக்கதன்றிரிபில் பண் புகுறித்த வினைமுதற்கிளவி நிகழ்காலத்தான் வந்தவாறுகண்டுகொள்க. அப் பண்புகுறித்தவென்பதற்கு மிக்கதாகிய விருவினைபபயனுறுத லவ்வினைமுத ற்கியல்பெனபது குறித்தவென்றுரைபபினுமமையும். பொதுவகையாற் கூறு தொருவற்சுட்டியவழி அவன்றவஞ்செய்து சுவர்க்கம்புக்கான்- புகுவன்-என வினைகாலத்தாறசொல்லப்படுதலி னிவ்வாறொருவற சுட்டுதலைநீக்குதறகு வி னைமுதற்கிளவியாயினுஞ் செய்வதில்வழியென்றார். செய்வதென்பது செய் கையையென்பாருமுளர். வினைச்சொலென்றானுந் தவஞ்செய்தான் சுவர்க் கம்புகும், தாயைச்கொன்றானிரயம்புகும் - எனவினைப்பெயராய் வருதலுங் கொள்க. தவஞ்செய்யிற சுவர்க்கம்புகுவனென வெதிர்காலத்தாற் சொல்லப் படுவதனை நிகழ்காலத்தாற்சொல்லுதல் வழுவாயினுமமைகவெனவமைத்தவா று. அஃதேலியற்கையுந் தெளிவுங்கிளக்குங்காலையென்புழி இதுதெளிவாயட ங்குமெனின் அற்றன்றுஇயற்கையுந்தெளிவுஞ் சிறந்தகாரணமாகிய தெய்வத் தானகப் பிறிதொன்றானகத் திரிதலுடைய.; இதுதிரிபின்றாகலானும், இறந்த காலத்தாற் சொல்லப்பட்டமையானு மாண்டடங்காதென்பது. இதன்றிரிபின் மையு மவற்றதுதிரிபுடைமையும் விளங்குதற்கன்றே யாசிரியர்மிக்கதன் மரு

ங்கிளென்றும், இயற்கையுந் தெளிவுங் கிளக்குங்காலையென்று மோதுவாரா யிற்றென்பது. (சரு)

உசா. இதுசெயல்வேண்டு மென்னுங்கிளவி, யிருவயினிலையும் பொருட்டாகும்மே, தன்பாலானும் பிறன்பாலானும்.

இதுசெயல்வேண்டுமென்பது படவருஞ்சொல் தன்பாலானும் பிறன்பாலானுமென விரிடத்துநிலைபெறும்பொருண்மையை யுடைத்தாம். எ-று. தானென்றது செயலதுவினைமுதலை. ஓதல்வேண்டுமென்றவழி வேண்டுமென்பதோதற்கு வினைமுதலாயினுற்கும், அவனோதலைவிரும்புந் நந்தைக்குமேற்றவாறுகண்டுகொள்க. இதனை ஒருசார்வினைச்சொற்பொருள்படும் வேறுபாடுணர்த்தினார். உணர்த்தாக்காற்றெற்றென விளங்காமையினென்பது. (சகூ)

உசச. வன்புறவருஉம் வினாவுடைவினைச்சொ, லெதிர்மறுத்துணர்த்துதற் குரிமையுமுடைத்தே.

துணிந்து திட்பமெய்துதற்குவரும்வினாவையுடைய வினைச்சொல் வினைநிகழ்வுணர்த்தா தெதிர்மறுத்துணர்த்துதற் குரித்தாதலுமுடைத்து. எ-று. வினாவாவன ஆ ஏ ஓ என்பன.கதந்தாளுக்கள்ளியாருகை-ஒருவன்றெருளா தொருவனைவைதான் அவன்றெருண்டக்கால் வையப்பட்டான் நீயென்னைவைதாயென்றவழித்தான்வைதவைபுணராமையான வைதேனேயென்னும் - ஆண்டவ்வினாவொடுவந்தவினைச்சொல் வைதிலேனென்று மெதிர்மறைப்பொருள் படவந்தவாறு கண்டுகொள்க. வினாவொடுவந்தவழி யெதிர்மறைப்பொருள் படுமாறென்னையெனின் சொல்லுவார்குறிப்புவகையா னெதிர்மறைப்பொருளுணர்த்திற்றென்க. எதிர்மறைப்பொருளுணர்த்திற்றுண்டேகாரமாகலின் வினைச்சொலெதிர்மறுத்துணர்த்துதற்குரிமையு முடைத்தென்ற விரம்பாதெனின் எதிர்மறையாயின் பயன்றருவது வினாவுடைவினைச்சொலென்றுராகலி னஃதெதிர்மறுத்தலை யாண்டையதெனமறுக்க. வினைநிகழ்வுணர்த்தற்பாலதுவினையதுநிகழாமையுணர்த்துதல் வழுவாயினுமமைகவென வினைச்சொற்பற்றி மருபுவழுவமைத்தவாறு. (சஎ)

உசஉ. வாராக்காலத்து வினைச்சொற்கிளவி, யிறப்பினுநிகழ்வினுஞ் சிறப்பத்தோன்று, மியற்கையுந்தெளிவுங் கிளக்குங்காலை.

எதிர்காலத்துக்குரிய வினைச்சொற்பொருண்மை யியற்கையாதலுந் தெளியப்படுஞ்சொல்லுமிடத்து இறந்தகாலச்சொல்லானு நிகழ்காலச்சொல்லானும் விளங்கத்தோன்றும்.எ-று. இயற்கையென்பது பெறறிமுதலாயினவற்றுணரப்படுவது. றெளிவுநூற்றெளிவான்வருவது. ஒருகாட்டின்கட்போவார் கூறைகோட்படுத லொருதலையாகக்கண் டஃதியற்கையென்றுதுணிந்தான் கூறைகோட்படாமுன்னு மிக்காட்டுட்போகிற் கூறைகோட்பட்டான் கூறைகோட்படும்-என்னும். எறும்புமுட்டைகொண்டுதிட்டையேறின் மழைபெய்தல்நூலாற்றெளிந்தான் அவைமுட்டைகொண்டு தெற்றியேறியவழி மழைபெய்யா

மூன்னுமழைபெய்தது-மழைபெய்யும்-என்னும். என எதிர்காலத்திற்குரியபொருளிறந்தகாலத்தானு நிகழ்காலத்தானுந் தோன்றியவாறுகண்டுகொள்க. இது காலவழுவமைத்தவாறு. (சஅ)

உசங. செயப்படுபொருளைச் செய்ததுபோலத், தொழிற்படக்கிளத்தலும் வழக்கியன்மரபே.

செயப்படுபொருளைச் செய்தவினைமுதல்போலத் தொழிற்படக்கிளத்தலும் வழக்கின்கணியலுமரபு. எ-று. வழக்கியன்மரபெனவே இலக்கணமன்றென்றவாறும். உ-ம். திண்ணைமெழுகிற்று-கலங்கழீஇயிற்று-எனவரும். திண்ணைமெழுகப்பட்டது, கலங்கழுவப்பட்டது-என்புழிமன்னுகற்பாலது அவ்வாய்பாடன்றி வினைமுதல் வாய்பாட்டான்வருதலும் வழக்கினுளுண்மையானமை கவெனவினைச்சொற்பற்றி மரபுவழுவமைத்தவாறு. செயப்படுபொருளைவினைமுதல்வாய்பாட்டாற்கிளததலேயன்றி வெளிதினடபபடுதனுக்கியரிசிதானேயட்டதெனச்செயப்படுபொருளைவினைமுதலின் றொழிற்படக்கிளத்தலும் வழக்கியன்மரபென்றற்குத்தொழிற்படக்கிளத்தலுமென்முர். இதனைக்கருமகருத்தனென்ப. (சகூ)

உசச. இறப்பேயெதிரவே யாயிருகாலமுஞ், சிறப்பத்தோன்று மயங்குமொழிக்கிளவி.

இறப்புமெதிர்வுமாகிய விரண்டுகாலமுமயங்குமொழிப்பொருளாய் விளங்கத்தோன்றும். எ-று. இவர்பண்டிப்பொழிலகத்துவிளையாடுவர்-நாளையுவன் வாளொடுவெகுண்டுவருதான் பின்னியென்செய்குவை-எனவரும். அவ்விரண்டு காலமுமயங்குமொழிபபொருளாய்த்தோனறுமெனவே அவற்றை யுணர்த்துஞ்சொன்மயங்குமென்றவாறும். அவைபெயரும்வினையுமாய்மயங்குதலின் மயங்குவினைச்சொற்கிளவியென்றதுபொதுப்படமயங்குமொழிக்கிளவி யென்முர். தோன்றுமென்பதுபெயரெச்சமெனிறுமிழுக்காது. பண்டு விளையாடினுரென்றும், நாளைவருவனென்றுங்கூறற்பாலதவ்வாறன்றித்தம்முண்மயங்கக்கூறினுமமைகவெனக்காலவழுவமைத்தவாறு. (ருo)

உசரு. ஏனைக்காலமு மயஙகுதல்வரையார்.

இறப்புமெதிர்வுமேயன்றிநிகழ்காலமுமவற்றொடுமயங்கும். எ-று. இவள் பண்டிப்பொழிலகத்துவிளையாடும்-எ-ம், நாளைவரும் - எ-ம்வரும். சிறபபத்தோன்றுமெனவும், மயங்குதல்வரையாரெனவுங்கூறினுர் இறப்புமெதிர்வுமயஙகுதல்பயின்றுவருதலானும், அத்துணைநிகழ்காலமயக்கம் பயின்றுவாராமையானுமென்க. மூன்றுகாலமுந்தம்முண்மயங்குமென்முரோறுமேற்புழியல்லது மயங்காமைகொள்க. ஏற்புழிக்கொள்ளவேவந்தானைவருமென்றலும், வருவானைவந்தானென்றலு மெனவிவை முதலாயின வெல்லாம் வழுவென்பதாம். பிறவுமன்ன. (ருக)

ஆருவது
வினையியல் முற்றிற்று.

ஏழாவது

இடைச்சொலியல்.

உசசா. இடையெனப்படுப பெயரொடும்வினையொடும், நடை
பெற்றியலுந் தமக்கியல்பிலவே.

நிறுத்தமுறையானேயிடைச்சொலுணர்த்திய வெடுத்துக்கொண்டார்; அதனானிவ்வோத்திடைச்சொலோத்தென்னும்பெயர்த்தாயிற்று. மொழிக்குமுன்னும்பின்னும்வருமாயினும்பெரும்பான்மையுமிடைவருதலி னிடைச்சொலென்னும்பெயர்த்தாயிற்று. இடைச்சொலென்றுசொல்லப்படுவனபெயரொடும் வினையொடும்வழக்குப்பெற்றியலுந்தாமாகநடக்குமியல்பில. எ-று. இடைச்சொற்கிளவியுமுரிச்சொற்கிளவியுமவற்று வழிமருங்கிற்றோன்றுமென்றதனானிடைச்சொல்பெயரும்வினையுஞ்சார்ந்துவருதல்பெறப்பட்டமையாற்பெயரொடும் வினையொடு நடைபெற்றியலுநதமக்கியல்பிலவென்றதீண்டுப்பெயரும் வினையுமுணர்த்தும்பொருளாயவற்றைச்சார்ந்துநின்று அவற்றைவெளிப்படுத்தலல்லது தமக்கெனப்பொருளுடையவல்லவென்றவாறும். அதுகொறேழிகாமநோயே எ-ம், வருகதில்லம்மவெஞ்சேரிசேர -எ-ம்- பெயரும்வினையுஞ்சார்ந்தப்பொருளை வெளிப்படுத்தவாறுகண்டுகொள்க. சார்ந்துவருதலுரிச்சொற்கு மொத்தலிற்றமக்கெனப்பொருளின்மையிடைச்சொற்குச்சிறப்பிலக்கணமாம். தமக்கியல்பிலவேயென்றது சார்ந்தல்லதுவாராவெனவலியுறுத்தவாறு. பெயரொடும்வினையொடுநடைபெற்றியலுந்தமக்கியல்பிலவெனப்பொதுப்படக்கூறியவதனாற்சாரப்படுஞ்சொல்லின்வேறாய்வருதலேயன்றி உண்டனன்-உண்டான்-எ-ம், என்மனார்-என்றிசினோர்-எ-ம், அருங்குரைத்து-எ-ம் - அவற்றிற்குறுப்பாய்வருதலுங்கொள்க. இனியோருசா- இடைச்சொற்கிளவியுமுரிச்சொற்கிளவியுமவற்றுவழிமருங்கிற்றோன்றுமென்பதற்குச்சார்ந்துவருதலா னிடைச்சொல்லுமுரிச்சொல்லுஞ்சிறப்பில இவையுட்படச்சொன்னான்காமென்பதுகருத்தாகலின் இடைச்சொல்பெயரும்வினையுஞ்சார்ந்துவருமென்னும்வேறுபாடதனாற்பெறப்படாது. என்னைஇடைச்சொல் பெயர்சார்ந்துவரினுமுரிச்சொல் வினைசார்ந்துவரினுமவற்றதுசிறப்பின்மையும், சொன்னான்காதலுமுணர்த்துதல்சிதையாதாகலானதனானிடைச்சொல்பெயரும்வினையுஞ்சார்ந்துவருமென்ப திச்சூத்திரத்தாற்கூறல்வேண்டுமென்ப. அவ்வுரையுரைப்பார்பெயரினும்வினையினு மெய்த்தடுமாறியென்பதற்குப்பெயரும்வினையுஞ்சார்நதென்றுபொருளுரைப்ப. (க)

உசஎ. அவைதாம், புணரியனிலையிடைப் பொருணிலைக்குதவு
நவும், வினைசெயன்மருங்கிற் காலமொடுவருநவும், வே
ற்றுமைப்பொருள்வயி னுருபாகுநவு, மசைநிலைக்கிளவி
யாகிவருநவு, மிசைநிறைக்கிளவி யாகிவருநவுந், தத்தங்
குறிப்பிற் பொருள்செய்குநவு, மொப்பில்வழியாற்பொ
ருள்செய்குநவுமென், றப்பண்பினவே நுவலுங்காலை.

மேற்சொல்லப்பட்டவிடைச்சொற்கடாம் இரண்டுசொல்புணருமிடத்தப்
பொருணிலைக்குதவுவனவும், வினைச்சொல்லைமுடிக்குமிடத்துக் காலப்பொரு
ளவாய்வருவனவும், செயப்படுபொருண்முதலாகிய வேற்றுமைப் பொருட்க
ளுருபென்னுங்குறியவாய்வருவனவும், பொருளுடையவன்றிச்சார்ந்திச்சொ
ல்லப்படுந்துணையாய்வருவனவும், வேறுபொருளுணர்த்தா திசைநிறைத்தலே
பொருளாகவருவனவும், தத்தங்குறிப்பாற்பொருளுணர்த்துவனவும், ஒப்புமை
தோன்றுதவழியவ்வொப்புமைப்பொருள்பயப்பனவுமெனக்கூறப்பட்டவேழி
யல்பையுடையசொல்லுமிடத்து. எ-று. புணரியனிலை புணரியலதுநிலை. ஆண்
டுப்பொருணிலைக்குதவுதலாவது எல்லாவற்றையுமென்புழி வற்றுச்சாரியைநி
லைமொழிப்பொரு ளஃறிணையென்பதுபடவருதலும், எல்லாநம்மையுமென்பு
ழிநம்முச்சாரியைநிலைமொழிப்பொ ருடன்மைப்பன்மையென்பதுபடவருதலு
மாம. அல்லனவுந் தாஞ்சார்ந்துவருமொழிப்பொருட் குபகாரமுடையவாய்
வருமாறோர்ந்துகொள்ளப்படும். அல்லாககாற் சாரியைமொழியாகாவென்ப
து. வினைச்சொலொருசொல்லாயினுமுதனிலைபுமிறுதிநிலையு மிடைச்சொல்லு
மாகப்பிரித்துச்செய்கைசெய்து காட்டப்படுதலின் வினைசெயன்மருங்கினெ
ன்றார். அம்முடிபுணர்த்தாமைக்குக்காரணம புணரியனிலையிடை உணரத்தோ
ன்றுமென்புழிச்சொல்லப்பட்டது. அவற்றுளொருசாரனபாலுணர்த்தாமையா
னும், எல்லாங்காலமுணர்த்துதலானுங்காலமொடுவருநவுமென்றார். வேற்றுமை
ப்பொருளவாய்வருவனபிறசொல்லுமுளவாகலி னவற்றைநீக்குதற்குருபாகு
நவுமென்றார். பிறசொல்லாவன கண்ணகன்ஞாலம்- ஊர்க்கானிவந்த பொது
ம்பரெனவேழாம்வேற்றுமைப்பொருட்கண் வருங்கண்கான்முதலாயினவும், அ
னையயாகன்மாறே-சிறந்தோன்பெயரன்பிறந்தமாறே,முறையுளிக்கோலோச்
சுமன்னவன்-எனமூன்றும்வேற்றுமைப்பொருட்கண்வருமாறுஉளியென்பனவு
மன்னபிறவுமாம். அஃதேல்வேற்றுமையுருபுமென்றேதுவாரோதவே யிவைநீ
ங்குமெனினஃதொக்கும் அவைதம்மையுந்தழீஇக்கோடற்குவேற்றுமைப் பொ
ருள்வயினென்றார். அவைவருங்கால்நிலைமொழியுருபிற்கேற்றசெய்கை யேற்பு
ழிப்பெறுதலுமுடைமையினுருபாகுநவுமென்றார். இஃதிருபொருளுணர்த்தலா
னிருதொடராகக்கொள்க. அசைத்தல் சார்த்துதல்;பொருளுணர்த்தாது பெய
ரொடும்வினையொடுஞ்சார்த்திச்சொல்லப்பட்டு நிற்றலினசைநிலையாயிற்று. அ
வைஅந்தின்முதலாயின. புகழுநருமல்லரோ - பெரிதேயுரைத்திசினோரென
ச்சார்ந்தமொழியைவேறுபடுத்துநிற்றலினசைச்சொலாயினவென்பாருமுளர்.
செய்யுட்கணிசைநிறைத்துநிற்றலினிசைநிறையாயின. குறிப்புச் சொல்லுவா
ன்கண்ணதாயினுமவன்குறித்தபொருளைத்தானுங்குறித்துநிற்றலிற்றத்தங் குறி
ப்பினென்றார். சொல்லுவான்குறித்தபொருளைத்தாம்விளக்குமென்பார்தத்தங்
குறிப்பிற்பொருளெனறார். கூரிதோர்வாண்மன்என்புழிமன்னொன்றியோசை
வேறுபாட்டானொருகாற்றிட்டமின்றென்னுந்தொடக்கத் தொழியிசைப்பொரு
டோன்றலும்பெறப்படும். பொருட்கும்,பொருளைப்புலனாகவுடைய வுணர்விற்
குமொற்றுமைகருதிப்பொருளுணர்வைப்பொருளென்றார்.மிகுதிசெய்யும்பொ
ருளென்பதுமுதலாயினவற்றிற்குமீதொக்கும். ஒக்குமென்னுஞ் சொல்லன்
றேயொப்புமையுணர்த்துவது அச்சொல்லாண்டின்மையா னொப்புமைதோன்

ருமையானொப்பில்வழியாலென்றார். உவமையொடுபொருட்கொப்பில்லை யென்றாரல்லரென்பது. ஒக்குமெனனுஞ்சொல்லையொப்பென்று ரொன்றாரு முளர். ஒப்பில்வழியாற்பொருள்செய்குநவாவன அன்ன - ஏய்ப்ப, உறழ, ஒப்ப-என்பனமுதலாகப்பொருளதிகாரத்துக்கூறப்பட்ட முப்பத்தாறனுளொக்கு மென்பதொழியவேனையவாம். சாரியையும், வேற்றுமையுருபும், உவமவுருபுங் குறிப்பாற்பொருளுணர்த்துமாயினும் புணர்ச்சிக்கணுபகாரப்படுதலும், வேற்றுமைத்தொகைக்குமுவமைத்தொகைக்கு மவ்வுருபுபற்றி யிலக்கணங்கூறுதலுமுதலாகியபயனோக்கியிவற்றைவேறுகூறினார். இடைச்சொலேழனுள்ளுமுதனின்றமூன்றுமேலேயுணர்த்தப்பட்டமையானமுன்வைத்தார். ஒப்பில்வழியாற்பொருள்செய்குநமுன்னருணர்த்தப்படுதலினிறுதிக்கண்வைத்தார். ஒழிந்தனமூன்றுமிவ்வோத்தினகத்துணர்த்தப்படுதலினிடைவைத்தா. (௨)

உசஅ. அவைதா, முன்னும்பின்னு மொழியடுத்துவருதலுந், தம்மீறுதிரிதலும் பிறிதவணிலையலு, மன்னவையெல்லா முரியவென்ப.

மேற்சொல்லப்பட்டவிடைச்சொலிடைவருதலேயன்றித் தம்மாற்சாரப்படுஞ்சொற்குமுன்னும்பின்னுமவருதலுந் தம்மீறுவேறுபட்டுவருதலும் பிறிதோரிடைச்சொலோரிடைச்சொன்முனவருதலுமாகிய வத்தன்மையவெல்லாமுரிய-எ-று. அதுமன்-எ-ம், கேண்மியா-எ-ம்-சாரப்படுமொழியைமுன்னடுத்துவநதன. கொன்னூர்-எ-ம், ஒ ஒ வினிதே-எ-ம்- பின்னடுத்துவநதன. உடனுயிர்போருகதில்லவெனவீறுதிரிநதுவநதது. வருகதில்லம்மவெஞ்சேரிசேரவென்பதுபிறிதவணின்றது. அவைதாமெனப்பொதுவகையானோதினரேனு மிவ்விலக்கணமிவ்வியலின்கணுணர்த்தப்படுமசைநிலைமுதலாகிய மூன்றற்குமெனக்கொள்க. அன்னவையெல்லாமென்றதனான்மன்னைச்சொல்-கொன்னைச்சொலெனத்தம்மையுணரநின்றவழியீறுதிரிதலும், னகாரமுன்னரொனவெழுத்துச்சாரியையீறுதிரிதலுங்கொள்க. (௩)

உசகூ. கழிவேயாக்க மொழியிசைக்கிளவியென், றம்மூன்றென்ப மன்னைச்சொல்லே.

இவ்வோத்தினகத்துணர்த்தப்படு மூவகையிடைச்சொல்லுளதத்தங்குறிப்பிற்பொருள்செய்குந பொருளுணர்த்துதற் சிறப்புப்பரப்புடைமையானதனைமுன்னுணர்த்துகின்றார். கழிவுகுறித்துநிற்பதும் ஆக்கங்குறித்துநிற்பதும் ஒழியிசைப்பொருண்மைகுறித்துநிற்பதுமெனமன்னைச்சொன்மூன்றாம்.எ-று. சிறியகட்பெறினேயெமக்கீயுமன்னே என்புழிமன்னைச்சொல்இனிஅதுகழிந்ததென்னும்பொருள்குறித்துநின்றது. பண்டுகாடுமன்என்புழிஇன்றுகயல்பிறழும்வயலாயிற்றென அஃதாக்கங்குறித்துநின்றது. கூரிதோர்வாண்மன் என்புழித் திட்பமின்றென்றானும், இலக்கணமின்றென்றானுமென எச்சமாயொழிந்தசொற்பொருண்மைநோக்கிநின்றது. (௪)

உருo. விழைவேகால மொழியிசைக்கிளவியென், றம்மூன்றெ ன்ப தில்லைச்சொல்லே.

விழைவுகுறித்துநிற்பதுங் காலங்குறித்துநிற்பதுமாண்டொழிந்து நின்ற சொற்பொருளைநோக்கிநிற்பதுமெனத்தில்லைச்சொன்மூன்றாம்.எ-று.வார்ந்திலங்குவையெயிற்றுச்சின்மொழியரிவையைப்பெறுகதில்லம்மயானே என அவளைப்பெறுதற்கணுள்ளதாகியவிழைவின்கண்வந்தது. பெற்றாங்கறிகதில்லம்மவிவ்வூரேஎனப்பெற்றகாலத்தறிகவெனக் காலங்குறித்துநின்றது. வருகதில்லம்மவெஞ்சேரிசேரஎனவந்தக்கா லின்னதுசெய்வலென்னு மொழியிசைப்பொருணோக்கிற்று. (௫)

உருக. அச்சம்பயமிலி காலம்பெருமையென், றப்பானான்கே கொன்னைச்சொல்லே.

அச்சப்பொருளதும் பயமின்மைப்பொருளதுங் காலப்பொருளதும்பெருமைப்பொருளதுமெனக்கொன்னைச்சொனான்காம்-எ-று. கொன்முனை யிரவூர் போலச்சிலவாகுகநீதுஞ்சுநாளேயென்புழிஅஞ்சிவாழுமூர் எ-ம், கொன்னே கழிந்தன்றிளமையுமென்புழிப்பயமின்றிக்கழிந்தது-எ-ம, கொன்வரல்வாடை நினக்கென்கொண்டேனேயென்புழிக்காதலர்நீங்கியகாலமறிந்துவந்தவாடை எ-ம், கொன்னூர்துஞ்சினும் யாந்துஞ்சலமேயென்புழிப் பேரூர்துஞ்சினும்-எ-ம்- கொன்னைச்சொனான்குபொருளும்படவந்தவாறுகண்டுகொள்க. (௬)

உருஉ. எச்சஞ்சிறப்பே யையமெதிர்மறை, முற்றேயெண்ணே தெரிநிலையாக்கமென், றப்பாலெட்டே யும்மைச்சொல்லே.

எச்சங்குறிப்பது முதலாகவாக்கங்குறிப்பதீறாக வும்மைச்சொலெட்டாம்-எ-று. சாத்தனும்வந்தானென்னுமும்மைகொற்றனும்வந்தானென்னு மெச்சங்குறித்துநிற்றலினெச்சவும்மை. கொற்றனும்வந்தானென்பதூஉ மிறந்தசாத்தன்வரவாகியவெச்சங்குறித்துநிற்றலினஎச்சவும்மை.குறவருமருளுங்குன்றத்துப்படினேயென்பது குன்றத்துமயங்காதியங்குதற்கட்குறவர்சிறந்தமையாற் சிறப்பும்மை.ஒன்றிரப்பான்போலிளிவந்துஞ்சொல்லும் உலகம்புரப்பான்போல்வதோர்மதுகையுமுடையன் வல்லாரைவழிபட் டொன்றறிந்தான்போல நல்லார்கட்டோன்றுமடக்கமுமுடையன் இல்லோர்புன்கணீகையிற்றணிக்க வல்லான்போல்வதோர்வண்மையுமுடையனென்புழிஇன்னானென்று துணியாமைக்கண்வருதலின் அவையையவும்மை. சாத்தன்வருதற்குமுரியனென்பது வாராமைக்குமுரியனென்னு மெதிர்மறையையொழிபாகவுடைத்தாய் நிற்றலின் எதிர்மறையும்மை. தமிழ்நாட்டுமூவேந்தருமென எஞ்சாப்பொருட்டாகலான் முற்றும்மை. நிலனுநீருந்தீயும்வளியுமாகாயமுமெனப்பூதமைந்தென்புழிஎண்ணுதற்கண்வருதலினெண்ணும்மை. இருநிலமடிதோய்தலிற்றிருமகளுமல்லள ரமகளுமல்லளிவள்யாராகுமென்றவழித்தெரிதற்பொருளாய்நிற்றலிற் றெரி

நிலையும்மை. திருமகளோ வரமகளோவென்னு தவனைநீக்குதலி னையவும்மையின்வேறுதலறிக. ஆக்கவும்மைவந்தவழிக் கண்டுகொள்க. உரையாசிரியர் நெடியனும் வலியனுமாயினானென்புழி உம்மையாக்கங்குறித்துநிற்றலி னாக்கவும்மையென்றார். செப்பேவழீஇயினும் வரைநிலையின்றேயென்னுமும்மை வழுவையிலக்கணமாக்கிக்கோடல்குறித்து நின்றமையா னாக்கவும்மை யென்பாருமுளர். (௭)

உ௫௩. பிரிநிலைவினாவே யெதிர்மறையொழியிசை, தெரிநிலைக்
கிளவி சிறப்பொடுதொகைஇ, யிருமூன்றென்ப வோகா
ரம்மே.

பிரிநிலைபொருட்டாவதுமுதலாக வோகார மறுவகைப்படும். எ-று. யானோதேறேனவர்பொய் வழங்கலரோ-எனபது தேறுவார் பிறரிற்பிரித்தலிற் பிரிநிலையெச்சமாயிற்று. சாத்தனுண்டானோ- என்பது வினாவோகாரம். யானோ கொளவேனென்பது கொள்ளேனென்னு மெதிர்மறைகுறித்துநிற்றலி னெதிர்மறையோகாரமாம். கொளலோகொண்டானெனபது கொண்டுய்யப்போயினானல்லனென்பதுமுதலாய வொழியிசைநோக்கிநிற்றலி னொழியிசையோகாரம். திருமகளோவல்ல ளரமகளோவல்ல ளிவள்யாரோஎன்பது தெரிதற்கண்வருதலிற் றெரிநிலையோகாரம். ஓஒ பெரியனென்பது பெருமைமிகுதியுணர்த்தலிற் சிறப்போகாரமாம். (௮)

உ௫௪. தேற்றம்வினாவே பிரிநிலையெண்ணே, யீற்றசையிவ்வை
ந்தேகாரமமே.

தேற்றேகாரமுதலாக வேகாரமைந்து. எ-று. உண்டேமறுமையெனத் தெரிவின்கண்வருதலிற் றேற்றேகாரம். நீயேகொண்டாயென வினாப்பொருளுணர்த்தலின் வினாவேகாரம். அவருளிவனேகள்வனெனப் பிரித்தலிற் பிரிநிலையேகாரம். நிலனே நீரே தீயே வளியேயென எண்ணுதற்கண்வருதலின் எண்ணேகாரம். கடல்போற்றோன்றல காடிறந்தோரேயென்பது செய்யுளிறுதிக்கண்வருதலினீற்றசையேகாரம். வாடாவள்ளியங்காடிறந்தோரேயெனச் செய்யுளிடையும்வருதலி னீற்றசையென்பது மிகுதிநோக்கிச்சென்றகுறி. இஃத சைநிலையாயினு மேகாரவேறுபாடாகலி னீண்டுக்கூறினார். (௯)

உ௫௫. வினையேகுறிப்பே யிசையேபண்பே, யெண்ணேபெய
ரொடவ்வறுகிளவியுங், கண்ணியநிலைத்தே யெனவெ
ன்கிளவி.

வினைமுதலாகியவாறு பொருண்மையுங்குறித்துவருமெனவென்னுமிடைச்சொல். எ-று. மலைவான்கொள்கெனவுயர்பலிதூஉயவென வினைப்பொருண்மையும், துண்ணெனத்துடித்தது மனமெனக்குறிப்புப்பொருண்மையும், ஒல்லெனவொலித்ததெனவிசைப்பொருண்மையும், வெள்ளெனவிளர்த்ததெனப் பண்புப்பொருண்மையும், நிலனென நீரெனத் தீயென வளியெனவெனவெண்

னும்பொருண்மையும், அழுக்காறெனவொருபாவியெனப் பெயர்ப்பொருண்மையுங்குறித்து எனவென்னுஞ்சொல் வந்தவாறுகண்டுகொள்க. (௧௦)

௨௫௬. என்றென்கிளவியு மதனோரற்றே.

என்றென்னுமிடைச்சொல்லு மெனவென்பதுபோல வவ்வாறுபொருளுங்குறித்துவரும். எ - று. நரைவருமென்றெண்ணி-எ-ம், விண்ணென்றிசைத்தது-எ-ம், ஒல்லென்றொலிக்கு மொலிப்புனலூரற்கு-எ-ம், பச்சென்றுபசந்தது-எ-ம், நிலனென்று நீரென்று தீயென்று-எ-ம், பாரியென்றொருவனுளன்-எ-ம் வரும். (௧௧)

௨௫௭. விழைவின்றில்லை தன்னிடத்தியலும.

அப்பான்மூன்றேதில்லைச் சொல்லெனப்பட்டமூன்றனுள் விழைவின்கண் வருந்தில்லைதன்மைக்கணல்லதுவாராது-எ-று. தன்மைக்கண்வருதன் மேற்காட்டப்பட்டனவற்றுள்ளும்பிறண்டுங்கண்டுகொள்க. இடம் வரையறுத்தோதாமையின்விழைவின்றில்லைதன்மைக்கண்வருதலு மேலேபெறப்பட்டதனைப்பின்னுங்கூறினார் ஏனையிடத்துவாராதென்று நியமித்தற்கென்பது. (௧௨)

௨௫௮. தெளிவினேயுஞ் சிறப்பினோவு, மளவினெடுத்த விசையவென்ப.

தெளிவின்கண்வருமேகாரமுஞ் சிறப்பின்கண்வருமோகாரமு மளபான்மிக்க விசையையுடையவென்றுசொல்லுவராசிரியர். எ- று. அளபெ[illegible]டையாய்வருதன்மேற்காட்டப்பட்டனவற்றுள்ளும் பிறண்டுங்கண்டுகொள்க. (௧௩)

௨௫௯. மற்றென்கிளவி வினைமாற்றசைநிலை, யப்பாலிரண்டென மொழிமனார்புலவர்.

மற்றென்னுஞ்சொல்வினைமாற்றுமசைநிலையுமெனவிரண்டாம். எ- று. மற்றறிவாநல்வினையாமிளையமென்றவழி அறஞ்செய்தல் பின்னறிவாமென வக்காலத்துவினைமாற்றுதலான்மற்றென்பதுவினைமாற்றின்கண்வந்தது. அதுமற்றவலங்கொள்ளாதுநொதுமலர்க்கலுழுமென அசைநிலையாய்வந்தது. கட்டுரையிடையுமற்றேவென அசைநிலையாய்வரும். (௧௪)

௨௬௦. எற்றென்கிளவி யிறந்தபொருட்டே.

எற்றென்னுஞ்சொல்லிறந்தபொருண்மைத்து. எ-று. எற்றென்னுடம்பி னெழினலமென்பது என்னலமிறந்ததென்னும்பொருள்படநின்றது. எற்றேற்றமில்லாருள்யானேற்றமில்லாதே னென்பதூஉம் இதுபொழுதுதுணிவில்லாருட் டுணிவில்லாதேன்யானென்றுதுணிவிறந்ததென்பதுபடநின்றது. (௧௫)

௨௬௧. மற்றையதென்னுங் கிளவிதானே, சுட்டுநிலையொழிய வினங்குறித்தன்றே.

மற்றையதெனப்பெயர்க்குமுதனிலையாய்வரு மற்றையென்னுமைகாரவீற்றிடைச்சொல்சுட்டப்பட்டதனையொழித் ததனினங்குறித்துநிற்கும். எ-று. ஆடைகொணாந்தவழி யவ்வாடைவேண்டாதான் மற்றையதுகொணாவென்னும் அஃதச்சுட்டியவாடையொழித் ததற்கினமாகியபிறவாடைகுறித்துநின்றவாறு கண்டுகொள்க. பெரும்பான்மையு முதனிலையாய்நின்றல்ல தவ்விடைச்சொல் பொருள்விளக்காமையின் மற்றையதென்னுங்கிளவியென்றார். சிறுபான்மை மற்றையாடையெனத்தானேயும்வரும். மற்றையஃது-மற்றையவன் - என்னுந் தொடக்கத்தனவும் அவ்விடைச்சொன்முதனிலையாயபெயர். (௧௫)

௨௬௨. மன்றவென்கிளவி தேற்றஞ்செய்யும்.

மன்றவென்னுஞ்சொறெளிவுப்பொருண்மையையுணர்த்தும். எ-று. கட்வுளாயினுமாகமடவைமன்றவாழியமுருகே-எனவரும்.மடவையேயென்றவாறு.

௨௬௩. தஞ்சக்கிளவி யெண்மைப்பொருட்டே.

முரசுகெழுதாயத்தரைசேதஞ்சம்-எனததஞ்சக்கிளவி யரைசுகொடுத்தலெளிதெனவெண்மைப்பொருளுணாத்தியவாறுகண்டுகொள்க. (௧௮)

௨௬௪. அந்திலாங்க வசைநிலைக்கிளவியென், றாயிரண்டாகு மியற்கைத்தென்ப.

அந்திலென்னுஞ்சொ லாங்கென்னுமிடப்பொருளுணர்த்துவதுமசைநிலையுமெனவிரண்டாம். எ- று. வருமேசேயிழையந்திறகொழுநற்காணியவென்புழிஆங்குவருமென்றவாறும். அந்திற்கச்சினன்கழலினனெனவாளாதே அசைத்துநின்றது. (௧௯)

௨௬௫. கொல்லே யையம்.

குற்றிகொலலோ மகன்கொல்லோ எனக்கொல்லையத்துக்கண்வந்தவாறு.

௨௬௬. எல்லே யிலக்கம்.

எல்லென்பதுரிச்சொனீர்மைத்தாயினுமாசிரியரிடைச்சொலாகவேயோதினமையானிடைச்சொலென்றோதும். எல்வளையென - எல்லென்பதுவிளங்குதற்கண்வந்தவாறு. (௨௧)

௨௬௭. இயற்பெயர்முன்ன ராரைக்கிளவி, பலர்க்குரியெழுத்தின் வினையொடுமுடிமே.

இயற்பெயர்முன்னர்வருமாரொனனுமிடைச்சொல்பலரறிசொல்லான்முடியும். எ-று. ஈண்டியற்பெயரென்றதிருதிணைக்கு மஃறிணையிருபாற்குமுரிய பெயரை. பெருஞ்சேந்தனார்வந்தார்-முடவனார்வந்தார்- முடத்தாமக்கணியார்வந்தார்-தந்தையார்வந்தார்-எ-ம், நரியார்வந்தார்-எ-ம் வரும். தாம், தான், எல்லாம்,நீயிர்,நீ-என்னுமைந்துமொழித்தல்லாவியற்பெயரெல்லாவற்றுமுன்னரும்,அ

ஃறிணையியற்பெயரெல்லாவற்றுமுன்னருமாரைக்கிளவிவருதலிற் பெரும்பான்மைகுறித்தியற்பெயர்முன்னரென்றார். நம்பியார்வந்தார்-நங்கையார்வந்தாரெனச் சிறுபான்மையுயர்திணைப்பெயர்முன்னர்வருத லொன்றெனமுடித்தலெனபதனாற்கொள்க. ஆரைக்கிளவி கள்ளென்பதுபோலவொற்றுமைப்பட்டுப் பெயரீறாய்நிற்றலி னாரைக்கிளவிபலரறிசொல்லான் முடியுமென்றது-அதனை யீறாகவுடையபெயர்பலரறிசொல்லான்முடியுமென்றவாறும். பலர்க்குரி யெழுத்தின்வினையொடுமுடிமேயெனவாரைக்கிளவியதியல்புணர்த்தவே அஃறுயர்த்தற்பொருட்டாதலும், திணைவழுவும்பால்வழுவுமமைத்தலும்பெற்றாம். ஒருமைப்பெயர்முன்னரொருமைசிதையாமலாரைக்கிளவிவந்து பலரறிசொல்லான் முடிதலினொருவரைக்கூறும்பன்மைககிளவியின்வேறுதலறிக. (௨௨)

௨௬௮. அசைநிலைக்கிளவி யாகுவழியறிதல்.

ஆரைக்கிளவியசைநிலையாமிடமறிக. எ-று. பெயரினாகியதொகையு மாருளவே-எ-ம், எல்லாவுயிரொடுஞ்செல்லுமார்முதலே-எ-ம வரும். ஆகுவழியறிதலென்றதனாலசைநிலையாங்காலும்மைமுன்னரு மும்மீற்றுவினைமுன்னருமல்லதுவாராமையறிக. சிறுபான்மைபிறண்டுவருமேனுங்கொள்க. (௨௩)

௨௬௯. ஏவுங்குரையு மிசைநிறையசைநிலை, யாயிரண்டாகுமியற்கையவென்ப.

ஏ என்னுமிடைச்சொல்லுங் குரை என்னுமிடைச்சொல்லு மிசைநிறையுமசைநிலையுமெனவோரோவொன்றிரண்டாம். எ-று. ஏ எ யிஃதொத்தனெனப்பெறுன்கேட்டைக்காண- என்பதிசைநிறை. ஏ எ யென்சொலலுக-என்பதசைநிலை. அளிதோதானெய்துபெறலருங்குரைத்தே-என்பதிசைநிறை.பலகுரைத்துன்பங்கள்சென்றுபடும்-என்பதசைநிலை. தொடர்மொழிமுதற்கட் பிரிந்துநின்றல்லதுபெரும்பான்மையுமேகாரமிசைநிறையுமசைநிலையுமாகாமையிற் சார்ந்தமொழியோடொன்றுபட்டிசைத்திடையுமிறுதியுநிற்குந்தேற்றேகாரமுதலாயினவற்றொடொருங்குகூறாது வேறுகூறினார். அஃதேலிதனைநிரனிறைப் பொருட்டாகக்கொண்டு ஏ இசைநிறை,குரைஅசைநிலையென்றாராலுரையாசிரியரெனின் அற்றன்று மற்றுஅந்திலென்பனபோலப் பொருள்வகையான் வேறுபடுவனவற்றையிரண்டாமென்பதல்லது சொல்வகையானிரண்டாகியசொல்லையிரண்டாமென்றதனானோர்பயமின்மையா னவர்க்கது கருத்தன்றென்க. அல்லதூஉமொருசொல்லேயிசைநிறையுமசைநிலையுமாகலுடைமையா னவற்றையுடன்கூறினானொன்றுக்கா லிசைநிறையுமசைநிலையுமொருங்குமயங்கக்கூறலா மாகலானுமவர்க்கதுகருத்தன்மையுணாக. (௨௪)

௨௭0. மாவென்கிளவி வியங்கோளசைச்சொல்.

மா என்னு மிடைச்சொல்வியங்கோளைச்சார்ந்தசைநிலையாய்வரும். எ-று. புற்கையுண்கமாகொற்கையோனே-எனவரும். (௨௫)

உஎக. மியாயிகமோமதி யிகுஞ்சின்னென்னு, மாவயினாறு முன்னிலையசைச்சொல்.

மியாமுதலாகியவாறு முன்னிலைமொழியைச்சார்ந்துவருமசைநிலைச்சொல்லாம. எ-று. கேண்மியா-சென்மியா-எ-ம், கண்பனியான்றிகவென்றிதோழிஏ-ம, காமஞ்செப்பாதுகண்டதுமொழிமோ-எ-ம், உரைமதிவாழியோவலவஎ-ம், மெல்லேம்புலம்பனைச்சண்டிகும்-எ-ம், காப்பும்பூண்டிசிற்கடையும்போகல்-எ-ம்வரும். (உசு)

உஎஉ. அவற்றுள், இகுமுஞ்சின்னு மேனையிடத்தொடுந், தகுநிலையுடைய வென்மனார்புலவர்.

மேற்கூறப்பட்டவாறனுளிகுமுஞ்சின்னுமபடர்க்கைச்சொல்லொடுந்தன்மைச்சொல்லொடும் பொருந்துநிலையுடையவெனவெய்தியதன்மேற் சிறப்புவிதிவகுத்தவாறு. கண்டிகுமல்லமோ-எ-ம்,கண்ணும்படுமோவென்றிசின்யானே-எ-ம்- தன்மைக்கண்வந்தன. புகழ்ந்திகுமல்லரோபெரிதே-எ-ம், யாரஃதறிந்திசினோரே-எ-ம- படர்க்கைக்கண்வந்தன. (உஎ)

உஎந. அம்மகேட்பிக்கும்.

அம்மவென்னுமிடைச்சொல்லொருவனையொருவனென்றுகேளென்றுசொல்லுதற்கண்வரும். எ-று. அம்மவாழிதோழி-எனவரும். மியாயிகமுதலாகியவசைநிலையொருபொருளுணர்த்தாவாயினு முன்னிலைக்கணல்லது வாராமையினவ்விடமுணர்விக்குமாறுபோல அம்மவென்பதூஉமொருபொருளுணர்த்தாதாயினுமொன்றனைக்கேட்பிக்குமிடத்தல்லது வாராமையானப்பொருளுணர்விக்குமென்பதுவிளக்கியகேட்பிக்குமெனஙுர். (உஅ)

உஎச. ஆங்கவுரையசை.

ஆங்கவென்னுமிடைச்சொல்கட்டுரைக்கணசைநிலையாய்வரும். எ-று. ஆங்கக்குயிலுமயிலுங்காட்டி-எனவரும். (உகூ)

உஎரு. ஒப்பிலபோலியு மப்பொருட்டாகும்.

ஒப்புமையுணர்த்தாதபோலிச்சொல்லுமாங்கவென்பதுபோல வுரையசையாம். எ-று. மங்கலமென்பதோரூருண்டுபோலும்- எனவரும். போலும், போல்வது-என்னுந்தொடக்கத்துப்பலவாய்பாடுநதழுவுதற்குப்போலியென்ஙுர்.நெருப்பழற்சேர்ந்தக்கானெய்போல்வதூஉமென்பதுமது. அசைநிலையும்பொருள்குறித்தல்லதுஇல்லாமையினப்பொருட்டாகுமென்ஙுர். (ஙo)

உஎசா. யாகா, பிறபிறக்கரோபோ மாதெனவரூஉ,மாயேழ்சொல்லு மசைநிலைக்கிளவி.

யாமுதலாகியவேழிடைச்சொல்லுமசைநிலையாம். எ-று. யாபன்னிருவர்மாணாக்கரகத்தியனார்க்கு-எ-ம், புறனிற்பட்டாளோவியளிவட்காண்டிகா-எ-ம்,

தான்பிறவரிசையறிதலிற்றன்னுந்தூக்கி-எ-ம், அதுபிறக்கு-எ-ம், நோதகவிருங்குயிலாலுமரோ-எ-ம், பிரியின்வாழாதென்போதெய்ய-எ-ம், விளிந்தன்றுமாதவற்றெளிந்தவென்னெஞ்சே-எ-ம்வரும். இடம்வரையறுமையினிவைமூவிடத்திற்குமுரிய. ஆங்கவுமொபபில்போலியுமுரைதொடங்குறற்கண்ணுமாதரமில்வழியும்வருதலின்வேறுகூறினர். (ருக)

உஎஎ. ஆகவாக லென்பதென்னு, மாவயின்மூன்றும் பிரிவிலசைநிலை.

ஆகவாகலென்பது என்றுமூன்றிடைச்சொல்லும் அசைநிலையாங்காலிரட்டித்துநிற்கும்-எ-று. பிரிவிலசைநிலையெனவேதனித்துநின்றசைநிலையாகாவென்பதாம். ஒருவன்யானின்னேனென்றானும், நீயின்னையென்றானும், அவனின்னனென்றானுங்கூறியவழிக்கேட்டான் ஆகஆக- ஆகல் ஆகலென்னும்; இவையுடம்படாமைக்கண்ணும், ஆதரமில்வழியும்வரும். ஒருவனொன்றுரைப்பக்கேட்டான் என்பது என்பது என்னும். அதுநன்குரைத்தற்கண்ணும், அழகாதற்கண்ணும்வரும். பிறண்டுவரினும்வழக்குநோக்கியுணர்ந்துகொள்க. (ருஉ)

உஎஅ. ஈரளபிசைக்கு மிறுதியிலுயிரே, யாயியனிலையுங் காலத்தானு, மளபெடைநிலையுங் காலத்தானு, மளபெடையின்றித் தான்வருங்காலையு, முளவெனமொழிபபொருள் வேறுபடுதல்,குறிப்பினிசையானெறிப்படத்தோன்றும்

இரண்டுமாத்திரையையுடைத்தாய் மொழிக்கீறாகாதெனப்பட்ட ஔகாரம்பிரிவிலசைநிலையென மேற்கூறப்பட்டனபோல விரட்டித்து நிற்குமிடத்து மிரட்டியாதளபெடையாய்நிற்குமிடத்து மளபெடையின்றித் தான்வருமிடத்தும்பொருள்வேறுபடுதலுள அப்பொருள்வேறுபாடுசொல்லுவான் குறிப்பிற்குறிக்குமோசைவேறுபாட்டாற்புலப்படும்.எ-று. பொருள்வேறுபாடாவனவழக்குநோக்கச் சிறப்புமாறுபாடுமாம். ஔ ஔ வொருவன்தவஞ்செய்தவாறு-என்றவழிச்சிறப்புத்தோன்றும். ஒருதொழில்செய்வானை ஔ ஔ வினிச்சாலுமென்றவழிமாறுபாடுதோன்றும்.ஔஉவொருவனிரவலர்க்கீந்தவாறு - ஔஉ வினிவெகுளல் - எ - ம், ஔவவன்முயலுமாறு - ஔவினித்தட்டுப்புடையல்-எ-ம்- அளபெடுத்துமளபெடாதும்வந்தவ்ழியு மப்பொருடோன்றியவாறு கண்டுகொள்க. இதனையிக்காலத்தோகாரமாகவழங்குப. பிறபொருள் படுமாயினு மறிந்துகொள்க. ஈரளபிசைக்குமென்றேயொழியி னெட்டெழுத்தெல்லாவற்றுமேலும், இறுதியிலுயிரொன்றேயொழியி னெகர வொகரத்துமேலுஞ் சேறலானீரளபிசைக்குமிறுதியிலுயிரொன்றார். இதுதத்தங்குறிப்பிற்பொருள்செய்வதாயினுமடுக்கிவருதலுடைமையானீண்டுவைத்தார். (ருரு)

உஎகூ. நன்றீற்றேவு மன்றீற்றேவு, மந்தீற்றோவு மன்னீற்றோவு, மன்னபிறவுங் குறிப்பொடுகொள்ளும்.

நன்றீறேவுமன்றீறேவுமாவன-நன்றே-அன்றே-என்பன. அந்தீறோவு
மன்னீற்றோவுமென்பன-அந்தோ - அன்னோ - என்பன. நன்றினீற்றின்கணே
யெனவிரியும். இவ்விரியேனையவற்றிற்குமொக்கும். நன்றீற்றேஎன்பதனு ணம்
மூர்ந்துவருஉமிகர வைகாரமெனபுழிப்போலச்சொன்முழுவதூங் கொள்ளப்ப
டும். ஒழிந்தனவுமன்ன. குறிப்பொடுகொள்ளுமென்றது மேலதுபோலவிவை
யுங்குறிப்போசையாற பொருளுணர்த்துமெனறவாறு. ஒருவனொன்றுரைத்த
வழியதற்குமேவாதான் நன்றேநன்றே-அன்றேஅன்றேயெனவடுக்கலும்வரும்.
அவைமேவாமைக்குறிப்புவிளக்கும். அவனன்றே யிதுசெய்வானென வடுக்கா
துநின்றவழி அன்றீற்றேவுக்குத்தெளிவுமுதலாகிய பிறபொருளும்படும். ஏனை
யிரண்டுமடுக்கியுமடுக்காது மிரங்கற்குறிப்புவெளிப்படுக்கும். இவையுந்தத்தங்
குறிப்பிற்பொருள்செய்வன. ஏனைப்பிறவுமென்றதனான் அதோஅதோ, சோ
சோ-ஒக்குமொக்குமென்றாற்றொடக்கத்தனகொள்க. (௩௪)

உ௪௦. எச்சவும்மையு மெதிர்மறையும்மையுந், தத்தமுண்மய
ங்கு முடனிலையிலவே.

இனிமேற்கூறப்பட்டவிடைச்சொல்லின்கட்படு மிலக்கணவேறுபாடுணர்
த்துகின்றார். எச்சவும்மைநின்றவழியெஞ்சுபொருட்கிளவியாமெதிர்மறையும
மைத்தொடர்ந்துவந்து தமமுண்மயங்குதலில. எ - று. சாத்தனும்வந்தான்கொற
றனும்வரலுரியன் - எனின்இயையாமைகண்டுகொள்க. ஏனையும்மையொடுமயங்
குதல்விலக்காராயிற்றென்னையெனின் அவையெஞ்சுபொருட்கிளவியவாய் வா
ராமையினென்பது. (௩௫)

உ௪௧. எஞ்சுபொருட்கிளவி செஞ்சொலாயிற், பிற்படக்கிள
வார் முற்படக்கிளத்தல்.

எச்சவும்மையாற்றழுவப்படுமெஞ்சுபொருட்கிளவி யும்மையில்சொல்லா
யி னவ்வும்மையில்சொல்லை யவ்வும்மைத்தொடர்க்குப்பின்சொல்லாது முன்
சொல்லுக. எ-று. சாத்தன்வந்தான்-கொற்றனும்வந்தான்-எனவரும். கொற்ற
னும்வந்தான்-சாத்தன்வந்தானெனப்பிற்படக்கிளப்பின்முற்கூறியதனைவிலக்கு
வதுபோன்று பொருள்கொள்ளாமைகண்டுகொள்க. ஆடகுபுலால்பாகுபாளி
தமுமுண்ணான்கடல்போலுங்கல்வியன்-என்பதுமது.உம்மையடாதேதானேநிற
றலிற்செஞ்சொலென்றார். செஞ்சொலாயின்முற்படக்கிளக்கவெனவேயெஞ்சு
பொருட்கிளவியும்மையொடுவரிற்பிற்படக்கிளக்கவெனறவாறும். (௩௬)

உ௪௨. முற்றியவும்மைத் தொகைச்சொன் மருங்கி, னெச்சக்கி
ளவி யுரித்துமாகும்,

முற்றும்மையடுத்துநின்றதொகைச்சொலிடத்துஎச்சச்சொலுரித்துமாம்.எ-
று. பத்துங்கொடால்-அனைத்துங்கொடாலென்புழிமுற்றும்மைதம்பொருளுண
ர்த்தாது சிலவெஞ்சக்கொடுவென்னும்பொருடோன்றிநின்றவாறுகண்டுகொள்
க. முற்றுதலென்னும்பொருளதுபண்பு முற்றியவும்மையெனவொற்றுமைநய

த்தாற்சொன்மேலேறிநின்றது. உரித்துமாகுமெனவேயெச்சப்பொருண்மைகுறியாதுநிற்றலேபெரும்பான்மையென்பதாம. ஏற்புழிக்கோடலென்பதனான் எச்சப்படுவதெதிர்மறைவினைக்கணென்றுகொள்க. பத்துங்கொடுவென்பது-பிறவுங்கொடுவென்பதுபடநிற்றலின் விதிவினைக்கண்ணுமெச்சங்குறிக்குமென்பாருமுளர். இப்பொழுதுபத்துங்கொடுவெனபதுகருத்தாயி னிப்பொழுது பத்துக்கொடுவெனவும்மையின்றியும்பொருள்பெறப்படும்.பத்துங்கொடுபிறவுங்கொடுவென்பதுகருத்தாயினிஃதெச்சவும்மையாகலினீண்டைக்கெய்தாது அதனானு பொருத்தமின்றென்க. இவைமூன்றுசூத்திரத்தானும்வழுவற்கவென விடைச்சொற்பற்றிமரபுவழூக்காத்தவாறு. (௩௭)

௨௮௩. ஈற்றுநின்றிசைக்கு மேயெனிறுதி, கூற்றுவயினோரள பாகலுமுரித்தே.

செய்யுளிறுதிக்கணின்றிசைக்குமீற்றசையேகாரங்கூற்றிடத்தொருமாத்திரைத்தாதலுமுரித்து. எ-று. கடல்போற்றோன்றல்காடிறந்தோரே - என்புழியோரளபாயினவாறுகண்டுகொள்க. தேற்றமுதலாயினநீக்கியீற்றசையே தழுவுதற்கீற்றுநின்றிசைக்குமென்றார். செய்யுளிடைநிற்பதனை நீக்குதற்கீற்றுநின்றிசைக்கு மென்றேயொழியாதிறுதியென்றார். மேனின்றசெய்யுளுறுப்பொடு பொருந்தக்கூறுதற்கணென்பார கூற்றுவயினென்றார். உம்மையெதிர்மறை.()

௨௮௪. உம்மையெண்ணு மெனவெனெண்ணுந், தம்வயிற்றொகுதி கடப்பாடிலவே.

உம்மையான்வருமெண்ணுமெனவான்வருமெண்ணு மிறுதிக்கட்டொகைபெறுதலைக்கடப்பாடாகவுடையவல்ல. எ - று. எனவேதொகைபெற்றும்பெறாதும்வருமென்பதாம். உயர்திணைக்குரிமையுமஃறிணைக்குரிமையு மாயிருதிணைக்குமோரன்னவுரிமையுமம்மூவுருபின-எ-ம், இசையினுங்குறிப்பினும் பண்பினுந்தோன்றி-எ-ம், நிலனெனநீரெனத்தீயெனவளியெனநான்கும்-எ-ம், உயிரெனவுடலெனவின்றியமையா-எ-ம்- ஆவ்விருவகையெண்ணுந்தொகைபெற்றும் பெறாதும்வந்தவாறு. தொகையெனடபொதுப்படக்கூறியவதனானெண்ணுப்பெயரேயன்றியனைத்துமெல்லாமென்னுந்தொடக்கத்தனவுங்கொள்க. (௩௧)

௨௮௫. எண்ணேகார மிடையிட்டுக்கொளினு, மெண்ணுக்குறித்தியலு மென்மனார்புலவர்.

சொற்றொறும்வாரா தெண்ணேகாரமிடையிட்டுவரினுமெண்ணுதற் பொருட்டாம். எ-று. மலைநிலம்பூவேதுலாக்கோலென்றின்னர்-எ-ம், தோற்றமிசையேநாற்றஞ்சுவையே யுறலோடாங்கைம்புலனெனமொழிப-எ-ம் வரும். எண்ணுக்குறித்துவருவனவெண்ணப்படும்பெயரெல்லாவற்றொடும்வருதன்மரபாயினு மிடையிட்டுவரினுமமைகவெனவமைத்தவாறு. எனவுமென்றுஞ்சொற்றொறும்வாராதொருவழிநின்றுமெண்ணுக்குறிக்குமாலெனின் அவையொருவழிநின்றெல்லாவற்றொடுமொன்றுதலி னுண்டாராய்ச்சியில்லையென்க. பிறவெண்

ணொடாநின்றவழி யேகாரவெண்ணிடை வந்ததாயினுமொடாநின்ற பிறவெண் ணேயாமெனவுரைத்தாராலுரையாசிரியரெனின் அவ்வாறுவிரா யெண்ணியவ ழிப்பிறவெண்ணுற்பெடாகொடுப்பி னதனை யேகாரவெண்ணென்பாரையும் வி லக்காமையானும, பிறவெண்ணுமென்பதனாற் பெறப்படுவதோர்பயனின்மை யானுமவாக்கதுகருத்தன்றெனக. (௪௦)

௨௮௫. உம்மைதொக்க வெனுவென்கிளவியு, மாவீறுகியவென் றென்கிளவியு, மாயிருகிளவியு மெண்ணுவழிப்பட்டன.

உம்மைதொக்குநின்றவெனுவென்று மிடைச்சொல்லு மென்றுவென்னுமி டைச்சொல்லுமிரண்டுமெண்ணிடத்துவரும. எ-று. நிலனென நீரென - எ-ம், நிலனென்று நீரென்று-எ-மவரும். உம்மைதொக்கவெனுவெனகிளவியெனவே எனுவுமெனவசசொல்உமமொடுவருதலுமுடைத்தென்பதாம். உம்மொடுவந்த வழியவ்வெண்ணும்மையெண்ணுளடங்கும. எண்ணுவழிப்பட்டனவெனவேய வைசொற்றொறுமவருதலேயனறியிடையிட்டுவருமென்பதாம். பின்சாரயல்பு டைதேவகையெனு-எ-ம், ஒப்பிறபுகழ்றபழியினெனறு- எ-ம்- இடையிட்டுவந் தவாறு. இவையெண்ணுதறகண்வாராமையானும், அவற்றின்வருஉமெண்ணினி றுதியுமெனச்சூத்திரஞ்சுருங்குதற்சிறப்பினானுமிவற்றினையீண்டுவைத்தார.

௨௮௭. அவற்றின்வரூஉ மெண்ணினிறுதியும்,பெயர்க்குரிமரபி ற் செவ்வெணிறுதியு, மேவினாகிய வெண்ணினிறுதியு ம், யாவயின்வரினுந் தொகையின்றியலா.

மேறசொல்லப்பட்டவெனுவென்றுவென்பனவற்றான் வருமெண்ணினிறு தியுமிடைச்சொல்லானன்றிப்பெயரானெண்ணப்படுஞ் செவ்வெணிறுதியு மே காரத்தான்வருமெண்ணினிறுதியும் யாதானுமோரிடத்துவரினுநதொகையின்றி யில்லா. எ-று. நிலனென நீரெனவிரண்டும்-எ-ம,நிலனென்று நீரென்றுவிரண் டும்-எ-ம், நிலநீரெனவிரண்டும்-எ-ம், நிலனேநீரேயெனவிரண்டும்-எ-ம்- தொ கைபெறறுவநதவாறு. செவ்வெணிடைசசொலலெண்ணன்றென்றுராயினு மெண்ணுதலுநதொகைபெறுதலுமாகியவொப்புமையானீண்டுக்கூறினார்.(௪௨)

௨௮௮ உம்மையெண்ணி னுருபுதொகல்வரையார்.

உம்மையெண்ணின்கணுருபுதொகுதல்வரையப்படாது. எ-று. பிறிதுபிறி தேற்றலுமுருபுதொகவருதலுநெறிப்படவழங்கியவழிமருங்கினென்பவென்னு ம்பொதுவிதியானும்மையெண்ணின்கணுருபுதொகல்பெறப்பட்டமையாற் பெ ற்றதன்பெயர்த்துரைநியமப்பொருட்டாகலினும்மையெண்ணினுருபுதொகலவ ரையப்படாதேனையெண்ணின்கணவ்வரையப்படுமென நியமித்தலிதற்குப்ப யனாகக்கொள்க. குன்றிகோபங்கொடிவிடுபவளமொண்செங்காந்தளொக்குநி ன்னிறமெனப்பிறவெண்ணின்கணுருபுதொக்கதாலெனின் அற்றன்று செவ்வெ ண்தொகையின்றில்லாமையினவற்றையெனவொருசொல்விரிக்கப்படும். விரி

க்கவேகுன்றிமுதலாயின வெழுவாயாய்நின்றனவாமென்பது. பாட்டுங்கோட் டியுமறியாப்பயமிறேக்குமரம்போனிடியவொருவன், இசையினுங்குறிப்பினும் பண்பினுந்தோன்றி- எனவும்மையெண்ணின்கணுருபுதொக்கவாறு கண்டுகொள்க. வரையாறொன்றதனுணுண்டுமெல்லாவுருபுந்தொகா; ஐயுங்கண்ணுமேதொகுவனவெனக்கொள்க. யானைதேர்குதிரைகாலாளெறிந்தார்-எனவும்மையுமுருபுமுடன்றொக்கவழியும்மைத்தொகையென்றுதுருபுதொகையென்கவென்ப திச்சூத்திரத்திற்குக்கருத்தாகவுரைத்தாரா லுரையாசிரியரொனின் அஃதும்மைத்தொகையாகலினொருசொன்னடைத்தாயுருபேற்றானும், பயனிலைகொண்டானு நிற்கும். அத்தொகையினுடைஉருபின்மைசிற்றறிவினோர்க்கும்புலனாம்;அதனானஃதவர்க்குச்கருத்தன்மைசொல்லவேண்டுமோவென்பது. (௪௩)

உ௮௯. உம்முந்தாகு மிடனுமாருண்டே.

வினைசெயன்மருங்கிற் காலமொடுவருவனவற்றுள் உம்மீறுந்தாயத்திரிதலுமுடைத்து. எ-று. நீர்க்கோழிகூப்பெயாக்குநது-எ-ம், நாரரிநறவிறுண்மகிழ்துங்குந்து-எ-ம்வரும். வினைசெயன்மருங்கிற் காலமொடுவருவனவற்றுளென்பது ஏற்புழிக்கோடலென்பதனாற்பெற்றாம். இடனுமாருண்டேயென்றதித்திரிபுபெயரொச்சத்திற்சிறுயவழியென்பதுகருதிப்போலும். தம்மீறுதிரிதன் முதலாயினஇவ்வோத்தினுட்கூறப்படுமிடைச்சொற்கேயென்பதிதனும்பெற்றாம். வினையியலுள்ளுங்கூறப்படுமாயினுமிடைச்சொற்றிரிபாகலானீண்டுக்கூறலும்மையுடைத்தென்பது. (௪௪)

உகூ0. வினையொடுநிலையினு மெண்ணுநிலைதிரியா, நினையல் வேண்டு மவற்றவற்றியல்பே.

வினையொடுநிற்பினுமெண்ணிடைச்சொற்க டந்நிலைமையிற்றிரியாவவற்றொடுவருங்காலவற்றவற்றியல் பாராய்தல்வேண்டும். எ-று. உண்டுந்தின்றும்பாடியும்வந்தான்-எ-ம், உண்ணவெனத்தின்னவெனப்பாடவெனவந்தான்- எ-ம்வரும். ஒழிந்தவெண்ணுடுவருவனவுளவேற்கண்டுகொள்க. பெரும்பான்மையும்பெயரொடல்ல தெண்ணிடைச்சொனில்லாமையினதனைமுற்கூறிச்சிறுபான்மைவினையொடுநிற்றலுமுடைமையானிதனை யீண்டுக்கூறினார். நினையல்வேண்டுமவற்றவற்றியல்பேயென்றதனானெண்ணிடைச்சொன்முற்றுச்சொல்லும்பெயரொச்சமும்பற்றிவாராதென்பதூஉம், வினையெச்சத்தொடுமேற்பனவற் றொடல்லதுவாராதென்பதூஉம், ஆண்டுத்தொகைபெறுதல்சிறுபான்மையென்பதூஉங்கொள்க. சாத்தன்வந்தான் கொற்றன்வந்தான் வேடன்வந்தானென மூவரும்வந்தமையாற் கலியாணம்பொலிந்ததெனச்செவ்வெண்தொகைபெற்றுவந்ததென்றாராலுரையாசிரியரொனின் அவையெழுவாயும், பயனிலையுமா யமைந்து மாறுதலினெண்ணப்படாமையானும், மூவருமென்பது சாத்தன்முதலாயினோர்தொகையாகலானுமதுபோலியுரையென்க. (௪௫)

உகூக. என்றுமெனவு மொடுவுந்தோன்றி, யொன்றுவழியுடைய வெண்ணினுட்பிரிந்தே.

என்றுமெனவுமொடுவுமெனபனவொருவழித்தோன்றியெண்ணினுட் பிற
வழியும்பிரிந்துசென்றொன்றுமிடமுடைய-எ-று. வினைபகையென்றிரண்டினை
ச்சம-எ-ம், கண்ணிமைநொடியென-எ-ம், பொருள்கருவிகாலம்வினையிடனொ
டைந்தும்-எ-ம்- அவையொருவழிநின்று, வினையென்று பகையென்று - எ-ம்,
கண்ணிமையெனநொடியென-எ- ம், பொருளொடு கருவியொடு காலத்தொடு
வினையொடு இடனொடு-எ- ம் - நின்றவிடத்துப்பிரிந்து பிறவழிச்சென் றொன்
றியவாறுகண்டுகொள்க. ஒன்றுவழியுடையவென்றதனாற்சொற்றொறுநிற்பதே
பெரும்பான்மையென்பதாம். சொற்றொறுநின்றவெண்ணிக்காலத்தரிய. ஒடு
வென்பதோரிடைச்சொலெண்ணின்கண்வருதலினாற்கொள்க. இவைமூன்றும்
பொருளிற்பிரிந்தெண்ணின்க ணசையாய்வருதலுடைய்வென்ப தொல்லாசிரிய
ர்க்குக் கருத்தென்பாருமுளர். அசைநிலையென்பதிச்சூத்திரத்தாற் பெறப்படா
மையானும், கண்ணிமைநொடியென்னுஞ்சூத்திரத்தெனவென்பதைக் கண்ணி
மையென்பதனொடுகூட்டுகவென் றுணர்த்தலானுமவர்க்கதுகருத்தன்றென்க. ()

உ௬௨. அவ்வச்சொல்லிற் கவையவைபொருளென, மெய்பெ
றக்கிளந்த வியலவாயினும், வினையினும்பெயரினுநினை
யத்தோன்றித், திரிந்துவேறுபடினுந் தெரிந்தனர்கொ
ளலே.

மேற்கூறப்பட்டவிடைச்சொற்க ளவ்வச்சொல்லிற்கவையவை பொரு
ளெனநிலைபெறச்சொல்லப்பட்ட வியல்பையுடையனவாயினும் வினையொடும்
பெயரொடுமொராய்ந்துணரத்தோன்றிவேறுபொருளவாயு மசைநிலையாயுந்திரி
ந்துவரினுமாராய்ந்துகொள்க. எ-று. எனவேகூறியமுறையான்வருதல் பெரு
ம்பான்மையென்றும், வேறுபடவருதல்சிறுபான்மையென்றுஞ் சொல்லியவா
றும். வினையொடும்பெயரொடுமென்றது அவைவேறுபொருள வென்றுணர்த
ற்குச்சார்புகூறியவாறு. சென்றீபெருமநிற்றகைக்குநாயாரோ-எ-ம், கலக்கொ
ண்டேன் கள்ளென்கோகாழ்க்கொண்டேன் சூடென்கோ-எ-ம்-ஓகாரமீற்றசை
யாயுமெண்ணுயும்வந்தது. ஓர்கமாதோழியவர்தேர்மணிக்குரலே- எனமாமுன்
னிலையசைச்சொலாயிற்று. அதுமற்கொண்கன்றேரோ- என மன்னசைநிலையா
யிற்று. பிறவுமன்ன. செய்யுளின்பநோக்கிவினையினும்பெயரினுமென்றார்.(௬௭)

உ௬௩. கிளந்தவல்ல வன்னபிறவுங், கிளந்தவற்றியலா னுணர்
ந்தனர்கொளலே.

மேற்சொல்லப்பட்டனவன்றியவைபோல்வன பிறவரினுமவற்றையுங் கி
ளந்தசொல்லினியல்பானுணர்ந்துகொள்க. எ- று. கிளந்தவற்றியலா னென்ற
தாசிரியராணையானன்றிக்கிளந்தவற்றையு மின்னவென்றறிவதுவழக்கினுட்சா
ர்புமிடமுங்குறிப்பும்பற்றியன்றே கிளவாதவற்றையு மவ்வாறுசார்புமிடமுங்
குறிப்பும்பற்றிஇஃதசைநிலை இஃதிசைநிறைஇஃதுகுறிப்பாலின்னபொருளுண
ர்த்துமென் றுணர்ந்துகொள்கவென்றவாறு. சிறிதுதவிர்ந்தீகமாள நின்பரிசி
லருய்மமார்-எனமாளவும், சொல்லேன்றெய்யநின்னொடுபெயர்ந்தே-எனத்தெ

ய்யவும், அறிவார்யாரஃதிறவுழியிறுகெனஎனவும், பணியுமாமென்றும் பெருமை எனஆமும், ஈங்காகுகவாலென்றிசின்யானே- எனஆதும்-அசைநிலையாய்வந்தன. குன்றுதொறுடலுநின்றதன்பண்பே- எனத்தொறுவென்பதுதான்சார்ந்தமொழிபொருட்குப்பன்மையுமிடமாதலுமுணர்த்திநிற்கும். ஆனம்-ஏனம்-ஓனம்- என்பனவெழுத்துச்சாரியை. பிறவுமெடுத்தோதாதவிடைச்சொலெல்லாமிப்புறநடையாற்றழீஇக்கொள்க. (சஅ)

ஏழாவது

இடைச்சொலியல் முற்றிற்று.

எட்டாவது

உரிச்சொலியல்.

உகூச. உரிச்சொற்கிளவி விரிக்குங்காலை, யிசையினுங்குறிப்பினும் பண்பினுந்தோன்றிப், பெயரினும்வினையினு மெய்தடுமாறி, யொருசொற்பல்பொருட் குரிமைதோன்றினும், பலசொலொருபொருட் குரிமைதோன்றினும், பயிலாதவற்றைப் பயின்றவைசார்த்தித், தத்தமரபிற்சென்றுநிலைமருங்கி, னெச்சொலாயினும் பொருள்வேறுகிளத்தல்.

நிறுத்தமுறையானேயுரிச்சொலுணர்த்திய வெடுத்துக்கொண்டார்; அதனானிவ்வோத்துரிச்சொலோத்தென்னும்பெயர்த்தாயிற்று. தமக்கியல்பில்லாதஇடைச்சொற்போலாதிசைகுறிப்புப் பண்பென்னும்பொருட்குத்தாமேயுரியவாகலினுரிசொலாயிற்று. பெரும்பான்மையுஞ்செய்யுட்குரியவாய் வருதலினுரிச்சொலாயிற்றென்பாருமுளர். உரிச்சொல்லைவிரித்துணர்த்துமிடத்திசைகுறிப்புப்பண்பென்னும்பொருண்மேற்றோன்றிப்பெயர்க்கண்ணும் வினைக்கண்ணுந் தம்முருபுதடுமாறி யொருசொற்பல்பொருட்குரித்தாய்வரினும்பலசொலொருபொருட்குரித்தாய்வரினுங் கேட்பானாற்பயிலப்படாதசொல்லைப்பயின்றவற்றொடுசார்த்திப்பெயரும்வினையுமாகிய தத்தமக்குரியநிலைக்களத்தின்கண் யாதானுமொருசொல்லாயினும் வேறுவேறுபொருளுணர்த்தப்படும். எ- று. என்றதுஇசைகுறிப்புப்பண்பென்னும் பொருளவாய்ப் பெயர்வினைபோன்றுமவற்றிற்குமுதனிலையாயுநதடுமாறி ஒருசொலொருபொருட்குரித்தாதலே யன்றியொருசொற்பலபொருட்கும் பலசொலொருபொருட்குமுரியவாய் வருவனவுரிச்சொலென்றும், அவைபெயரும்வினையும்போல வீறுபற்றிப்பொருளுணர்த்தலாகாமையின் வெளிப்படாதவற்றை வெளிப்பட்டவற்றொடு சார்த்தித்தம்மையெடுத்தோதியே யப்பொருளுணர்த்தப்படுமென்றும் உரிச்சொற்குப்பொதுவிலக்கணமு மவற்றிற்குப் பொருளுணர்த்துமுறைமையுமுணர்த்தியவாறு.

குறிப்புமனத்தாற் குறித்துணரப்படுவது. பண்புபொறியானுணரப்படுங்குண ம். கறுப்புத்தவ-என்பனபெயர்வினைப்போலி. துவைத்தல் துவைக்கும்-என்ப ன பெயர்வினைக்கு முதனிலையாயின. உறுமுதலாயின மெய்தடுமாறுதுவருமா தலிற் பெயரினும்வினையினுமெய்தடுமாறியென்றது பெரும்பான்மைபற்றியெ னக்கொள்க. அவைகூறியவாற்றாற் பொருட்குரியவாய்வருமாறு முன்னர்க் காணப்படும். மெய்தடுமாறலுமொருசொற்பல்பொருட்குரிமையும் பலசொல் லொருபொருட்குரிமையு முரிச்சொற்குண்மையானேதிஞரோனு முரிச்சொற் கிலக்கணமாவது இசைகுறிப்புப்பண்பென்னும பொருட்குரியவாய்வருதலே யாம். ஒருசொலொருபொருட்குரித்தாத லியல்பாதலாற்சொல்லாமையே மு டியுமென்பது. (க)

உகூ௫. வெளிப்படுசொல்லே கிளத்தல்வேண்டா, வெளிப்பட வாரா வுரிச்சொன்மேன.

வெளிப்பட்டவுரிச்சொல் கிளந்ததனாற்பயனின்மையிற்கிளக்கப்படா வெளிப்படவாரா வுரிச்சொன்மேற்றுக்கிளநதோதல்-எ-று. பயிலாதவற்றைப பயின்றவைசார்த்தி யெச்சொலாயினும் பொருள்வேறுகிளத்தலென்றதனாற் பயிலாதவற்றைப்பயின்றவற்றொடு சார்த்தியும், பயின்றவற்றைப்பிறிதொன்ற னொடுசார்த்தாது தம்மையேகிளந்தும் எல்லாவுரிச்சொல்லு முணர்த்தப்படு மென்பது பட்டுநின்றதனைவிலக்கிப் பயனின்மையாற் பயின்றவுரிச்சொல் கி ளக்கப்படாது பயிலாதவுரிச்சொல்லே கிளக்கப்படுமென வரையறுத்தவாறு. மேலவென்பது மேனவென நின்றது. (௨)

உகூசு. அவைதா, முறுதவ நனியென வரூஉமூன்று, மிகுதிசெ ய்யும் பொருளவென்ப.

வெளிப்படவாரா வுரிச்சொல்லைக்கிளந்தோதிவிரிக்கின்றார். அவைதாமெ ன்றது வெளிப்படவாரா வுரிச்சொற்றாமென்றவாறு. அதற்குமுடிபு அவைதா மம்மாமெம்மே மென்னுங்கிளவியுமென்புழி யுரைத்தாங்குரைக்க. உறுபுனற ந்தலைகூட்டி-எ-ம், ஈயாதுவீயுமுயிர்தவப்பலவே-எ-ம், வந்துநனிவருந்தினைவா ழியென்னெஞ்சே-எ-ம்- உறுதவநனியென்பன மிகுதியென்னுங்குறிப்புப்பொ ருளுணர்த்தும். எ-று. குறிப்புச்சொல் பரப்புடைமையான் முற்கூறினர்.(ங)

உகூஎ. உருவுட்காகும் புரையுயர்பாகும்.

உருகெழுகடவுள்-எ-ம், புரையமன்றபுரையோர்கேண்மை-எ-ம்- உருவும் புரையுமுட்கு முயர்புமுணர்த்தும். எ-று. (௪)

உகூஅ. குருவுங்கெழுவு நிறனாகும்மே.

குருமணித்தாலி-செங்கேழ்மென்கொடி- எனக்குருவுங்கெழுவு நிறமென் னும் பண்புணர்த்தும். எ-று. (௫)

உகூகூ. செல்லலின்ன லின்னாமையே.

மணங்கமழ்வியன்மார்பணங்கியசெல்லல்-எ-ம், வெயில்புறந்தரூஉ மின்னலியக்கத்து-எ-ம்- செல்லலு மின்னலு மின்னாமையென்னுங் குறிப்புணர்த்தும். எ-று. (௬)

௩00. மல்லல்வளனே யேபெற்றாகும்.

மல்லன்மால்வரை-எ-ம், ஏகலடுக்கம்-எ-ம்-மல்லலுமேவும் வளமும்பெற்றுமாகிய குறிப்புணர்த்தும். எ-று. பெற்றாஆக்கம். ஈதக்காலத்துப்பயின்றது போலும். இவையிரண்டுசூத்திரம். (௭)

௩0க. உகப்பேயுயர்த லுவப்பேயுவகை.

விசும்புகந்தாடாது-எ-ம், உவந்துவந்தாரவெநெஞ்சமொடாய்நலனிறையை-எ-ம்- உகப்புமுவப்பு முயர்தலுமுவகையுமாகிய குறிபபுணர்த்தும். எ-று. (௮)

௩0உ. பயப்பேபயனும் பசப்புநிறனாகும்.

பயவாக்களரனையர்-எ-ம், மையில்வாண்முகம் பசப்பூரும்மே-எ-ம்- பயப்பும்பசப்பும் பயனுநிறவேறுபாடுமாகிய குறிபபும்பண்புமுணர்த்தும். எ-று. இவையுமிரண்டுசூத்திரம். (௯)

௩0௩. இயைபேபுணர்ச்சி யிசைப்பிசையாகும்

இயைநதொழுகும்-யாழிசைபூப்புக்குமென இவைபுணர்ச்சிக்குறிப்பும் இசைப்பொருண்மையுமுணர்த்துயவாறு. இவையுமிரண்டுசூத்திரம். (க0)

௩0௪. அலமரறெருமரலாயிரண்டுஞ்சுழற்சி.

அலமரலாயம்-எ-ம், தெருமாலுள்ளமொடன்னைதுஞ்சாள்-எ-ம்- அலமரலுந்தெருமரலுஞ் சுழற்சியாகிய குறிப்புணர்த்தும். எ-று. (கக)

௩0௫. மழவுங்குழவு மிளமைப்பொருள.

மழகளிறு-எ-ம், குழக்கன்று-எ-ம் - மழவுங்குழவுமிளமைக்குறிப்புணர்த்தும். எ-று. (கஉ)

௩0௬. சீர்த்திமிகுபுகழ் மாலையியல்பே.

வயக்கஞ்சால்சீர்த்தி-எ-ம், இரவின்வரன்மாலையனே-எ-ம்- சீர்த்தியுமாலையும்பெரும்புகழு மியல்புமாகிய குறிப்புணர்த்தும். எ-று. இவையுமிரண்டுசூத்திரம். (க௩)

௩0௭. கூர்ப்புங்கழிவு முள்ளதுசிறக்கும்.

துனிகூரெவ்வமொடு-எ-ம், கழிகண்ணோட்டம்-எ-ம் - கூர்ப்புங்கழிவுமொன்றனது சிறத்தலாகிய குறிப்புணர்த்தும். எ-று. உள்ளதென்றது முன்சிறவாதுள்ளதென்றவாறு. (க௪)

௩௦௮. கதழ்வுந்துனைவும் விரைவின்பொருள.

கதழ்பரிநெடுந்தேர்-எ-ம், துனைபரிநிவக்கும்புள்ளினமான-எ-ம் - கதழ்வுந்துனைவும்விரைவாகியகுறிப்புணர்த்தும்-எ-று. (௧௫)

௩௦௯. அதிர்வும்விதிர்ப்பு நடுக்கஞ்செய்யும்.

அதிரவருவதோர்நோய்-எ-ம், விதிர்ப்புறவறியாவேமக்காப்பினை- எ-ம்-அதிர்வும் விதிர்ப்புநடுக்கமாகியகுறிப்புணர்த்தும். எ-று.அதிழ்வென்றுபாடமோதிஅதிழ்கண்முரசமென்றுதாரணங்காட்டுவாருமுளர். (௧௬)

௩௧௦. வார்தல்போக லொழுகன்மூன்று, நேர்புநெடுமையுஞ் செய்யும்பொருள.

வார்ந்திலங்குவையெயிற்று-வார்கயிறொழுகை-எ-ம, போகுகொடிமருங்குல்-வெள்வேல்விடத்தேரொடுகாருடைபோகி - எ-ம், ஒழுகுகொடிமருங்குல்-மால்வரையொழுகியவாழை-எ-ம்- வார்தல்போகலொழுகலென்னுமூன்றுசொல்லுநேர்மையுநெடுமையுமாகியபண்புணர்த்தும்.எ-று. (௧௭)

௩௧௧. தீர்தலுந்தீர்த்தலும் விடற்பொருட்டாகும்.

தீர்தலுந்தீர்த்தலுமென்னுமிரண்டும்விடுதலாகியகுறிப்புணர்த்தும்- எ-று. துணையிற்றீர்ந்த கடுங்கண்யானை-எனவரும். தீர்த்தல் விடுதற்பொருண்மைக்கண்வந்தவழிக்கண்டுகொள்க. தீர்த்தலென்பது செய்வித்தலையுணர்த்திநின்றநிலைமையெனிற்செய்வித்தலைபுணர்த்துநிலைமைவேறாதின் இயைபே புணர்ச்சியென்புழியுமியைப்பெனவேறாதலவேண்டும்;அதனாற்றீர்தலுஞ் செய்தலையுணர்த்துவதோருரிச்சொலெனவேபடுமென்பது. விடற்பொருட்டாகுமென்பதனையிரண்டனொடுங்கூட்டுக. பன்மையொருமைமயக்கமெனினுமமையும்.(௧௮)

௩௧௨. கெடவரல்பண்ணையா யிரண்டும்விளையாட்டு.

கெடவரலாயமொடு-எ-ம், பண்ணைத்தோன்றியவெண்ணான்குபொருளும்-எ-ம்வரும். (௧௯)

௩௧௩. தடவுங்கயவு நளியும்பெருமை.

வலிதுஞ்சுதடக்கைவாய்வாட்குட்டுவன் - கயவாய்ப்பெருங்கையானை-நளிமலைநாடன்-எனத்தடமுதலியனபெருமையாகியபண்புணர்த்தும். எ-று. கயவொன்பதுவழக்கு. (௨௦)

௩௧௪. அவற்றுட், டடவென்கிளவி கோட்டமுஞ்செய்யுங், கயவென்கிளவி மேன்மையுஞ்செய்யு, நளியென்கிளவி செறிவுமாகும்.

தடமருப்பெருமை-கயந்தலைமடப்பிடி-சிலைப்புவல்லேற்றிற் றலைக்கைதந்துநளிந்தனை வருதலுடன்றனளாகி-எனத்தடவென்கிளவிமுதலாயினபெருமை

யெயன்றிக்கோட்டமுமேன்மையுமாகியபண்புஞ்செறிவாகியகுறிப்பு முணர்த்தும்-எ-று. இவைமூன்றுசூத்திரம். (உக)

ருகரு. பழுதுபயமின்றே சாயன்மென்மை, முழுதென்கிளவி யெஞ்சாப்பொருட்டே.

பழுதுகழிவாளுள்-எ-ம், மயிற்சாயன்மகள்வேண்டி-எ-ம், மண்முழுதாண்ட-எ-ம்- பழுதமுதலியனபயமின்மையாகியகுறிப்பு மேன்மையாகியபண்புமெஞ்சாமையாகியகுறிப்புமுணர்த்தும்-எ-று. இவைமூன்றுசூத்திரம்.(உஉ)

ருகசு. வம்புநிலையின்மை மாதர்காத, னம்புமேவு நசையாகும்மே.

வம்புமாரி-மாதர்நோக்கு-நயந்துநாமவிட்ட நன்மொழிநம்பி-பெயரிசைநவிரமேவுங்காரிகையுண்டி-எனவம்புமாதருநிலையின்மையுங்காதலுமாகியகுறிப்புணர்த்தும்; நம்புமேவுநசையாகியகுறிப்புணர்த்தும். எ-று. மேவுநசையாக. இவைமூன்றுசூத்திரம். (உரு)

ருகஎ. ஓய்தலாய்த னிழத்தல்சாஅ, யாவயினான்கு முள்ளதனுணுக்கம்.

வேனிலுழந்த வறிதுயங்கோய்களிறு-பாய்ந்தாய்ந்ததானைபரித்தானுமை நதினை-கிழத்தயானைமெய்புலம்படர- கயறைலெதிரக் கடும்புனல்சாஅய-என ஓய்தன்முதலாயின நுணுக்கமாகிய குறிப்புணர்த்தும். எ- று. ஆய்ந்ததானை- பொங்குதல்வீதலானுணுகியதானை. உள்ளதெனறது முன்னுணுகாதுள்ளதென்றவாறு. (உச)

ருகஅ. புலம்பேதனிமை துவன்றுநிறைவாகு, முரஞ்சன்முதிர்வே வெம்மைவேண்டல்.

புலிப்பற்கோத்தபுலம்புமணித்தாலி-எம், ஆரியர்துவன்றியபேரிசைமூதூர்-எ-ம், சூர்முரஞ்செழிலி- எ-ம், வெங்காமம் - எ-ம்- புலம்புமுதலாயினதனிமையுநிறைவுமுதிர்வுமாகியகுறிப்பும் வெம்மையாகியபண்புமுணர்த்தும். எ-று. இவைநான்குசூத்திரம். (உ௫)

ருகசு. பொற்பேபொலிவு வறிதுசிறிதாகு, மேற்றநினைவுந் துணிவுமாகும்.

பெருவரையடுக்கம்பொற்ப-எ-ம், வறிதுவடக்கிறைஞ்சிய-எ-ம், கானலஞ்சேர்ப்பன்கொடுமையேற்றி- எ-ம், எற்றேறறமில்லாருள்யானேற்றமில்லாதேன்-எ-ம்- பொற்புமுதலாயின முறையேபொலிவுஞ் சிறிதென்பதூஉம் நினைவுந்துணிவுமாகியகுறிப்புணாத்தும், எ-று. இவையுமூன்றுசூத்திரம். (உசு)

ருஉ0. பிணையும்பேணும் பெட்பின்பொருள.

அரும்பினையகற்றிவேட்டனாட்பினும்-எ-ம், அமரர்ப்பேணியுமாகுதியரு த்தியும் - எ-ம்- பினையும்பேணுமபெடபின்பொருளாகியபுறநதருதலென்னுங்கு றிப்புணர்த்தும்-எ-று. பெட்பின்பொருளாவென்பதுஞறபெட்பின் பொருளாகி யவிரும்புதலுணர்த்தலுங்கொள்க. அதுவுநதவழிக்கண்டுகொள்க. (உஎ)

௩௨௧. பணையேபிழைத்தல் பெருப்புமாகும்.

பணைத்துவீழ்பகழி-எனப்பணையெனபது பிழைத்தலாகிய குறிப்புணாத் தும்; அதுவேயன்றிப்பணைத்தோளெனப பெருபபுமாகியகுறிப்புமுணர்த்தும் எ-று. பெருமையாகிய பணபுணாத்தாது பெருததலாகியகுறிப்புணாத்துபெ ன்பார்பெருப்பென்முர். (உஅ)

௩௨௨. படரேயுள்ளல் செலவுமாகும்.

வள்ளியோர்ப்படர்நதுபுள்ளிற்போகி-கறவைகன்றுவயிற்படர-எனப்பட ரென்பதுள்ளுதலுஞ்செலவுமாகியகுறிப்புணர்தநும. எ-று. (உகூ)

௩௨௩. பையுளுஞ்சிறுமையு நோயின்பொருள.

பையுண்மாலை- எ-ம், சிறுமையுறுபசெய்பறியலரோ, எ-ம்- பையுளுஞ்சிறு மையுநோயாகியகுறிப்புணர்ததும். எ-று. (௩௦)

௩௨௪. எய்யாமையே யறியாமையே.

எய்யாமையலைநீயும்வருநதுதி - என எய்யாமையறிவின்மையாகிய குறி ப்புணர்த்தும். எ-று. அறிதறபொருட்டா [illegible] லெனமுறனும், எய்த்தலெனரு னுஞ்சான்றோர்செய்யுட்கண்வாராமையினெய்யாமைஎதிர்மறையன்மையறிக.

௩௨௫. நன்றுபெரிதாகும்.

நன்றுபெரிதுற்றனையாற் பெரும-எனநன்றென்பதுபெரிதென்னுங் குறி ப்புணர்த்தும். எ - று. பெருமையென்னுது பெரிதென்றதனு னன்றென்பது வினையெச்சமாதலகொள்க. (௩௨)

௩௨௬. தாவேவலியும் வருத்தமுமாகும்.

தாவினன்பொன்றைஇயபாவை-எ-ம், கருங்கட்டாக்கலை பெரும்பிறிதுற் றென-எ-ம்- தாவென்பது வலியும்வருத்தமுமாகிய குறிப்புணர்த்தும். எ-று.()

௩௨௭. தெவுக்கொளற்பொருட்டே தெவ்வுப்பகையாகும்.

நீர்தெவுநிரைத்தொழுவர்- எ-ம், தெவ்வுப்புலம்-எ-ம்-தெவுந்தெவ்வுமுறை யானேகொள்ளுதலும்பகையுமாகியகுறிப்புணர்த்தும். எ-று. இவையுமிரண்டு சூத்திரம். (௩௪)

௩௨௮. விறப்புமுறப்பும் வெறுப்புஞ்செறிவே.

விறந்தகாப்பொடுண்ணின்றுவலியுறுத்து - எ-ம், உறந்தவிஞ்சி-எ-ம், வெ
ழுத்தகேள்விவிளங்குபுகழ்க்கபிலன்-எ-ம்- விற்புமுதலாயின செறிவென்னுங்
குறிப்புணர்த்தும். எ-று. (௩௫)

௩௨௯. அவற்றுள், விறப்பேவெரூஉப் பொருட்டுமாகும்.

அவலெறியுலக்கைப்பாடுவிறந்தயல்- எனவிறப்பென்பது செறிவேயன்றி
வருவுதற்குறிப்புமுணர்த்தும். எ-று. (௩௬)

௩௩0. கம்பலைசும்மை கலியேய்ழுங்க, லென்றிவைநான்கு ம
ரவப்பொருள.

கம்பலைமூதூர்-எ-ம், ஒலிபெருஞ்சும்மையொடு-எ-ம், கலிகொளாயமலி
தாகுபெடுத்த-எ-ம், உய்வுப்புணர்ந்தன்றிவ் வழுங்கலூரே - எ-ம்- கம்பலைமு
லியநான்குமரவமாகியவிசைப்பொருண்மையுணர்த்தும். எ-று. (௩எ)

௩௩க. அவற்றுள், அழுங்கலிரக்கமுங் கேடுமாகும்.

பழங்கணோட்டமுதவியவழுங்கினேனல்லனோ வயர்ந்தனன்மன்னே,
எ-ம், குணனழுங்கக்குற்றமுழைநின்றுகூறுஞ்சிறியவர்கட்கு-எ-ம் - அழுங்கல்
அரவமேயன்றியிரக்கமுங்கேடுமாகியகுறிப்புமுணர்த்தும். எ-று. (௩அ)

௩௩உ. கழுமென்கிளவி மயக்கஞ்செய்யும்.

கழுமியஞாட்பு-எனக்கழுமென்பதுமயக்கமாகியகுறிப்புணர்த்தும். எ-று.

௩௩௩. செழுமைவளனுங் கொழுப்புமாகும்.

செழும்பல்குன்றம்-எ-ம், செழுந்தடிதின்ற-செழுமதிள்-எ-ம்- செழுமை
வளனுங் கொழுப்புமாகிய பண்புணர்த்தும். எ-று. (௪0)

௩௩௪. விழுமஞ்சீர்மையுஞ் சிறப்புமிடும்பையும்.

விழுமியோர்காண்டொறுஞ் செய்வர்சிறப்பு-எ-ம், வேற்றுமையில்லா வி
ழுத்துணைப்பிறந்து-எ-ம், நின்னுறுவிழுமங் களைந்தோன்-எ-ம்-விழுமம் முறை
யானே சீர்மையுஞ்சிறப்பு மிடும்பையுமாகிய குறிப்புணர்த்தும். எ-று. (௪க)

௩௩௫. கருவிதொகுதி கமநிறைந்தியலும்.

கருவிவானம்-எ-ம், கமஞ்சூன்மாமழை-எ-ம்- கருவியுங்கமமுந்தொகுதியு
நிறைவுமாகிய குறிப்புணர்த்தும். எ-று. கருவிவானமென்புழிக் கருவிமின்னு
முழக்குமுதலாயவற்றதுதொகுதி. இவையிரண்டுசூத்திரம். (௪உ)

௩௩௬. அரியையைம்மை கவ்வகத்திடுவே.

அரிமயிர்த்திரண்முன்கை- எ-ம், கழுவிளங்காரங்கவைஇயமார்பே-எ-ம்-
அரியுங்கவ்வுமைம்மையுமகத்திடுமாகியகுறிப்புணர்த்தும். எ-று. இவையுமிரண்
டுசூத்திரம்

௩௩௭. துவைத்தலுஞ் சிலைத்தலு மியம்பலு மிரங்கலு, மிசைப் பொருட்கிளவி யென்மனார் புலவர்.

வரிவளை துவைப்ப-எ-ம, ஆமா நல்லேறு சிலைப்ப-எ-ம, கடிமரந் தடியு மோசை தன்னூர் நெடுமதில் வரைப்பிற் கடிமனை யியம்ப-எ-ம, ஏதிரங் கிருளிடை எ-ம- துவைத்தன் முதலாயின இசைப்பொருளுணர்த்தும். எ-று. (௪௪)

௩௩௮. அவற்றுள், இரங்கல் கழிந்த பொருட்டுமாகும்.

செய்திரங் காவினை - என இரங்கலிசையேயன்றிப் பொருளாது கழிவாகிய குறிப்புமுணர்த்தும். எ-று கழிந்த பொருள் பற்றி வருங் கவலையைக் கழிந்த பொருளென்றார். (௪௫)

௩௩௯. இலம்பாடொற்கமா யிரண்டும் வறுமை.

இலம்படு புலவரேற்றகைந் நிறைய-எ-ம, ஒக்கலொற்கஞ் சொலிய-எ-ம- இலம்பாடுமொற்கமும் வறுமையாகிய குறிப்புணர்த்தும். எ-று. இலமென்னுமுரிச்சொற் பெரும்பான்மையும் பாடென்னுந் தொழில் பற்றியல்லது வாராமையினிலம்பாடென்றார். (௪௬)

௩௪0. ஞெமிர்தலும் பாய்தலும் பரத்தற் பொருள.

கருமணன் ஞெமிரிய திருநகர் முற்றத்து - எ-ம, பாய்புனல்-எ-ம-ஞெமிர்தலும் பாய்தலும் பரத்தலாகிய குறிப்புணர்த்தும். எ-று. (௪௭)

௩௪௧. கவர்வு விருப்பாகுஞ் சேரே திரட்சி, வியலென் கிளவி யகலப் பொருட்டே.

கவர்நடைப் புரவி- எ-ம், சேர்ந்து செறி குறங்கு - எ-ம, வியலுலகம்-எ-ம- கவர்வு முதலாயின முறையானே விருப்புந் திரட்சியு மகலமுமாகிய குறிப்புணர்த்தும். எ-று. இவை மூன்று சூத்திரம். (௪௮)

௩௪௨. பேநாமுருமென வரூஉங் கிளவி, யாமுறை மூன்று மச்சப்பொருள.

மன்ற மராத்த பேழ்திர் கடவுள்-எ-ம், நாநல்லரம - எ-ம, உருமில் சுற்றம்-எ-ம்-பே முதலாயின மூன்று மச்சமாகிய குறிப்புணர்த்தும். எ-று. (௪௯)

௩௪௩. வயவலி யாகும் வாளொளி யாகுந், துயவென் கிளவி யறிவின் றிரிபே.

வயக்களிறு- எ-ம, வாண்முகம- எ-ம, துயவுற்றேம யாமாக-எ-ம்- வயமுதலாயின வலியு மறிவு வேறுபடுதலுமாகிய குறிப்பு மொளியாகிய பண்புமுணர்த்தும். எ-று, இவை மூன்று சூத்திரம். (௫0)

௩௪௪. உயாவே யுயங்க லுசாவே சூழ்ச்சி, வயவென் கிளவி வேட்கைப் பெருக்கம்.

பருந்திருந்துயாவிளிபயிற்றும்-அயாவுயாநனந்தலை-எ-ம், உசாத்துணை-எ-ம், வயவுறுமகளிர்-எ-ம்-உயாவுமுதலாயினமுறையானேயுயங்கலுஞ்சூழ்ச்சியும் வேட்கைப்பெருக்கமுமாகிய குறிப்புணர்த்தும். எ - று. இவைமூன்றுசூத்திரம். (ருக)

ரு௪ரு. கறுப்புஞ்சிவப்பும் வெகுளிப்பொருள

நிற்கறுப்பதோரருங்கடிமுனையா- எ - ம், நீசிவந்திறுத்தநீரழிபாக்கம்-எ-ம்- கறுப்புஞ்சிவப்பும்வெகுளியாகிய குறிப்புணர்த்தும். எ-று. கருமைசெம்மையென்னுது கறுப்புச்சிவப்பென்றதனாற்றொழிற்பட் டுழியல்லதவைவெகுளியுணர்த்தாமைகொள்க. (ருஉ)

ரு௪௬. நிறத்துருவுணர்த்தற்கு முரியவென்ப.

கறுத்தகாயா-சிவந்தகாந்தள்-என்றிவைவெகுளியேயன்றி நிறவேறுபாடுணர்த்தற்குமுரிய. எ-று. இவைவெளிப்படுசொல்லாயினுங் கறுப்புஞ்சிவப்பும் வெகுளிப்பொருளவென்றதனாற்கருங்கண்-செவ்வாய் எனப்பண்பாயவழியல்லது தொழிலாயவழி நிறவேறுபாடுணர்த்தாவென்பதுபடுதலி னதனைப்பாதுகாத்தவாறு. (ருங)

ரு௪௭. நொசிவுநுழைவு நுணங்குநுண்மை.

நொசிமருங்குல்- எ-ம், நுழைநூறகலிங்கம்-எ-ம், நுணங்குதுகினுடங்கம் போல-எ-ம்- நொசிவுமுதலாயினநுண்மையாகியபண்புணர்த்தும். எ-று.(ரு௪)

ரு௪௮. புனிறென்கிளவியீன் றணிமைப்பொருட்டே.

புனிற்றுப்பாய்ந்தெனக்கலங்கி- எனபுனிறென்பதீன்றணிமையாகிய குறிப்புணர்த்தும். எ-று. (ருரு)

ரு௪௯. நனவேகளனு மகலமுஞ்செய்யும்.

நனவிற்புகுவிறலிற்றோன்றுநாடன்-எம, நனந்தலையுலகம்-எம்- நனவுகளனுமகலமுமாகியகுறிப்புணாத்தும்-எ-று. (ரு௬)

ருரு0. மதவேமடனும் வலியுமாகும்.

பதவுமேய்ந்தமதவுநடைகல்லான்-எ-ம், கயிறிடுகதச்சேப்போன் மதமிக்கு-எ-ம்-மதவென்பது மடனும்வலியுமாகிய குறிப்புணர்த்தும். எ-று. (ருஎ)

ருருக. மிகுதியும்வனப்பு மாகலுமுரித்தே.

மதவிடை-எ-ம், மாதர்வாண்முகமதைஇயநோக்கே-எ-ம் - மடனும்வலியுமேயன்றிமிகுதியும்வனப்புமாகிய குறிப்புஞ்சிறுபான்மையுணர்த்தும்-எ-று.மதவிடையென்புழிமிகுதியுள்ளமிகுதி. (ருஅ)

௩௫௨. புதிதுபடற்பொருட்டே யாணர்க்கிளவி.

மீரெடுபெயருமயாணரூர்-எனயாணரென்பதுவாரிபுதிதாகப்படுதலாகிய குறிப்புணர்த்தும்-எ-று. (௫௯)

௩௫௩. அமர்தன்மேவல் யாணுக்கவினாகும்.

அகனமர்ந்துசெய்யாளுறையும்-எ-ம், யாணதுபசலை-எ-ம்-அமர்தலும்யாணுவுமுறையானேமேவுதலுங்கவினுமாகியகுறிப்புணர்த்தும்-எ-று. இவையிரண்டுசூத்திரம். (௬0)

௩௫௪. பரவும்பழிச்சும் வழுத்தின்பொருள.

நெல்லுக்குத்துப்பரவுங்கடவுளுமிலவே-எ-ம்,கைதொழூஉப்பழிச்சி-எ-ம். பரவும்பழிச்சும்வழுத்தலாகியகுறிப்புணர்த்தும்-எ-று. (௬௧)

௩௫௫. கடியென்கிளவி, வரைவேகூர்மை காப்பேபுதுமை, விரைவேவிளக்க மிகுதிசிறப்பே, யச்சமுன்றெற் றாயீரைந்து, மெய்ப்படத்தோன்றும் பொருட்டாகும்மே.

கடியென்னுமுரிச்சொல்வரைவுமுதலாகியபத்துக்குறிப்புமுணர்த்தும்-எ-று கடிந்தகடிந்தோராரர்செய்தார்க்குளனவரைவும், கடிநுனைப்பகழினக்கூர்மையும்,கடிகா-கடிமரந்தடியுமோசை-எனக்காவலும், கடிமலர் - கடியுண்கடவுட்கிட்டசெழுங்குரல்-எனப்புதுமையும்,கடிமான்-கடுநதேர்குழித்தஞெள்ளலாங்கண்-எனவிரைவும், கடும்பகல்-எனவிளக்கமும், கடுங்காலொற்றலின்-எனமிகுதியும், கடுநட்பு-எனச்சிறப்பும், கடியையாரனெடுத்தகைசெருவத்தானே-எனவச்சமும், கொடுஞ்சுழிப்புகார்த்தெய்வநோக்கிக் கடுஞ்சூடருகுவனினக்கே-எனமுன்றெற்று முணர்த்தியவாறுகண்டுகொள்க. முன்றெற்றுப்புறத்தின்றித்தெய்வமுதலாயினவற்றின்முன்னின்றுதெளித்தல். (௬௨)

௩௫௬. ஐயமுங்கரிப்பு மாகலுமுரித்தே.

கடுத்தனளல்லளோவன்னை-எ-ம், கடிமிளகுதின்றகல்லாமந்தி-எ-ம்- கடியென்கிளவிமேற்கூறப்பட்டபொருளையன்றிச் சிறுபான்மையையமுங் கரிப்புமுணர்த்துதற்குமுரித்து-எ-று. ஐயங்குறிப்பு. கரிப்புப்பண்பு. (௬௩)

௩௫௭. ஐவியப்பாகு முனைவுமுனிவாகும், வையேகூர்மை யெறுழ்வலியாகும்.

ஐதேகாமம்யானே-எ-ம்,சேற்றுநிலமுனைஇயசெங்கட்காரான்-எ-ம்,வைநுனைப்பகழி-எ-ம், போரெறுழ்த்திணிதோள்-எ- ம்- ஐம்முதலாயினமுறையானேவியப்புமுனிவுங் கூர்மையும்வலியுமாகிய குறிப்புணர்த்தும்-எ-று. இவைநான்குசூத்திரம். (௬௪)

௩௫௮. மெய்பெறக்கிளந்த வுரிச்சொல்லெல்லா, முன்னும்பின் னும் வருபவைநாடி, யொத்தமொழியாற் புணர்த்தன ருணர்த்த, றத்தமரபிற் றோன்றுமன் பொருளே.

இச்சொல்லிப்பொருட்குரித்தென மேற்கூறப்பட்ட வுரிச்சொல்லெல்லாவற்றையு மவற்றுமுன்னும்பின்னும்வருமொழிகளையாராய்ந்து அம்மொழிகளுட்டக்கமொழியாலே யொருபொருளுணர்த்துக; இவ்வாறுணர்த்தவேவரலாற்றுமுறைமையாற்றத்தமக்குரித்தாய பொருள்விளங்கும். எ-று. இஃதென்சொல்லியவாறோவெனின் உறுதவநனியெனவரூஉமூன்றுமிகுதிசெய்யும்பொருளவென்ப-எ-ம், செல்லலின்னலின்னாமையே-எ-ம்- ஓதியவழி அவைபயின்றசொலன்மையானிவைமிகுதியுமின்னாமையுமுணர்த்துமென்றுஆசிரியராணையாற்கொள்வதலலதுவரலாற்றாற்பொருளுணர்த்துமெனப்படாவோவென் றையுறுவார்க்கு உறுகால்-தவப்பல-நனிசேய்த்து-எ-ம், மணங்கமழ்வியன்மார் பணங்கிய செல்லல்-எ-ம்- முன்னும்பின்னும்வருஞ்சொனோக்கியவற்றுள்இச்சொல்லொடிவ்வுரிச்சொல்லையுமென்று கடைப்பிடிககத் தாம்புணர்த்தசொற்கேற்ற பொருள்விளங்குதலினுரிச்சொல்லும் வரலாற்றாற்பொருளுணர்தது மென்பது பெறப்படுமென ஐயமகற்றியவாறெனக்கொள்க. வரலாற்றாற் பொருளுணர்த்தாவாயிற்குழூவின்வந்தகுறுநிலவழக்குப்போல இயற்கைச்சொல்லெனப் படாவாமென்பது. (௬௫)

௩௫௯. கூறியகிளவிப் பொருணிலையல்ல, வேறுபிறதோன்றினு மவற்றொடுங்கொளலே.

முன்னும்பின்னும்வருபவைநாடியவழி யுரிச்சொற்குக்கூறப்பட்டபொருளேயன்றிப்பிறபொருடோன்றுமாயினுங்கூறப்பட்ட வற்றொடவற்றையுங்கொள்க - எ-று. கடிநாறும்பூந்துணையொன்றவழிக்கடியென்பது முன்னும் பின்னும் வருபவைநாட வரைவுமுதலாயினபொருட்கேலாது மணப்பொருட்டாயினவாறுகண்டுகொளக. பிறவுமன்ன. (௬௬)

௩௬௦. பொருட்குப்பொருடெரியி னதுவரம்பின்றே.

பயிலாதவற்றைப்பயின்றவைசார்த்திப்பொருளுணர்த்துங்காற்படுமுறைமையுமுணர்த்துகின்றார். ஒருசொல்லையொருசொல்லாற் பொருளுணர்த்தியவழி அப்பொருளுணர்த்தவந்தசொற்கும் பொருள்யாதெனப் பொருட்குப்பல பொருடெரியுமாயின்மேன்மேல்வருவனவற்றிற்கெல்லா மீதொத்தலினவ்வினவிறைவரம்பின்றியோடும்;அதனாற்பொருட்குப்பொருடெரியற்க.எ-று.ஒருசொற்குப்பொருளுரைப்பதுபிறிதோர்சொல்லானன்றே அச்சொற்பொருளுமறியாதானையுணர்த்துமாறென்னையெனின் அதுவருகின்றசூத்திரத்தாற்பெறப்படும்.

௩௬௧. பொருட்குத்திரிபில்லை யுணர்த்தவல்லின்.

உறுகாலென்புழி உறுவென்னுஞ்சொற்குப்பொருளாகிய மிகுதியென்பதன்பொருளுமறியாதமடவோனாயின் அவ்வாறொருபொருட்கிளவிகொணர்ந் து

ணர்த்தலுறாது கடுங்காலதுவலிகண்டா யீண்டுறுவென்பதற்குப்பொருளென் றுதொடர்மொழிகூறியானும்,கடுங்காலுளவழிக்காட்டியானும் அம்மாணுக்கனு ணரும்வாயிலறிந்துணர்த்தவல்லானாயி னப்பொருடிரிவுபடாம லவனுணரும் எ-று. அவற்றானுமுணர்தலாற்றானையுணர்த்துமாறென்னையெனின்அதற்கன்றே வருஞ்சூத்திரமெழுந்ததென்பது. (சூஅ

ந௩உ. உணர்ச்சிவாயி லுணர்வோர்வலித்தே.

வெளிப்படத்தொடர்மொழிகூறியானுமப்பொருளைக்காட்டியானு முண ர்த்தவுமுணராதானை யுணர்த்தும்வாயிலில்லை யுணர்ச்சியதுவாயி லுணர்வோ துணர்வைவலியாகவுடைத்தாகலின். எ-று. யாதானுமோராற்றானுணருந்தன் மைஅவற்கில்லையாயி னவனையுணர்த்தற்பாலனல்லன். எ-று. (சூக

ந௩ந. மொழிப்பொருட்காரணம் விழிப்பத்தோன்றா.

உறுதவமுதலாயினசொற்கு மிகுதிமுதலாயினபொருளாதல் வரலாற்று முறைமையாற்கொள்வதல்ல தவைபப்பொருளவாதற்குக்காரணம் விளங்கத் தோன்றா.எ-று. பொருளொடுசொற்கியைபு இயற்கையாகலானவ்வியற்கையா கியவியைபாற் சொற்பொருளுணர்த்துமென்ப. ஒருசாராரொருசார்ப்பிறகார ணத்தானுமுணர்த்துமென்ப. அவற்றுண்மெய்ம்மையாகியகாரண மாசிரியர்க் குப் புலனாவதல்லது நம்மனோர்கட்குப்புலனாகாமையின் மொழிப்பொருட்கார ணமில்லையென்னாது விழிப்பத்தோன்றாவென்றார். அக்காரணம்பொதுவகையா னொன்றாயினுஞ்சொற்றொறு முண்மையிற்சிறப்புவகையாற்பலவாம். அதனான் விழிப்பத்தோன்றாவெனப்பன்மையாற்கூறினார். உரிச்சொற்பற்றியோதினாரே னும்மேனைச்சொற்பொருட்குமிஃதொக்கும். (எ0)

ந௩ச. எழுத்துப்பிரிந்திசைத்த லிவணியல்பின்றே.

முதனிலையுமிறுதிநிலையுமாயவெழுத்துக்கள்பிரிந்து வேறுவேறுபொருளு ணர்த்தலுரிச்சொலிடத்தியல்புடைத்தன்று. எ - று. இவணியல்பின்றெனவே யெழுத்துப்பிரிந்து பொருளுணர்த்தல் பிறண்டியல்புடைத்தென்பதாம். அ வையாவனவினைச்சொல்லும், ஒட்டுப்பெயருமாம். பிரிதலும் பிரியாமையும் பொருளுணர்த்துவனவற்றிற்கேயாகலின் கூறைகோட்படுதல்கடவுளர்க்கெய் தாதவாறுபோல இடைச்சொறகிவ்வாராய்ச்சியெய்தாமையறிக. தவநனியெ ன்னுநதொடக்கத்தனகுறிப்புவினையெச்சம்போலப் பொருளுணர்த்தலினவை போலப்பிரிக்கப்படுஞ்சொல்லோவென்றையுறுமையையமகற்றியவாறு. (எக)

ந௩ரு. அன்னபிறவுங் கிளந்தவல்ல, பன்முறையானும் பரந் தனவருஉ, முரிச்சொலெல்லாம் பொருட்குறைகூட்ட, வியன்றமருங்கி னினைத்தெனவறியும், வரம்புதமக்கின் மையின் வழிநனிகடைப்பிடித், தோம்படையாணையிற் கிளந்தவற்றியலாற்,பாங்குறவுணர்தலென்மனார்புலவர்.

அன்னபிறவுங்கிளந்தவல்லபன்முறையானும் பரந்தனவரூஉ முரிச்சொ லெல்லாமென்பது சொல்லப்பட்டனவேயன்றியவைபோல்வனபிறவுமாயீறு பற்றியுணர்த்தற்கடங்காது பலவாற்றானும்பரந்துவரூஉ முரிச்சொலெல்லாம். எ-று. பொருட்குறைகூட்டவியன்றமருங்கினினைத்தெனவறியும் வரம்புதமக் கின்மையினென்பது பொருளொடு புணர்த்துணர்த்தலிசைகுறிப்புப் பண்புப ற்றித்தாமியன்ற நிலத்தித்துணையெனவரையறுத்துணருமெல்லை தமக்கின்மை யினெஞ்சாமைக்கிளத்தலரிதாகலின். எ - று. வழிநனிகடைப் பிடித்தோம் படையாணையிற்கிளந்தவற்றியலாற் பாங்குறவுணர்தலென்பது இசையினுங் குறிப்பினும்பண்பினுநதோன்றிப் பெயரினும்வினையினுமெய்தடுமாறி-எ-ம், மு னனும்பின்னும்வருபவைநாடி-எ-ம்- கூறியநெறியைச்சோராமற் கடைப்பிடித் தெச்சொலாயினும்பொருள்வேறுகிளத்தல்- எ-ம். ஒத்தமொழியாற் புணர்த்த னருணர்த்தல் தத்தமரபிற்றோன்றுமன்பொருள் - எ-ம் - என்றோற்றரப்பட்ட பாதுகாவலாணையிற்கிளநதவற்றியல்பொடு மரீஇயவற்றைமுறைபபட வுணர் க. எ - று. குறிப்புப்பொருண்மை பலவகைத்தாகலானும், பெயரினும்வி னையினுமெய்தடுமாறியுந்தடுமாறாது மொருசொற்பலபொருட்குரித்தாயும்வரு தலானும், ஈறுபற்றித்தொகுத்துணர்த்தற்கனனவிறுடையவன்மையானும் - ப ல்முறையானும்பரநதனவரூஉமென்றார். பொருளோச்சொல்லின்றியமையாமை யினதனைக்குறையென்றார். ஒருவன்வினையும்பயனுமின்றியமையாமையின் வி னைகக்குறைதீர்நதாரிற்றீரந்தன்றுலகு- பயக்குறையில்லைத்தாம்வாழுநாளே-என் றற்போல] பொருட்குறை கூட்டவரம்புதமககின்மையினெனவியையும்.இரு மையென்பது கருமையும்பெருமையுமாகிய பண்புணர்த்தும். சேணென்பது சேய்மையாகியகுறிபபுணர்த்தும். தொன்மையென்பது பழமையாகியகுறிப் புணர்த்தும். இவையெல்லாமன்னபிறவுங்கிளநதவல்லவென்பதனாற் கொள்க. பிறவுமன்ன. (எஉ)

எட்டாவது
உரிசசொலியல் முற்றிற்று.

ஒன்பதாவது
எச்சவியல்

ங௬௬. இயற்சொற்றிரிசொற் றிசைச்சொல்வடசொலென், ற னைத்தேசெய்யு ளீட்டசசொல்லே.

கிளவியாக்கமுதலாகவுரிச்சொலோத்திறுதியாகக்கிடந்த வோத்துக்களு ளுணர்த்துதற்கிடமின்மையா னுணர்த்தப்படாதெஞ்சிநின்ற சொல்லிலக்கண மெல்லாந்தொகுத்துணர்த்தியவெடுத்துக்கொண்டார். அதனானிவ்வோத்தெச் சவியலென்னும்பெயர்த்தாயிற்று. கண்டீரொன்று-எ-ம், செய்யாயென்னுமுன் னிலைவினைச்சொல்-எ-ம், உரிச்சொலின்மருங்கின் -எ - ம், ஒருமைசுட்டியபெ யர்நிலைக்கிளவி-எ-ம்- இவைமுதலாயசூத்திரங்களா னுணர்த்தப்பட்டவகை

நிலையும், வினைச்சொலிலக்கணமும், வழுவமைதியும்-அவ்வோத்துக்களு ளுண ர்த்தாதீண்டுணர்த்தியதென்னையோவெனின் அதற்குக்காரண மவ்வச்சூத்திர முரைக்கும்வழிச்சொல்லுதும். பலபொருட்டொகுதிகொண்டதனுற் பெயர் கொடுக்குங்காற்றலைமையும் பன்மையும்பற்றிக் கொடுப்பினல்லதுபிறிதாறின் மையானும், தலைமையும்பன்மையுமெச்சத்திற்கின்மையானும் பத்துவகையெ ச்சமீண்டுணர்த்தலானெச்சவியலென்றல்பொருந்தாமையுணர்க. செய்யுட்குரி யசொல்லும், அவற்றதிலக்கணமும், அவற்றுற்செய்யுள்செய்வுழிப்படும்விகா ரமும், செய்யுட்பொருள்கோளுமெடுத்துக்கோடற்கணுணர்த்துகின்முர். (இய ற்-சொல்லே) இயற்சொல்லுந்திரிசொல்லுந்திசைச்சொல்லும் வடசொல்லு ம் எனவத்துணையேசெய்யுளீட்டுதற்குரியசொல்லாவன. எ - று. இயற்சொல் லானும், செய்யுட்சொல்லாகிய திரிசொல்லானுமேயன்றித்திசைச்சொல்லும், வடசொல்லும் விராய்ச்சான்ருேர்செய்யுள்செய்யுமாறுகண்டேனைப் பாடைச் சொல்லுஞ்செய்யுட்குரியவோவென்றையுற்ருர்க்கு இந்நான்குசொல்லுமேசெ ய்யுட்குரியன பிறபாடைச்சொ லுரியவல்லவென்றுவரையறுத்தவாறு. செய் யுட்செய்யலாவதுஒருபொருண்மேற்பலசொற்கொணர்ந்தீட்டல் ஆகலானீட்ட லென்ருர். பெயர்வினையிடையுரியென்பன வியற்சொற்பாகுபாடாகலா னியற் சொ லிந்நான்குபாகுபாட்டானுஞ்செய்யுட்குரித்தாம். திரிசொற்பெயராயல்ல துவாரா. என்மனூரொன்பதனைவினைத்திரிசொலென்பாருமுளர். அஃதுஎன்றிசி னோர்-பெறலருங்குரைத்தென்பனபோலச்செய்யுண்முடிவுபெற்று நின்றதென் றலேபொருத்தமுடைத்து. தில்லென்னுமிடைச்சொற் றில்லவென்றுனுந் தில் லையென்றுனுந்திரிந்துநின்றவழியவைவழக்கிற்குமுரியவாகலிற் றிரிசொலென ப்படாது. கடுங்காலென்புழிக்கடியென்னு முரிச்சொற்பெயரினும்வினையினுமெ ய்தடுமாறியென்பதனுற் பண்புப்பெயராய்ப்பெயரொடுதொக்குவழக்கினுட்ப யின்றுவருதலாற் றிரிசொலெனப்படாது. திசைச்சொலுளேனைச்சொல்லு முளவேனுஞ்செய்யுட்குரித்தாய்வருவது பெயர்ச்சொல்லேயாம். வடசொல் லுள்ளும்பெயரல்லதுசெய்யுட்குரியவாய்வாராது. இவ்வாருதல்சான்ருேர்செ ய்யுளுணேக்கிக்கண்டுகொள்க. (க)

ருசுஎ. அவற்றுள், இயற்சொற்ருமே, செந்தமிழ்நிலத்து வழ க்கொடுசிவணித், தம்பொருள்வழாமை யிசைக்குஞ் சொல்லே.

அந்நான்கனு ளியற்சொலென்றுசொல்லப்பட்டசொற்ருஞ் செந்தமிழ் நிலத்துவழக்காதற்குப் பொருந்திக்கொடுந்தமிழ்நிலத்துந்தம்பொருள்வழுவா மலுணர்த்துஞ்சொல்லாம். எ-று. அவையாவன-நிலம்-நீர்-தீ - வளி - சோறு- கூழ்- பால்-தயிர்-மக்கள்-மா-தெங்கு-கமுகு-என்னுந்தொடக்கத்தன. செந்தமி ழ்நிலமாவன வையையாற்றின்வடக்கும்,மருதயாற்றின்றெற்கும், கருவூரின்கி ழக்கும், மருவூரின்மேற்குமாம். திரிபின்றியியல்பாகியசொல்லாகலினியற்சொ லாயிற்று. செந்தமிழ்நிலத்திற்குங் கொடுந்தமிழ்நிலத்திற்கும்,பொதுவாகலினி யற்சொல்லாயிற்றெனினுமமையும். நீரென்பதாரியச்சிதைவாயினு மப்பொருட்

கதுவேசொல்லாய்ச்செந்தமிழ்நிலத்துங்கொடுந்தமிழ்நிலத்தும் வழங்கப்படுத லானியற்சொலாயிற்று. பிறவுமிவ்வாறுவருவனஇயற்சொலாகக்கொள்க. தூ மென்பதுகட்டுரைச்சுவைபடநின்றது. (உ)

ங௲அ. ஒருபொருள்குறித்த வேறுசொல்லாகியும், வேறுபொ ருள்குறித்த வொருசொல்லாகியு, மிருபாற்றென்ப திரிசொற்கிளவி.

ஒருபொருள்குறித்துவரும்பலசொல்லும் பலபொருள்குறித்து வருமொ ருசொல்லுமென விருவகைபபடுந்திரிசொல். எ - று. வெற்பு - விலங்கல்-வி ண்டு - என்பன ஒருபொருள்குறித்த வேறுபெயர்க்கிளவி. எகினமென்பது - அன்னமுங் கவரிமாவு நாயு முணர்த்துதலானும், உநதியென்பது யாழ்ப்பத் தலுறுப்புங் கொப்பூழுந் தேர்த்தட்டுங் கான்யாறுமுணர்த்தலானு மிவைவேறு பொருள்குறித்தவொருசொல். திரிசொல்லதுதிரிபாவது உறுப்புத்திரிதலுமுழு வதுஉநதிரிதலுமெனவிருவகைத்து. கிள்ளைமஞ்ஞையென்பனவுறுப்புத் திரிந்த ன. விலங்கல்-விண்டெனபனமுழுவதுந்திரிந்தன. முழுவதுநதிரிநதவற்றைக்க ட்டியவழக்கென்பாருமுளர். அவைகட்டியசொலலாமாயிற்செய்யுள் வழக்கா மாறில்லை அதனனவையுநதிரிபெனல்வேண்டுமென்பது. அஃதேற் பலசொல் லொருபொருட்குரியவாதலும்,ஒருசொற்பலபொருட்குரித்தாதலும்-உரிச்சொ ன்முதலாயினவியற்சொற்குமுண்மையா னதுதிரிசொற்கிலககணமாமாறென் னையோவெனின்அதுதிரிசொற்கிலக்கண முணாத்தியவாறன்று;அதனது பாகு பாடுணர்த்தியவாறு. திரிபுடைமையேதிரிசொறகிலக்கணமாதல் சொலலின்று டிவினப்பொருண்முடித்தலென்பதனுற பெறவைத்தா. கிள்ளைமஞ்ஞையென் பனஒருசொல்லொருபொருட்குரித்தாகிய திரிசொல்லாதலி னிருபாற்றென் றனிரம்பாதெனின்அற்றன்று; ஆசிரியரிருபாற்றென்ப திரிசொற்கிளவியெனத் தொகைகொடுத்தாராகலிறகிள்ளை-மஞ்ஞையென்பனவற்றொ டொருபொருட் கிளவியாய்வருந திரிசொலுளவாகலொன்றே இவைபிறபொருள படுதலொ ன்றே இரண்டனுளொன்றுதிட்பமுடைத்தாதல்வேண்டும்.என்னை! ஆசிரியர்பி றகூறுமையினென்பது. திரித்துக்கொணடது இயறகைச்சொல்லா னின்பம் பெறச்செய்யுளீட்டலாகாமையானன்றே! அதனுறதிரிசொலலெனவே செய் யுட்குரித்தாதலும்பெறப்படும. (ங)

ங௲௯. செந்தமிழ்சேர்ந்த பன்னிருநிலத்துந்,தங்குறிப்பினவே திசைச்சொற்கிளவி.

செந்தமிழ்நிலத்தைச்சேர்நதபன்னிரண்டுநிலத்துந தாங் குறித்தபொரு ளை விளக்குந்திசைச்சொல. எ-று. என்றது அவ்வாநிலத்துத் தாங்குறித்த பொருள்விளக்குவதல்ல தவ்வியற்சொற்போல வெந்நிலத்துந்தம் பொருள்வி ளக்காவென்றவாறும். பன்னிருநிலமாவன-பொதுங்காநாடு,ஒளிநாடு,தென்பா ண்டிநாடு,குட்டநாடு,குடநாடு,பனறிநாடு,கற்காநாடு,சீதநாடு,பூழிநாடு,மலைநா டு,அருவாநாடு, அருவாவடதலையெனச செந்தமிழ்நாட்டுத் தென்கீழ்பால் மு

தலாகலாகவடகீழ்பாலிறுதியாக வெண்ணிக்கொள்க. தென்பாண்டிநாட்டார்-ஆ-எருமை-என்பனவற்றைப்பெற்றமென்றும்,தம்மாமியென்பதனைததந்தைவ யென்றும்வழங்குப. பிறவுமன்ன. தங்குறிப்பினவென்றுதனிமொழி தம்பொருளுணர்த்துமாற்றுக்குச் சொல்லினாரிருமொழி தொடருமிடத்தந் தன்னைவந்தானெனவேண்டியவாறுவரப்பெறுமென்றாரல்லரொன்பது. (௪)

௩௭௦. வடசொற்கிளவி வடவெழுத்தொரீஇ, யெழுத்தொடுபு
ணர்ந்த சொல்லாகும்மே.

வடசொற்கிளவியாவதுவடசொற்கேயுரியவெனப்படுஞ் சிறப்பெழுத்தினீங்கியிருசார்மொழிக்கும்பொதுவாகியவெழுத்தானியன்றசொல்லாம். எ-று. எனவேபொதுவெழுத்தானியன்றவடசொல்லுஞ் செய்யுட் செய்தற்குச்சொல்லாமென்றவாறாயிற்று. அவை-வாரி-மேரு-குங்குமம்- மணியென்னுந்தொடக்கத்தன. வடசொல்லாவதுவடசொல்லொடொக்குந தமிழ்ச்சொலென்றாராலுமாயாசிரியரொனின் அற்றன்று ஒக்குமெனறுசொல்லப்படுவன ஒருபுடையானொற்றுமையும்வேற்றுமையுமுடைமையானிரண்டாகல்வேண்டும்; இவையெழுத்தானும்பொருளானும் வேறுபாடின்மையாகியவொருசொல்லிலக்கணமுடைமையானிரண்டுசொல்லெனபபடா. அதனாளுைத்தல்யாண்டையது? ஒருசொல்லேயாமென்பது. ஒருசொல்லாயினுமாரியமுந்தமிழுமாகிய விடவேற்றுமையான்வேறாயினவெனின் அவ்வாறாயின்வழக்குஞ்செய்யுளுமாகிய விடவேற்றுமையாற்சோறு கூழென்னுந்தொடக்கத்தனவும் இரண்டுசொல்லாவான் செல்லும்; அதனானிடவேற்றுமையுடையவேனுமொருசொல்லிலக்கணமுடைமையானொருசொல்லேயாம். ஒருசொல்லாயவழித்தமிழ்ச்சொல்வடபாடைக்கட்செல்லாமையானும், வடசொலெல்லாத்தேயத்திற்கும் பொதுவாகலானுமிவைவடசொல்லாயீண்டுவழங்கப்பட்டன வெனல்வேண்டும். அதனானதுபோலியுரையாமென்க. அல்லதூஉம் அவைதமிழ்ச்சொலாமாயின் வடவெழுத்தொரீஇயென்றல்பொருந்தாமையானும் வடசொலாதலறிக. (௫)

௩௭௧. சிதைந்தனவரினு மியைந்தனவரையார்.

பொதுவெழுத்தானியன்றனவேயன்றி வடவெழுத்தானியன்றவடசொல் சிதைந்துவரினும் பொருத்தமுடையனசெய்யுளிடத்துவரையார். எ-று. அரமியவியலகத்தியம்பும்-எ-ம், தசநான்கெய்தியபணைமருளேன்றாள்-எ-ம்வரும். சிதைந்தனவரினுமெனப்பொதுப்படக்கூறியவதனான் ஆணை-வட்டம்-கட்டம்-கண்ணனெனப்பாகதமாய்ச்சிதைந்து வருவனவுங்கொள்க. இச்சூத்திரத்தானுமவைதமிழ்ச்சொலன்மையறிக. (௬)

௩௭௨. அந்நாற்சொல்லுந் தொடுக்குங்காலை, வலிக்கும்வழிவ
லித்தலு மெலிக்கும்வழிமெலித்தலும், விரிக்கும்வழிவி
ரித்தலுந் தொகுக்கும்வழித்தொகுத்தலு,நீட்டும்வழிநீட்
டலுங் குறுக்கும்வழிக்குறுக்கலு,நாட்டல்வலிய வென்
மனார்புலவர்.

இயற்சொல் திரிசொல் திசைச்சொல வடசொலென்னுநான்குசொல்லையுஞ்செய்யுளாகத்தொடுக்குங்கான்மெலியதனைவலிக்கவேண்டும்வழிவலித்தலும் வலியதனைமெலிக்கவேண்டும்வழி மெலித்தலுங் குறைவதனைவிரிக்கவேண்டும் வழிவிரித்தலு மிகுவதனைத்தொகுக்கவேண்டும்வழித் தொகுத்தலுங் குறியதனைநீட்டவேண்டும்வழி நீட்டலு நெடியதனைக்குறுக்கவேண்டும்வழிக் குறுக்கலுமாகியவறுவகைவிகாரமுஞ்செய்யுளினபம்பெறச்செய்வாருட்டுதலைவலியாகவுடைய. எ- று. குறுக்கையிரும்புலி-முத்தைவரூஉங்காலந்தோன்றின்-என்பனவலிக்கும்வழிவலித்தல். சுடுமண்பாவை - குன்றியலுகரத்திறுதி - என்பன மெலிக்கும்வழிமெலித்தல். தண்ணந்துறைவன்-என்பது விரிக்கும்வழிவிரித்தல். மழவரோட்டிய-என்பதுதொகுக்கும்வழித் தொகுத்தல். குன்றிகோபங் கொடிவிடுபவளமொண்செங்காந்தளொக்குநின்னிறம் என்றவழிச்செவ்வெண்ணின்றொகைதொக்குநிற்றலினிதுவுமது. வீடுமின் என்பது நீட்டும்வழி நீட்டல். பாசிலையென்பதுகாட்டுவாருமுளர். உண்டார்ந்துஎன்பது உண்டருந்தெனக்குறுகிநிற்றலிற்குறுக்கும்வழிக்குறுக்கல். அழுந்துபடுவிழுப்புண்-என்பதுமது. பிறவுமன்ன. நாட்டல்வலியவென்பது இவ்வறுவகைவிகாரமு மின்னுழியாமென்றுவரையறுக்கப்படா; செய்யுள்செய்யுஞ்சான்றோரணிபெறநாட்டலைத்தமக்குவலியாகவுடையவென்றவாறு. நாட்டல்-நிலைபெறச்செய்தல். (௭)

௩௭௩. நிரனிறைசுண்ண மடிமறிமொழிமாற், றவைநான்கென்ப மொழிபுணரியல்பே.

இனிச்செய்யுளிடத்துவிகாரவகையான் மொழிகடம்முட்புணருமாறுகூறுகின்றார். நிரனிறையுஞ்சுண்ணமுமடிமறியுமொழிமாற்றுமெனநான்கென்றுசொல்லுப அந்நான்குசொல்லுஞ்செய்யுளிடத்துத்தம்முட்புணரு முறைமை. எ-று. நான்குசொல்லுமென்பதூஉம், செய்யுளிடத்தென்பதூஉ மதிகாரத்தாற்பெற்றாம். நிரனிறையுஞ்சுண்ணமுமொழிமாற்றாதலொக்குமாயினு நிரனிற்றலுமளவடியெண்சீரைச்சுண்ணமாகத்துணித்தலுமாகிய வேறுபாடுடைமையானவற்றைப்பிரித்தவ்வேறுபாட்டாற் பெயர்கொடுத்து வேறிலக்கண மில்லாதமொழிமாற்றைமொழிமாற்றென்றார். இச்சூத்திரத்தான் மொழிப்புணரியனான்கெனவரையறுத்தவாறு. (௮)

௩௭௪. அவற்றுள், நிரனிறைதானே, பெயரினும்வினையினுநினையத்தோன்றிச், சொல்வேறுநிலைஇப் பொருள்வேறுநிலையல்.

அந்நான்கனுணிரனிறையாவது பெயரானும்வினையானுமாராயத்தோன்றிச்சொல்வேறுநிற்பப்பொருள்வேறுநிற்றலாம். எ-று. தொடர்மொழிப்பொருண்முடிக்குஞ்சொற்கண்ணதாகலான்முடிக்குஞ்சொல்லைப் பொருளென்றார். வினையினும்பெயரினுமென்றதனான் வினைச்சொல்லான்வருவதூஉம், பெயர்ச்சொல்லான்வருவதூஉம், அவ்விருசொல்லான்வருவதூஉமெனநிரனிறைமூன்றாம். மாசுபோகவுங்காய்பசிநீங்கவுங்கடிபுனன்மூழ்கியடிசில்கைத்தொட்டு-என

முடிவனவுமுடிபபனவுமாகிய வினைச்சொல்வேறுவேறுநிற்றலின் வினைநிரனிறையாயிற்று. அவைமாசுபோகப்புனன்மூழ்கி,பசிநீங்கவடிசில்கைத்தொட்டு-எனஇயையும். கொடிகுவளைகொட்டைநுசுப்புண்கண்மேனி - எனமுடிவனவுமுடிப்பனவுமாகிய பெயர்ச்சொல்வேறுவேறுநிற்றலிற் பெயர்நிரனிறையாயிற்று. அவைநுசுப்புக்கொடி, உண்கண்குவளை, மேனிகொட்டை-எனவியையும். உடலுமுடைந்தோடுமூழ்மலரும்பார்க்கும், கடலிருளாம்பல்பாம்பென்ற, கெடலருஞ்சீர்த், திங்கடிருமுகமாச்செத்து-எனமுடிப்பனவாகியவினையுமுடிவனவாகியபெயரும் வேறுவேறுநிற்றலிற்பொதுநிரனிறையாயிற்று. அவைகடலுடலும், இருளுடைந்தோடும், ஆம்பலூழ்மலரும்,பாம்புபார்க்குமெனவியையும். நினையத்தோன்றியென்றதனாற்சொல்லும்பொருளும் வேறுவேறுநிற்குங்கால்நிரல்படநில்லாது கன்றுங்கந்தும்போலநளிகடற்கூம்புங்கலனுந்தோன்றுந்தோன்றன்மறந்தோர்துறைகெழுநாட்டே-எனமயங்கிவருதலுங்கொள்க.(௯)

௩௭௫. சுண்ணந்தானே, பட்டாங்கமைந்த வீரடியெண்சீ, ரொட்டுவழியறிந்து துணிந்தனரியற்றல்.

சுண்ணமாவதியல்பாகவமைந்த வீரடிக்கணுளவாகிய எண்சீரைத்துணித்தியையும்வழியறிந்துகூட்டியியற்றப்படுவதாம். எ - று. அளவடியல்லாதனவிகாரவடியாகலிற்பட்டாங்கமைந்திலவாகலிற் பட்டாங்கமைந்த வீரடியெனவேயளவடியாதல்பெறப்படும். ஈரடியெண்சீர்விகாரவடியானும்பெறப்படுதலினவற்றைநீக்குதற்குப்பட்டாங்கமைந்தவீரடியென்றார். எனவேசுண்ணமளவடியிரண்டனுளல்லதுபிறண்டுவாராதென்பது. சுரையாழவம்மிமிதப்பவரையனைய,யானைக்குநீத்துமுயற்குநிலையென்ப. கானகநாடன்சுனை-என்புழிஆழமிதப்பநீத்துநிலை-என்பனவும், சுரையம்மியானைமுயற்கு-என்பனவும்-நின்றுழிநிற்பவியையாமையிற்சுரைமிதப்ப,அம்மியாழ, யானைக்குநிலை,முயற்குநீத்தெனத்துணித்துக்கூட்ட வியைந்தவாறுகண்டுகொள்க. சுண்ணம்போலச்சிதரப்பரந்துகிடத்தலிற்சுண்ணமென்றார். (௧௦)

௩௭௬. அடிமறிச்செய்தி யடிநிலைதிரிந்து. சீர்நிலைதிரியாது தடுமாறும்மே.

அடிமறிச்செய்யுளாவது சீர்நின்றாங்குநிற்பவடிகடத்தநிலையிற்றிரிந்தொன்றனிலைக்களத்தொன்றுசென்றுநிற்கும். எ- று. எனவேயெல்லாவடியும் யாண்டுஞ்செல்லுமென்பதாம். மாறாக்காதலர்மலைமறந்தனரே, யாறாக்கட்பனிவரலானாவே, வேறாமென்றோள்வளைநெகிழும்மே, கூறாய்தோழியான்வாழுமாறே- எனவரும். இதனுட்சீர்நின்றாங்குநிற்பப் பொருள்சிதையாமலெல்லாவடியுந்தடுமாறியவாறுகண்டுகொள்க. பெரும்பான்மையுநாலடிச்செய்யுட்கணல்லதிப்பொருள்கோள்வாராதென்க.நிரனிறைதானேசுண்ணந்தானே மொழிமாற்றியற்கையென்பனபோலவீண்டுமடிமறிச்செய்தியென்பதனைக் குறளடியாக்கியடிநிலைதிரிந்துசீர்நிலைதிரியாதுதடுமாறும்மேபொருடெரிமருங்கினென்றுசூத்திரமாகவகுப்பாருமுளர். (௧௧)

௩௭௭. பொருடெரி மருங்கி, னீற்றடியிறுசீ ரெருத்துவயிற்றி ரியுந், தோற்றமும்வரையா ரடிமறியான.

பொருளாராயுங்காலடிமறிச்செய்யுட்கணீற்றடியதிறுதிச்சீ ரெருத்தடியிற்சென்றுதிரிதலும்வரையார். எ-று. சீர்நிலைதிரியாதுதடுமாறுமென்றுராகலிற் சீர்நிலைதிரிதலுமொருவழிக்கண்டெய்தியதிகந்துபடாமற்காத்தவாறு. இலக்கியம்வந்தவழிக்கண்டுகொள்க. எருத்துவயினென்பதற் கீற்றயற்சீர்வயினென் றுபொருளுரைத்துச் சூரல்பம்மியசிறுகான்யாறே, சூரரமகளி ராரணங்கினரே, சாரனாடநீவருதியே, வாரலெனினேயானஞ்சுவலே - என்புழியஞ்சுவல் யானெனவிறுதிச்சீரீற்றயற்சீர்வயிற்சென்றுதிரிந்ததென்று தாரணங்காட்டினா ருரையாசிரியரொனின்யானஞ் சுவலெனநின்றுங்குறிப்பவும் பொருள்செல்லுமாகலி னிவ்வாறுதிரிதல்பொருந்தாமையி னவாக்கதுகருத்தன்றென்க. எல்லாவடியும் யாண்டுஞ்செல்லுமாயினு முரைப்போர்குறிப்பானெருத்தெனறு மீற்றடியென்றுங்கூறினார். உரைப்போர்குறிப்பி னுணரவகையன்றி, யிடைப்பான்முதலீறென்றவைதம்மின், நீக்கப்படாதனமண்டிலயாப்பே - எனவுரைப்போர்குறிப்பான் முதலுமிடையுமீறுங்கோடல் பிறருங்கூறினாரென்பது.(௧௨)

௩௭௮. மொழிமாற்றியற்கை, சொன்னிலைமாற்றிப் பொருளெ திரியைய, முன்னும்பின்னுங் கொள்வழிக்கொளாஅல்.

அம்மொழிமாற்றினதியல்பு பொருளெதிரியையுமாறுசொன்னிலையைமாற்றிமுன்னும்பின்னுங்கொள்ளும்வழிக் கொளுவுதலாம். எ-று. ஆரியமன்னர் பறையினெழூஉந்தியம்பும், பாரிபறம்பின்மேற்றண்ணுமை, காரி,விறன்முள்ளூர் வேங்கைவீதாஅனுந்தோளா,ளிறனுள்ளூருள்ளதலர். எனவிதனுட்பாரி பறம்பின்மேற்றண்ணுமைதா னுனுந்தோளாளெனவும, நிறன்விறன்முள்ளூர் வேங்கைவீயெனவும், உள்ளூருள்ளதாகிய வல ராரியமன்னர்பறையினெழூஉந்தியம்புமெனவும் - முன்னும்பின்னுங்கொள்வழி யறிந்துகொளுவப் பொருளெதிரியைந்தவாறு கண்டுகொள்க.மொழிமாறறுநின் றென்றறகொன்று செவ்வாகாமை கேட்டார்கூட்டியுணருமாற்ருற்கடாவல்வேண்டும்;அல்லாக்காலவாய்நிலையுந்தகுதியுமுடையவேனு மண்மைநிலையாகியகாரணமின்மையாற் சொற்கடம்முளியையாவாமென்க. (௧௩)

௩௭௯. தநநு எ எனு மவைமுதலாகிய, கிளைநுதற்பெயரும் பிரிப்பப்பிரியா.

செய்யுட்குரியசொல்லுஞ் சொற்றொடுக்குங்காற்படும் விகாரமுமவைசெய்யுளாக்குங்காற்றம்முட்புணர்ந்து நிற்குமாறுமாகிய செய்யுளொழிபுணர்த்தி யினிவழக்கிலக்கணத் தொழிபுகூறுகின்றார். த ந நு எ-என்பனவற்றை முதலாகவுடையவாய்க் கிழமைநுதலிவரும்பெயரும் பிரிக்கப்படா. எ-று. அவையாவன தமன்-தமள்-தமர், நமன்-நமள்-நமர், நுமன் - நுமள்-நுமர், எமன்-எமள்-எமர், தம்மான்-தம்மாள்-தம்மார், நம்மான்-நம்மாள்-நம்மார், நும்மா

ன்-நும்மாள்-நும்மார்,எம்மான்-எம்மாள்-எம்மார்-எனவரும். உம்மையாற்பிற கிளைநுதற்பெயரும் பிரிக்கப் பிரியாவென்பதாம். அவை தாய்-ஞாய்-தந்தை-தன்னை என்னுந்தொடக்கத்தன. இவற்றைப் பிரிப்பப்பிரியாவென்ற தென்னை யோவெனின் வெற்பன்பொருப்பனென்னுந் தொடக்கத்தொட்டுப்பெயர் வெற்பு-அன், பொருப்பு-அன்-எனப்பிரித்தவழியும் வெற்புப்பொருப்பென்னு முதனிலை தம்பொருளை இனிதுவிளக்கும். தமன்-எமனென்பனவற்றைத் தம்-அன், எம்- அன்-எனப்பிரிக்கலுறின்-தம்-எம் - என்பனமுதனிலையாய்ப்பொருளுணர்த்துவனவாகல்வேண்டும் அவைபொருளுணர்த்தாமையாற்றமனெமனெனவழங்கியாங்குக்கொள்வுதல்லதுபிரிக்கப்படாமையி னவ்வாறுகூறினுரென்க. பிறவுமன்ன,அஃதேல்தாம்-யாம்-என்பனவற்றிற்குமுதனிலையாகப்பிரிக்கவேயவையுந் தம்பொருளுணர்த்துமெனின் தமன்-எமன் - என்பன தன்கிளை-என்கிளை, எ-ம், தங்கிளை-எங்கிளை-எ-ம்- முதனிலைவகையான் ஒருமைக்கும்பன்மைக்கும் பொதுவாதலுடைய; ஒருமையுணர்த்துங்கால் தாம்யாம் என்பனபொருந்தாமையான் தாம்யாமென்பனவே முதனிலையெனல்வேண்டும்; வேண்டவேயிவ்வாறுபிரிப்பின் தமன்-எமன்-என ஒரோவொன் றிரண்டுசொல்லாதல் வேண்டுதலானெழுத்தானும் பொருளானும் வேறுபாடின்மையி னொருசொல்லெனவேபடும். இரண்டுசொல்லென்ற ஸிரம்பாமையினவ்வாறுபிரித்தலும் பொருத்தமின்றென்பது. கிளைநுதற்பெயர் விளிமரபின்கட் பெறப்பட்டமையாற் பெயரியலிலுணர்த்தாராயினும் அதனை ஞண்டியையுபட்டின்றாகலாற் பிரிப்பப்பிரியா வொருசொலடுக்கொடியைய விதனை யீண்டுவைத்தார். (௧௪)

௩௮௦. இசைநிறையசைநிலை பொருளொடுபுணர்தலென், றவை மூன்றென்ப வொருசொலடுக்கே.

இசைநிறையு மசைநிலையும் பொருள்வேறுபாட்டொடு புணர்வதுமென வொருசொலடுக்கு மூன்றுவகைப்படும். எ-று. ஏ ஏ யம்பன் மொழிந்தனளே ன்பதிசைநிறை. மற்றோ மற்றோ, அன்றோ அன்றோ - என்பனவசைநிலை. பாம்பு பாம்பு,அவன் அவன், வைதேன் வைதேன், உண்டு உண்டு,போம் போம்-என்பனமுறையானே விரைவுந்துணிவு முடம்பாடு மொருதொழில்பலகாலிகழ்தலுமாகிய பொருள்வேறுபாடுணர்த்தலிற் பொருளொடுபுணர்தல். பொருள்வேறுபாடு பிறவுமுளவேல் வழக்குநோக்கிக் கண்டுகொள்க. அடுக்கொருசொல்லது விகாரமெனப்படும் இரண்டுசொல்லாயி னிருபொருளுணர்த்துவதல்ல திப்பொருள்வேறுபாடுணர்த்தாமையினென்பது. (௧௫)

௩௮௧. வேற்றுமைத்தொகையே யுவமைத்தொகையே, வினையின்தொகையே பண்பின்றொகையே, யும்மைத்தொகையே யன்மொழித்தொகையென், றவ்வாறென்பதொகைமொழிநிலையே.

இனித்தொகையிலக்கணமுணர்த்துகின்றார். வேற்றுமைத்தொகை முதலாகத்தொகைச்சொலாறும். எ-று. வேற்றுமையுருபு முவமையுருபு மும்மை

யும் வினைச்சொலீறும் பண்புச்சொலீறுந் தொகுதலிற்றொகையாயின வென்பாரும், அவ்வப்பொருண்மே லிரண்டும்பலவுமாகிய சொற்பிளவுபடாதொற்றுமைப்படத் தம்முளியைதலிற் றொகையாயினவென்பாருமென விருதிறத்தராசிரியர்.செய்தான்பொருள்-இருந்தான்மாடத்து-எனவுருபுதொக்கொருசொன்னீர்மைப்படாதனவுந் தொகையாவான்சேறலி னவற்றைநீக்குதற்கும், வேழக்கரும்பு-கேழற்பன்றி-என்புழித் தொக்கனவில்லையெனினுந் தொகையென வேண்டப்படுமாகலா னவற்றைத்தழுவுதற்கு முருபுமுதலாயின தொகுதலிற் றொகையென்பார்க்கு மொட்டியொருசொன்னீர்மைப்படுதலுந் தொகையிலக்கணமெனல்வேண்டு மதனானுருபுமுதலாயினதொகுத லெல்லாத்தொகையினுஞ் செல்லாமையா னெல்லாத்தொகைக்கண்ணுஞ்செல்லு மொட்டியொருசொல்லாதல் தொகையிலக்கணமாய்முடிதலி னிவ்வாசிரியர்க் கிதுவே துணிபெனப்படுமென்பது. அற்றாயின் உருபுதொகவருதலும்-எ-ம்,வேற்றுமைதொக்க பெயர்வயினானும்-எ-ம், உம்மைதொக்க பெயர்வயினானும்-எ-ம்- ஓதலானவை யாண்டுத்தொக்கனவெனப்படுமன்றோவெனின் அற்றன்று அதுவென்வேற்றுமையுயர்திணைத்தொகைவயி னதுவெனுருபு கெடக்குகரம்வருமேயென்புழி அதுவெனுருபுநின்றுகெட்டதாயினின்றகாலத்துத் திணைவழுவாம். அத்திணைவழுவமைவுடைத்தெனின் விரிக்கின்றுழி நான்காமுருபு தொடராது தன்னையே விரிப்பினுமமைவுடைத்து அதனான்முறைமைப்பொருடோன்றநம்பிமகனென விரண்டுசொற்றொக்கனவென்பதே யாசிரியர்கருத்தெனல்வேண்டும்.அல்லதூஉம்வினைத்தொகைபண்புத்தொகை யன்மொழித்தொகையென்பனவற்றின்கண்வினையும்பண்புமன்மொழியுந் தொக்குநில்லாமையானு மஃதேகருத்தாதலறிக. அதனானுருபுமுவமையுமும்மையுந்தொகுதலாவது தம்பொருளொட்டியசொல்லாற்றோன்றத்தாமாண்டுப்புலப்படாதே நிற்றலேயாம். வேற்றுமைத்தொகையென்பது வேற்றுமைப்பொருளையுடையதொகையென்றானும், வேற்றுமையொருசார்வுடையதொகையென்றானும், வேற்றுமைப் பொருடொக்கதொகையெனறானும் விரியும். உவமைத்தொகை உம்மைத்தொகை அன்மொழித்தொகை யென்பனவும் அவ்வாறுவிரியும்.அன்மொழியாவதுதொகைச்சொலல்லாதமொழி. வினைத்தொகை பண்புத்தொகையென்பனவினையினதுதொகை பண்பினதுதொகையெனவிரியும். வினைபண்பென்றதவற்றையுணர்த்துஞ்சொல்லை. ஒருசொல்லாற்றொகையின்மையிற் பிறிதோர்சொல்லொடு தொகுதல் பெறப்படும்.இச்சூத்திரத்தாற் றொகைச்சொலினைத்தெனவரையறுத்தவாறு. (௧௧)

௩௮௨. அவற்றுள்,வேற்றுமைத்தொகையே வேற்றுமையியல.

முற்கூறியவற்றுள்வேற்றுமைத்தொகை யவ்வேற்றுமையுருபுத்தொடர்பொருளுணர்த்தியாங்குணர்த்தும். எ-று. எனவேசாத்தனொடுவந்தானென்னும்பொருட்கட்சாத்தன்வந்தான்-எ-ம், சாத்தற்குக்கொடுத்தானென்னும்பொருட்கட்சாத்தன் கொடுத்தான்-எ-ம்-உருபுத்தொடர்ப்பொருளுணர்த்து மாற்றலில்லனதொகா; அவ்வாற்றலுடையனவேதொகுவனவென்றவாறும். இரண்டா

ம்வேற்றுமைத்தொகைமுதலாக வேற்றுமைத்தொகையறுவகைப்படும். நிலங்கடந்தான்-குழைக்காதன்-எ-ம், தாய்மூவர்-பொறகுடம்-எ-ம், கருப்புவேலி-கடிசூத்திரப்பொன்-எ-ம், வரைபாய்தல்-கருவூர்க்கிழக்கு-எ-ம், சாத்தன்பொத்தகம்-கொற்றனுணர்வு-எ-ம், மன்றப்பெண்ணை-மாரியாமா-எ-ம்-வரும். இவை முறையானே-நிலத்தைக்கடந்தான் -குழையையுடையகாதன், தாயொடுமூவர், பொன்னானியன்றகுடம், கரும்பிற்குவேலி, கடிசூத்திரத்திற்குப்பொன், வரையினின்றும்பாய்தல், கருவூரின்கிழக்கு, சாத்தனதுபொத்தகம், கொற்றனதுணர்வு, மன்றத்தின்கணிற்கும்பெண்ணை, மாரிக்கணுளதாமா - என்னுமுருபுத்தொடர்ப்பொருளை யினிதுவிளக்கியவாறுகண்டுகொள்க. பிறவுமன்ன. (௧௭)

௩௮௩. உவமைத்தொகையே யுவமவியல.

உவமைத்தொகை உவமவுருபுத்தொடர்போலப்பொருளுணர்த்தும். எ-று. எனவேபுலியன்னசாத்தன்-மயிலன்னமாதர்- என்னும்பொருட்கட்புலிச்சாத்தன்-மயின்மாதர்-எனவப்பொருள் விளக்குமாற்றலில்லனதொகா; ஆற்றலுடையனவேதொகுவனவென்பதாம். புலிபாய்த்துள்-மழைவண்கை-துடிநடுவு-பொன்மேனி-என்பனபுலிப்பாய்த்துளன்னபாய்த்துள்- மழையையொக்கும்வண்கை-துடியன்னநடுவு-பொனனன்னமேனி-எனத்தம்விரிப்பொருளுணர்த்தியவாறுகண்டுகொள்க. அஃதேல்புலிப்பாய்த்துளையொக்கும்பாய்த்துள்-மழையையொக்கும்வண்கை-எனவிரிதலினவையெல்லாம் வேற்றுமைத்தொகையெனவேபடும். அதனானுவமைத்தொகையெனவொன்றில்லையெனின் அற்றன்று-சொல்லுவார்க்கதுகருத்தாயினவைவேற்றுமைத்தொகையுமாம்; அக்கருத்தானன்றிப்புலியன்னபாய்த்துள்-பொன்மானுமேனி - எனவேற்றுமையொடியைபில்லாவுவமவுருபுத்தொடர்ப்பொருட்கட் டொக்கவழி யுவமைத்தொகையாவதல்லதுவேற்றுமையாண்டின்மையின் வேற்றுமைத்தொகையாமாறில்லையென்க. உவமவுருபு ஒப்பில்வழியாற்பொருள்செய்யுமிடைச்சொலாகலான்வினையும்வினைக்குறிப்பும்பற்றிவரு மிரண்டாம்வேற்றுமையவைபற்றி- ஏன்போற்பெருவிதுப்புறுகநின்னையின்னாதுற்றவறனில்கூற்றே - என்புழிப்போலென்பதுகுறிப்புவினையெச்சமாய்நிற்றலானும், நும்மனோருமற்றினையராயினெம்மனோரிவட்பிறவலர்மாதோ-என்புழிஅன்னோனென்பதிடைச்சொன்முதனிலையாகப்பிறந்த குறிப்புப்பெயராகலானும்-என்னைப்போல்நும்மையன்னோரொம்மையன்னோனஇரண்டாவதுவிரித்தற்கேற்புடைமையறிக. (௧௮)

௩௮௪. வினையின்தொகுதி காலத்தியலும்.

வினைத்தொகைகாலத்தின்கணிகழும். எ-று. காலத்தியலுமெனப்பொதுவகையாற்கூறியவதனான்மூன்றுகாலமுங்கொள்க. தொகுதிகாலத் தியலுமெனவே அவ்வினைவிரிந்துநின்றவழித்தோன்றாது தொக்கவழித்தொகையாமாற்றலாற்காலந்தோன்றுமென்றவாறும். ஈண்டுவினையென்றதெவற்றை யெனின்வினைச்சொற்கும்வினைப்பெயர்க்குமுதனிலையாய உண், தின், செல், கொல்-எனவினைமாத்திரமுணர்த்திநிற்பனவற்றையென்பது. இவற்றைவடநூலார் தா

துவென்ப. ஆடரங்கு-செய்குன்று-புணர்பொழுது-அரிவாள்-கொல்யானை-செல்செலவு-எனவரும். காலமுணர்த்தாது வினைமாத்திரமுணர்த்தும்பெயர் நிலப்பெயர்முதலாகியபெயரொடுதொக்குழிக்காலமுணர்த்தியவாறுகண்டுகொள்க காலமுணர்த்துகின்றுழிப் பெயரெச்சப்பொருளவாய்நின்றுணர்த்து மென்பது. செய்யுஞ்செய்தவென்னுங்கிளவியின்மெய்யொருங்கியலுந் தொழிலொருகு மொழியுமென்பதனாற்கூறினார். தொகைப்பொருளாகியதாம்பிரிந்தவழிப் பெறப்படாமையினாசிரியரிவற்றைப் புணரியனிலையிடையுணரத்தோன்றா வென்றார்; அதனானிவைதஞ்சொல்லான் விரிக்கப்படாமையிற்பிரிவிலொட்டாம். பெயரெச்சநின்றுதொக்கதென்றாரா லுரையாசிரியரொனின்அற்றன்று ஆசிரியரிவற்றைப்பிரித்துப்புணர்க்கப்படா வழங்கியவாறேகொள்ளப்படுமென்றது பிரித்தவழித் தொகைப்பொருள்சிதைதலானன்றே! கொன்றயானையெனவிரிந்தவழியுமப்பொருள்சிதைவின்றேற்புணரியனிலையிடை யுணரத்தோன்றாவென்றற் கோர்காரணமில்லையாம்; அதனாற்பெயரெச்சநின்றுதொகுதலாசிரியர் கருத்தன்மையினுரையாசிரியர்க்கு மதுகருத்தன்றென்க; அல்லதூஉ மாகுபெயருணர்த்தியவழிவினைத்தொகையுளப்பட விருபெயரொட்டுமென்றா ராகலானும் வினைநின்று தொகுதலவர்கருத்தன்மையறிக. அஃதேல் வினைத்தொகைக்கு முதனிலைபெயராமன்றோவெனின் உரிஞென்பதுமுதலாயினவற்றைத் தொழிற்பெயரொன்றாராகலிற் றொழின்மாத்திரமுணர்த்துவனவெல்லாந்தொழிற்பெயரொன்பதாசிரியர்கருத்தென்ப. (கக)

ஙஅரு. வண்ணத்தின்வடிவி னளவிற்சுவையினென், றன்னபி றவு மதன்குணநுதலி, யின்னதிதுவென வரூஉமியற் கை, யென்னகிளவியும் பண்பின்றொகையே.

வண்ணம் வடிவு அளவு சுவை என்பனவு மவைபோல்வனபிறவுமாகிய குணத்தைநுதலிப்பின்றொக்கவழிக்குணச்சொற்குணமுடையதனை யுணர்த்தலானின்னதிதுவென வொன்றனையொன்றுவிசேடித்திருசொல்லு மொருபொருண்மேல்வருமியல்புடைய வெல்லாத்தொகைச்சொல்லும் பண்புத்தொகையாம். எ - று. நுதலியென்னுஞ்சினைவினையெச்சம் வருமென்னுமுதல்வினையொடுமுடிந்தது. இயற்கையென்றது தொக்குழிப்பண்புடையதனைக் குறித்தலத்தொகைச்சொல்ல தியல்பென்பதல்லதுகாரணங்கூறப்படா தென்றவாறு. தொகைக்கணல்லதச்சொல்லை - உண் - தின் - செல் - கொல் - என்பனபோலப்பொருளுணர்த்தாமையிற்பண்புத்தொகையும் பிரிக்கப்படாதாம். கருங்குதிரையென்பது வண்ணப்பண்பு. வட்டப்பலகையென்பதுவடிவு. நெடுங்கோலென்பதளவு. தீங்கரும்பென்பதுசுவை. பிறவுமென்றதனான் நுண்ணூல், பராரை, மெல்லிலை, நல்லாடையென்னுந்தொடக்கத்தனகொள்க. அவைகரியதாகியகுதிரை, வட்டமாகியபலகையெனப்பண்புச்சொல்லும்பண்புடைப்பொருளே குறித்தலானிருசொல்லு மொருபொருளவா யின்னதிதுவெனவொன்றையொன்றுபொதுமைநீக்கியவாறுகண்டுகொள்க. பிறவுமன்ன. அஃதேற்கரியதாகியகுதிரை வட்டமாகியபலகையென்பன அத்தொகையின் விரியாகலிற்பண்புத்தொகைவிரிக்கப்படாதென்ற தென்னையோவெனின்! அற்றன்று தொ

கைப்பொருளுணர்த்துதற்குப் பிறசொற்கொணர்ந்துவிரித்ததல்லது தன்சொல்லான் விரியாமையினவைவிரியெனப்படாவென்க. வடநூலாரும் பிரியாத்தொகையும் பிறசொல்லான்விரிக்கப்படுமென்றார். கரியதென்னும்பண்புகொள்பெயர்கருங்குதிரையெனத் தொக்கதென்றாரா லுரையாசிரியரெனின் அதனைப்பெயரொச்சம்வினைத்தொகை நிலைமொழியென்றதற்குரைத்தாங்குரைத்து மறுக்க. பிறசொற்கொணர்ந்துவிரிக்குங்காற் கரியகுதிரை, கரியதாகியகுதிரை-கரியதுகுதிரையெனவத்தொகைப்பொருளுணர்த்துவன வெல்லாவற்றானும்விரிக்கப்படும். முதனிலையாவதுகரியன்செய்யன், கருமைசெம்மை யென்பனவற்றிற்கெல்லாமுதனிலையாய்ச் சொல்லானிரம்பாது கருசெவ்வெனப்பண்புமாத்திரமுணர்த்திநிற்பதாம். என்னகிளவியுமென்றதனாற்சாரைப்பாம்பு வேழக்கரும்பு- கேழற்பன்றியெனப்பண்புதொகாது பெயர்தொக்கனவு மத்தொகையாதல்கொள்க. இவற்றதுசாரைமுதலாகிய நிலைமொழிபிரித்தவழியும்பொருளுணர்த்தலினிவற்றைப்பிரித்துப் புணர்த்தார். அஃதேற்பாம்பைச் சாரைவிசேடித்ததல்லது சாரையைப்பாம்புவிசேடித்ததின்றாகலின்ஞென்றை யொன்று பொதுமைநீக்காமையாற் சாரைப்பாம்பென்பது முதலாயினபண்புத்தொகையாகியவா றென்னையெனின்? நன்றுசொன்னாய் விசேடிப்பதும் விசேடிக்கப்படுவதுமாகிய விரண்டனுள்விசேடிப்பது விசேடியாக்காலதுகுற்றமாம். விசேடிக்கப்படுவது விசேடித்தின்றென்றலும் விசேடிக்கப்படுதலாகிய தன்றன்மைக்கிழுக்கின்மையான் விசேடியாது நிற்பினுமமையுமென்க. இவ்வேறுபாடுபெறுதற்கன்றேயின்னதிதுவென வரூஉமெனப் பின்மொழியை விசேடிப்பதாகவும், முன்மொழியைவிசேடிக்கப்படுவதாகவுமாசியரோதுவாராயிற்றென்பது. அற்றேனுஞ்சாரையெனவே குறித்தபொருள்விளக்கலிற் பாம்பென்பது மிகையாம் பிறவெனின் அற்றன்று உலகவழக்காவது சூத்திரயாப்புப்போல மிகைச்சொற்படாமற் சொல்லப்படுவதொன்றன்றித் தொன்றுதொட்டுக்கேட்டார்க்குப் பொருளினிதுவிளங்க வழங்கப்பட்டுவருவதாகலிற் கடாவன்றென்க. மிகைச்சொற்படாமைச் சொல்லப்படுமாயின் யான்வந்தேன்-நீ வந்தாயென்னாது வந்தேன் வந்தாயென்றே வழங்கல்வேண்டுமென்பது. இனியொற்றுமை நயத்தான்அஃதென்புந்தோலுமுரியவாதலாகிய வுறுப்புஞ்சாரையெனப்படுதலினவற்றைநீக்கலாற் பாம்பென்பதூஉம்பொதுமைநீக்கிற்றென்பாருமுளர். உயர்சொற்கிளவி இடைச்சொற்கிளவி உரிச்சொற்கிளவி என்புழி உயர்சொல் இடைச்சொல் உரிச்சொலென்பன சொல்லென்பதன்கட் கருத்துடையவன்றிக் குறிமாத்திரமாய் உயர் இடை உரியென்றதுணையாய் நின்றனவாகலிற் சாரையென்பது பாம்பை விசேடித்தாற்போல வவைகிளவியென்பதனை விசேடித்து நின்றனவென்பது. அவ்வாற்றானமைவுடையவாயினுஞ் சூத்திரமாகலின் உயர்சொல் இடைச்சொல் உரிச்சொலெனவேயமையும்; கிளவியென்பது மிகையெனின் மிகையாயினு மின்னோரன்னவமைவுடையவென்பதுணர்த்துதற் கவ்வாறோதினாரென்பது. (௨௦)

சூ-௮௬. இருபெயர்பல்பெய ரளவின்பெயரே, யெண்ணியற்
பெயரே நிறைப்பெயர்க்கிளவி, யெண்ணின்பெயரொ

டவ்வறுகிளவியுங், கண்ணியநிலைத்தே யும்மைத்தொகையே.

இருபெயர்முதலாகச் சொல்லப்பட்ட வறுவகைச்சொற்றிரளையுந் தனக்குச்சார்பாகக் குறித்து மும்மைத்தொகை. எ-று. உவாப்பதினான்கென்பது இருபெயரானாயவும்மைத்தொகை. புலிவிற்கெண்டையென்பதுபலபெயரானாயவும்மைத்தொகை. தூணிப்பதக்கென்ப தளவுப்பெயரானாய வும்மைத்தொகை. முப்பத்துமூவரென்ப தெண்ணியற்பெயரானாய வும்மைத்தொகை. தொடியரையென்பதுநிறைப்பெயரானாயவும்மைத்தொகை. பதினைந்தென்பது எண்ணுப்பெயரானாயவும்மைத்தொகை. இனியவைவிரியுங்கால்உவாவும்பதினான்கும்-எ-ம், புலியும் வில்லுங் கெண்டையும்-எ-ம், தூணியும் பதக்கும்-எ-ம், முப்பதின்மருமூவரும்-எ-ம், தொடியுமரையும்-எ-ம், பத்துமைந்தும்-எ-ம்-விரியும். வேற்றுமைத்தொகைமுதலாயின பலசொற்றொகுதல்சிறுபான்மை யதனானும்மைத்தொகை யிருசொல்லானும் பலசொல்லானு மொப்பத்தொகுமென்பதறிவித்தற் கிருபெயர்பல்பெயரென்றார். கற்சுனைக்குவளையிதழ்- பெருந்தோட் பேதையெனப்பிறதொகையும் பெரும்பான்மையும் பலசொல்லாற்றொகுமாலோவெனின்? அற்றன்று கல்லென்பதுஞ் சுனையென்பதுங் கற்சுனையெனத்தொக்கொருசொல்லாய்ப் பின்குவளையென்பதனொடுதொக் கொருசொல்லாய்ப் பின்னிதழென்பதனொடுதொக்குக் கற்சுனைக்குவளையிதழெனவொன்றாயிற்று. பெருந்தோளென்னுந்தொகை யொருசொல்லாய்ப் பின்பேதையென்பதனொடுதொக்குப் பெருந்தோட் பேதையெனவொன்றாயிற்று. அவை யிவ்வாற்றானல்லது தொகாமையி னிருசொற்றொகையேயாம். புலிவிற்கெண்டையென்புழிமூன்றுபெயருந் தொகுமென்னாது முதற்பெயரொழித்தும், இறுதிப்பெயரொழித்து மேனையவிரண்டுந் தம்முட்டொக்கொருசொல்லாய்ப் பின் மற்றையதனொடுந்தொகுமெனின் முன் றொகுமிரண்டற்கு மோரியைபுவேறுபாடின்மையானும், இருதொகைப்படுதல் பலசெய்கைத்தாகலானு மவைமூன்றுபெயரு மொருங்குதொக்கனவெனவேபடுமென்பது. அளவின்பெயர் முதலாயின விருபெயராயல்லது தொகாவெனவரையறுத்தற் கிருபெயர் பல்பெயரான வடங்குனவற்றையே பெயர்த்துக்கூறினார். கலனே தூணிப்பதக்கு- தொடியேகஃசரை-நூற்றுநாற்பத்துநான்கு-என்புழித் தூணிப்பதக்கு - கஃசரை-நாற்பத்துநான்கு என்பனவொருசொற்போல வளவுப்பெயரு நிறைப்பெயரு மெண்ணுப்பெயருமாய் வழங்கப்பட்டுவருதலிற் கலனுந் தூணிப்பதக்கும், தொடியுங்கஃசரையும், நூறுநாற்பத்துநான்குமென விருமொழியாகநின்று தொக்கனவென்றலே பொருத்தமுடைமையறிக. உம்மைத்தொகை யின்னபொருள்பற்றித் தொகுமென்னாதவ்வறுகிளவியுமெனச் சொல்லேபற்றியோதினானு மேற்புழிக்கோடலென்பதனானும்,உயர்திணைமருங்கினும்மைத்தொகை பலர்சொன்னடைத்தென்பதனானு மெண்ணும்மைப்பொருட்கட் டொகுமென்பதுபெறப்படும். எண்ணின்கண்வரு மிடைச்சொற்பலவேனுந் தொக்குநிற்கு மாற்றலுடைய தும்மைப்பெயராகலா னும்மைத்தொகையாயிற்று. (௨௧)

௩௮௭. பண்புதொகவரூஉங் கிளவியானு, மும்மைதொக்கபெ
யர்வயினானும், வேற்றுமைதொக்க பெயர்வயினானு,
மீற்றுநின்றியலு மன்மொழித்தொகையே.

பண்புச்சொற்றொகுஞ்சொற்கண்ணு மும்மைதொக்கபெயர்க்கண்ணும் வேற்றுமைதொக்கபெயர்க்கண்ணு மிறுதிச்சொற்கணின்றுநடக்கு மன்மொழித்தொகை. எ - று. பண்புத்தொகைபடவும், உம்மைத்தொகைபடவும், வேற்றுமைத்தொகைபடவுமச்சொற்றொக்கபின் னத்தொகை யன்மொழித்தொகையாகாமையிற் றொகுவதன்முன் னவற்றிற்குநிலைக்களமாகிய சொற்பற்றி வருமென்பதுவிளக்கிய தொகைவயினானுமென்னாது பண்புதொகவரூஉங்கிளவியானு மும்மைதொக்கபெயர்வயினானும் வேற்றுமைதொக்கபெயர்வயினானு மென்றார். இறுதிச்சொற்படுத்தலோசையாற் பொருள்விளக்குமாறு வழக்கினுள்ளுஞ்செய்யுளுள்ளுங்கண்டுகொள்க. வெள்ளாடை-அகரவீறென்பனபண்புத்தொகைநிலைக்களத்துப்பிறந்தவன்மொழித்தொகை. தகரஞாழலென்பதும்மைத்தொகைநிலைக்களத்துப பிறந்தது. பொற்றொடியென்பது வேற்றுமைத்தொகைநிலைக்களத்துப்பிறந்தது. இனிஅவை வெள்ளாடையுடுத்தாள்- எ-ம், அகரமாகியவீற்றையுடையசொல் - எ-ம், தகரமு ஞாழலுமாகியசாந்துபூசினாள்-எ-ம், பொற்றொடிதொட்டாள் - எ-ம்-விரியும். பண்புத்தொகைநிலைக் களத்துப்பிறத்தல் பெரும்பான்மையாகலின்முறையிற்கூறாது அதனைமுற்கூறினார். வேற்றுமைத்தொகைநிலைக்களத்துப் பிறத்தலி னும்மைத்தொகை நிலைக்களத்துப்பிறத்தல் சிறுபான்மையாயினுமொருபயனோக்கியதனையதன்முன்வைத்தார். யாதோபயனென்னின்? சிறுபான்மையுவமைத்தொகைநிலைக்களத்தும் வினைத்தொகைநிலைக்களத்து மன்மொழித்தொகைபிறக்குமென்பதுணர்த்துதலென்க. அவைபவளவாய்-திரிதாடி-எனவரும். அவைதாம்-பவளம்போலும் வாயையுடையாள்-திரிந்ததாடியையுடையான்-எனவிரியும். பிறவுமன்ன.(௨௨)

௩௮௮. அவைதா, முன்மொழிநிலையலும் பின்மொழிநிலையலு,
மிருமொழிமேலு மொருங்குடனிலையலு, மம்மொழிநி
லையா தன்மொழிநிலையலு, மந்நான்கென்ப பொருணி
லைமரபே.

முன்மொழிமேனிற்றலும் பின்மொழிமேனிற்றலு மிருமொழிமேனிற்றலு மிருமொழிமேனில்லாது பிறமொழிமேனிற்றலுமெனவத்தொகையு மவற்றதுபொருணிலைமரபு நான்கென்றுசொல்லுவராசிரியர். எ - று. தொகையுமவற்றது பொருணிலைமரபுமொருவகையான்வேறாயினுமொற்றுமை நயம்பற்றியவைதாமென்றார். பொருணிற்றலாவது வினையொடியையுமாற்றான் மேற்பட்டுத்தோன்றுதல. வேங்கைப்பூவென்புலிப்பூவென்னு முன்மொழிக்கட்பொருணின்றது. அதுநறிதென்னும்வினையொடியையுமாற்றான் மேற்பட்டுத்தோன்றியவாறுகண்டுகொள்க. மேல்வருவனவற்றிற்கு மீதொக்கும். இடவகையான்முன்மொழியாயிற்று. அடைகடலென்புழி அடையென்னும் பின்மொழிக்க

ட்பொருணின்றது. இடவகையாற் பின்மொழியாயிற்று. முன்பின் என்பன காலவகையாற்றடுமாறிநிற்கும். கடலுங்கடல்டைந்தவிடமுங் கடலெனப்படுதலி னடைகடலென்ப தடையாகிய கடலென விருபெயர்ப்பண்புத்தொகை. இனிவரையறையின்மையிற்சிறுபான்மை முன்மொழிபின்மொழியாகத்தொக்கதோராரும்வேற்றுமைத் தொகையெனவுமமையும். உவாப்பதினான்கென்புழித்தொக்கவிருமொழிமேலும் பொருணின்றது. தன்னினமுடித்தலென்பதனாற்பலபெயர்மேனிற்றலுங் கண்டுகொள்க. வெள்ளாடை யென்புழித்தொக்கவிருமொழிமேலுநில்லாது உடுத்தாளென்னுமன்மொழிமே னின்றது. வேற்றுமைத்தொகைமுதனான்குதொகையுமுன்மொழிப்பொருளவும், வேற்றுமைத்தொகையும்பண்புத்தொகையுஞ்சிறுபான்மைபின்மொழிப்பொருளவுமாம்., உம்மைத்தொகையிருமொழிப்பொருட்டு. ஆறுகச்சொல்லப்பட்டதொகைச்சொற்பொருள்வகையானான்காமெனப்பிரித்தோர்வகைகுறித்தவாறு. (உ௩)

௩அகூ. எல்லாத்தொகையு மொருசொன்னடைய.

அறுவகைத்தொகைச்சொல்லுமொருசொல்லாய்நடத்தலையுடைய- எ-று. ஒருசொன்னடையவெனப்பொதுப்படக்கூறியவதனான்-யானைக்கோடு-கொல்யானை-எனமுன்மொழிபெயராகியவழியொருபெயர்ச்சொன்னடைய் வாதலும், நிலங்கடந்தான்-குன்றத்திருந்தான்-எனமுன்மொழிவினையாயவழியொருவினைச்சொன்னடையவாதலுங்கொள்க. அவையுருபேற்றலும்பயனிலை கோடலுமுதலாகியபெயர்த்தன்மையும், பயனிலையாதலும், பெயர்கோடலுமுதலாகியவினைத்தன்மையு முடையவாதலவ்வச்சொல்லொடுகூட்டிக் கண்டுகொள்க. நிலங்கடந்தான்-குன்றத்திருந்தான்-எனப்பெயரும்வினையுந்தொக்கனவொருசொன்னீர்மையிலவாகலிற்றொகையெனப்படாவென்பாருமுளர். எழுத்தோத்தினுட்பெயருந்தொழிலும்பிரிந்தொருங்கிசைப்ப வேற்றுமையுருபுநிலை பெறுவழியுந்தோற்றம்வேண்டாத்தொகுதிககண்ணுமென்றதனான்வேற்றுமையுருபுதொக்கபெயருநதொழிலுமொருங்கிசைத்த லாசிரியர்நேர்ந்தாராகலி னவைதொகையெனவேபடுமென்பது. கடந்தானிலம்-இருந்தான்குன்றத்து-என்பனவொருங்கிசையாது பக்கிசைத்தலினிவைதொகையன்மையறிக. எல்லாத்தொகையுமொருசொன்னடையவென்றதனாற் றொகையல்லாத்தொடர்மொழியு ளொருசொன்னடையவானகிளவியுளவென்பதாம்.யானைகோடுகூரிது,இரும்புபொன்னாயிற்று, மக்களையுயாதிணையென்ப-என்பனவற்றுட்கோடுகூரிது - பொன்னாயிற்று-உயர்திணையென்பவென்னுந்தொகையதுதொடர்மொழி யொருசொன்னடையவாயெழுவாய்க்கு மிரண்டாவதற்குமுடிபாயினவாறுகண்டுகொள்க. பிறவுமன்ன. (உ௪)

௩௬0. உயர்திணமருங்கி னும்மைத்தொகையே, பலர்சொன்
னடைத்தென மொழிமனார்புலவர்.

உயர்திணைக்கண்வரு மும்மைத்தொகை பலர்க்குரிய வீற்றானடக்கும் எ-று. பொதுவிற்கூறினாரேனும் மாமூலகபிலர்-பரணநக்கீரர்-எனவரும். விரவு

பபெயர்த் தொகையுமடங்குதற்குயர்திணைப்பெயரும்மைத்தொகையென்னாது உயர்திணைமருங்கி னும்மைத்தொகையென்றார். அவையொட்டி யொருசொல் லாய்நிற்றலிற் பலரறிசொல்லெனப்படும். பலரறிசொற் கபிலபரணனென வொருமையிற் றனடத்தல் வழுவாகலின் வழுக்காத்தவாறு. இதனானுந் தொகையொரு சொல்லாதல்பெற்றாம். ஒருசொன்னீர்மை பெற்றின்றாயிற் கபிலபரணனென வொருமைச்சொல் லொருமையிற் றனடத்தற்கட்படு மிழுக்கென்னையென்பது. (உரு)

௩௯௧. வாராமரபின வரக்கூறுதலு, மென்னாமரபின வெனக் கூறுதலு, மன்னவையெல்லா மவற்றவற்றியல்பா, னின்னவென்னுங் குறிப்புரையாகும்.

வாராவியல்பினவற்றை வருவனவாகச் சொல்லுதலு மென்னாவியல்பினவற்றை யென்பனவாகச்சொல்லுதலு மத்தன்மையனவெல்லா மவ்வப்பொருளியல்பா னித்தன்மையவென்று சொல்லுங் குறிப்புமொழியாம். எ - று. அந்நெறியீண்டுவந்துகிடந்தது. அம்மலைவந்திதனொடு பொருந்திற்று-எ-ம், அவலவலென்கின்றன நெல்-மழைமழையெனகின்றன பைங்கூழ்-எ-ம்வரும். அவைவரவுஞ்சொல்லுதலு முணர்த்தாதின்னவென்பதனைக் குறிப்பானுணர்த்தியவாறு கண்டுகொள்க. மூலைவந்தன-தலைவந்தன - என்பன காட்டுவாருமுளர். ஆண்டுவருதல் வளர்தற்பொருட்டாகலா னவையீண்டைக்காகாவென்க. நிலம்வல்லென்றது-நீர்தண்ணென்றது என்பன காட்டினாரா லுரையாசிரியரொனின் சொலற்பொருள வன்மையினவைகாட்ட லவர்கருத்தன்றென்க. அன்னவையெல்லாமென்றதனான் இருநெறி யாண்டுச்சென்றுகிடக்கும்-இக்குன்றக்குன்றொடு சென்றணுகும்-என்னுந தொடக்கத்தனகொள்க. (உசு)

௩௯௨. இசைப்படுபொருளே நான்குவரம்பாகும், விரைசொல்லடுக்கே மூன்றுவரம்பாகும்.

மேற்கூறப்பட்ட வொருசொலடுக்கினு ளிசைநிறையடுக்குநான்காகியவரம்பையுடைத்துப் பொருளொடுபுணர்தற்கண் விரைவுப்பொருள் படவடுக்குவதுமூன்றாகியவரம்பையுடைத்து. எ-று. வரம்பாகுமென்றதனைநான்கினுமூன்றினுமிறநதுவாரா குறைநதுவரப்பெறுமென்றவாறு. பாடுகோபாடுகோ பாடுகோ பாடுகோ-எ-ம், தீத்தீத்தீ-எ-ம்வரும். அவைமும்முறையானு மிருமுறையானுமடுக்கிவருதலிவற்றைக் குறைத்துச்சொல்லிககண்டுகொள்க. இசைப்படுபொருளாவதுசெய்யுளின்பம். விரைவிக்குஞ்சொல்லடுக்கை விரைசொலென்றார். அசைநிலையிருமுறையல்லதடுக்காமையினதற்கெல்லைகூறாராயினார் அஃகிருமுறையடுக்கு மென்பதியாண்டுப்பெற்றாமெனின் அடுக்கென்பதனாற் பெற்றாம். ஒருமுறைவருவதடுக்கெனப்படாமையினென்பது. முன்னர்க்கூறப்படுமசைநிலையடுக்கிவருமென்பததிகாரத்தாற்கோடறபொருட் டிசைநிறையசைநிலையென்னுஞ்சூத்திரத்தின்பின்வையா திச்சூத்திரமிரண்டனையுமீண்டு வைத்தார். (உஎ)

௩௯௩. கண்டீரென்று கொண்டீரென்று, சென்றதென்று போ
யிற்றென்று, வன்றியனைத்தும் வினாவொடுசிவணி, நி
ன்றவழியசைக்குங் கிளவியென்ப.

கண்டீரெனவுங்கொண்டீரெனவுஞ் சென்றதெனவும்போயிற்றெனவும்வ ரும்வினைச்சொனான்கும்வினாவொடு பொருந்திநின்றவழி யசைநிலையடுக்காம். எ-று. கட்டுரையகத்தொருவனொன்றுசொல்லியவழி யதற்குடம்படாதான் கண்டீரோ கண்டீரோவென்னும். ஈண்டுவினைச்சொற்பொருண்மையும்வினாப்பொருண்மையுமின்மையினசைநிலையாயினவாறுகண்டுகொள்க. வரையாது கூறினமையிற்கண்டீரோவெனச்சிறுபான்மையடுக்காதுவருதலுங்கொள்க. ஏனையவுமேற்றவழியடுக்கியுமடுக்காது மசைநிலையாம். அவையிக்காலத்தரிய. வந்தவழிக்கண்டுகொள்க. (௨௮)

௩௯௪. கேட்டையென்று நின்றையென்று, காத்தையென்று க
ண்டையென்று, வன்றியனைத்து முன்னிலையல்வழி,மு
ன்னுறக்கிளந்த வியல்பாகும்மே.

கேட்டையெனவு நின்றையெனவுங் காத்தையெனவுங் கண்டையெனவும் வருநான்கு முன்னிலையல்லாக்கான் மேறசொல்லப்பட்ட வசைநிலையாம். எ-று. இவையுங்கட்டுரைக்கணடுக்கியுஞ் சிறுபான்மையடுக்காது மேற்றவழி யசைநிலையாய் வருமாறுங்கண்டுகொள்க. நின்றைகாத்தை என்பன இக்காலத்துப்பயின்றுவாரா; வினாக்கடையாகவடுக்கி வந்தவழி முன்னையசைநிலையேயாம். இவையடுக்கியு மடுக்காது முன்னிலைச்சொல்லாதலு முடைமையான் அந்நிலைமை நீக்குதற்கு முன்னிலையல்வழியென்றார். முன்னுறக்கிளந்த வியலபாகுமென்பதனான் முன்னையபோலச் சிறுபான்மை வினாவொடு வருதலுங்கொள்க. முன்னிலை யல்வழியென்பதற்கு முன்னையபோல வினாவொடு சிவணிநில்லாதவழியென்றுரைத்தாராலுரையாசிரியரெனின் அற்றன்று வினாவொடு சிவணலிவற்றிற் கொன்றுனெய்தாமையின் விலக்கவேண்டா அதனானவர்க்கது கருத்தன்றென்க. இரண்டுசூத்திரத்தானுங் கூறப்பட்டன வினைச்சொலாதலும், இடைச்சொலாதலு முடைமையான் வினையியலுள்ளு மிடைச்சொலோத்தினுள்ளுங் கூறாதீண்டுக்கூறினார். அஃதேல் ஆக ஆகல்எனபது-என்பனவற்றொடிவற்றிடைவேற்றுமையென்னை? அவையும்வினைச்சொலாதலுடைமையானெனின் இசைநிறைத்தற்கும், பொருள்வேறுபாட்டிற்கு மடுக்கிவரினல்ல தடுக்காதுவருதலே வினைச்சொற்கியல்பாம். ஆக ஆகல்என்பது என்பனவடுக்கியல்லது நில்லாமையின் வினைச்சொல் இடைச்சொலாயினவெனப்படா. கண்டீர் கொண்டீரென்பனமுதலாயின வினைச்சொற்குரிய.வீற்றவாயடுக்கியு மடுக்காதும் வருதல் வினைச்சொல் அசைநிலையாயின வெனப்படும். இது தம்முள் வேற்றுமையென்க. அல்லதூஉம் வினாவொடு சிவணிநிற்றலானும், வினைச்சொலெனவேபடுமென்பது. (௨௯)

௩௯௫. இறப்பினிகழ்வி னெதிர்வினென்றச், சிறப்புடைமரபி
னம்முக்காலமுந், தன்மைமுன்னிலை படர்க்கையென்

னு, மம்மூவிடத்தான் வினையினுங்குறிப்பினு, மெய்ம்மையானு மீரிரண்டாகு, மவ்வாறென்ப முற்றியன் மொழியே.

முற்றுச்சொல்லாவ திறப்பு நிகழ்வெதிர்வென்னு மூன்றுகாலமுந் தன்மை முன்னிலை படர்க்கை யென்னு மூன்றிடத்தும் உயர்திணையு மஃறிணையு மிருதிணைப்பொதுவுமாகிய பொருடோறும் வினையானுங் குறிப்பானுமவ்விரண்டானும்வருமவ்வறுவகைச்சொல்லாமெனறுசொல்லுவராசிரியர். எ-று. சென்றனன் கரியன்-எ-ம், சென்றது கரிது-எ-ம், சென்றனைகரியை-எ-ம்-வரும். இடமுணர்த்தலுந் திணையும்பாலும் விளக்கலும்போலவொருசாரனவற்றிற்கேயாகா தெல்லாமுற்றுச்சொற்குங் காலமூற்சிறத்தலிற் சிறப்புடைமரபினம் முக்காலமுமென்றார். வினையினுங்குறிப்பினுமென்புழி யோரீற்றவாகிய வினையும் வினைக்குறிப்புமே கொள்ளப்படும். இவ்விரண்டாதற் சேற்பனவவையாகலான்] மெய்ம்மையாவது பொருண்மை. உயர்திணையு மஃறிணையுமல்ல திருதிணையென்பதோர் பொருளில்லையாயினுஞ் சென்றனைகரியை யென்பனசொல்லிற்கு வினைமுதலாதலும் பண்பியுமாகிய வொருநிமித்தம்பற்றி யிருதிணைக்கண்ணுஞ் சேறலினந்நிமித்த மிருதிணைப்பொதுவெனப்பட்டது. வினையினுங்குறிப்பினு மீரிரண்டாய்வருதலாவது தெரிநிலைவினையாற் றெற்றெனத்தோன்றலுங் குறிப்புவினையாற் றெற்றெனத்தோன்றுமையுமாம். முற்றிநிற்றன்முற்றுச்சொற்கிலக்கணமாதல் முற்றியன்மொழியேயென்பதனாற்பெற்றாம். முற்றிநிற்றலாவதிதுவென்பது வினையியலுட்கூறினாம். திணையும் பாலுங்காலமும் விளக்க லெல்லாமுற்றிற்குமின்மையா னிலக்கணமன்மையறிக. உயர்திணை அஃறிணை விரவென்னும் பொருண்மேல் வினையும் வினைக்குறிப்புமாய் வருதல் பற்றி யவ்வாறென்பவென்றார். காலமுமிடமு முதலாயினவற்றொடு கூட்டிப் பகுப்பப்பலவாம். ஊராறேர்தேவகுலம் என்றாற்போல மெய்ம்மையானும் என்புழி ஆனென்பது தோறுமென்பதன் பொருட்டாய்நின்றது. முன்னர்ப்பிரிநிலைவினையே பெயரேயென்புழிப் பெயரெச்சமும் வினையெச்சமுங் கூறுபவாகலி னவற்றொடியையமுற்றுச்சொல்லையுமீண்டுக்கூறினார். கூறவே முற்றுச்சொல்லும் பெயரெச்சமும் வினையெச்சமுமெனவினைச்சொன் மூவகைத்தாகலி னிஃதுணரப்படுமென்பது. உரையாசிரியர் வினையியலுளோதப்பட்டன சிலவினைச்சொற்கு முற்றுச்சொல்லென்று குறியிடுதனுதலிற்றிச்சூத்திரமென்றாலெனின் குறியீடுகருத்தாயி னவ்வாறென்ப முற்றியன்மொழியே யென்று தவ்வாறுமுற்றியன்மொழியெனல் வேண்டுமாகலா னதுபோலியுரையென்க. முற்றியன்மொழி யென்பவென மொழிமாற்றலே குறியீடாமெனின் குறியீ டாட்சிப்பொருட்டாகலி னக்குறியானதனை யாளாமையின் மொழிமாற்றி யிடர்ப்படுவ தென்னையோவென்பது. அல்லதூஉ முற்றியன்மொழியெனக்குறியிட்டாராயின் அவையேபெயரெஞ்சுகிளவி - எ-ம், இவையேவினையெஞ்சுகிளவி-எ-ம் - குறியிடல்வேண்டுமவ்வாறுகுறியிடாமையானு மதுகருத்தன்றாம். அதனான்வினைச்சொல்லுளிருவகையெச்சமொழித்தொழிந்தசொ

ன்முற்றி நிற்குமென்றும், அவையிணைத்துப்பாகுபடுமென்றுமுணர்த்தலிச்சூத்திரத்திற்குக்கருத்தாகக்கொள்க. (௫0)

௫௬௬. எவ்வயின்வினையு மவ்வியனிலையும்.

மூவிடத்தாற்பொருடொறுமிவ்விரண்டாமென மேற்சொல்லப்பட்டகட்டளையுட்பட்டடங்காதுபிறுண்டுவரும்வினையமுற்றியல்பாய்நிலையும்.எ-று. யார் எவன்-இல்லை-வேறு-என்பனவிடமுணர்த்தாமையின் மேற்கூறியகட்டளையினடங்காது பிறுண்டுவந்தனவாம். சிறப்பிற்றுன்வருநதெரிநிலைவினையுங் குறிப்புவினையும்போலப் பொருடோறும்வினையும்வினைக்குறிப்புமாய் வருதற்கெய்தாமையின்மெய்ம்மையாறு மீரிரண்டாகுங்கட்டளையுட்படாது பிறுண்டுவாநதனவாம். குறிப்புவினைக்கிருகாது தெரிநிலைவினைக்கிருவனவுநதெரிநிலை வினைக்கிருகாது குறிப்புவினைச்கிருவனவுஞ் சிறப்பின்றும். அவை வினையியலுட்கூறிப்போநதாம். யார்-எவன் என்பனபாலும், இல்லை-வேறு-என்பன திணையும்பாலுமுணாத்தாவாயிறு மேலைச்சூத்திரத்தான் முற்றுச்சொற்குப்பாலுநதிணையுமுணர்த்த லொருதலையாகவெய்தாமையி னிடமுணாத்தாமையேபற்றி யீண்டுக்காட்டப்பட்டன. திணையுமபாலுமுணர்த்த லொருதலையாயிற றன்மைமுன்னிலைபடர்க்கையென்னு மம்மூவிடத்தானென வாசிரியர்முன்னிலையிடமாண்டுவையாரொன்பது. முற்றுச்சொல்லேயன்றிப் பெயரொச்சமும் வினையெச்சமுங் காலமுமிடமு முணர்த்துமென்பது இச்சூத்திரத்திற்குப பொருளாகவுரைத்தாராா லுரையாசிரியரொனின் அவைபிடவேறுபாடுணர்த்தாது மூவிடத்திற்கும் பொதுவாய்நிற்றலி னதுபோலியுரையெனக. இனியோருரை-மேலைச்சூத்திரத்தாற்கூறப்பட்ட பொருண்மேலும் வருமெல்லாவினையு முற்றுச்சொல்லாய்நிற்கும். எ-று. ஈண்டுவினையென்றது வினைச்சொலலையாக்கு முதனிலையை. எல்லாவினையு முற்றுச்சொல்லாமெனவேயெச்சமாதலொருதலையனறென்பதாம். ஆகவே வினைச்சொலாதற்குச்சிறநதன முற்றுச்சொல்லேயென்பதாம். எல்லாவினையு முற்றுச்சொல்லாகலும், கச்சினன்-கழலினன்-நிலத்தன்-புறத்தன்-என்னுந் தொடக்கத்து வினைக்குறிப்பின் முதனிலையெச்சமாய் நில்லாமையும் வழக்குநோக்கிக்கண்டுகொள்க. பிறவுமன்ன. இவையிரண்டு சூத்திரத்துப் பொருளாகக்கொள்க. (௫௧)

௫௬௭. அவைதாந், தத்தங்கிளவி யடுக்குநவரினு, மெத்திறத்தானும் பெயாமுடிபினவே.

மேற்சொல்லப்பட்ட முற்றுசசொற்றுந தந்தங்கிளவி பலவடுக்கிவரினுந் தம்முட்டொடாராதெவ்வாற்றுனும் பெயரொடுமுடியும். எ-று. உண்டான் தின்றுன் ஓடினுன் பாடினுன் சாத்தன், நல்லன் அறிவுடையன் செவ்வியன் சான்றோர் மகன்-எனவரும். அடுக்கிவரினுமென்னு மும்மையான் வந்தான்வழுதி-கரியன்மாலென வடுக்காதுபெயரொடுமுடிதலே பெரும்பான்மையென்பதாம். தம்பாற்சொல்லல்லது பிறபாற்சொல்லொடுவிராயடுக்கின்மையிற்றந்தங்கிளவியென்றார், என்மனூர்புலவர்-மூப்பஃதென்ப-என வெளிப்பட்டும் வெளிப்

படாதும் பெயர்முடிபாமென்றற் கெத்திறத்தானுமென்றார் எவ்வயிற்பெயரும் வெளிப்படத்தோன்றி யென்றதனான் வெளிப்படாதுநிற்றலும் பெறப்பட்டமையா னீண்டுக்கூறல்வேண்டாவெனின் ஆண்டுமுடிக்கப்படும்பெயர் வெளிப்படாதுநிற்றலு முடைத்தென்றார் இதுமுடிக்கும்பெயராகலி னாண்டடங்காதென்பது. முடிக்கப்படுவதனோடு முடிப்பதனிடைவேற்றுமை வேற்றுமையோத்தினுட்கூறினாம். இன்னுமெத்திறத்தானுமென்றதனான்-உண்டான்சாத்தன்-சாத்தனுண்டானென முன்னும்பின்னும் பெயர்கிடத்தலுங்கொள்க. அஃதேன் முற்றிநிற்றலாவது மற்றுச்சொன்னோக்காமையாகலின்முற்றிற்றேலது பெயரவாய்நில்லாது; பெயரவாவிற்றேன் முற்றுச்சொல்லெனப்படாது. அதனான் முற்றுச்சொறபெயர்கொள்ளுமென்றன் மாறுகொளக்கூறலாமெனின் அற்றன்று உண்டான்சாத்தன் என்பதெற்றையென்னு மவாய்நிலைக்கட்சோற்றையென்பதனோடியைந்தாற்போல உண்டானென்பதியாரென்னு மவாய்நிலைக்கட்சாத்தனென்பதனோ டியைவதல்லது அவாய்நிலையில்வழி யுண்டானெனத் தான்றொடராய்நிற்றல் வினையியலுள்ளுங்கூறினாமென்பது. அஃதேற் சாத்தனென்னும்பெயர் சோற்றையென்பதுபோல வவாய்நிற்றலை யுள்வழிவருவதாயினெத்திறத்தானும் பெயர்முடிபினஎன விதந்தோதவேண்டாவாம் பிறவெனின் நன்றுசொன்னாய் அவாய்நிற்றலையுள்வழிவருவதவ்விரண்டற்குமொக்குமேனு முண்டானென்றவழியுண்டற்றொழிலாற் செயப்படுபொருளுய்த்துணர்ந்து பின்னதன்வேறுபாடறியலுறிற் சோற்றையென்பது வருதியைவதல்லது சொற்கேட்டதுணையா னெற்றையெனக்கேட்பான் செயப்படுபொருள் வேறுபாடறிவதற் கவாவாமையிற்சோற்றையென்பது வருதலொருதலையன்று. இனியுண்டானென்னுஞ்சொல்லாற் பொதுவகையான்வினைமுதலுணர்ந்து கேட்பானதனவேறுபாடறியவுறுதலிற் சாத்தனென்பது வருதலொருதலையாம். அதனானிச்சிறப்புநோக்கி விதந்தோதினாரென்பது. (௩௨)

௩௯௮. பிரிநிலைவினையே பெயரேயொழியிசை, யெதிர்மறையு
ம்மை யெனவேசொல்லே, குறிப்பேயிசையே யாயீ
ரைந்து, நெறிப்படத்தோன்று மெஞ்சுபொருட்கிளவி.

முற்றுச்சொலுணர்த்தி யெச்சமுணர்த்துகின்றார். எஞ்சுபொருட்கிளவி கொண்டலலதமையாமையி னெச்சமாயினவு மொருதொடர்க்கொழிபா யெச்சமாயினவுமென அவையிருவகைப்படும். பிரிநிலைமுதலாகச் சொல்லப்பட்டபத்துமெஞ்சுபொருட்கிளவியாம். எ-று. அவற்றுட்கடைநிலைமூன்று மொருதொடர்க்கொழிபாயெச்சமாயின. அல்லனவெஞ்சுபொருட்கிளவியான் முடிவன. எஞ்சுபொருட்கிளவியெனினு மெச்சமெனினுமொக்கும். பெயரெச்சம்வினையெச்சம் பெயர்வினையான்முடிதலி னாருபெயராற்பெயரோவினையேயென்றார். ஆயீரைந்துமெஞ்சுபொருட்கிளவியென்றாரேனுமெஞ்சுபொருட்கிளவி பத்துவகைப்படுமென்பது கருத்தாகக்கொள்க. எச்சமாவனவொருசார்ப்பெயரும் வினையுமிடைச்சொல்லுமாகலிற் பெயரியன்முதலாயினவற்றுட் பத்துமொருங்குணர்த்துதற்கேலாமையறிக. முடிவும்பொருளுமொத்தலா னொன்றென்பதனை யென்னவின்கணேற்றினார். (௩௩)

௩௯௯. அவற்றுட், பிரிநிலையெச்சம் பிரிநிலைமுடிபின.

மேற்சொல்லப்பட்ட வெச்சங்களுட்பிரிநிலையெச்சமென்பதாற் பிரிநிலையும் ஏகாரப்பிரிநிலையும் ஓகாரப்பிரிநிலையுமெனவிருவகைப்படும். அவ்விருவகைப்பிரிநிலையெச்சமும பிரிக்கப்பட்டபொருளையுணர்த்துஞ்சொல்லொடுமுடியும். எ-று. தானேகொண்டான் தானோகொண்டானென்னும் பிரிநிலையெச்சம் பிறர்கொண்டிலரெனப் பிரிக்கபபட்டபொருளையுணாத்துஞ்சொல்லான் முடிந்தவாறுகண்டுகொள்க. அஃதேற்றானெனப்பட்டானன்றேயாண்டுப் பிரிக்கப்பட்டான் பிறர்கொண்டிலரென்பதவனையுணர்த்தஞ்சொலலன்மையானவை பிரிநிலைகொண்டு முடிந்ததில்லையாலெனின் அற்றன்றுதானெனப்பட்டான் பிறரிறபிரிக்கப்பட்ட பொருளையுணர்த்தும்வழியபிறருமவனிற்பிரிக்கப்பட்டமையினவைபிரிநிலைகொண்டனவேயாமென்க. பிரிநிலையொடுமுடிதலாவது அவனேகொணடானென்றவழி அவனேயெனபது கொண்டானெனப்பிரிக்கப்பட்டபொருளை வினையெனகொண்டு முடிதலென்றுரானுரையாசிரியரெனின் அவனேகொண்டானென்புழி அவனென்னுமெழுவாய்வேற்றுமைகொண்டானென்னும் பயனிலைகொண்டது. ஏகாரம்பிரிவுணர்த்திறறு. ஆண்டெச்சமும் எச்சத்தைமுடிக்குஞ்சொல்லுமின்மையா னவாககதுகருத்தன்றென்க. (௩௪)

௪௦௦. வினையெஞ்சுகிளவிக்குவினையுங்குறிப்புநினையத்தோன்றியமுடிபாகும்மே, யாவயிற்குறிப்பேயாக்கமொடுவருமே.

வினையெச்சத்திற்குத் தெரிநிலைவினையுங்குறிப்புவினையுமுடிபாம் ஆண்டுக்குறிப்புவினையாக்கவினையொடுவரும். எ-று. உழுதுவந்தான்-மருநதுண்டுநல்லனுயினன்-எனவரும். உழுதுவருதல- உழுதுவநதவன் - எனவினையெச்சம்வினைப்பெயரொடுமுடிதல்நினையத்தோன்றியவென்றதனுற்கொள்க. வினையெச்சத்திற்குமுடிபுவினையியலுட்கூறப்பட்டமையா னிச்சூத்திரம்வேண்டாவெனின்இதற்குவிடையாண்டேகூறினும். வேங்கையுங்காநதளுநாறியாம்பன்மலரினுந்தான்றண்ணியளே-வில்லகவிரலிற் பொருந்தியவர்நல்லகஞ்சேரினொருமருங்கிலமே-எ-ம், கல்லூவல்லன்-பெற்றுடையன்-எ-ம்-வினைக்குறிப்பாக்கமின்றிவந்தனவாலெனின் ஆக்கமொடுவருமென்றது பெரும்பான்மைகுறித்தாகலிற் சிறுபான்மையாக்கமின்றியும் வருமென்பது. (௩௫)

௪௦௧. பெயரெஞ்சுகிளவி பெயரொடுமுடிமே.

பெயரொச்சம்பெயரொடுமுடியும். எ-று. உண்ணுஞ்சாத்தன்-உண்டசாத்தன்-எனவரும். அவ்வறுபொருட்குமோரன்னவுரிமைய வென்றதனுற் பெயரொச்சம்பொருள்படுமுறைமைகூறினர். முடிபு எச்சவியலுட் பெறப்படுமெனவினையியலுட்கூறியவாறுகடைப்பிடிக்க. (௩௬)

௪௦௨. ஒழியிசையெச்ச மொழியிசைமுடிபின.

மன்னையொழியிசையுந்தில்லையொழியிசையு மோகாரவொழியிசையு மாகிய வொழியிசையெச்சமூன்றுமொழியிசையான்முடியும். எ-று. கூறியதோ

ர்வாண்மன் -வருகதில்லம்மவெஞ்சேரிசேர-கொளலோ கொண்டான்-என்னு மொழியிசையெச்சமுறையானே திட்பமின்று,வந்தாலின்னதுசெய்வல், கொண்டுய்யப்போமாறறிந்திலன்-என்னு மொழியிசையான்முடிந்தவாறு. பிறவுமுடிக்தற்கேற்குமொழியிசையறிந்துகொள்க. (௩௭)

௪௦௩. எதிர்மறையெச்ச மெதிர்மறைமுடிபின.

மாறுகொளெச்சமெனப்பட்ட வேகாரவெதிர்மறையு மோகாரவெதிர்மறையு மும்மையெதிர்மறையுமாகிய எதிர்மறையெச்சமூன்று மெதிர்மறையான்முடியும். எ-று. யானேகொள்வேன-யானோகளவேன - வரலுமுரியன்-என்னுமெதிர்மறையெச்சமுறையானே கொள்ளேன்-கள்ளேன்-வாராமையுமுரியன்-என்னுமெதிர்மறையான்முடிந்தவாறுகண்டுகொள்க. (௩௮)

௪௦௪. உம்மையெச்ச மிருவீற்றானுந், தன்வினையொன்றிய முடிபாகும்மே.

எஞ்சுபொருட்கிளவியு மவ்வெஞ்சுபொருட்கிளவியான் முடிவதுமாகிய வும்மையெச்சவேறுபாடிரண்டனகண்ணுந் தன்வினை யும்மையொடுதொடர்ந்தசொற்குப்பொருந்தியமுடிபாம். எ-று. என்றது எஞ்சுபொருட்கிளவி. செஞ்சொலாயினென்றதனானும்மையுடைத்தாயுமும்மையின்றியும்வரும். எஞ்சுபொருட்கிளவியும்மையெச்சத்திற்குமுடிபாதலெய்திற்று. என்னை! எல்லாவெச்சத்திற்குமெஞ்சுபொருட்கிளவியே முடிபாகலினினி யும்மையொடு தொடர்ந்தசொல்லிரண்டற்கும் வினையொன்றியாகல்வேண்டுமென வெய்தாததெய்துவித்தவாறு. ஒன்றற்காயதேயேனையதற்குமாகலிற் றனவினையெனருர். சாத்தனும்வந்தான்-கொற்றனும்வந்தானென விரண்டுமொருவினை கொண்டவாறு கண்டுகொள்க. சாத்தனும்வந்தான்-கொற்றனுமுண்டான் - எனவினைவேறுபட்டவழி யும்மையெச்சமு மெஞ்சுபொருட்கிளவியு மியையாமை கண்டுகொள்க. அஃதேற் பைம்புதல்வேங்கையுமொள்ளிணர்விரிந்தன நெடுவெண்டிங்களு மூர்கொண்டன்றேயென வினைவேறுபட்டுமியுந்தம்முளியைந்தனவாலெனின் இணர்விரிதலுமூர்கோடலுமாண்டுமணஞ்செய்காலமிதுவென் றுணர்த்துதலாகியவொருபொருள்குறித்துநின்றமையான் அவை யொருவினைப்பாற்படுமென்பது. பிறவுமிவ்வாறுவருவனவறிந்து ஒருவினைப்பாற்படுக்க. எஞ்சுபொருட்கிளவிசெஞ்சொலாயவழித் தன்வினைகோடலீண்டடங்காமையானது தன்னினமுடித்தலெனபதனாற் பெறப்படும். உம்மையெச்ச மிருவீற்றானுமென்றதனானும்மையெச்சத்திற்கு முடிபாகியவெஞ்சுபொருட்கிளவியு மும்மையொடுவரினெச்சமாமென்பதாம். அஃதெச்சமாங்கான்முன்னின்றதெஞ்சுபொருட்கிளவியாமென்பது. எதிர்மறையும்மை யெதிர்மறையெச்சமா யடங்குதலி னீண்டும்மையெச்சமென்றதெச்சவும்மையேயாம். (௩௯)

௪௦௫. தன்மேற்செஞ்சொல் வரூஉங்காலை, நிகழுங்காலமொடு வாராக்காலமு, மிறந்தகாலமொடு வாராக்காலமு, மயங்குதல்வரையார் முறைநிலையான.

உம்மையெச்சத்தின்முன்னெஞ்சுபொருட்கிளவி யும்மையில்சொல்லாய் வருங்கா னிகழ்காலத்தொ டெதிர்காலமுமிறந்தகாலத்தொடெதிர்காலமு ம யங்குதலைவரையா ரவ்வாறுமயங்குமுறைமையான். எ-று. முறைநிலையான வென்றதனாற் கூறியமுறையானல்ல தெதிர்காலமுன்னிற்பவேனைக்காலம் பி ன்வந்துமயங்குதலில்லையென்பதாம். கூழுண்ணுநின்றான்- சோறுமுண்பன்- எ-ம், கூழுண்டான்-சோறுமுண்பன். எ-ம்- அவைகூறியமுறையான் மயங்கி யவாறுகண்டுகொள்க. இவற்றொடு துமயங்குதல்வரையாரெனவே யிறந்தகா லத்தொடு நிகழ்காலமு நிகழ்காலத்தொ டிறந்தகாலமும்வந்து மயங்குதல்வ ரையப்படுமென்றவாறாயிற்று. தன்மேற்செஞ்சொல்வரூஉங்காலையென்றதனா னும்மையடுத்தசொல வரூஉங்கால்வேறுபாடின்றியிரண்டுசொல்லு மொருகா லத்தான் வருமென்பதாம். தன்வினைகாலம்வேறுபடுதலும் படாமையுமுடை மையா னின்னுழியின்னவாறாமனல்லது காலம் வேறுபடாதெனவரையறுத் தவாறு. (ச0)

ச0சு. எனவெனெச்சம் வினையொடுமுடிமே.

எனவென்னுமெச்சம்வினைகொண்டுமுடியும். எ- று. கொள்ளெனக்கொ டுத்தான்-துண்ணெனத்துடித்தான - ஒல்லெனவொலித்தது-காரெனக்கறுத்த து-எ-ம், நன்றென்றுகொண்டான்-தீதெனறிகழ்நதான்-எ-ம்வரும். (சக)

ச0எ. எஞ்சியமூன்று மேல்வந்துமுடிக்கு, மெஞ்சுபொருட் கிளவி யிலவெனமொழிப.

சொல்லப்பட்ட தொழிநதுநின்றசொல்லுங்குறிப்புமிசையுமாகிய வெச் சமூன்றுமேல்வந்துதம்மைமுடிக்கு மெஞ்சுபொருட்கிளவியை யுடையவல்ல வென்றுசொல்லுவராசிரியர். எ-று. என்றது அவ்வதொடர்க்குத்தா மெச்ச மாய்வநதுஅவற்றதவாய்நிலையைநீக்கலிற் பிரிநிலையெச்சமுதலாயின போலத் தம்மைம்முடிக்கும்பிறசொல்லைத்தாமவாய்நில்லாவென்றவாறு. அவைபிறசொ ல்லவாவாது தாமேயெச்சமாய்வருமாறுமுன்னர்ச் சூத்திரத்தாற்பெறப்படும்.

ச0அ. அவைதாங், தத்தங்குறிப்பி னெச்சஞ்செப்பும்.

அவ்வெச்சமூன்றுஞ் சொல்லுவார்குறிப்பானெஞ்சிநின்ற பொருளையுண ர்த்தும். எ-று. பசப்பிற்றுச்சென்றாருடையையோ வன்னநிறத்தையோ பீரம லர்-இளைதாகமுண்மரங்கொல்ககளையுநர், கைகொல்லுங் காழ்த்தவிடத் தென் புழிமுறையானே பசப்பிற்றுச்சென்றாரை யாமுடையேம்-எ-ம், நீயாரைக்க லத்தாற்களைக-எ-ம்-வந்ததொடர்மொழி யெச்சமாய்நின்றகுறிப்புப்பொருளை வெளிப்படுத்தலாற் குறிப்பெச்சமாயின. அகரமுதலவெழுத்தெல்லாமாதி, பக வன் முதற்றேயுலகு- அளித்தஞ்சலென்றவர் நீப்பிற்றெளித்தசொற், றேறியா ர்க்குண்டோதவறு-என்றவழிமுறையானே அதுபோல-எ-ம், நீத்தார்க்கேதவ று-எ-ம்-வருவன வெஞ்சியவிசைப் பொருளுணர்த்தலானிசையெச்சமாயின. சொல்லெச்சத்திற்குதாரண முன்னர்க்காட்டுதும், சொல்லளவல்லதெஞ்சுத

லின்றேயென்றதனு னஃதொருசொல்லாதல் பெறப்படுதலி னிதுதொடர் சொல்லாமென்பது. சொல்லென்னுஞ்சொல் எஞ்சுவதும் சொல்லெச்சமென் பார் இவ்விருவகையு மிசையெச்சமெனவடக்குப. பசப்பிற்றுச்சென்றுளையா முடையேமென்னுந் தொடக்கத்தன குறிப்பிற்றோன்றலாயடங்குதலின் வின் னெனவிணைத்ததென்பது குறிப்பெச்சமென்று மதுபோலவென்னுந்தொடக் கத்தன விகாரவகையாற்றொக்குநின்றமையின் ஒல்லெனவொலித்ததென்பது இசையெச்சமென்று மிவைதத்தஞ்சொல்லான் முடிந்ததல்லது பிறசொல்லா ன் முடியாமையி னிவற்றை மேல்வந்துமுடிக்கு மெஞ்சுபொருட்கிளவி யில வென்றொன்று முரைத்தாராலுரையாசிரியரெனின் அற்றன்று தெரிபுவேறு நிலையலுங் குறிப்பிற்றோன்றலுமெனச் சொற்பொருட்பாகுபாடுணர்த்தினுர் குறிப்பிற்றோன்றும் பொருளைவெளிப்படுத்து மெச்சமாதலுடைமையானெ ச்சமென்று ரதனுணடடங்காது. இனி விணைத்ததொலித்ததென்பன தஞ் சொலெனப்படா;படினும் விண்ணெனவீங்கிற்று, துண்ணெனத்துளங்கினுன்- எ-ம், ஒல்லெனவிழவிழ-எ-ம்-பிறசொல்லானுமுடிதலி னெஞ்சுபொருட்கிளவி யிலவென்றெனல்பொருந்தாதாம்.என்னை?தன்சொலல்லாதனவெஞ்சுபொருட் கிளவியாமாகலி னியதுபோலவென்பதுதொகுக்கும்வழித் தொகுத்தலென் பதனுற்றொக்கதாயின் அதனைச்சுட்டிக்கூறு வுவமையென வணியியலுளாசிரி யரோருவமவேறுபாடாகக் கூறல்பொருந்தாது. தொகுக்கும்வழித்தொகுத்த லொருமொழிக்கண்ணதாகலிற் பலசொற்றொனுமென்றலும் பொருத்தமின்றத னு னவர்க்கது கருத்தன்றென்க. விண்ணெனவிணைத்தது-ஒல்லெனவொலித் ததென்னுந் தொடக்கத்தனவற்றை எனவெனெச்சமெனவடக்கிக் குறிப்பெ ச்சத்திற்கு மிசையெச்சத்திற்கும் வேறுதாரணங்காட்டல் கருத்தென்க. அல் லதூஉமெனவெனெச்சமென வடக்காதிசையுங்குறிப்பும்பற்றிவருவனவற்றை வேறோதின் வெள்ளெனவிளர்த்ததெனப் பண்புபற்றிவருவதனையும் வேறோ தல்வேண்டுமதனை வேறோதாமையானு மெனவெனெச்சமெனவடக்குதல்கரு த்தாகக்கொள்க. குறிப்புப்பொருளைப் பசப்பிற்றுச்சென்றுருடையையோ-இ ளைதாகமுண்மரங்கொல்கவென்பன முதலாகிய தொடர்மொழியே யுணர்த்த லா னெஞ்சுபொருளெனப்படாவாயினு மப்பொருள் பிறசொல்லானல்லது வெளிப்படாமையினச்சொலெச்சமாயிற்று. குறிப்புப்பொருளேயன்றி யெஞ் சியபொருளுஞ்சொல்லுவான் குறிப்பொடுபடுத்துணர்ந்து தமக்கேற்றசொல் லா னுணர்த்தப்படுதலாற் குறிப்பானெச்சஞ் செப்பன்மூன்றற்கு மொத்த வாறறிக. (௫௩)

௪௦௪. சொல்லெனெச்ச முன்னும்பின்னுஞ், சொல்லளவல்ல தெஞ்சுதலின்றே.

சொல்லெச்சமொருசொற்கு முன்னும்பின்னுஞ் சொன்மாத்திரமெஞ்சு வதல்லது தொடராயெஞ்சுதலின்று. எ-று. உயர்திணையென்மனு ரென்புழி ஆசிரியரென்னுஞ்சொன்முன்னும், மருந்தெனின்மருந்தே வைப்பெனின் வை ப்பேயென்புழி எமக்கென்னுஞ்சொற்பின்னு மெஞ்சிநின்றவாறுகண்டுகொள் க. ஒருசாரார்இவற்றை இசையெச்சமென்றுசொல்லளவல்ல தெஞ்சுதலின்

றேயென்பதற்குச் சொல்லென்னுஞ்சொல்லளவல்லது பிறிதுசொல்லெஞ்சுத லின்றென்று பொருளுரைத்து-பசித்தேன் பழஞ்சோறுதாவென்றுநின்ற, ஊ சுப்போவுலகம்பெறும்-என்புழித் தாவெனச்சொல்லியெனச்சொல்லென்னு ஞ்சொல்லெஞ்சிநின்றதென் றிதனை யுதாரணமாகக்காட்டுப. அவர் முன்னும் பின்னுமென்பதற்குச் சொல்லென்னுஞ்சொற்கொணாந்து கூட்டுவதன் முன் னும்பின்னு மிடர்ப்படப்பொருளுரைப்ப. (சச)

சசo. அவையல்கிளவி மறைத்தனர்கிளத்தல்.

நன்மக்களிடையுரைக்கப்படாதசொல்லை யவ்வாய்பாடுமறைத்துப் பிற வாய்பாட்டாற்சொல்லுக. எ-று. அவைக்கண்வழங்கப்படுஞ்சொல்லை யவை யென்றார். ஆன்முன்வரூஉ மீகாரபகரம்-எ-ம், கண்கழீஇவருதும்-கான்மேனீர் பெய்துவருதும்-கருமுகமந்தி - செம்பினேற்றை - புலிநின்றிறந்த நீரலீரத்து- எ-ம் - இடக்கர் வாய்பாடுமறைத்துப் பிறவாய்பாட்டாற் கூறியவாறு. ஈகார பகரமென்பதுபோலக் கண்கழுவுதன்முதலாயின அவையல்கிளவியைக் கிட ந்தவாறுகூறாது பிறிதோராற்றாற் கிளந்தனவல்லவெனினு மவையல்கிளவிப் பொருண்மையையுணர்த்தலி னொற்றுமைநயத்தா னவையல்கிளவியைப்பிறி தோராற்றாற்கூறிய வாய்பாடாகக்கொள்ளப்படும். இவைதகுதியும் வழக்கு மென்புழித் தகுதியாயடங்குமெனின் செத்தாரைத்துஞ்சினாரென்றல் முத லாயினவன்றேதகுதியாவன. ஆண்டுச்செத்தாரென்பதிலக்கணமாதலி னதனா னும் வழங்கப்பட்டுத் தகவுநோக்கிச் சொல்லுங்காற்றுஞ்சினாரென்றுஞ் சொ ல்லப்படும். ஈண் டவையல்கிளவியாற்கிளத்தல் வழுவாதலின் மறைத்தவாய் பாட்டானே கிளக்கப்படும் அதனாலீண்டடங்காதென்பது. இதுவழுவமைதி யன்மையாற் கிளவியாக்கத்துட் கூறாதீண்டுக்கூறினார். (சரு)

சசக. மறைக்குங்காலை மரீஇயதொராஅல்.

அவையல்கிளவியைமறைத்துச்சொல்லுங்கால் மேற்றொட்டுவழங்கப்ப ட்டுவருவனமறைக்கப்படா எ-று. ஆப்பி-யானையிலண்டம்-எனமரீஇவந்தனம றைக்கப்படாதுவந்தவாறு. பகல்கான்றெழுதரும் பல்கதிர்ப்பரிதியென்புழிக் கான்றென்பதுதன்பொருண்மேனில்லாதணிகுறித்துப் பிறிதோர்பொருண்மே னிற்றலின்மரீஇயசொல்லாய் மறைக்கப்படாமையி னதன்பொருண்மே னின் றவழிமறைக்கப்படுதலுமறிக. (சசு)

சசஉ. ஈதாகொடுவெனக் கிளக்குமூன்று, மிரவின்கிளவி யா கிடனுடைய.

ஈதாகொடுவெனச்சொல்லப்படுமூன்று மொருவனொன்றையிரத்தற்கண் வருஞ்சொல்லாம். எ-று. அவைபிறபொருண்மேல்வருதலுமுடைமையா னிர வின்கிளவி யாகிடனுடையவென்றார். வழங்கல் உதவல் வீசல் முதலாயபிறவு ளவாகவிவற்றையே விதந்தோதியதென்னையெனின்? அவைகொடைப் பொ ருளவாய்வருவதல்லதிவைபோலவிரத்தற்குறிப்பு வெளிப்படுக்கு மிரவின்கிள

வியாய்ப்பயின்றுவாராமையானும், இன்னார்க்கின்னசொல்லுரித்தென்றுவரை யறுத்தலும் வழுவமைத்தலுமாகிய வாராய்ச்சியாண்டின்மையானுமிவற்றை யேவிதந்தோதினானென்பது. அஃதேல் ஈயென்கிளவியென்னுஞ் சூத்திரமுத லாயநான்குமமையு மிச்சூத்திரம்வேண்டாவெனின் இவையிரவின்கிளவியா கலுமொன்றென்னும்வரையறையு மவற்றாற்பெறப்படாமையின் வேண்டுமென் பது. முன்னிலைச்சொல்லாய் வருவழியல்லது பிறண்டின்னசொல்லின்னா ற்குரித்தென்னும்வரையறையிலவெனபதுணாத்தற்கு ஈதாகொடுவென முன னிலைவாய்பாடுபற்றியோதினார். (௪௭)

௪௪௩. அவற்றுள், ஈயென்கிளவி யிழிந்தோன்கூற்றே, தாவெ ன்கிளவி யொப்போன்கூற்றே, கொடுவென்கிளவி யுய ர்ந்தோன்கூற்றே.

ஈயென்கிளவியிரக்கப்படுவோனினிழிந்த விரவலன்கூற்றாம்; தாவென்கி ளவியவனோடொப்போன்கூற்றாம்; கொடுவென்கிளவியவனினுயர்ந்தவன்கூற் றாம். எ - று. சோறீஇ-யாடைதாஅ-சாந்துகொடுவெனமூன்றுசொல்லுமுறை யானேமூவர்க்குமுரியவாய் வந்தவாறுகண்டுகொள்க. இவைமூன்றுசூத்திரம்.

௪௪௪. கொடுவென்கிளவி படர்க்கையாயினுந், தன்னைப்பிறன போற் கூறுங்குறிப்பிற், றன்னிடத்தியலு மென்மனார் புலவர்.

கொடுவென்னுஞ்சொன்முதனிலைவகையாற் படர்க்கையாயினுந் தன்னை பபிறனொருவன்போலக் கூறுங்கருத்துவகையாற் றன்னிடத்துச் செல்லும். எ-று. உதாரணமேற்காட்டப்பட்டது. தன்மைக்குமுன்னிலைக்குமுரிய தாவெ ன்பதனோடுகப்பொதுவாக ஈயென்பதனோடுசவன்றேசொல்லற்பாலது உயர்ந் தானங்ஙனந்தானேற்பானுக்ச்சொல்லாது கொடுவெனப்படர்க்கைவாய்பாட் டாற்சொல்லும். ஆண்டுத்தன்னையேபிறன்போலக் குறித்தானுகலிற் றன்னிட த்தேயாமென இடவழுவமைந்தவாறு. உயர்ந்தான்றமனொருவனைக்காட்டி இ வற்குக்கொடுவென்னுமென்றுரா லுரையாசிரியரொனின் ஆண்டுப்படர்க்கைச் சொல் படர்க்கைச்சொல்லொ டியைதலான்வழுவின்மையினமைக்கல்வேண் டாவாமதனானதுபோலியுரையென்க. (௪௧)

௪௪௫. பெயர்நிலைக்கிளவியி னஅகுநவுந், திசைநிலைக்கிளவி யி னஅகுநவுந், தொன்னெறிமொழிவயி னஅகுநவு, மெ ய்ந்நிலைமயக்கி னஅகுநவு, மந்திரப்பொருள்வயி னஅ குநவு, மன்றியனைத்துங் கடப்பாடிலவே.

பெயர்நிலைக்கிளவியினாஅகுநவுமென்பது ஒருதிணைப்பெயரொரு திணைக் காய்வருவனவும். எ-று. அவையாவன ஓரெருத்தைநம்பியென்று வழங்குத லும், ஒருகிளியைநங்கையென்றுவழங்குதலுமாம். பிறவுமன்ன. திசைநிலைக்

கிளவியினுருபுமென்பது - திசைச்சொல்லிடத்துவாய்பாடுதிரிந்து வருவன வும். எ-று. அவை-புலியான்-பூசையான்-என்னுந்தொடக்கத்தன. தொன்னெறிமொழிவயினு முருபுமென்பது முதுசொல்லாகியசெய்யுள் வேறுபாட்டின் கணியையில்லன வியைந்தனவாய்வருவனவும். எ-று. அவை யாற்றுட்செத்த வெருமையீர்த்தல் ஊர்க்குயவர்க்குக்கடனென்பது முதலாயின. மெய்ந்நிலை மயக்கினுருபுமென்பது-பொருண்மயக்காகிய * பிரகேளிகைச்செய்யுட்கட்டிணைமுதலாயினதிரிந்துவருவனவும். எ-று. அவை எழுதுவரிக்கோலத்தாரீவார்க்குரியார், தொழுதிமைக்கண்ணமைந்தோட்டார், முழுதகலா, நாணிற்செறிந்தார் நலங்கிளவிநாடோறும், பேணற்கமைந்தார்பெரிது - என்பதுபொத்தகமென்னும்பொருண்மேற் றிணைதிரிந்துவந்தவாறு கண்டுகொள்க. பிறவுமன்ன. மந்திரப்பொருள்வயினுருபுமென்பது மந்திரப் பொருட்கண் அப்பொருள்குறித்தல்லாச்சொல்வருதலும். எ-று. உதாரணம் மந்திரநூல்வல்லார்வாய்க்கேட்டுணர்க. அன்றியனைத்துங்கடப்பாடிலவேயென்றது அவையனைத்தும் வழங்கியவாறு கொள்வதல்லது இலக்கணத்தான் யாப்புறவுடையவல்ல-எ-று. இஃதிச்சூத்திரத்திற் கொருசாரருரை. ஒருசாரார்பிறவுரைப்ப. இஃதியற்சொல்லுநதிசைச்சொல்லும் பிறவும்பற்றிவழுவமைத்ததாகலிற் கிளவியாக்கமுதலாயவற்றின்க ணுணர்த்துதறகியையின்மையானீண்டு வைத்தார்.

௪௪௯. செய்யாயென்னு முன்னிலைவினைச்சொல், செய்யென் கிளவி யாகிட னுடைத்தே.

செய்யாயென்னும் வாய்பாட்டதாகிய முன்னிலைமுற்றுச்சொல் ஆயென னுமீறுகெடச்செய்யென்னுஞ்சொல்லாய் நிற்றலுமுடைத்து. எ- று. ஆகிடனுடைத்தென்றதனுற்செய்யாயென வீறுகெடாது நிற்றலேபெரும்பான்மையென்பதாம். உதாரணம்- உண்ணாய்-தின்னாய்-கிடவாய்-நடவாய்- தாராய்-வாராய்-போவாய்-என்பனவீறுகெட்டு-உண்-தின்-கிட-நட-தா-வா-போ-எனச்செய்யென்கிளவியாயினவாறுகண்டுகொள்க. செய்யாயென்னுமுன்னிலை யெதிர்மறைசெய்யென் கிளவியாதற்கேலாமையிற் செய்யாயென்னு முன்னிலைவினைச்சொலென்றது விதிவினையேயாம். தன்னினமுடித்தலென்பதனுன்என்பனமீன்கடல்மதமெனநிற்றலும், அழியலை-அலையலை-என்னுமுன்னிலையெதிர்மறைஐகாரங்கெட்டு-அழியல்-அலையல்-எனநிற்றலுங்கொள்க. ஒன்றெனமுடித்தலென்பதனுற்புகழ்ந்தாரொன்னும் படர்க்கைவினை ஆரீறுகெடப் புகழ்ந்திகு மல்லரோவெனநிற்றலுங்கொள்க. இவையெல்லாஞ்செய்யுண்முடிபென்பாருமுளர். செய்யாயென்னு முன்னிலையெதிர்மறை யெதிர்மறைபடாது செய்யென் விதிவினையாதலுமுரித்தென் றுரைத்தாராலுரையாசிரியரெனின் அற்றன்றுசெய்யாயென்னு மெதிர்மறையுஞ்செய்யாயென்னும் விதிவினையுமுடிந்தநிலைமையொக்குமாயினுமெதிர்மறைக்கண்மறையுணர்த்து மிடைநிலையுமுண்மையான் முடிக்குஞ்சொல்வேறெனவேபடும். மறையுணர்த்துமிடைநிலையாவன உண்ணலன்-உண்டிலன்-உண்ணாது-உண்ணேன்-என்புழிவரும் அல்லுமில்லுமாவுமேயும்பி

* பிரசேய்யுளென்றும் பாடம்.

றவுமாம். உண்ணாய்-உண்ணேன்-என்புழியெதிர்மறை யகரவேகாரங்கெட்டு நின்றனவெனல்வேண்டும். அல்லாக்கானமறைப்பொருள்பெறப்படாமையின் அதனானெதிர்மறைச்சொல்லே விதிவினைச்சொல்லாகாமையி னவர்க்கதுகரு த்தன்றென்க. அல்லதூஉமாசிரிய ரக்கருததினராயிற் செய்யாயென்னுமெதிர் மறைவினைச்சொலென்றேதுவார்மன் அவ்வாறோதாமையானவர்ககதுகருத்த ன்மையானுரையாசிரியர்க்கு மதுகருத்தன்மையறிக. (௫௧)

சகஎ. முன்னிலை முன்னரீயுமேயு, மந்நிலைமரபின் மெய்யூர்ந் துவருமே.

முன்னிலைவினைச்சொன்முன்வரு மீகாரமுமேகாரமு மமமுன்னிலைச்சொ ற்கேற்றமெய்யூர்ந்துவரும். எ-று. சென்றீபெருமநிறறகைக்குநாயாரோ - அட் டிலோலைதொட்டனைநின்மே-எனவவைமுன்னிலைக்கேறற மெய்யூர்நது வந்த வாறுகண்டுகொள்க. முன்னிலையென்றானுஞ் செயயென்கிளவியாகியமுன் னிலையென்ப ததிகாரத்தாற்கொள்க. ஏகாரமொன்றேயாக-புக்கீ - உண்டீ-உ ரைத்தீ-சென்றீ-என முன்னிலைவினையீற்று வேறுபாட்டிற்கேற்ப மெய்வேறுப ட்டுவருதலானந்நிலைமரபின்மெய்யென்றார். ஏகாரமகரமூர்நதல்லது வாராது. இவ்வெழுத்துப்பேறுபுணர்ச்சிவிகாரமாகலி னீண்டுக்கூறற்பாற்றன் றெனின் அற்றன்று இயற்பெயர்முன்னராரைக்கிளவியப்பெயரொடொற்றுமைப்பட்டு நின்றாற்போல முன்னிலைமுன்னரீயுமேயு முன்னிலைச்சொல்லொன்றொடொற் றுமைப்பட்டுநிற்றலா னிலைமொழிவருமொழிசெய்து புணர்க்கப்படாமையா ன்மெய்ப்புணர்ச்சி விகாரமெனப்படாவென்க. அஃதேலிடைச்சொ லியனு வியற்பெயர்முன்னராரைக்கிளவியென்பதனொடியையவிதனையும் வைக்கவெ னின் ஆண்டுவைப்பிற்செய்யாயென்பது செய்யென்கிளவியாயவழி யஃதவ் வீகாரவேகாரவரவென்பதுபெறப்படாமையி னீண்டுவைத்தார். செய்யாயெ ன்னுமுன்னிலைவினைச்சொலென்பதனை யீண்டுவைத்தற்குமிதுவேபயனாத லறி க. முன்னிலைவினைச்சொல் விகாரமொருங்குணர்த்த லதற்குப்பயனெனினும மையும். ஈயென்பதோரிடைச்சொலுண்டென்ப திச்சூத்திரத்தாற் பெற்றாம். இவையிரண்டு மீண்டுப்புறத்துறவுப பொருள்படநின்றன. அசைநிலையென்பா ருமுளர். (௫௨)

சகஅ. கடிசொலில்லைக் காலத்துப்படினே.

இவைதொன்றுதொட்டனவல்லவென்றுகடியப்படுஞ்சொல்லில்லை யவ்வ க்காலத்துத்தோன்றிவழங்கப்படுமாயின். எ-று. சம்பு-சள்ளை-எனவரும்.இவை தொனறுதொட்டுவநதனவாயின் முதலாகக்கரத்துட் சகரக்கிளவியுமவற்றோ ரற்றே அ ஐ ஔ வென்னு மூன்றலங்கடையேயென விலக்காரா மாசிரியர் அதனானவை பிற்காலத்துத்தோன்றியசொல்லேயாமென்பது. இஃதெழுவகை வழுவமைதியுமல்ல தோர்பாதுகாவலாதலிற்கிளவியாக்கத் தியைபின்மையா னீண்டுக்கூறினானென்பது. இஃதொருசாரார்துரை. இன்னவனுவதிக்குங்காலமா மக்காலத்தவை வழுவன்மை யெல்லாவாசிரியர்க்கு முடன்பாடாகலி னத

னைத்தழீஇக்கொண்டவாறென்க. இவையிரண்டு மிச்சூத்திரத்திற்குப் பொருளாகக்கொள்க. (௫௩)

௪௧௯. குறைசொற்கிளவி குறைக்கும்வழியறிதல்.

குறைக்குஞ்சொல்லைக் குறைக்குமிடமறிந்துகுறைக்க. எ-று. குறைக்கும் வழியறிதலென்பது ஒருசொற்குத் தலையுமிடையுங்கடையுமென இடமூன்றன்றே யவற்றுளின்னுழிக்குறைக்கப்படு மிச்சொல்லென்றறிந்து குறைக்க. எ-று. தாமரையென்பது மரையிதழ்புரையுமஞ்செஞ்சீறடி - எனத்தலைக்கண்ணும், ஓந்தியென்பது வேதின வெரிநினோதிமுதுபோத்து- எனவிடைக்கண்ணும், நீலமென்பது நீலுண்டுகிலிகைகடுப்ப-எனக்கடைக்கண்ணுங்குறைக்கப்பட்டவாறும் அவையிரண்டுக்குறைத்தற் கேலாமையுங் கண்டுகொள்க. குறைத்தலாவதொருசொல்லிற சிறிதுநிற்பச் சிறிதுகெடுத்தலாகலின் முழுதுங்கெடுத்தலாகியதொகுக்கும்வழித் தொகுத்தலின்வேறுதலறிக. இயற்சொற்றிரிசொலெனுஞ் சூத்திரமுதலாகிய செய்யுளதிகாரத்துக்கூறுமையானு மொருகாரணத்தாற் கூறினரோனுஞ் செய்யுட்கணென்று விதந்துகூறுமையானு மிதுவழக்கு முடிபென்பாருமுளர். (௫௪)

௪௨0. குறைத்தனவாயினு நிறைப்பெயரியல.

குறைத்தனவாயினு மவை குறையாதுநிறைந்துநின்ற பெயரியல்பையுடைய. எ-று. என்றது குறைந்தவழியு நிறைந்தபெயராகக்கொள்க. குறைக்கப்படுவனபெயரோயாகலி னிறைப்பெயரியலவென்றார். (௫௫)

௪௨௧. இடைச்சொலெல்லாம் வேற்றுமைச்சொல்லே.

பிறிதோர்சொல்லை வேறுபடுப்பனவும் பிறிதோர்சொல்லான் வேறுபடுக்கப்படுவனவுமெனச் சொல்லிருவகைப்படும். பிறிதோர்சொல்லை வேறுபடுத்தலாவது விசேடித்தல். பிறிதோர்சொல்லான் வேறுபடுக்கப்படுதலாவது விசேடிக்கப்படுதல். இடைச்சொலெல்லாம் பிறிதோர்சொல்லை விசேடிக்குஞ்சொல்லாம். எ-று. வேறுபடுத்தலும் வேறுபடுக்கப்படுதலும் பொதுவகையான் எல்லாச்சொற்குங் கூறுமையெய்துமாகலின் இடைச்சொலெல்லாம் வேற்றுமைச்சொல்லென்றதனு னவைவேறுபடுக்குஞ் சொல்லாதலல்ல தொருஞான்றும் வேறுபடுக்கப்படுஞ்சொல்லாகாவென நியமித்தவாறும். அவையன்னவாதலிடைச்சொ லோத்தினுளோதப்பட்ட விடைச்சொல் வழக்கினுள்ளுஞ் செய்யுளுள்ளும்வரும்வழிக் கண்டுகொள்க. வேற்றுமைச்சொல் வேற்றுமையைச்செய்யுஞ்சொல்லெனவிரியும். வேற்றுமையெனினும் வேறுபாடெனினுமொக்கும். இடைச்சொலெல்லாம் வேற்றுமைச்சொல்லாயினு மவற்றுளொருசாரனவற்றை வேற்றுமைச்சொலென்றுளப. இயற்சொல்லுளொருசாரனவற்றை யியற்பெயரொன்றுற்போலவென்பது. இதுவுமோர்நயம். (௫௬)

௪௨௨. உரிச்சொன்மருங்கினு முரியவையுரிய.

உரிச்சொலிடத்தும் வேறுபடுக்குஞ்சொல்லாதற்கு முரியனவுரியவாமெல்லா முரியவாகா. எ-று., எனவே உரிச்சொல்லுள் வேறுபடுத்தும் வேறுபடுக்கப்பட்டும் இருநிலைமையுமுடையவாய்வருவனவே பெரும்பான்மையென்பதாம். வேறுபடுக்குஞ்சொல்லேயாவன உறு-தவ-நனியென்னு நதொடக்கத்தன இருநிலைமையுமுடையன குரு-கெழு-செல்லல்-இன்னல்-என்னுந தொடக்கத்தன. உறுபொருள்-தவப்பல-நனிசேய்த்தூஎகலடுக்கம் எனவிவையொன்றனைவிசேடித்தல்லதுவாராமையும், குருமணிவிளங்கு-குருகேழ்கிளரகலம்-செங்கேழ்-செல்லலுறேய்-அருஞ்செல்லல்-இன்னற்குறிப்பு-பேரின்னல் எனவிவையொன்றைவிசேடித்தும், விசேடிக்கப்பட்டுமிருநிலைமையுமுடையவாய்வருமாறும்வழக்குஞ்செய்யுளுநோக்கிக்கண்டுகொள்க. குருவிளங்கிற்று-செல்லநீர்-எனத்தாமேநின்றுவினைகொளவன விசேடிக்கப்படுந்தன்மையுடையவாதலின் விசேடிக்கப்படுஞ்சொல்லாம். பிறவும்விசேடித்தல்லதுவாராதனவும், விசேடித்தும் விசேடியாதும்வருவனவும்வழக்குஞ் செய்யுளுநோக்கியுணர்க. வேறுபடுக்குஞ்சொலலேயாவன இவையெனத்தொகுத்துணாத்தற்கு முரிச்சொன்மருங்கினுமுரியவையுரியவெனச சூத்திரஞ்சுருங்குதற்கு மிடைச்சொலோத்தினுள்ளு முரிச்சொ லோத்தினுள்ளும்வையா திரண்டுசூத்திரத்தையு மீண்டு வைத்தார். (௫௭)

௪௨௩. வினையெஞ்சுகிளவியும் வேறுபலகுறிய.

மேற்கூறப்பட்ட வினையெச்சமும்வேறுபட்டபல இலக்கணத்தையுடைய எ-று. அவையாவன-உரற்கால்யானையொடித்துண்டெஞ்சிய-எ-ம், ஞாயிறுபட்டுவந்தான்-எ-ம்-செய்தெனெச்சம் வினைமுதல்வினைகொள்ளாது பிறிதின்வினைகோடலும், அஃதீறுதிரிதலும், மோயினளுயிர்த்தகாலை-எ-ம்,கண்ணியன்வில்லன்வரும்-எ-ம்- முற்றுச்சொல்லதுதிரிபாய்வருதலும், ஓடிவந்தான் விரைந்துபோயினான்-எ-ம், வெய்யசிறியமிழற்றுஞ் செவ்வாய்-எ-ம், செவ்வன்றெரிகிற்பான்புதுவதனியன்றவணி[illegible]ன்-எ-ம் - தம்மைமுடிக்கும் வினைக்கட்கிடந்த தொழிலானும், பண்பானும், குறிப்பானுமுணர்த்தித்தெரிநிலைவினையுங்குறிப்புவினையுமாய்முடிக்குஞ்சொல்லை விசேடித்தலும்பிறவுமாம். செய்தெனெச்சத்திறுதிரிதல்வினையியலுட்காட்டிப்போந்தாம்.பெருங்கையற்றவெனப்புலம்புமுந்துறுத்தி-என்புழிப்பெருமென்பதனை யொருசாரார்வினையெச்சவாய்பாடென்ப. ஒருசாரார்வினைச்சொற்பற்றி நின்றதோருரிச்சொலென்ப. இடைச்சொல்லுமுரிச்சொல்லு மேற்கூறப்பட்டஇலக்கணமேயன்றிப் பிறவிலக்கணமு முடையவென்பதுணர்த்தினார். இனிஅவையேயன்றி வினையெஞ்சுகிளவியும் பலவிலக்கணத்தனவென்பது படநின்றமையான் உம்மையிறந்ததுதழீஇயவெச்சவும்மை. அவ்விலக்கணமோரியலவன்றித்திரிதலும்வேறுபொருளுணர்த்தலும் விசேடித்தலுமுதலாகிய வேற்றுமையுடையவாகலின் வேறுபலகுறிய வென்றார். வினையெச்சத்துள்விசேடித்தேநிற்பனவு முளவென்பதூஉ முணர்த்துகின்றாராதலினிதனைவினையியலுள்வையா தீண்டுவிசேடித்தசொல் லுணர்த்துவனவற்றொடுவைத்தார். பெயர்த்தனென்முயங்கவென்பது முதலாயின செய்

தெனெச்சமுற்றாய்த்திரிந்தனவென்றுரைத்தாரா லுரையாசிரியரெனின் பெயர்த்தனென்றாயங்கவென்பதுமுதலாயின வெச்சத்திரிபாயினெச்சப்பொருளுணர்த்துவதல்ல திடமும்பாலுமுணர்த்தற்பாலவல்ல; எச்சப்பொருண்மையாவது மூன்றிடத்திற்கும் ஐந்துபாற்கும்பொதுவாகிய வினைநிகழ்ச்சிச் சொற்கோதியவீற்றவாயிடமும்பாலுமுணர்த்தலி னவைமுற்றுத்திரிசொல்லெனவேபடும். சொன்னிலையுணர்த்தும் வினைகோடன்மாத்திரத்தான வினையெச்சமெனின் மானாக்கிளவியும் வினையொடுமுடியும்வேற்றுமையும், பிறவுமெல்லாம் வினையெச்சமாவான் செல்லுமதனானவாக்கதுகருத்தன்றென்க. அல்லதூஉங்கண்ணியன்வில்லன் எனவரும்வினைக்குறிப்புமுற்றாய்த் திரிதற்கேற்பதோர்வினையெச்சமின்மையானுமதுகருத்தன்மையறிக. ஒடித்துண்டெஞ்சிய வென்பதூஉம், ஞாயிறுபட்டுவந்தானென்பதூஉம் பிறவினைகொண்டனவாயினுஞ்செய்தெனெச்சத்திற்குரிய விறந்தகாலமுணர்த்தலானேனைக்காலத்திற்குரிய செயவெனெச்சத்தின் றிரிபெனப்படா; செயவெனெச்சத்தினறிரிபாயிற் செயவெனெச்சத்திற்குரியகாலமுணர்த்தல்வேண்டும். மழைபெய்யமரங்குழைத்ததெனச்செயவெனெச்சத் திறந்தகாலமுமுரித்தெனி னதுகாரணகாரியப்பொருண்மையுணர்த்தும்வழியல்லது செயவெனெச்சமிறந்தகால முணர்த்தாது. ஒடித்துண்டலும், ஞாயிறுபடுதலும்-எஞ்சுதற்கும், வருதற்குங்காரணமன்மையானுண்டிறந்தகாலமுணர்த்தாமையிற் செய்தெனெச்சமாய்நின்று தமக்குரியவிறந்தகாலமுணர்த்தினவெனப்படும். அதனாற்செயவெனெச்சஞ் செய்தெனெச்சமாய்த்திரிந்தனவென்றலு மவர்க்கதுகருத்தன்றென்க. ஞாயிறுபட்டுவந்தானென்பது ஞாயிறுபட்டபின்வந்தானெனலும், ஞாயிறுபடவந்தானென்பதுஞாயிறுபடாநிற்பவந்தானென நிகழ்காலமுணர்த்தலும் வழக்குநோக்கிக்கண்டுகொள்க. (௫௮)

௪௨௪. உரையிடத்தியலு முடனிலையறிதல்.

வழக்கிடத் துடனிற்கப்பாலனவல்லனவற்றதுடனிலைபோற்றுக. எ-று. உடனிற்கற்பாலவல்லனவாவன தம்முண்மாறுபாடுடையன. மாறுபாடில்லனவற்றதுட னிலைக்கணாராய்ச்சியின்மையி னுடனிலையென்றது மாறுபாடுடையனவற்ற துடனிலையேயாம். இந்நாழிகைந்நாழி சிறிதுபெரிதே என்புழி உடனிற்கப்பாலவல்லாச் சிறுமையும் பெருமையும் உடனின்றவாறு கண்டுகொள்க. சிறிதென்பது பெரிதெனப்பட்ட பொருளைநோக்காது பெரிதென்பதற்கடையாய் மிகப்பெரிதன்றென்பது படநிற்றலானமைவுடைத்தாயிற்று. அறிதலென்ப திவ்வாறியையுடையனகொள்கவென்றவாறு. மாறுபாடுடையன உடனிற்றலெழுவகைவழுவினு ளொன்றெனவமையாமையி னிதனைக்கிளவியாக்கத்துட் கூறாதீண்டுக்கூறினார். (௫௯)

௪௨௫. முன்னத்தினுணருங் கிளவியுமுளவே, யின்னவென்னுஞ் சொன்முறையான.

சொல்லானன்றிச் சொல்லுவான்குறிப்பாற் பொருளுணரப்படுஞ் சொல்லுமுள விப்பொருளித்தன்மையவென்று சொல்லுதற்கண். எ-று. செஞ்செ

வி-வெள்ளொக்கலர்-என்புழி மணியும்பொன்னு மணிந்தசெவியென்றும், வெள்ளியதுடுத்த சுற்றமென்றுங் குறிப்பானறியப்பட்டவாறுகண்டுகொள்க. குழைகொண்டு கோழியெறியும் வாழ்க்கையனென்புழி அன்னபெருஞ்செல்வத்தானென்பதூஉங் குறிப்பானுணரப்படும். இதுதெரிபு வேறுநிலையலுங் குறிப்பிற்றோன்றலுமென்புழி யடங்குமெனி னுண்டப்பொருணிலை யிருவகைத்தென்பதல்ல தின்னுழியிப்பொருள் குறிப்பிற்றோன்றுமென்னும் வேறுபாடுபெறப்படாமையா னுண்டாங்காதென்பது. இதுவுமேலையோத்துக்களு ளுணர்த்துதற்கியைபின்மையி னீண்டுணர்த்தினா. (௬௰)

௪௨௬. ஒருபொருளிருசொற் பிரிவிலவரையார்.

பொருள்வேறுபாடின்றி யொருபொருண்மேல்வரு மிரண்டுசொல் பிரிவின்றித் தொடர்ந்துவரி னவற்றைக்கடியார. எ-று. நிவந்தோங்கு பெருமலை-எ-ம், துறுகண்மீமிசையுறுகண்-எ-ம் வரும். பிரிவிலவென்றது வேறோசொல்லானிடையிடப்படாது நிற்பனவெனறவாறு. இருசொலொருபொருண்மேலவருத லெழுவகைவழுவினு ளொன்றன்மையா னீண்டுக்கூறினார். வையைக்கிழவன் வயங்குதார்மாணகலந், தையலாயின்றுநீ நல்கினைநல்காயேற், கூடலார்கோவொடு நீயும்படுதியே, நாடறியக்கௌவையொருங்கு - என்புழிவையைக்கிழவன் கூடலார்கோவென்பன ஒருபொருளை வரைந்துணர்த்தலாற் பிரிவிலவாகலின் வரையப்படாவென்றும், கொய்தளிர்த்தண்டலைக் கூத்தப்பெருஞ்சேந்தன், வைகலுமேறும் வயக்களிறே-கைதொழுவல், காலேகவண்ணனைக்கண்டாரககாணவெஞ், சாலேகஞ்சாரநட - என்புழிக்காலேகவண்ணனென்பதைச்சார்ந்து பூசிறொல்லார்க்கும்பொதுவாய்க் கூத்தப் பெருஞ்சேந்தனையேவரைந்துணர்த்தாமையி னவைபிரிவுடையவாமெனறு முரையாசிரியருரைத்தாராலெனின் அற்றன்று நாணிநின்றோணிலைகண்டியானும், பேணினேனல்லனோமகிழ்நவானத், தணங்கருங்கடவுளன்னோணின்மகன் றாயாதல்புரைவதாலெனவே-என்புழிவானத் தணங்கருங்கடவுளன்னோளென்பது மகளிர்க்கெல்லாம் பொதுவாய் நாணிநின்றோளை வரைந்துணர்த்தாதாயினுஞ் சொல்லுவான் குறிப்பானவளையே யுணர்த்தினாற்போலக் காலேகவண்ணனென்பதூஉம் பொதுவாயினுஞ்சொல்லுவான் குறிப்பாற்கூத்தப்பெருஞ்சேந்தனையே யுணர்த்திப் பிரிவிலவாய்நிற்றலா னவர்க்கது கருத்தன்றென்க. (௬௧)

௪௨௭. ஒருமைசுட்டிய பெயர்நிலைக்கிளவி, பன்மைக்காகுமிடனுமாருண்டே.

ஒருமைக்குரிய பெயர்ச்சொற்பன்மைக்காகு மிடமுமுண்டு. எ-று. ஏவலிளையர்தாய்வயிறுகரிப்ப-என்புழித்தாயென்னு மொருமைசுட்டியபெயர் இளையரென்பதனாற்றாயரென்னும் பன்மையுணர்த்தியவாறுகண்டுகொள்க. பன்மைக்காகு மிடனுமாருண்டேயென்ப தொருமைச்சொற் பன்மைச்சொல்லொடு தொடர்தற்குப் பொருந்துமிடமுமுண்டென்பதூஉம் படநின்றமையான் அஃதைதந்தையண்ணல் யானையடுபோர்ச்சோழர்-எனவொருமைச்சொற்பன்மை

ச்சொல்லொடு தொடர்தலுங்கண்டுகொள்க. ஈண்டொருமைச்சொற் பன்மைச்சொல்லொடு மயங்குதலுடைமையா னொருவரைக்கூறும் பன்மைக்கிளவி யென்புழி யடங்காமையறிக. ஏற்புழிக்கோடலென்பதனா னுயர்திணைக்கண்ணதென்றுகொள்க. ஆகுமிடனென்பதனாற்பன்மையுணர்த்துதற்கும், பன்மைச்சொல்லொடு தொடாதற்குமபொருநதும்வழிக் கொள்கவென்பதாம். (சுஉ)

சஉஅ. முன்னிலைசுட்டிய வொருமைக்கிளவி, பன்மையொடு
முடியினும் வரைநிலையின்றே, யாற்றுப்படைமருங்கிற்
போற்றல்வேண்டும்

முன்னிலைகுறித்துநின்றவொருமைச்சொற் பன்மையொடுமுடிந்த தாயினுமவ்வரையப்படாதம்முடிவாற்றுப்படைச்செய்யுளிடத்துப் போற்றி யுணரப்படும். எ-று. கூத்தராற்றுப்படையுட்கலம்பெறு கண்ணுளரொக்கற்றலைவ-எனநின்றவொருமைச்சொற் பெயரிருபெயரொக்கலொடுபதமிகப்பெறுகுவிரொன்னும்பன்மைச்சொல்லொடு முடிநதவாறுகண்டுகொள்க. ஈண்டு முன்னிலையொருமைபெயராத லதிகாரத்தாற்கொள்க. ஒருமைசுட்டியபெயர்நிலைக்கிளவிபன்மைக்காகு மிடனுமாருண்டேயென்பதனாலிதுவுமடங்குதலி னிச்சூத்திரமவேண்டாவெனின்பன்மைபொடுமுடியு மிடனுமாருண்டே யென்னாதுபன்மைக்காகுமிடனுமாருண்டேயென்றாராகலி னீண்டுபபன்மைச்சொற் கொண்டுமுடியாதொருமைச்சொற் பன்மையுணர்த்தலும், பன்மைச்சொல்லொடொருபொருட்டாகியதணையான் மயங்குதலுமுணாத்தினா் அதனானிக்கொண்டுமுடிவாண்டடங்காதென்பது. அல்லதூஉம் இம்முடிபுசெய்யுட்குரித்தென்றமையானு மாண்டடங்காமையறிக. [illegible]துவகையா னாற்றுப்படைமருங்கினென்றாராயினுஞ் சுற்றத்தொடுசுற்[illegible]த்தலைவனை யாற்றுப்படுத்தற்கண்ண திம்மயக்கமென்பது பாதுகாத்துணாகவென்[illegible]ா போற்[illegible]ல்வேண்டுமென்றார். பான்மயக்குற்றவையக்கிளவியென்பதனாற்கூறிய வொருமை பன்மைமயக்கம்வழூவமைதியாயினுமிலக்கணத்தொ டொத்துப்பயின்றுவரும். ஒருமைசுட்டியபெயர்நிலைக்கிளவிபன்மைக்காகலும், முன்னிலையொருமைபன்மையொடுமுடிதலு மன்னவன்றிச் சிறுவழககின்று. ஒருவரொருவரை ஆற்றுப்படுத்தறகண்முன்னிலையொருமை பன்மையொடுமுடிதல்வழக்கிற்கும் பெயாக்குமாகலானாற்றுப்படையென்றா. (சுரு)

சஉகூ. செய்யுண்மருங்கினும் வழக்கியன்மருங்கினு, மெய்பெறக்கிளந்தகிளவியெல்லாம், பலவேறுசெய்தியினூனெறி
பிழையாது, சொல்வரைந்தறியப் பிரித்தனர்காட்டல்.

செய்யுளிடத்தும் வழக்கிடத்து மிவ்வதிகாரத்தினகட் பொருள்பெறச்சொல்லப்பட்ட சொல்லெல்லாவற்றையும் பலவேறுசெய்கையுடைய தொன்னூனெறியிற்பிழையாது சொல்லைவேறுபடுத்துணருமாற்றாற் பிரித்துக்காட்டுக. எ-று. என்றதுநிலப்பெயர்குடிப்பெயர்-எ-ம், அம்-ஆம்-எம்-ஏம்.எ-ம்-பொதுவகையாற்கூறப்பட்டன அருவாளநிலத்தான் என்னும்பொருட்கண் அரு

வாளன்-எ-ம், சோழியநிலத்தானென்னும்பொருட்கட்சோழியன்எ-ம், இறந்தகாலத்தின்கண்-உண்டனம்-உண்டாம்-எ-ம்,நிகழ்காலத்தின்கண்-உண்ணாநின்றனம்-உண்ணாநின்றும்-உண்கின்றும்-எ-ம், எதிர்காலத்தின்கண் - உண்குவம்-உண்பாம்-எ-ம்- வேறுபட்டுவருமன்றே அவ்வேறுபாடெல்லாங் கூறிற்பல்குமென்றஞ்சிக்கூறிற்றிலேனாயினுந் தொன்னூனெறியிற்பிழையாமல் லவ்வேறுபாடுணரப்பிரித்துக்காட்டுத னூல்வல்லார் பிறநூன்முடிந்தது தானுடன்படுதலென்னுந்தந்திரவுத்தி. பிறவுமன்ன. செய்கைவிதிசொலவமைந்தறிய வெனவேவமைந்தோதாது பொதுவகையாலோதப்பட்டவற்றுமேற்றிப்புறநடையென்பதாம். இனியோருரை-செய்யுளிடத்தும்வழக்கிடத்து மென்றாற்கிளக்கப்படாது தொன்னூலாசிரியராற்கிளக்கப்பட்டெஞ்சிநின்றசொல்லெல்லாவற்றையுமவ்வத்தொன்னூனெறியிற் பிழையாமைச் சொல்லிவமைந்துணரக்கொணர்ந்துபிரித்துக்காட்டுக. எ-று. என்றாற்கிளக்கப்படாதென்பது பெற்றவாறென்னையெனின்? கிளந்தன பிறநூலிற கொணர்ந்துகாட்டல் வேண்டாமையிற்கிளக்கப்படாதென்பது பெறப்படுமென்க. புறநடையாற கொள்ளப்படுவன யானு நீயு மவனுஞ் செல்வேம்-எ-ம், யானு நீயுஞ் செல்வேம்-எ-ம்- ஏனையிடத்திற்குரிய சொற்றன்மைச்சொல்லொ டியைந்தவழித் தன்மையாய்முடிதலும், அவனு நீயுஞ் சென்மினெனப்படர்க்கைச்சொன் முன்னிலையொடியைந்தவழி முன்னிலையான் முடிதலும், நில்லாதபெயர்ந்த பல்லோருள்ளார் என்புழிப் பல்லேமுள்ளேமெனததன்மையாகற்பாலது பல்லோருள்ளாரெனப் படர்க்கைப்பன்மையாயவழியமைதலும், முரசுகெழுதானை மூவருள்ளுமொருவனெனப்படுவது நினதேயத்தேயென்புழி மூவிருள்ளுமென முன்னிலையாகற்பாலது மூவருள்ளுமெனப் படர்க்கையாயவழி யமைதலும், இரண்டனுட் கூர்ங்கோட்ட காவலெல்புழிக் கூர்ங்கோட்டதென வொருமையாகற்பாலதுகூர்ங்கோட்டனவெனப் பன்மையாயவழியமைதலுமாம். பிறவுமுளவேற்கொள்க. அகத்தியமுதலாயின வெல்லாவிலக்கணமுங்கூறலிற் பலவேறுசெய்தியி னூலென்றார். இவ்விரண்டுரையு மிச்சூத்திரத்திற் குரையாகக்கொள்க. (கஈ)

ஒன்பதாவது

எச்சவியல் - முற்றிற்று.

———:0:———

தொல்காப்பியச்சொல்லதிகாரம்

சேனாவரையருரை.

முற்றியது.